CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆனந்த தாண்டவம்



சைவ சு.இராமலிங்க சுவாமிகள்
குளித்தலை

வெளியீடு : ஸ்ரீ கணநாத நாயனார் நூலகம், திருச்சிராப்பள்ளி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூலாசிரியர் சில குறிப்புகள்

பெயர்	:	சைவ சு. இராமலிங்கம்
பிறந்த தேதி, இடம்	:	22.07.1945, சக்கரக்கோட்டை
பெற்றோர்கள்	:	ப. சுப்பிரமணியம் – வீரம்மாள்
சமயதீக்கை	:	1971
விசேட தீக்கை	:	1971
நிருவாண தீக்கை	:	1973 (ஆனித் திருமஞ்சன நாள்)
தீக்ஷா குருநாதர்	:	சிவஸ்ரீ தத்புருஷதேசிகர், தேவகோட்டை

பெற்ற பட்டங்கள் :

1. முத்தமிழ்ச் சைவ மாமணி, திருக்குறட் பேரவை, கரூர்.
2. சித்தாந்த வித்தகர், கடம்பர் கோயில், அப்பர் வாரவழிபாட்டு மன்றம், குளித்தலை
3. சைவசித்தாந்த சரபம் : மதுரை ஆதீனம் (20-9.2002)
4. சித்தாந்த சைவச் செம்மணி, திருவாவடுதுறை ஆதீனம், (2.2.2009)

பணிகள் : 1. சிவபூசை, 2. சோதிடம், 3. சிவபுராண விரிவுரைகள், 4. திருமுறை இன்னிசை

துணைவியார் : இலக்குமி அம்மையார்

புதல்வர்கள் : இரா. மாணிக்கவாசகன், இரா. மார்க்கண்டன், இரா. மெய்கண்டசிவம்

புதல்வி : இரா. சிவகாமசுந்தரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீமத் சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் துணை

ஆனந்த தாண்டவம்

நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!

பட்டினத்துப்பிள்ளையார் - கோயிற்றிருவகவல்

ஆசிரியர்

''சித்தாந்தச் சைவச் செம்மணி'' –''சைவசித்தாந்த சரபம்''
''முத்தமிழ்ச் சைவ மாமணி'' – தத்புருஷதேவநாம:
சீகம்பட்டி சைவ. சு. இராமலிங்க சுவாமிகள்
கணித ஜோதிடர், குளித்தலை

CSS - STAL MAHATMYAM

வெளியீடு
ஸ்ரீகணநாதநாயனார் நூலகம்
39/22, கிருஷ்ணாபுரம், முதல் தெரு,
திருச்சிராப்பள்ளி - 620 008
செல்லிடப்பேசி : 9952806121, 9042927510.
E.MAIL:SRIGANANATHAR NOOLAGAM TIRUCHY@gmail.com.

0 2 7

120-3

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் குறிப்புகள்

நூலின் பெயர்	:	ஆனந்ததாண்டவம்
நூலின் வகை	:	சமயம்
நூலின் பொருள்	:	நடராஜரின் ஆனந்த தாண்டவம்
நூலாசிரியர்	:	சீகம்பட்டி சைவ. சு. இராமலிங்கம், குளித்தலை
பதிப்பு	:	(10.4.2011) விக்ருதி பங்குனித் திங்கள் 27-ம் நாள்
நூலின் அளவு	:	1/8 டெம்மி
பக்கங்கள்	:	256
தாள்	:	18.6
எழுத்து	:	13 புள்ளிகள்
படிகள்	:	1000
புத்தக அமைப்பு	:	இரா. மாணிக்கவாசகன், மு. ஜயக்குமார்
பதிப்பித்தோர்	:	சிவஞானம் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி-620 008. E.MAIL:SIVAGNANAM@Y.MAIL.com.
அச்சகம்	:	ஆர்.ஜி.பிரிண்டர்ஸ், 30,சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி-620 002. ✆ : 2700417
கிடைக்குமிடம்	:	சைவ.சு.இராமலிங்கம், (கணித ஜோதிடர்) வைகநல்லூர் அக்ரஹாரம், (PSR திருமண மண்டம் அருகில்) குளித்தலை-639104. ✆ : 98655 44592 மு. ஜயக்குமார், ஸ்ரீகணநாதநாயனார் நூலகம், 39/22, கிருஷ்ணாபுரம் முதல்தெரு, திருச்சிராப்பள்ளி-620008. ✆ : 99528 06121
நூலின் விலை	:	ஆனந்த தாண்டவம் என்ற இந்நூலைப் படித்து உணர்வதும், நூலின்படி ஆனந்ததாண்டவம் காண வழிமுறைகளைக் கடைப்பிடித்து அதன்படி காண முயற்சிப்பதுவுமே நூலின் உண்மை விலை.

ரூ 120 - 00

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீன ஸ்ரீஞானமா நடராஜர் கட்டியம்

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

சந்திர சடாதர சதாசிவ சிவானந்த
சைதந்ய மான பொருளே
யந்தமி லுயிர்க்குயிர தாகிநிறை யுலகெலா
மசைவற்று நின்ற துணைவா
பந்திகொள் படப்பொறி மணிச்சுடிகை யுச்சிப்
பதஞ்சலி பணிந்த சரணா
திந்திமி திகுர்த்ததிமி யென்றுதிரு நிர்த்தமிடு
தில்லையம் பலவா ணனே.

பராகு–பராகு–சுவாமிந்–வெகுபராகு தேவாரமருளிப் பாடுக.

நிரந்தர நிராமய நிராலம்ப நிர்க்குண
நிரேதுகா ருண்ய நிமலா
பரம்பர திகம்பர பராபர க்ருபாகர
பரப்பிரம சிற்சொ ருபனே
யிரந்தவ ரிதம்பெற யிரங்கியு ளிருந்தரு
ளிரும்பரிபு ரச்சர ணனே
திரம்பெறு சுகந்தரு சிதம்பர நடேசனே
தில்லையம் பலவா ணனே.

பராகு–பராகு–சுவாமிந்–வெகுபராகு தேவாரமருளிப் பாடுக.

இக்கட்டியம் இரண்டும் தொட்டிக்கலை மதுரகவி சுப்பிரமணிய முனிவர் இயற்றியருளின. இரண்டாவது செய்யுள் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் இயற்றி அருளியது என்பர் சிலர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருளடக்கம்

1. பொருளடக்கம்
2. முகவுரை
3. வாழ்த்துரைகள்
4. அணிந்துரை
5. நூலாசிரியரின் நன்றியுரை
6. பதிப்பாசிரியரின் நன்றியுரை
7. ஸ்ரீவிநாயகர் துதி முதலான துதிப் பாடல்கள்
8. ஸ்ரீசிவாகமத்தில் சபாநாயகர் (கட்டுரை) 30
9. ஆன்ந்த தாண்டவம் 41–219
10. பலவகை நடனங்கள் 220
11. ஸ்ரீஞானமா நடராசப்பெருமான் அஷ்டோத்தர நாமாவளி 223
12. ஸ்ரீநடராஜர் தோத்திரப் பாடல்கள் 227
13. ஸ்ரீசிவகாமசுந்தரி தோத்திரப் பாடல்கள் 236
14. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கண்ட ஆனந்தக்கூத்து 239
15. அச்சாகி வெளிவரவேண்டிய, சில முக்கியச் சைவ நூல்கள் (ஸம்ஸ்கிருதம்) 242
16. அச்சாகி வெளிவரவேண்டிய சில முக்கியச் சைவ நூல்கள் (தமிழ்) 248
18. நூலாசிரியர் இந்நூலில் எடுத்தாண்ட கருவி நூல்கள் 249
19. சிவதீக்ஷையின் பெருமையும் அவசியமும் 251

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்

முகவுரை

உலகம் உய்யப் பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடும் அம்பலவாணர் திருவருளினால் ஆனந்ததாண்டவம் என்னும் இவ்வருள் நூல் எழுத எண்ணம் உண்டாயிற்று.

உலகத்தில் தெய்வங்கள் பல உண்டு. அத்தெய்வங்கள் எல்லாவற்றிற்கும் பிறப்பு இறப்பு உண்டு. அதனால் உயிர் களுக்கு உண்டாகும் பிறப்பு இறப்பு ஆகிய துன்பத்தை அத்தெய்வங்களால் நீக்க இயலாது. மேலும் எல்லாருக்கும் முதல்வராக இருக்கவும் முடியாது. இனி, பிறப்பு இறப்பு இல்லாதவராய்த் தன்னையடைந்தார்க்குப் பிறப்பு இறப்பு இல்லாமல் செய்பவராய் எல்லாருக்கும் முதல்வராய் உள்ளவர் சிவபெருமான் ஒருவரே. அதனால் அவரைப் பரம பதியென்றும், பசுபதியென்றும் பரமாப்தரென்றும் தான்தனி யன் காணேடி என்றும் அருள்நூல்கள் கூறும்.

இன்னும் சிருஷ்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிர கம் ஆகிய பஞ்சகிருத்தியங்களைச் செய்வதற்கும் உயிர்களுக்குப் பிறவித்துன்பத்தை நீக்கிப் பேரின்பமாகிய முத்தியைக் கொடுப்பதற்கும் நானே வல்லவன் என்பதை நன் றாக உணரும்படியாகவும் காணும்படியாகவும் அமைந்த திருக்கோலந்தான் நடராசப்பெருமான். அவர் ஆடுகின்ற திருக்கூத்துத்தான் ஆனந்ததாண்டவம்.

அந்த ஆனந்ததாண்டவம் உயிர்களாகிய நமக்கு மண்ணு லகவாழ்வு விண்ணுலக வாழ்வு மீட்டிங்கு வாராத சிவலோக வாழ்வு ஆகிய வாழ்வு அனைத்தையும் வழங்குவது.

இந்த உண்மை விஷயங்களைத் திருவாதவூரடிகள் புரா ணத்தில் கடவுண்மாமுனிவர்,

"நண்ணும் பிறவி யொழித் துயிர்க்கு நலஞ்சேர்முத்தி கொடுப்ப தற்கு
எண்ணும் சமயக் கடவுளரில் யானேவல்ல னெனப்பத மேல்
வண்ணந் திகழ்பொற் கழலணிந்து மதுகைக் கொடியும் கட்டியருட்
பெண்ணம் பிகைகண் காணநடம் செய்வானந்தப் பெருந்தருக்கால்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்று பாடுகிறார். ஆகையால் சிவபெருமான் ஒருவரே. உயிர்களுக்குப் பந்தம், வீடு ஆகிய பயன்களைக் கொடுப்பவர் என்றும் அவர் தாண்டவம் செய்வதாலேயே உயிர் உலகம் இயங்குகிறது என்பதும் நன்கு தெளியப்படும். ஆடுதல் என்பது அசைதல் என்கிற செயலாம். இவரே உலகை இயக்குபவர் என்பது துணியப்படும். இக்கருத்தைப் பட்டிணத்துச்சுவாமிகள்,

"ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும் இங்கு ஒன்றோடொன்றை
மூட்டுவிப்பானும் முயங்குவிப்பானும் முயன்றவினை
காட்டுவிப்பானும் இருவினைப்பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானும் ஒருவனுண்டே தில்லையம்பலத்தே."

என்று பாடுகிறார். ஆகவே பரமநாடகமாகிய அற்புதக்கூத்தின் செயலை இந்த ஆனந்த தாண்டவம் என்கிற பேரருட்கூத்தின் ஞான விஷயங்களைக் கோயிற்புராண முதலாகப் பல நூல்களில் அருளாளர்கள் அருளிச்செய்தபடி அடியேன் எனது பெற்றோர்களாகிய திரு. சுப்பிரமணியம்– வீரம்மாள் ஆகியோர் தவத்தாலும், ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் அநுக்ரகத்தாலும், **திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் எல்லையில்லாத கருணையினாலும்,** அருளாசியினாலும் எனது தீக்ஷாகுருவும், ஞானாசிரியருமான தேவகோட்டை சிவஸ்ரீதத்புருஷதேசிகர் அருளாசியினாலும் எழுதலாயினேன். சிவநேயமிக்குள்ள பெரியோர்கள் அறிந்தனுபவிப்பார்களாக ஆனந்தம் பெறுவார்களாக.

இங்ஙனம்

தத்புருஷ தேவநாம சு. இராமலிங்கம் சோதிடர்

(சீகம்பட்டி) வைகநல்லூர் அக்ரஹாரம், குளித்தலை,

கரூர் மாவட்டம், தமிழ்நாடு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

ஜி. பரமேஸ்வர தீக்ஷிதர்

53/85, தெற்குத் தேர்வீதி, சிதம்பரம்-608 001.

ஆசியுரை

ஸ்ரீ சிவ. இராமலிங்கம் அவர்களுக்கு,

அனேக வேதோக்த ஆசீர்வாதங்கள். தாங்களனுப்பின, ''ஆனந்ததாண்டவம்'' நூல் முதல் பாகம் கண்டு ஆனந்த மடைந்தேன்.

தங்களுடைய எளிய வசன நடையில் ஆனந்தமும், அதற்கேற்ற பாசுரங்களில் தாண்டவமும் தோற்றுகிறது.

மேலும் அதர்வசிகோபநிஷத் கூற்றினை தங்களின் கட்டுரை நடை வலியுறுத்துவது போன்றுள்ளது. ''சிவ ஏகோ த்யேய:– சிவசங்கர :– ஸர்வ மன்யத் பரித்யஜ்ய''..... சிவன் ஒருவனே தியானிக்கற்பாலன்; அதுவே சிவமாக்கும்; மற்றெவற்றையும் விட்டொழிக்க..... என்பது அவ் உபநிஷத் ஆக்ஞை.

ஆரம்ப முதலே இந்நூல் உலகம் யாவும் ஆனந்த தாண்டவம் என்னும் நுண் கருத்தை பலமாக உணர்த்துவது மிக்க வியப்பொன்றுமில்லை. ஏனெனில் அது உலகறிந்த உண்மையே.

வேதாந்தமும் – சித்தாந்தமும் – வேதமும் – சாஸ்திரமும் – திருமுறை ஏனைய புராணங்களும், ஆனந்த தாண்டவத்தையே உணர்த்துவதாகக் கையாண்டுள்ள எளிய பாணி – ஆசிரியரின் பரம பக்தியையும், ஆழ்ந்த புலமையையும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அழகும் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன.

ஸித்தர் பாடல்களை ரொம்ப கவனத்துடன் ஆயின் பொருத்தமுற எடுத்தாண்டுள்ளது மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

பொதுவாக இந்த ''ஆனந்த தாண்டவ நூல்'' இதுவரை கையாளப்படாத உயர்ந்த பாணியில் தாண்டவேசனுக்கு எழுப்பப்பட்ட 'சுயசரித நூல்' போன்றுள்ளது. (Autobiography)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடல்களையும் தேவாரத் திருவாசக, மற்றும் திருமந்திர திருமுறைப் பாசுரங்கள் அனைத்தையும் முழுமையாகத் தந்துள்ளதால் நித்யபாராயண நூலாகவும், அம்பலத் தரசனடியாரால் போற்றிப் பாதுகாக்கப்படும் என்பதில் பெரு நம்பிக்கை எமக்கு உள்ளது.

அப்படியே ஆனந்த தாண்டவன் அருள் புரிந்து விரைவில் மற்ற மூன்று பாகங்களும் வெளிவந்து ஆனந்த நடேச பக்த உலகினை மகிழ்விக்குமாகுக.

ஸ்ரீ நடராஜ ராஜர் க்ருபை புரிவார்

தங்களன்புள்ள

க. பரமேஸ்வர தீக்ஷிதர்

நடராஜர் நடனமாடிக் கொண்டு இருப்பது ஏன்?

அணுக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற விஞ்ஞானிகள் 'அணுக்களெல்லாம் ஏகதாளத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன' என்பதைக் கண்டு அதற்குரிய காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க, காரணம் காணமுடியாது கலங்கினர். அதன்பின் நமது தெய்வம் நடனமாடிக் கொண்டிருக்கிறது என்பதைக் கேட்டு வியந்த அந்த விஞ்ஞானிகள் இங்கு வந்து இதனைக் கண்டு சென்றுள்ளார்கள். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவனும் நடன மூர்த்தியாயிருக்க வேண்டும். ஆதலினாலேயே நடராஜர் திருவுரு நடனமாடும் ரூபமாக விளங்குகிறது. மனிதர் களுடைய நோக்கம் துக்கம் நீங்கிச் சுகம் அடைய வேண்டும் என்பதேயாகும். நாம் ஆனந்தமடைய ஆனந்த மூர்த்தியை வணங்குதல் வேண்டும். அவர் ஆனந்த நடனம்புரிவதால் எப்போதும் ஆனந்தத்தோடு விளங்குகிறார் என்பது தெரிகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவகுடும்பம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து மூன்றாவது குருமகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

"பிரதிஷ்டா பாஸ்கர" - "சிவநெறி செம்மல்"
"சித்தாந்த ரத்தினம்" S. கண்ணப்பகுருக்கள், M.A.,
(சா. பசுபதிசிவாச்சாரியார்)
முதல்வர், வேதசிவாகம திருமுறைப் பாடசாலை
ஸ்ரீகாஞ்சிசங்கரமடம் சீர்காழி கிளை
திருஞானசம்பந்தர் அவதார இல்லம்,
நெ. 6, திருஞான சம்பந்தர் தெரு, சீர்காழி-609 110.
நாகை மாவட்டம். போன் : 04364-272116

வாழ்த்துரை

யஸ்மாத் ஸர்வம் ஸமுத்பன்னம் சராசர மிதம் ஜகத் ।
இதம் நமோ நடேசாய தஸ்மை காருண்ய மூர்த்தயே ॥

உலகை ரக்ஷிப்பதே தாண்டவ நோக்கமாகும்.

தாண்டவம் குருதே யஸ்மாத் ஜகத் ரக்ஷண ஹேதவே ।

– காரணாகமம்

ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனில் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி. – மணிவாசகம்

மூர்த்தி மத்யே கதம் தத்வம் தத்வ மத்யே கதஸ்சிவ: ।
சிவமத்யே கதம் நிருத்தம் நிருத்த மத்யேது சாந்திகம் ॥

– வாதுள சுத்தாக்கியம்

அணுவுக்கு அணுவாய் அப்பாலுக்கப்பாலாய் சிவனருளும் தன்வடிவே நடராஜ தத்துவமாகும். தத்துவ தரிசனம் கண்டவான்மாக்களை அத்துவ சுத்தி செய்து சிவதரிசனம் காட்டும் ஆனந்தக்கூத்தை அழகாய் ஆராய்ந்து கூறும் அற்புதநூல் ஆனந்த தாண்டவம். ஆகமம் முதற் தொடங்கி அருளாளர் அருள்மொழி முற்ற உணர்த்தும் பழம் பாங்கு பாராட்டிற்கு உரியது. ஞாலம் வாழத் தானாடி ஞானமருளும் ஆடல் வள்ளற்பிரான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தானாடுவதோடு ''யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு வான் ஆவான்''

சைவப் பொறைமிக்க சைவத்துள்ளும், மொழிபேதம் கூறும் மூடரைச் சாடுமிடம் காலத்தாற் செய்த கடப்பாடு ஆகும். வடமொழியும், தென்மொழியும், சமயத்தின் கண், நம்கண் என உணர்ந்த நூலார் நம்மையும் (படிப்பவரையும்) உணர்ந்து நுகரச்செய்கிறார். வேதம், அங்கம், ஆகமம், உபநிடதம், புராணங்கள், தலபுராணங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள், வழிநூல்கள் இவை அனைத்தும் சைவத் துறை திறம் பாடும் நம்நூல்களே. வடமொழி=வடு+அல்+மொழி (குற்றமற்ற மொழி) என்றும் தென் தமிழ்=தென்+மொழி (உயர் தனிச்செந்தமிழ்) எனக் கொளல் வேண்டுமே தவிர திசை மொழியோ; இனமொழியோ அல்ல. அவை மறைமொழி. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழியாகும். இந்நூலின் 173-ஆம் பக்க காஞ்சீ புராணப் பாடல் வடமொழியைப் பாணிணிக்கும், தென்தமிழைக் குடமுனிக்கும் அருளிய திறம் கூறுகிறது. இவ்வரலாறு என்சிந்தை வாய்ப் பாயும் நினைவில் மொழிக்கும் நடராஜருக்கும் உள்ள தொடர்பை தூண்டியது. உடுக்கையிலிருந்து மொழிகள் தோன்றியதை மாஹேஸ்வர ஸூத்திரம் எனும் நூல் உணர்த்தும். உடுக்கையின் ஒருபுறம் தமிழும் மறுபுறம் ஸமஸ்கிருதமும் தோன்றியதென உரைப்பர் பெரியோர். திருமறை முதலாய வடநூல்களும், திருமுறை முதலாய தமிழ் நூல்களும் ஒன்றாகவே கற்று அறிவதே முறையாகும். இக்கருத்தை அறியச்செய்யும், நூலும்,நூலாரும், நூலகத்தாரும், நூலாக உதவியவரும் நல்வாழ்வு பெறவும், நூல்பல செய்யவும், இன்று போல் என்றும்! என்றும்! ! இறையருள் துணை நிற்க! இருநல புகழ் நல்கும் இடை மருதீசரை வணங்கி உளமார வாழ்த்துகிறோம்.

வாழ்க! வளர்க! ஆசீர்வாதம்!

சா. கண்ணப்பகுருக்கள் (எ)
சா. பசுபதி சிவாசாரியர்
திருவிடைமருதூர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குருமகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை-609803.நாகைமாவட்டம்.தொலைபேசி:04364-232021

வாழ்த்துரை

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!

தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்(கு)
ஆனந்தக் கூத்தாட ஆடரங் கானதே. – திருமந்திரம்

பேச்சாலும், இசையாலும், எழுத்தாலும் சைவத்திற்குச் சீரிய முறையில் தொண்டாற்றிவரும் சிவத்திருவாளர் குளித்தலை சு. இராமலிங்கம் அவர்கள் ஆனந்ததாண்டவம் என்னும் நூல் ஒன்று எழுதியுள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிவபெருமான் மேற்கொண்டருளும் திருமேனிகளுள் நடராசத் திருமேனி தனிச்சிறப்பு வாய்ந்தது. ஐந்தொழில், ஞானம், அதன் பயனாகிய ஆனந்தம் ஆகிய யாவும் இத்திருமேனி ஒன்றினாலே உணர்த்தப் பெறுகின்றன என்று நம் ஆன்றோர்கள் தம் உயரிய நூல்களில் அருளிச் செய்துள்ளனர். இவ்வுண்மை யினை நன்கு விளக்கிச் சிவத்திரு. சு. இராமலிங்கம் அவர்கள் நூலினை இயற்றியுள்ளார். திருமுறைகள், சாத்திரங்கள், புராணங்கள், அவற்றின் வழிவந்த பிற அருள்நூல்கள் ஆகிய வற்றைத் தக்க முறையில் மேற்கோள்காட்டி நூலில் எடுத்துக் கொண்ட கருத்தினைத் திறம்பட விளக்கியிருத்தல் பாராட்டத் தக்கது.

சிவநெறிச் சீலமும், சித்தாந்தத்தில் நுண்மாண் நுழைபுலமும், புராணங்களில் தோய்ந்த புலமை நலனும், திருமுறைகளில் இசைஞானத்தோடு கூடிய பொருள் விரித்துரைக்கும் திறனும் திருவருளால் ஒருங்கே கைகூடப் பெற்ற சிவத்திருவாளர் சு.இராமலிங்கம் அவர்கள் மேன்மேலும் பல சிறந்த சிவத்தொண்டு களை இயற்றிச் சைவத்திற்கும் தமிழுக்கும் வளம்பெருக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவசிவ

தத்புருஷ சிவம் சிவஸ்ரீ சொ. கிருஷ்ணன்
பன்னிரு திருமுறை வாரவழிபாட்டுக் கழகம்
திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி-5.

வாழ்த்துரை

குளித்தலை, நமது பேரன்பர் சைவ. சு. இராமலிங்கம் அவர்கள் சைவப் புலமை மிக்கவர். சைவ நன்னெறியின் சீலமிக்கவர்; சிறந்த சிவபூசைச் செல்வர்.

சைவத் திருமுறைகளிலும், சைவ சித்தாந்த சாத்திர நூல்களிலும் நுண்மாண் நுழைபுலமிக்கவர். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், மற்றும் காஞ்சிப் புராணம், கோயிற்புராணம் திருத்தணிகைப் புராணம் போன்ற சிறந்த புராணங்கள் பலவும் கற்று உணர்ந்தவர். சுருங்கச் சொல்லின் அவர் ஓர் பல்கலைக் கழகம்.

சைவ புராணங்களை மக்களுக்கு எடுத்தியம்புவதில் மிகத் திறமை படைத்தவர். தென்னன் தமிழும் இசையும் கலந்து தித்திக்கப் பேசுவார். கேட்பவர்களைச் சிந்திக்கவும் வைப்பார்.

உயர் நலமிக்க இப் பெரியார், 'ஆனந்தத் தாண்டவம்' என்பதொரு அரிய நூலை எழுதி வெளியிடுவது அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். சைவப் பெருமக்கள் பலரும் இதனைப் பெற்றுப் பயன் பெறுவார்களாக.

இந்நூலைப் படைத்துத் தந்த பெருமகனார் நீடுவாழ, நிறைகலம் யாவும் பெற்று வாழ, எம் காளத்தி அண்ணல் கழலடி இறைஞ்சி வேண்டுகின்றேன்.

அன்பன்,

தத்புருஷ சிவம்

சிவஸ்ரீ சொ. கிருஷ்ணன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

கோமல் ஓம்நமச்சிவாய அறக்கட்டளை,
103, பெருமாள் கோயில்தெரு, கோமல்-609 805.
மயிலாடுதுறை வட்டம்.
கோமல் கா. சேகர், நிர்வாக மேலாளர்,

வாழ்த்துரை

அவ்வதிசை யாருமடி யாருமுள ராக அருள் செய்தவர்கள்மேல்
எவ்வமற வைகலு மிரங்கியெரி யாடுமெம தீசனிடமாம்.

திருஞான சம்பந்தர் - மயிலாடுதுறை - 3-70-7

ஓடிய தார கன்ற னுடலம் பிளந்தும் ஒழியாத கோபம் ஒழிய
ஆடிய மாநடத்தெமனலாடி பாத மவையா நமக்கொர் சரணே.

திருநாவுக்கரசர் – 4-14-4

விடைதா னுடையஅவ் வேதியன் வாழுங் கழுமலத்துள்
அடைவார் வினைக ளவையெள்க நாள் தொறு மாடுவரே.

திருநாவுக்கரசர் – 4-82-2

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னே டீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்கு வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ.

திருவாசகம் / திருச்சாழல் 14

உருவமேயில்லாத பரங்கருணைப் பேராறாகிய சிவபெருமான், உயிர்களிடத்து தனக்குள்ள ஒப்பொன் றில்லாப் பெருங்கருணையினால், சிவபெருமானாக தான் விரும்பியொரு உருவமெடுத்து, தன் சக்தியை உடனாயும் வேறாயும் வைத்து, நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டங்களை இயக்கி, ஐந்தொழில்கள் இடையறாது ஆற்ற

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிற்றம்பலத்திலே மாநடம் இடையறாது ஆற்றிக் கொண்டிருக்கிறான்.

திருநடத்தைக் கண்டு வியந்த திருஞான சம்பந்தர் மாநடமாடும் பெருமானின் திருப்பாதத்தைப் போற்றி,

1. திருப்பாதத்தைப் பற்றா நின்றாரைப் பாவம் பற்றாது.

2. அவனை மறப்பிலார் அஞ்ஞான இருள் நீங்கப் பெறுவர்.

3. சிவகதி என்னும் செம்மை நெறியில் செலுத்தும் பொய்யா மறைபாடல் புரிந்தவன்.

4. அவன் கழலைப் போற்றும் இன்பமே பேரின்ப நிலையாகும்.

5. அவன் கழலேத்தும் செல்வமே முத்திப் பேரின்பம் நல்கும் செல்வம்.

6. திருப்பெருகு சிவஞானமளிக்கும் பெருமான் கழலல்லாது என்உள்ளம் எதையும் சிந்தையில் கொள்ளாது.

7. பெருமானின் சிற்றம்பலத்தைத் தலையால் வணங்குவார் தலையாயதான முத்திப் பேரின்பம் எய்துவர்.

8. நாளும் அவனைப் போற்றுவோர் வினைகளின் தீப்பயன்களேயன்றி பிறவி நோயுமறப் பெறுவர்.

9. முன்தீவினைகளால் விளையும் வலிய துன்பம் அகலும்.

10. நாளும் நட்டப் பெருமானைத் தொழுவோம். பிற சிறு நெறிகளைக்கேளோம்.

11. முத்தி நெறியே நாடும் சீலத்தார் கொள்கை சிற்றம்பலத்தானின் கழல் கூடுவதே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

12. தொல்வினை சுருங்க அருள்வான்.

13. தில்லை மறையோர் நல்லோராதலால் அவனைப் பிரியார் அங்குப்பெருமான் இட்டமாக விரும்பி உறை கின்றான்.

14. சிவநெறியே செம்மை நெறியாக் கொண்ட சீலமுடையோரால் தொழுதேத்தப்படுபவன்.

15. அம்பலவாணன் அடியார்க்கு இருவினையும் அடையாது முத்திப் பேரின்ப வழி செலுத்தும்.

16. உயிர்கட்கு அமுதானவன். காதலால் அவன் கழல்தொழ உலகவாழ்வின் இலக்கான முத்திப் பேரின்பம் கூடலாம். என நம்மை எல்லாம் அவன் ஆடலைப் போற்றி ஆற்றுப் படுத்துகிறார்.

திருநாவுக்கரசுப் பெருமான் அவர்பாதம் தொழுது அதுதான் உறுதிப்பொருள் எனக் கொண்டு 'நாட்டினேன் நின்றன் பாதம் நடுப்பட நெஞ்சினுள்ளே' எனப் போற்றுகிறார். அவனது ஆடல், திருவடி, உடுத்த துகில் உந்தியின் மேலசைத்த கச்சு, கைஞ்ஞின்ற ஆடல், ஏனத் தெயிறு, சிரித்த முகம், நெற்றியில் கண்டகண், மத்தமலர், நெருக்கி மிதித்த விரல் போன்ற புண்ணியத்திரு வேடங்களைக் கண்ட கண்களால் இனிக்காணத் தக்கது வேறுளதோ என வியக்கிறார். 'வாய்த்தது நமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என நம்மை எச்சரித்து, அற்றவர்க்கும் அலந்தாருக்கும் அருள் செய்வானை, அடியார் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை, கூத்தனில் கூத்து வல்லாரில்லாக் கூத்தனைப் ''பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' எனப் போற்றுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்களும், சிந்தையும், சாத்துவித குணமுமே முன்நிற்க, ஆனந்த எல்லையில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தனிப்பெருங் கூத்தின், மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்து அடியார் பாவம் தீர்க்கும் பித்தாடியை, அருமையாம் தன்னுலகம் தருவானை, அடியாரை எமதூதர்கள் பற்றித் துன்பம் செய்ய முயலும் போது தடுத்தாட் கொள்வான் எனச் சிறப்பிக்கிறார்.

எல்லையில்லாப் பெருங்கருணை யாளனான ஆட வல்லானைப் போற்றி, அடியவர்கள் எல்லாம் செய்த தவப்பயன்களின் விளைவாக, திருமுறைகள், புராணங்கள், தலபுராணங்கள், சாத்திரங்கள் மற்றும் ஏனைய சிவபரத்துவம் பெருக்கும் நூல்களை எல்லாம் ஆய்ந்து தொகுத்து, தன் காலகட்டத்தில் வாழும் இறையன்பர்களும், பின்னால் இறையடி கூட தோன்றும் ஆன்மாக்களும் அறிந்து உய்யும் வண்ணம் ஒரு நூல் வழங்க, முதுபெரும் பேரறிஞரும், சிவபெருமானைத் தன் உள்ளத்தில் ஆலயம் எழுப்பிப் போற்றுபவரும், 'ஞாலம் நின்புகழே மிக வேண்டும்' என்ற திருஞான சம்பந்தரின் வாக்கைத் தமக்கிட்டக் குறிப்பாக ஏற்று சிவபரத்துவச் செய்திகளை அடியார் குழாத்திலிருந்து பரப்பி மகிழ்பவருமான குளித்தலை திரு. இராமலிங்க சுவாமி அவர்களுக்கு ஆடவல்லானின் திருவடிக்குறிப்பு கிடைத்து உள்ளது.

சிற்றம்பலவனின் பேரொளியை எய்திய ஐயா வழி இறைவன் வழங்கும் இந்நூல் கற்போரின் அஞ்ஞானத்தை விலக்கித் திருப்பெருகு சிவஞானத்தை அருள எல்லாம் வல்லப் பரம்பொருளான தில்லைக் கூத்தனின் திருவடிகளை தலைமேற் கொண்டு பிரார்த்திக்கிறேன்.

தங்களன்புள்ள

கோமல் கா. சேகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

முனைவர் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை, மௌனமடம்,
மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி-620 002.

தந்தையும் தாயும் நீ; என்னுயிர்த் துணையும்நீ சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும்நீ; உனையலால் மற்றொரு துணை காணேன்;
அந்தம் ஆதியும் அளப்பருஞ் சோதியே! ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவன்எனும் சிரகிரிப் பெருமானே!

– ஸ்ரீதாயுமான சுவாமிகள்

அணிந்துரை

"சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுள் சிற்றம்பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே" - அப்பர்

"எங்கே நடத்துமோ எங்கே கிடத்துமோ
எங்கே இருத்துமோ என்றறியேன் – கங்கைமதி
சூடினான் தில்லையிலே தொந்தொ மென நின்றுநடம்
ஆடினான் எங்கோன் அருள். - குருஞானசம்பந்தர்

"கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென
நாடு மவிநயத்தை நண்ணிற்றால் - ஓடியகட்
காதனார் காணவொரு கால்காட்டிக் கையமைத்து
நாதனார் செய்யு நடம். - குமரகுருபரர்

கோயில் என்றால் தில்லையைக் குறிக்கும். பூங்கோயில் என்றால் ஆரூரைக் குறிக்கும்.

"மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தை மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணி ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே" - என்பது அப்பரடிகள் வாக்கு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரண்டு தலங்களிலும் இருப்பவர்கள் இராஜாக்கள். தில்லையில் இருப்பவர் நடனத்திற்கு இராஜா இதனை விளையாட்டாக செய்கிறார். "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்பது மணிவாசகம். ஆரூரில் இருப்பவர் தியாகத்திற்கு இராஜா. "மூலபண்டாரம் வழங்குகிறார் வந்துமுந்துமினே" என்பது திருவாசகம். தில்லையில் நின்றாடும் கூத்தர். ஆரூரில் இருந்தாடும் அழகர்.

தில்லையில் இரகசியம் அருவ நிலையிலும், நடராஜர் உருவ நிலையிலும், ஸ்ரீமூலநாதர் அருவுருவ நிலையில் அருள் பாலிக்கின்றான்.

சில தலங்களை நினைத்தாலே முத்தித்தருவன அவற்றுள் முதன்மையானது தில்லையாகும்.

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்." - என்பது குருஞானசம்பந்தர் வாக்கு.

உலகில் எத்தனை வகையான தீர்த்தங்கள் இருந்தாலும் அது சிவகங்கையாகும். சிவாகமங்களில் எத்தனை வகையான மூர்த்தங்கள் காட்டினாலும் அது நடராஜாதான். எத்தனைப் புண்ணியத்தலங்கள் இருப்பினும் அவற்றுள் சிறந்தது தில்லையாகும்.

"தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்தருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே" - என்பது குமரகுருபரர் வாக்கு.

சமயாச்சாரியார்களால் பாடல் பெற்றத் தலம், சேக்கிழார் பெரிய புராணம் அரங்கேற்றியத்தலம். திருமுறைகளை உலகுக்களித்தத் தலம் தில்லை மூதூர்.

குருஞானசம்பந்தருக்கு பால்பாயாசம் அன்னை அருளி ஆட்கொண்டத்தலம், குமரகுருபரர் சிதம்பரமும் மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, தில்லை சிவகாமி இரட்டை மணிமாலை போற்றியருளியத் தலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநீலகண்ட குயவனார், சேந்தனார் உள்ளிட்ட திருமுறை ஆசிரியர்கள், திருத்தொண்டர்கள், சந்தானா சாரியார்கள், அருளாளர்கள் என பலரும் இருந்தருளியத் தலமாகும்.

ஆரூர் பிறத்தல் முத்தி நல்கும், ஆனாலும் நாம் பிறந்து விட்டோம் இனி ஆரூரில் பிறப்போமென்ற உறுதியில்லை. காசி இறத்தல் முத்தி நல்கும், ஆனாலும் யாத்திரையின் இடர்ப்பாட்டால் அதுவும் உறுதியில்லை. தில்லை தரிசிக்க முத்தி நல்கும் இது எளிது. உடனே கைகூடுவது.

தரிசனத்திற்கு விரும்பிச் சென்றாலும் விரும்பாமல் சென்றாலும் பலன் ஒன்றே எப்படி மருந்து விரும்பிச் சாப்பிட்டாலும், விரும்பாமல் சாப்பிட்டாலும் நோய் நீங்குவது போன்று முத்தியளிக்கும் தலம்.

"நின்பதம் வழங்குதி நிமலவென் றனக்கே
மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
அருந்துழி யொருவன் அருவருப் புளீஇத்
தன்முகஞ் சுளித்துக் தலை நடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்கும்
தீப்பிணி மாற்றுத றிண்ணமே" - என்பது சிதம்பரமும்மணிக்கோவை

ஆனந்ததாண்டவம் ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்கள் உய்யும் வகையருளுவது கருணையே. அக்கருணையே அருளாகிய அருட்சக்தி (அம்மை) நமக்கு வாங்கியளிக்கின்றாள்.

"இத்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப"

எனச் சிதம்பரமும் மணிக்கோவை காட்டும்.

பதஞ்சலி வியாக்ரபாதருக்காக "ஆனந்ததாண்டவம்" தரிசனம் தில்லை சிற்றம்பலத்தில் காட்டினான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அப்பரடிகளுக்கு ''ஆனந்த தாண்டவம்'' தரிசனம் எப்படி இருக்கிறாய்? எப்போ வந்தாய்? என எடுத்துச் சுமக்கும் கருணையாக காட்டினான்.

இவ்''ஆனந்த தாண்டவம்'' அனுபவத்தை நம்மால் உணர முடியாதது. அதுயோகியரும் தவத்தரும் உணரு வார்கள்.

நாம் அனுபவத்தால் உணரமுடியாததை அருளாளர்களின் வாக்கினால் உணர்த்துவதை நமக்கு உணர்த்தும் வகையான் நமது பாராட்டுதலுக்கும், அன்பிற்குமுரிய ''சித்தாந்த சரபம்'', ''முத்தமிழ்ச் சைவ மாமணி'' சைவ. சு. இராமலிங்கனார் ''ஆனந்த தாண்டவம்'' செய்திருக்கிறார். இதனைப் படித்தால் பெருகலாம் தவம், பேதைமை தீரலாம், திருகலாகிய சிந்தை திருத்தலாம்.

திரு.சைவ.சு.இராமலிங்கனாரின், பலநூலாராய்ச்சியும், பல்துறை அறிவும் மரபு மாறா பண்பும், சமய உறைப்பும், உடையார் ஒருவர்தமர்நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லையெனும் இறுமாப்பும் அன்று சொல்லில் கண்டோம் இன்று நூலில் கண்டோம்.

''நமஸ்ஸமாப்யஸ் ஸபாபதிப்யஸ்சவோநம:''

எனும் ஸ்ரீருத்ரம் யஜீர் வேதம் தொடங்கி காரணாகமங்கள் முதலாய ஆகமங்களும், கோயிற்புராணம் முதலிய புராணங்களும், திருஞானசம்பந்தர் தேவாரம் முதலாய திருமுறைகளும், உண்மை விளக்கம் முதலாய சாத்திரங்களும், தாயுமானவர் முதலாய அருளாளர்களின் பிரபந்தங்களும் அப்பப்பா! அத்தனைக் கருத்துக்களையும் கொட்டி வைத்துள்ளார். பதி, பசு பாசத்தின் இலக்கணம், மாகேஸ்வரமூர்த்தங்கள், போக, யோக வேக வடிவங்கள், ஆரூர் மூலாதாரம் தொடங்கி-மதுரை துவாதசாந்தப் பெருவெளித்தலங்கள், பஞ்சசபைகள் - இவற்றின் பெருமைகள், மூர்த்தி, தலம், தீர்த்தம், சிவாகமத்தின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவசியம் - சிறப்பு - பெருமை, ஆதிசைவர்பெருமை, வடமொழி தமிழ்மொழி -பெருமை- அவசியம், சிவபூசையின்-பலன், நடராஜர் அபிஷேக நாட்கள், இருபதுக்கு மேற்பட்ட புராணங்களின் நடராஜர் தாண்டவம் பற்றிய பயன், அஷ்டோத்ர சதநாமாவளி எனத் தொகையில் ஆரம்பித்து விரி நூல் என பெருகி விவரித்துள்ளார்.

இந்நூல் ஆராய்ச்சி வேதம்- ஆகமம்- புராணம்- இதிகாசம்-திருமுறை - சாத்திரம் என வரிசையில் அமைந்துள்ளது பாராட்டுதலுக்குரியது.

மரபு மாறாது பின்பற்றும் சைவ.சு.இராமலிங்கனார். மொழிப்பிரச்சனையில் உலகியோர் ஓர் அணியில் திரண்டபோதும் இவரின் துணிச்சலான பேச்சும், எழுத்தும் விளங்குகிறது என்பதற்கு இந்நூலில்'' தற்காலம் புதிய சிவபக்தர்கள் உண்டாகி வடமொழி வேண்டாம் வேதாகமம் வேண்டாம் என்று சொல்கிறார்கள். இது சிவாபசாரம், ஆகமவிரோதம் பெருங்குற்றம் இது'' எனக் கூறியிருப்பது உண்மைச் சிவபக்தனுக்குரிய உணர்வைக் காட்டுகிறது. இம்மரபு போற்றுதல் எங்கள் தருமையாதீனக் குருமணியின் திருவுளக்குறிப்பு வெளிப்படுகிறது.

மேடைகிடைத்தால் போதும் எது வேண்டுமானாலும் பேசலாம், நூல் கிடைத்தால் எதுவும் எழுதலாம் எனும் இக்காலத்தில் தாமும் நெறி நின்று தம் வாரிசுகளையும் அதற்குத் தக சிவபூசைச் செல்வர். இரா. மாணிக்கவாசகன், இரா. மார்க்கண்டேயன், இரா.மெய்கண்டசிவம் ஆகியோரை உருவாக்கியிருப்பது சொல்வேறு செயல்வேறு இல்லாது இருப்பதைக் காட்டுகிறது.

பிர்மதேவன் உயிர்களை வினைக்கேற்ப ஏற்கும் உடலைப் படைக்கின்றான். அவன் கலைமகள் நாவில் வீற்றிருக்கின்றான். ஆனாலும் அவன் படைத்த உடல் அழிகின்றது. இப்புலவர் பெருமகனார் படைத்த நூல் அழிவதில்லை. இப்புலவர் பிர்மாவை விட மேலானவர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் – மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு."

இந்நூலினைப் போன்றே மரபு வழி நூல்கள் பல ஈன்றெடுக்கவும், தெய்வீக இந்நூல் ''ஓதி நன்னூல் கற்றார் பரவ பெருமையுடையன'' வாகவும் ஆசிரியர் சிவபூஜா துரந்தரர். சைவ.சு.இராமலிங்கனார்க்கு எல்லா நலன்களும் வளங்களும் கிடைத்திடவும்.

''ஆனந்த தாண்டவம்'' நூல் வெளிவர யுதவியாயின ''ஸ்ரீ கண நாத நாயனார் நூலகம்'' போற்றுநர். மு. ஜயக்குமார் உள்ளிட்ட அன்பர்களுக்கும், நூல் வெளிவர பொருளுதவிய நமதன்பர் கயிலைச்செல்வர். வே.சாத்தப்பன் உள்ளிட்டோர்களுக்கும் எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும் தருமையாதீன குருமணியின் குருவருளையும் போற்றி வாழ்த்துகின்றோம்.

''ஆனந்த தாண்டவம்'' சிந்திப்பரியன சிந்திப்பவர்க்கு சிறந்து செந்தேன் பொழிவன. உணர்த்த உணர்தற்குரியன. எனவே அனைவரும் ஓதி உணர விரும்புகின்றோம். அன்பர்கள் இல்லங்களில் பூசையறையிலும் நூலகத்தில் நின்று எல்லோர் நாவிலும் ''ஆனந்த தாண்டவம்'' ஆடுவதாகுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

பதிப்பாளரின் நன்றியுரை

மெய்யன்புடையீர் வணக்கம்.

"ஆனந்ததாண்டவம்" என்கிற இவ்வற்புதநூலை வெளியிட வைத்த திருவருளுக்கும். குருவருளுக்கும் முதற்கண் அடியேன் மனம்மெய் மொழிகளாலான நன்றிகளைச் செலுத்துகின்றேன்.

அடியேனையும் ஒருபொருட்டாக மதித்து நூலை வெளியிட அனுமதியளித்த நூலாசிரியர் **"சிவபூஜைச்செல்வர்", "ஜோதிடர்" "சைவசமய சாத்திர தோத்திர புராண இதிகாச விரிவுரையாளர்" "சீகம்பட்டி சைவ. சு. இராமலிங்கம் ஐயா"** அவர்களுக்கும், நூலுக்கு அணிந்துரை, ஆசியுரை வழங்கிய எங்கள் வழிகாட்டியும், போற்றுதலுக்குரிய வருமான **ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்** கட்டளை விசாரணை மௌனமடம் அவர்களுக்கும், நூலை வெளியிட நிதியுதவியளித்த **சிவபூஜைச்செல்வர், சிவபுண்ணியச்சீலர் சைவ. வே. சாத்தப்பன்ஐயா(இராயல் பர்னிச்சர், திருச்சிராப்பள்ளி)** அவர்களுக்கும், **"ஸ்ரீசிவாகமத்தில் சபாநாயகர்"** என்ற கட்டுரையை இயற்றி வெளியிட அனுமதியளித்த அடியேனுக்கு நிர்வாணதீக்ஷை அருளிச்செய்த வரும் ஞானாசிரியருமான **திருவிடைமருதூர் சிவஸ்ரீ சா.கண்ணப்பசிவாசாரியார் ஐயா** அவர்களின், திருமகனா ரான **சிவஸ்ரீ க. சாம்பசிவசிவாசாரியார் ஐயா** அவர்களுக்கும், **"அச்சாகி வெளிவரவேண்டிய முக்கியச் சைவநூல்கள்"** என்கிற கட்டுரையை தொகுத்த (THE FRENCH INSTITUTE PONDICHERRY) **முதுநிலை ஸ்ரீசிவாகம சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர் சிவஸ்ரீ தி. கணேசன் ஐயா** அவர்களுக்கும், இந்த நூலை வாழ்த்துரைகள், ஆசியுரைகள் வழங்கிய பெரியோர்களுக்கும் அடியேனது மனம் மெய்மொழிகளாலான நன்றி களைச் செலுத்துகின்றேன்.

இந்த அற்புதநூலை குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்தும், பல அரிய ஆலோசனைகளை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வழங்கியவருமான ஆர்.ஜி. பிரிண்டர்ஸ் உரிமையாளர் உயர்திரு. ஆர். ஞானசேகரன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலைத் தொகுப்பதற்கும், ப்ரூப் சரிபார்த்தல், பிழைதிருத்தம் செய்தவருமான நூலாசிரியர் அவர்களின் திருமகனாருமாகிய **சிவபூசைச்செல்வர் இரா.மாணிக்கவாசகன்,** M.A.,M.Phil.,Ph.D., அவர் இளவல்கள் **சிவஸ்ரீ இரா.மார்க்கண்டேயன்,** M.Sc.,M.Phil.,PGDCA., **சிவஸ்ரீ இரா. மெய்கண்டசிவம்,** M.A.,M.Ed., அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோல இன்னும் பல நூல்களைச் செய்ய ஆசிரியருக்கு துணைநிற்க வேண்டுமாய் எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன். நன்றி! வணக்கம்.

அடியார்க்கடியேன்,

மு. ஜயக்குமார்

பொற்புறு சபையில் மாதரார் நடனம் புரிந்து
யான் காண்பதை ஒழித்துச்
சிற்பர சபையில் நின்திரு நடனம்
தெரிசிக்கப் பெறுவதுஎந் நாளோ?
மற்பொரு முசுக்கள் காந்தளைப் பாந்தள்
மணிப்படம் எனப்பயந்து உந்திக்
கற்பக தருவின் கழுத்து ஓடி தரப்பாய்
கற்குடி மாமலைப் பரனே!

— மீனாட்சி சுந்தரம்பிள்ளை

(திருக்கற்குடி மாமலை மாலை)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரமூர்த்தி சுவாமிகள்
மாணிக்கவாசகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சந்தான குரவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

நூலாசிரியரின் நன்றியுரை

கற்பனை கடந்த சோதி கருணையே திருமேனியாகக் கொண்டு ஆன்மவர்க்கம் தரிசித்து உய்யும்பொருட்டுப் பொன்னம்பலத்தில் ஆனந்ததாண்டவம் செய்யும் அற்புத நிகழ்ச்சியை ஆனந்தாண்டவம் என்னும் பெயரால் அடியேன் ஒரு நூலாக ஆக்கியுள்ளேன். இந்நூலுக்கு ஆசியுரையும் அணிந்துரையும் வழங்கிய திருச்சிராப்பள்ளி, மௌனமடம் கட்டளை விசாரணை முனைவர் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளுக்கு அடியேன் திரிகரண சுத்தியோடு நன்றி செலுத்துகிறேன்.

இவ்வரிய பெரியநூல் புத்தகமாக வெளிவருவதற்குச் சிவபுண்ணியமே செல்வமென்று எண்ணுகின்ற அன்பர் திரு. வே. சாத்தப்பன் (ராயல்பர்னிச்சர்) அவர்கள் பொருட்செல்வந்தந்து அருட்செல்வம் பெற்றுள்ளார்கள் அவர்கள் இன்னும் பொருட்செல்வமும் அருட்செல்வமும் பெற வேண்டுமென்று அம்பலவாணரை வாழ்த்துகிறேன். வாழ்த்துரைகள் ஆசியுரைகள் வழங்கியவர்களுக்கும் அடியேன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தநூலை நல்லமுறையில் அச்சிட்டு வழங்கிய ஸ்ரீகணநாத நாயனார் நூலகம் அன்பர் திருவாளர் சிவபூசகர் மு. ஜயக்குமார் அவர்கள் இன்னும் சிவநூல்கள் பதிப்பித்தும் தேடியும் அன்பர்களுக்கு வழங்கத் திருவருளை வேண்டுகிறேன்.

அன்பன்

சைவ. சு. இராமலிங்கம்,

குளித்தலை, கரூர் மாவட்டம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீமத் சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் துணை

ஸ்ரீவிநாயகர் துதி

"பொற்பதப் பொதுவார் புலியூர்புகழ்
சொற்பதப் பொருளாகுவ தூயவ
றற்பகற் றொழ வாழணி கோபுரக்
கற்பகத் தனி யானை கழல்களே."

– கோயிற்புராணம்

திருநந்திதேவர் துதி

மனக்கவலை யறஅடியார் பதிபசுபா சம்தெரிந்து மன்னிவாழ
அனகம்மிகும் அருள்விளக்கி ஆனந்தப் பரவையிடை அழுந்தச் செய்து
கனகவரைச் சிலையாளர் இனிதுறையும் கயிலை வரை காக்கும் ஞானத்
தினகரனாம் அருள்நந்தித் தேவனிரு பாதமலர்ச் சிரமேல் கொள்வோம்.

–வேணுவனப் புராணம்

பஞ்சபுராணம் - (1) தேவாரம்

திருச்சிற்றம்பலம்

"செல்வ நெடுமாடம் சென்றுசே ணோங்கி
செல்வ மதிதோய செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லை சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே."

– திருஞானசம்பந்தர்

"பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக்கூத்தனை
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ."

– திருநாவுக்கரசு சுவாமிகள்

"மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழும்நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே."

– *சுந்தரமூர்த்திசுவாமிகள்*

(2) திருவாசகம்

"வணங்கத்தலை வைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமான்
அணங்கொடணி தில்லை அம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப்பாடிநாம் பூவல்லி கொய்யாமோ."

– ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(3) திருவிசைப்பா

"கண்பனி யரும்பக்கைகள் மொட்டித்துஎன் களைகணே ஓலமென்று ஓலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தங் கூட்டத்து என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின்றாடப் பனிமலர்ச்சோலை சூழ்மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப்புலியூர் திருவளர் திருச்சிற்றம்பலமே."

— கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா

(4) திருப்பல்லாண்டு

"மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர்போ யகல
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே."

— சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு

(5) பெரியபுராணம்

"உலகெலாமுணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்." *— சேக்கிழார் அருளிய பெரியபுராணம்*

ஸ்ரீசுப்பிரமணியர் துதி

ஈறுசேர் பொழுதினும் இறுதி யின்றியே
மாறிலா திருந்திடு வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வாழ்
ஆறுமா முகப்பிரான் அடிகள் போற்றுவாம். *— கந்த புராணம்*

ஸ்ரீசண்டேஸ்வரர் துதி

தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்து நிருத்தரிரு தாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாது வாய்மெய்ச்
சிந்தைதா னரனடிக்கே செலுத்தினராய்ச் சிவானுபவச் செல்வ ராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர் தாள்பரவிப் பணிதல் செய்வாம்.

— திருவிளையாடற் புராணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வியாக்ரபாதர் துதி

பூப்பறிக்கப் புலியுருவம் வேண்டுமென்று
புனிதன்பால் வரங்கேட்டுப் பொருந்தப் பெற்று
நாட்கமல மலர்கொய்து இடைவி டாது
நாடோறும் பூசித்து நடனம் வேண்டி
பாப்புனையும் பரமன்றன் கூத்துக் கண்டு
பாருள்ளோர் யாவருமே காணுமாறு
மாப்பெரிய கருணைபுரி வியாக்கிரன்றன்
மலரடிகள் எப்போதும் மனத்தில் வைப்பாம்.

போதுமிசை வண்டுவிழக் கண்டுமனம் பொங்கி
நாதபர நாதவருள் தாருமென வைகற்
போதுகொய வேகண்புலிக் கால்பெறுவி யாக்ர
பாதமுனி பாதமுனி யேதவினை படுப்பாம்.

பதஞ்சலி துதி

தேவருடன் முனிவர் சித்தர் யாவராலும்
செயற்கரிய செயல்செய்த திறலோய் போற்றி
காவல்செயும் நாரணன்பால் நடனங்கேட்டு
காதல்மிகப் பெருகிநின்ற கருணை போற்றி
ஆவலுடன் திருக்கயிலை அதனிற் சார்ந்து
அளவில்தவம் செய்தருளி தில்லை மேவி
பாவலர்கள் பரவுகின்ற பரதங் கண்ட
பதஞ்சலிநின் மலரடிகள் போற்றி போற்றி.

அணங்கொடு அணிதில்லை அம்பலத்தி லெந்நாளும்
குணங்கடந்த பெருங்கூத்தர் குலவிநின்று கூத்தாட
பணம் பெரிய பதஞ்சலியார் பரிந்துநமக்கருள் செய்தான்
மணம் பெரிய அவனடியை வாழ்த்திமிக வாழ்ந்திடுவாம்.

சிரந்தனை யரிந்தெரி செந்தழலி லிட்டு
நிரந்தர சுதந்தர நின்மலன தாடல்
வரந்தனை இரந்துல குக்கருளும் வள்ளல்
பரந்தருள் பதஞ்சலி பதம்பணிதல் செய்வாம்.

சமயாசாரிய சந்தானாசாரியர் துதி

"திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர்திரு நாவ லூரர்
பெருவாய்மை மாணிக்க வாசகர்தா ளெம்சிரத்திற் பேணிக்கொள்வாம்
ஒருஞான போதமருள் மெய்கண்டார் அருணந்தி உபய பாதம்
வருஞான மறைஞான சம்பந்த ருமாபதியை வணங்கி வாழ்வாம்."

— சைவ. சு. இராமலிங்கம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குருமரபு வாழ்த்து

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு நீடூழி தழைக மாதோ."

தீக்ஷாகுரு-ஞானாசிரியர் துதி

எண்ணிலா கமங்கள் நல்கும் இறைவர்த மருளி னாலே
கண்ணிலேன் தன்னை முன்னம் கண்ணுதற் கடவுள் பாதம்
நண்ணியே தொழுவ தற்கு நயந்தருட் தீக்கை செய்த
புண்ணியதத் புருட நாமப்புலவனே போற்றி போற்றி.

— சைவ. சு. இராமலிங்கம்

சிவனடியார் துதி

ஐம்பொறிகள் எனும்அரவ வாயின்வரு விடயவிட மதுமிது ஊர்ந்தே
தம்புலனை எழுவேக முடன்மயக்கத்து அருட்பார்வை சார்ந்துநாளும்
இம்பர்மணி மந்திரங்கண் மருந்தெனக்கண் டிகையினைஐ ந்தெழுத்தை நீற்றை
நம்புமடி யவர்அடிகள் முடியாக நாமுடிமேல் நயந்து கொள்வாம்.

- திருச்சோற்றுத்துறைதலபுராணம்

திருப்பணி செய்யும் தொண்டர் துதி

கன்னலினில் படுமுத்தம் வளைகள்முரன்று உமிழ்முத்தம் கமலமுத்தம்
சென்னெலினில் படுமுத்தம் சேரநில வெறிக்கும்இரும் திருநெல் வேலி
நன்னகரில் கழைமுத்தர் பதத்துஅன்பா யினகொண்டு நயந்து நாளும்
மன்னுதிருப் பணிபுரியும் அகத்தடியார் அடிமலர்கள் மனத்துள் வைப்பாம்

— வேணுவனப் புராணம்

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

"சிவாகமத்தில் சபாநாயகர்"

கட்டுரையாசிரியர் :
"சிவாகமரத்னம்"
சிவஸ்ரீ K. சாம்பசிவ்சரண சிவாசாரியார்,
ஆகம அத்யாபகர், வேதசிவாகம திருமுறைப் பாடசாலை, திருஞானசம்பந்தர் அவதார இல்லம், சீர்காழி.

"நமஸ் ஸபாப்யஸ் ஸபாபதிப்யஸ்சவோ நம:"

— *யஜுர்வேதம்*

இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் கொண்டு ஷாட்குண்ய பரிபூரணராகிய இறைவனார் உலகை, ஒன்றாய் உடனாய் வேறாய் இருந்து இயக்கும் வடிவம் நடராஜ ரூபமாகும். ஆகமங்களில் நிருத்த, தாண்டவ, நடந, நடேச, சபேச முதலாகிய பெயர்களால் விளக்கப்படுகிறார்.

ஷாட்குண்ய = ஷட் + குண்ய – ஆறுவகை குணியாக (குணி – கற்கண்டு, குணம் – இனிப்பு)

"வ்யாப்தா சேஷ சராசரை குணகுணி பாவேந ஸச்சின்மயம்"

பரந்து விரிந்த அனைத்து அசையும் அசையா உயிர் முதலாகியவையோடு குணமாகவும் குணியாகவும் சித்துமயமாய் பாவிக்கப்படுபவர்.

ஆகமம் கூறும் ஆறுகுணங்களைச் சாத்திரம் எண்குணம் எனக்கூறும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

	ஆகமம்	சாத்திரம்	நடராஜரூபம்
1.	அநந்தசக்தி	1. முடிவில் ஆற்றல்	பூமியால் தாங்க இயலாத கங்கையை சடையில் தாங்கி பூமியையும் தாங்கச் செய்கிறார். (கங்கை)
2.	அலுப்தசக்தி	2. தூய உடல் 3. இயல்பாக பாசநீக்கம்	அக்னி (தானும் தூயது தன்னை அடைந்த வற்றையும் தூய்மை யாக்கக் கூடியது) ஆணவ வடிவாகிய முயலகன்மீது நின்றல்
3.	ஸ்வதந்த்ரம்	4. தன்வயம்	விரிசடை, அபய ஹஸ்தம்
4.	அனாதி போதம்	5. இயற்கை உணர்வு	உடுக்கை தூக்கிய திருவடி
5.	நித்ய த்ருப்தி	6. பேரருள், 7. வரம்பில் இன்பம்	பிறை(மகாபாபியாகிய சந்திரனை பாபம் நீக்கித் தரித்தல்) – ஊமத்தை (நுகரும் பொருளால் இன்பம் அடையாதது)
6.	ஸர்வக்ஞர்	8. முற்றுணர்வு	நெற்றிக்கண்

''ப்ரபாம் ப்ரணவ ரூபந்து தத் ஜ்வாலாந் வர்ண ரூபகம்''

ப்ரபை (திருவாசி) – ப்ரணவமாகிய ''ஓம்'' எனும் நாதமாகும். ஒலி வடிவமே மொழிகளுக்கு முதலாகும். வரிவடிவம் இரண்டாவதாகும். எனவேதான் வேதமாகிய முதல் எழுதாக்கிளவி (ஸ்ருதி) எனப்படுகின்றது. நாத முதலாக் கொண்டு வர்ணங்கள் (எழுத்துக்கள்) தோன்றின. அவை 50 எழுத்துக்களே ஆகும். (அ முதல் அ: வரை 16; க முதல் ள வரை – 34 கூடுதல் – 50) தமிழைத் தவிர ஏனைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

த்ராவிட மொழிகளிலும் ஏன்? இந்திய மொழிகள் அனைத்தும் 50 எழுத்து உடையனவே. தமிழிலும் இருந்திருக்க வேண்டும்.

திருமூலர் திருமந்திரத்தில் ''ஐம்பது எழுத்தும் ஐந்தெழுத்தாமே'' என்பர். திருவாசியின் சுடர்களே எழுத்துக்கள் 50. நடராஜரின் திருவாசி யாளிமுகமின்றி இருக்கும்.

படைப்பின் முதல் தோற்றம் நாதமாகும் (ஒலி). தன் திருக்கரத்துடியின் மூலம் படைப்பைத் தொடங்கும் இறைவனார் ஊழியின் முடிவில் தாண்டவஞ் செய்து இறுதியாக ஒலியை லயமடையச் செய்கிறார். (ஒடுங்கச் செய்கிறார்). (''நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே'' – சிவபுராணம்) ஆக ''இறைவனார் திருக்கூத்தே சிருஷ்டி முதலாகிய பஞ்ச கிருத்யங்களைச் செய்து பின் அனைத்தையும் ஒடுங்கச் செய்து முத்தி அருள்வது'' என ஆகமம் அறிவுறுத்துகிறது.

''டமரோ ஸ்ருஷ்டி ஜாயேதே அபயம் ஸ்திதி ருச்யதே ।
அக்னௌ ப்ரோக்தம் ஸம்ஹார: திரோதானஞ்ச குஞ்சிதம்!
அனுக்ரஹோ ஊர்த்வ பத: க்ருத்யம் பஞ்ச சபாபதே ॥

– ஸ்ரீமத் வாதுளாகமம்

இதன் பொருள் :

''தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் – உற்றமா
ஊன்று மலர்ப்பாதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

– உண்மை விளக்கம்

சிதம்பர ரகஸ்யமும்,

''சுத்த ஸ்படிக ஸங்காசம் ஜடாமகுட சோபிதம் ।
சிதாகாசே சமாயந்து நடனம் பஞ்சகிருத்யகம் । '' – என்று கூறும்.

ஆகமங்களில், அர்ச்சனாங்கவிதி படலங்களில் மாஹேஸ்வர மூர்த்தங்களை ''பஞ்ச விம்சதி பேதம்'' (25

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடிவங்கள்), ''அஷ்டாஷ்ட விக்ரஹம்'' (8 X 8 = 64 வடிவங்கள் பற்றி விளக்கும் போது); முதலியவற்றில் ஆடல் வல்லானை நான்காவதாக,

''ப்ரதமம் ஸோமதாரிச த்விதீயம் உமயாசஹம்
த்ருயந்து விருஷாரூடம் சதுர்த்தம் ந்ருத்தரூபகம்.''– எனக் கூறும்.

அவற்றில் யோகவடிவம், வேக வடிவம், போக வடிவம், என இறைவனின் திருவருள் குணம் பற்றி விளக்கும்.

தக்ஷிணா மூர்த்தி முதலானவை – யோக வடிவாகும்.

காலசம்ஹார மூர்த்தி முதலியவை – வேக வடிவாகும்.

சோமாஸ்கந்தர் முதலியவை – போக வடிவாகும்.

இம்மூன்றிற்கும் பொருந்த அமைவது நடராஜ வடிவமாகும்.

''சதாசிவ மஹேசஸ்ச ருத்ரஸ்ச்சேதி த்ரிதாமத: ।
பேரே சதாசிவஸ்யாபி லிங்கேப்யேவம் ஸமாசரேத் ।
மஹேச ந்ருத்த மூர்த்யாதி ரூபம் சாந்த மனுஸ்மரந் ।
ப்ரதிமா லக்ஷணோக்தஞ்ச மஹேச மனுநாயுதம் ।
காளாந்தக கஜக்னாதி ரூபம் ரொத்ர மனுஸ்மரந் ॥''

(உத்தர காரணம் – ஸகலார்ச்சனவிதி படலம்)

ஸதாசிவமாகிய லிங்க வடிவும் நடராஜ வடிவமே என்றும், (விஞ்ஞானி அணுவிற்குள்ளே அசையும் பொருள்கள் லிங்க வடிவில் ஆடுவதாகக் கூறுகின்றனர்)

மஹேஸ்வரரூபம் – (பொதுவான) நடராஜர் என்றும், காலசம்ஹாரர், கஜசம்ஹாரர் ருத்ர வடிவமாயும் அறிகிறோம்.

''வீர தந்திரம்'' என்னும் உபாகமத்தில்

''நிருத்தேசஸ்ச காமாரி : காலாந்த கஸ்ததை வச ।
கஜக்ன திரிபுரக்னஸ்ச ஜலந்தர ஹரஸ்ததா ।
ஷஷ்டம் சம்ஹார ரூபாணாம் ஸ்தாபணாந்த மிஹோ ச்யதே ॥''

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடராஜர், காமதஹனர், காலசம்ஹாரர், கஜசம்ஹாரர், திரிபுர சம்ஹாரர், ஜலந்தர சம்ஹாரர் ஆகிய ஆறும் சம்ஹார வடிவம் எனக் கூறப்படுகிறது.

''வாதுள சுத்தாக்யம்'' எனும் உபாகமத்தில்

க்ராதம், நிருத்தம் ரூபஞ்ச ஹரேரத்தம் விஷாந்தகம் ।
லிங்கோத் பவஞ்ச பஞ்சேதே திரோபாவ ப்ரகீர்த்திதா ॥''

க்ராதமூர்த்தி, நடராஜர், ஹரிஹரர், நீலகண்டர், லிங்கோத்பவர் ஆகிய ஐந்தும் திரோபாவ (மறைத்தல்) ரூபங்கள் எனக் கூறப்படும்.

(மேலே கண்டது முத்தொழிலையும் கீழ் கண்டது ஐந் தொழிலையும் கூறுவது)

''காரணம்'' என்ற உபாகமத்தில்,

“புஜங்க லலிதம் சைவ புஜங்கஸ் தார மேவச ।
ஸந்த்யா நிருத்தம் ஸதா நிருத்தம் தாண்டவம் ஜாந்ஹவீதரம் ।”

என 7 வடிவங்களை அறிகிறோம்.

''காரணாகமம்'' ஏழுவித தாண்டவங்கள் பற்றி,

“கத்யதே சிவ சாஸ்த்ராணி நிருத்தம் சப்தவிதம் பவேத் ।
ஆனந்த தாண்டவம் பூர்வம் ஸந்த்யா தாண்டவ தத்பரம் ।
கௌரீ தாண்டவ மேவந்து ததா திரிபுர தாண்டவம் ।
காளி தாண்டவ மேவஞ்ச முனினாம் தஸ்ய தாண்டவம் ।
ஸம்ஹார தாண்டவம் பஸ்சாத் இத்யேதே சப்த தாண்டவம் ॥”

எனக்கூறும்.

இதன் பொருளை ஆய்ந்து பார்த்தால்,

1. அருவம் – ஆனந்ததாண்டவம் – சித்சபை – ஞானிகளின் அனுபூதியில் ஏற்படும் ஞானக்கூத்து.

2. உருவம் – அ) ஸந்த்யா தாண்டவம் ஊழியும் தோற்றமும் கூடும் காலம் ஸ்ருஷ்டி (படைத்தல்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆ) கௌரி தாண்டவம் (உமையோடு சேர்ந்து அருள்வது) ஸ்திதி (காத்தல்)

இ) திரிபுரதாண்டவம் (மலநீக்கி இளைப்பாற்றல்) ஸம்ஹாரம் (அழித்தல்)

ஈ) காளி தாண்டவம் (ஊர்த்வ தாண்டவம்) திரோபாவம் (மறைத்தல்)

உ) முனி தாண்டவம் (தாருகாவனத்தில் ஆடியது) அனுக்ரஹம் (அருளல்) (5 தொழிலாற்றி) ஊனக்கூத்து.

3. அருஉரு – ஸம்ஹார தாண்டவம் – அனைத்தும் ஒடுங்கியும் ஒலியை (நாதம்) ஒடுக்கும் ஊழிக்கூத்து.

''சூக்ஷ்மாகமம்'' உத்தரபாகம் கிரியாபாத 2வது படலம் 28வது பாடல் (ஸ்லோகம்)

"கல்ப்பாந்தே ஸம்ஹ்ருதம் க்ருத்வா, ஜகத் ஸ்தாவர ஜங்கமம் ।
நநிருத்தஞ்ச மஹாதேவ சுசிரம் நிருத்த லீலயா ।
தேன தாண்டவ மூர்த்தி த்வம் ஜாதம் தேவஸ்ய சூலின: ॥

கல்ப கால முடிவில் தோன்றிய (அசையும் அசையாத) அனைத்தும் ஒடுங்கும் பொருட்டு சூலபாணியாகிய சிவனின் நிருத்த லீலை தோன்றும்.

நடராஜரின் வடிவம் உத்தர காரணாகமத்தில்,

"த்ரிநேத்ரம் சதுர்புஜம் சாந்தம், ஜடா மகுட மண்டிதம் ।
கர்ணபத்ர சமாயுக்தம் தக்ஷிணே நக்ர குண்டலம் ।
ஜடாவாமேது துத்தூரம் அர்த்தேந்து பரி சூடிதம் ।
அர்க புஷ்ப ஸமாயுக்தம் பகபுஷ்ப ஸமந்விதம் ।
ஆரக்வத ஸ்ருஜஞ்சைவ ஸ்தம்பகம் ஊர்த்வ மண்டிதம் ।
தக்ஷிணே ஜாந்ஹவீசைவ வ்யாளம் வா சூடிதம் ததா ।
கரோடி மத்யமே நியஸ்ய குந்த மந்த ஸ்மிதானனம் ।
டமரும் தக்ஷிணே ஹஸ்தே வந்நிஞ்ச வாம ஹஸ்தகே ।
அபயம் பணி சம்யுக்தம் ப்ரதார்யம் பூஜ்ய வாமகே
தக்ஷிணே ஸ்வஸ்திகம் பாதம் வாம பாதந்து குஞ்சிதம் ।
அபஸ்மாரோ பரிஸ்தஞ்ச பத்ம பீடோபரி ஸ்திதம் ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸிம்ம சர்ம கடிவேஷ்ட்ய வ்யாக்ர சர்மோத்தரீயகம் ।
கிங்கிணி மாலயா யுக்தம் நாகயக்ஞோப வீதினம் ।
கடகம் ஹார கேயூரம் பாத நூபுர மண்டிதம் ।
ப்ரபாமண்டல மத்யஸ்தம் விருத்தம்வா அசுலந்துவா ।
ஸ்வேத வர்ண சமாயுக்தம் த்வாத்திரிம்சத் லக்ஷணாந்விதம் ॥''

முக்கண், நான்தோள், ஜடாமகுடம், வலதுபுறம் கர்ணபத்ரம், கங்கை, நாகம், டமருகம், நாகமிணைந்த அபயகரம். ஸ்வதிகபதம் முயலகன் மேல் ஊன்றிய வண்ணம் இடதுபுறம் ஊமத்தை, பிறைச்சந்திரன், குண்டலம், தீ, திருவடி காட்டும் கரம், தூக்கிய திருவடி இவைகளைக் கொண்டும், வெள்ளெருக்குபுஷ்பம் கொக்கு மந்தாரை முதலிய மாலைகள் சூடியும், இடையில் சிம்மத் தோலாடையும், தோளில் புலித்தோலாடையும் உடுத்தி பாம்பை பூணூலாய் அணிந்தும், சலங்கை, கடகம், ஹாரம், கேயூரம், நூபுரம் முதலியவை கூடிய அலங்காரத்துடன் ''ஓம்'' எனும் பிரணவ வடிவ திருவாசியோடும் வெண்ணிறமாய் 32 இலக்ஷணங்களும் பொருந்தி ஒளிரும் குறுநகையோடு கூறப்படுகிறார்.

காரணாகமத்தில் சிறப்பாக மாலையில் ப்ரதோஷ கால பூஜையில்,

''நடேசம் பூஜயேது பூர்வம் நைவேத்யம் தூபதீபகம் ।
மூலபேரஸ்ய நைவேத்யம் தூபதீபாதிகம் சரேது ॥
மஹேஸ்வராதி பேராணாம் கௌர்யை சைவ நிவேதயேது ॥''

முதலில் நடராஜர் முதலாகத் தொடங்கி பூஜிக்க அறிவுறுத்துகிறது.

நடேசர் அபிஷேக தினங்கள்

நிருத்தமூர்த்தியபிஷேகந்து ச்ருணுஷ்வே காக்ர மாநஸ: ।
ப்ரதானந்திரு ருக்ஷஞ்ச த்விதாச பரிகீர்த்திதம்
அர்த்ராசாபி தநுர்மாஸே மாகேசாபி சதுர்தசி
சைத்ராச ஸ்ராவணே சைவ மிதுநேசோத்தரேதயா

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸிம்மே சதுர்தசீஞ்சைவ கந்யா சைவ சதுர்தசி
ஏவமேவப்ரகா ரேணப்ய பிஷேகம் ஷடேநது ॥

— காமிகம்

ஸ்ரீநடேசர் அபிஷேக வெண்பா

சித்திரையில் ஓணம் முதற் சீர்ஆனி உத்திரமாம்
சத்துதனுவா திரையுஞ் சார்வாகும் – பத்திவளர்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசி மன்று
ஈசர் அபிஷேகத் தினமாம்.

(இவை நக்ஷத்திரம் உதயத்திலும், திதி மாலையிலுமாம்)

உத்தரகாரணாகமத்தில் நடராஜரின் ஆருத்ரா தர்சன, உத்ஸவ, நோன்பு முதலியவை கூறப்பட்டுள்ளது.

"அதவக்ஷ்யே விசேஷேன ஆர்த்ரா விரதஸ்ய லக்ஷணம்
சுக்லபக்ஷே சுபேசைவ மாஸ ருக்ஷம் பிரதானகம்
பர்வயுக்த மயுக்தம்வா சிவருக்ஷ ப்ரதானகம்."

ஆருத்ராவிரதம் என்னும் திருவாதிரை விரதத்தை மார்கழி மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் செய்யவும். அன்று பவுர்ணமி இல்லாவிட்டாலும் நக்ஷத்திரமே முக்கியம்.

"டோலோத்ஸவ மிதம் ப்ரோக்தம் சர்வகர்ம பலப்ரதம் ।
ஏவம் ஞானேன ஸம்பூஜ்ய ஸபுண்யாம் கதி மாப்னுயாத் ॥"

இந்தத் திருவாதிரையை முன்னிட்டு நடராஜருக்கு திருவிழாச் செய்வது உகந்தது. இது டோலோத்ஸவம் (ஊஞ்சல்) எனப்படும். ஞானத்தோடு எல்லா நற்பலனையும் தந்து புண்யகதியை அடையச் செய்வதாகும்.

திருவாதிரைக் கலிநிவேதனம் கூறப்படுகிறது.

"சாலி தண்டுல மாஹ்ருத்ய பிஷ்டம் சம்யக் ப்ரகல்பயேது ।
திரிபாதம் குலசம்யுக்தம் ததர்த்தம் நாளிகேரகம் ।
ததர்த்தம் முத்க ஸம்யுக்தம், அஷ்டாம்சம் ஆஜ்ய சம்யுதம் ।
ஏலகம் ஜீரகஞ்சைவ ஹிம்புமுக்த்வா ப்ரகல்பயேது"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அரிசியைத் திரித்து 3 பங்கு வெல்லமும் 1½ பங்கு தேங்காயும், ¾ பங்கு பயறும் சேர்ந்து 8 பங்கு நெய்விட்டு. அத்துடன் ஏலம், சீரகம், குங்குமப்பூ சேர்த்துச் செய்யவும்.

திருவாதிரைச் சாந்து விபரம்

"யக்ஷகர்தமாதாய நடேசாய ப்ரதாபயேத் ।
ஜநாநாம் சிவபக்தாணாம் தாபயேத் சண்ட பூர்வகம் ।
லலாடே திலகம் குர்யாது பச்சாத் வீதி ப்ரதக்ஷிணம் ॥"

புனுகு சாற்றி, சண்டிகேசருக்கும் சாற்றிப் பின்பு ஜனங்களும் சிவபக்தர்களும் நெற்றியில் தரித்து இறைவனோடு சேர்ந்து வீதிப் ப்ரதக்ஷிணம் செய்யவும் கூறுகிறது.

வீதியுலாக் காலம்

"உதயாத் பூர்வ சமயே தேவோ வீதி ப்ரதக்ஷிணம் ।
கர்த்தவ்யமிதி ஸம்க்ஞேய, வர்ஜயே துதயாத்பரம் ॥"

இறைவனுடன் உதயத்திற்கு முன்பே வீதியுலாச் செய்வது உயர்ந்தது.

சில த்யானரூபங்கள் : [நான்கு திருக்கரத்துடன்]

"ஏகாஸ்யந்து சதுர்புஜம் த்ரிநயணம் வாமேது துத்தூரகம் ।
சந்த்ரம் பத்ர சிகிப்ரசாரிதகரம் ஊர்த்வம் பதம் குஞ்சிதம் ।
ஸவ்யே ஸ்வஸ்திக குண்டலம் டமருகம் கங்கா பயே பிப்ரதம் ।
வந்தே கீர்ண ஜடம் நடேச மனிசம் அபஸ்மார தேஹஸ்திதம் ॥"

(இ-ள்):- ஒரு முகம், நான்கு கரம், முக்கண், இடது கைகளில் ஊமத்தைப்பூவும், அக்னியும், சந்திரனையும், வளைந்து தூக்கிய திருவடியுடன், வலதுபுறம் உடுக்கை, அபயம், ஸ்வஸ்திக குண்டலம், கங்கை கொண்டும், விரித்த சடையுடன் அபஸ்மாரத்தின் (முயலகன்) மேலாடும் பிரானை வணங்குகிறேன்.

(எட்டுத் தோள்களுடன்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"த்யேத் ஆத்ம விமோக ஸம்ஸ்திதபதம் ரக்தாம் சுகம் சங்கரம் ।
கிஞ்சித் குஞ்சித வாம பாத மதுலம் வ்யாலம்ப பாஹீம் த்ருபி: ।
வாமே பௌண்ட்ர தநுஸ்ச பாசதஹநௌ தக்ஷேகரைச் சாபயம் ।
பௌஷ்பம் மார்கண மங்குசம் டமருகம் பிப்ராண மச்சச்சவிம்."

மைசேர் கண்டத்து எண்தோள்
முக்கண் மறையோனே – சம்பந்தர்
எண்டோளர் முக்கண்ணர் எம்மீசர் – சம்பந்தர்
மைகொள் கண்டத்து
எண்டோள் முக்கணான் – சம்பந்தர்
எட்டுக்கொலா மவர்
தோளிணை யாவன் – அப்பர்
எண்தோள் வீசி நின்றாடும்
பிரான்தனைக் – அப்பர்
எண்தோள் கடவூரர் – சுந்தரர் தேவாரம்
எண்தோள் முக்கண் எம்மானே – திருவாசகம்
நீலமார் கண்டத்து
எண்தோள் நிருத்தர் – பெரியபுராணம்
(சிறப்புலிநாயனார் புராணம் - 3ம் பாடல்)

(இ-ள்):- மோஹமாகிய பூதத்தின் மேல் திருவடியூன்றி. செவ்வாடை உடுத்தி, மங்களமாகிய சிறிது தூக்கிய இடது திருவடியுடன், கரும்புவில், பாசம், அபயம், வீசிய கரத்துடன் அம்பு மலர், அங்குசம், உடுக்கை என 8 கைகளிலும் உடைய தூய ஜோதி வடிவைத் (நடராசரை) த்யானிக்க.

(எட்டுக்கர அம்மைஅப்பன் இணைந்த வடிவு)

"ஊருந்யாஸ வஹ்நி சுகப்ருத் வாமம் கராம் போருகம் ।
டக்காச் சாக்ஷஸ்ருக் உத்பலாபயகரம் வாமம் பதம் குஞ்சிதம் ।
உத்ருத்யாதர பூத ப்ருஷ்ட் விலஸத் தக்ஷாங்க்ரி அர்த்தாம்பிகம் ।
ஸாமீ வஸ்த்ர ஸீவேணி த்ருக் குசபரம் த்யயேந்நடம் மௌனம் ॥"

(இ-ள்):- 1. தொடையில் வைத்தகை, 2. நீட்டியகை, 3. தீயுடையகை, 4. கிளியுடையது. இவை இடப்புறம். 1.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உடுக்கை, 2. செபமாலை, 3. நீலோத்பலம், 4. அபயம் இவை வலப்புறம்; தூக்கிய இடதுபாதம் பூதத்தின்மேல், வலதுபாதம் செம்மையான அம்மையின் பாதி வடிவுடன் பின்னல், ஆடை, நெற்றிக்கண், மார்பு இவை சேர்ந்து த்யானிக்க.

(உமையுடன் சேர்ந்து)

"த்யேத் கோடி ரவிப்ரபம் த்ரிணயனம் சீதாம்சு கங்காதரம் ।
தக்ஷாங்க்ரிஸ்தித வாய குஞ்சிதபதம் சார்த்தூள சர்மாம்பரம் ।
வஹ்நி டோல கராபயம் டமருகம் வாமே சிவாம் ச்யாமலாம் ।
கல்ஹாரம் தததீம் ப்ரளம் பிதகராம் தேவீம் நடேசம் ப்ரபும் ॥"

(இ-ள்):- கோடி சூர்யப் பிரகாசம், முக்கண்கள், மதி, நதிகொண்ட திருமுடி, ஊன்றிய வலப்பாதமும், சிறிது தூக்கி வளைத்த இடப்பாதமும், புலித்தோலாடை உடுத்தி அக்னி, நீட்டியகை, அபயம், உடுக்கை தரித்தும் தன்பீடத்தின் இடப்புறம் 1. நீலோத்பலம், 2. தொங்க விட்ட இடக்கை கொண்ட உமையுடன் தியானிக்கவும்.

இன்னும் தேடத்தேட தெவிட்டாத பல செய்திகளும், தத்துவங்களும் ஆடலரசரைப்பற்றி ஆகமமாகிய கடலில் அனேக முத்துக்கள் உள்ளன. இறையருள் வாய்த்தால் மீண்டும் தேடுவோம்.

"மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

ஆனந்ததாண்டவம்

பதி–பசு–பாச உண்மை

உயர்கதியை மெய்ப்பொருளைத் தெரிந்து கொள்ள எண்ணுபவர்கள் முதலில் தெரியவேண்டியது முப்பொருள் உண்மையாகும். ஒன்று பதி, இரண்டு பசு, உயிர், மூன்று பாசம் என்பன அவை.

கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்,

"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த்தொகை
வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே."

– காசிபன் உபதேசப் படலம் 3

என்று அருளிச்செய்கிறார். பதியென்பது கடவுள். பசு என்பது உயிர்வர்க்கம். பாசம் என்பது மலம் – அறியாமை எனப் பொருள்படும்.

பதியுண்மை

கடவுள் பிறப்பு, இறப்பு இல்லாதவராய் அளவிலாற்றல் அள்ளில்லாத அருள் உடையவராய்ச் சத்து என்ற உண்மைப் பொருளாய்ச் சித்து என்ற அறிவு வடிவாய் ஆனந்தம் என்ற இன்பமயமாய்க் குற்றமில்லாததாய் எப்பொழுதும் உள்ளதாய் அணுவுக் கணுவாய், அப்பாலுக்கப்பாலாய், ஆதியந்தமில் லாத அரும்பெருஞ்சோதியாய் விளங்குவது பதியெனப்படும். எப்போதும் மங்கலமாக இருப்பதால் சதாசிவம் என அருள் நூல்கள் கூறும்.

"பலகலை யாகமம் வேதம் யாவையினுங்கருத்துப்
பதிபசுபாசந் தெரித்தல் பதிபரமே யதுதான்
நிலவு மருவுருவின்றிக் குணங்குறிகளின்றி
நின்மலமா யேகமாய் நித்தமாகி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அலகிலுயிர்க் குணர்வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாயன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வது தற்சிவமென்பர் தெளிந்துளோரே."

— *சிவப்பிரகாசம்*

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி ஆன்மாக்களுக்கு அருள்செய்வது பதியெனப்படும். இவ்வாறு, பதியுண்மை தெளியப்படும்.

பசு உண்மை

இனிப் பசு உண்மையாவது: பசு என்பது உயிர்வர்க்கங்கள். பாசத்தினால் கட்டுண்டிருப்பதால் பசு எனப்பொருள்படும். இது எதுபோலவென்னில் பசுக்களை (மாடு) உடையவன் கயிற்றினால் கட்டியிருப்பது போலாம். இவ்வுண்மை 'அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி' என்னும் திருவாசகத்தால் நன்கு அறியலாம். பசு என்று சொல்லப்படும் ரிடபத்தை வாகனமாக அதன்மேல் அமர்ந்திருக்கும் சிவபெருமான் ஒருவரே பதி. அதனால் பசுக்களாகிய உயிர்களுக்குத் தலைவன் நானே என்பதைக்காட்டி, இதனால் பசுபதி என்னும் திருநாமம் உடையவராய் விளங்குகிறார்.

பசுக்கள் என்ற உயிர்கள் எண்ணிலாதன, சிற்றறிவுடையது. அறிவித்தால் அறிவது. வினையெனப்படும் பாவபுண்ணியங்களுக்குத் தக்க பிறப்பு உடையது, இறப்பு உடையது. சொர்க்கம், மத்தியம், பாதலம் என்ற மூவுலகங்களிலும் திரிவது. இன்ப துன்பங்களில் அழுந்துவது. அழிவில்லாதது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களில் மூழ்குவது. போக்குவரவு உடையது. கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று அவத்தைகளைப் பொருந்துவது. கேவலாவத்தையில் ஆணவத்தோடத்து விதமாயிருப்பது. சகலாவத்தையில் மும்மலங்களோடு அத்துவிதமாயிருப்பது. சுத்தாவத்தையில் சிவத்துடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்துவிதமாயிருப்பது. இதற்கு பிரமாணம் சிவஞான சித்தியாரில்,

"மலமாயை கன்மம் மாயே யந்திரோ தாயிமன்னி
சலமாரும் பிறப்பிறப்பில் தங்கியித்தரை கீழ்மேலும்
நிலையாத கொள்ளிவட்டம் கறங்கென நிமிடத்தின்கண்
அலமாரும் இறைவன் ஆணையால் உயிர் நடக்கும் அன்றே."

என்றும், *சிவப்பிரகாசத்தில் (19-ஆம் பாடல்),*

"எண்ணரிதாய் நித்தமாய் இருண்மலத்தின் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக் கீடானயாக்கை
அண்ணலரு ளால்நண்ணி அவையவரா யதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றில்
புண்ணிய பாவம் புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணரும் இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உண்ணிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடுநற் பசுவர்க்கம் என உரைப்பர் உணர்ந்தோர்."

என்றும் இவ்வாறு பசுஉண்மை தெளியப்படும்.

பாச உண்மை

இனிப் பாச உண்மையாவது, பாசம் என்பது மூன்று வகையாக உள்ளது. ஆணவம், கன்மம், மாயை என்பன. இம்மூன்றும் உயிர்களைப் பற்றி நின்று நான் என்று எண்ணி வினைகள் செய்து அதனால் மாயா சம்பந்தமான பிறப்பில் உழன்று இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்து மீண்டும் மீண்டும் பிறப்பு எடுப்பதற்கு ஏதுவாக உள்ளது.

ஆணவமலம்

இன்பப்பொருளாகிய சிவத்தை மறக்கச் செய்வது. மூலமலம் என்று சொல்லப்படுகின்ற ஆணவமலம். உயிருக்கு எப்போதும் உள்ளது. செம்பில் களிம்பு போல நின்று கடவுளை மறைத்து உலகில் விருப்பத்தையும் செருக்கையும் உண்டுபண்ணுவது. பெத்த காலத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆணவமலம் வலிமையோடு இருக்கும். முத்த காலத்தில் வலிமையற்று இருக்கும். ஆணவமலம் ஒன்றே அதன் சத்தி அநேகமாயிருக்கும் ஆன்மாவின் உடனாக நின்று அறிவு தொழிலை மறைத்து அஞ்ஞானம் உடையதாய் ஆன்மாவைச் சிற்றறிவு சிறு தொழில் உடையதாய், செய்வதாய் உள்ளது ஆணவமலம். இவ்வுண்மையைச் சிவஞானசித்தியாரில்,

"ஒன்றதாய் அநேகசத்தி யுடையதாயுடனாயாதி
அன்றதாய் ஆன்மாவின் தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று போத் திருத்து வத்தைநிகழ்த்திச் செம்பினிற்களிம்பேய்ந்து
என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே

இவ்வாறு ஆணவ மலத்தின் இயல்பு தெளியப்படும்.

கன்மமலம்

இனிக் கன்ம மலம் பற்றி அறியப்படும். கன்மம் என்பது ஆன்மா மனம் வாக்கு காயத்தால் செய்யப்படும் செயல் உரை. நினைவு ஆகியவை கன்ம மலம். வினை தொழில் என்பது. இவற்றைத் திருஞானசம்பந்தர் திருநாரையூர் தேவாரத்தில்,

"உரையினில் வந்தபாவம் உணர்நோய்களும்
செயல்தீங்கு குற்றமுலகில்
வரையினி லாமை செய்த அவை தீரும் வண்ணம்
மிகவேத்தி நித்தம் நினைமின்
வரைசிலையாக அன்று மதில்மூன்றெய்து
வளர்கங்குல் நங்கை வெருவ
திரைசொலி நஞ்சமுண்டசிவன் மேய செல்வத்
திருநாரையூர்கை தொழவே"

என்று அருளிச் செய்கிறார். இதனால் மனம், வாக்கு, காயம் நன்மையின் பாற்படுமானால் அது நல்வினை என்றும், தீமையின் பாற்படுமானால் அது தீவினை என்றும் கூறப்படும். வினையினால் பிறப்பு உண்டாகும். பிறவிக்கு வித்தாக இருப்பது வினையென்கிற கன்ம மலம். இதனால்தான் - திருவாசகத்தில்"வினைப்பிறவி" என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வினையையும் பிறவியையும் இணைத்துக் கூறுகிறார் மாணிக்கவாசக சுவாமிகள். இன்னும் மூல கன்மம் என்பதும் ஒன்று உண்டு. 'வினைப் போகமே ஒரு தேகங்கண்டாய்' என்பது பட்டினத்துச் சுவாமிகள் திருவாக்கு. ஆன்மா செய்த கன்மம் மூன்றாகக் கூறப்படும். அது சஞ்சிதம், பிராரர்த்தம், ஆகாமியம் என்பதாம். அனுபவிக்கப்படும் இன்ப துன்பத்துக்குக் காரணம் பிராரத்தவினை அனுபவத்துக்கு வராமல் மொத்தமாக இருப்பது சஞ்சிதவினை செய்து கொண்டிருப்பது ஆகாமிய வினை என்று கூறப்படும். இருவினையின் காரணமாகத்தான் ஆன்மா போக்குவரவு புரிகிறது.சிவஞானபோதத்தில்,

"அவையே தானே யாயிருவினையிற்
போக்குவரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்குமன்றே"

என்று அருளியுள்ளார் மெய்கண்டதேவ நாயனார். இவ்வாறு கன்மமலம் சிறிது தெளியப்படும்.

மாயாமலம்

இனி மாயாமலம் பற்றி அறியப்படும். மா–ஒடுங்குதல் யா–வருதல் என்று பொருள்படுவதாகிய சொல். மாயை என்பதாம். மாயாமலம் உலகம் உடம்பு தோன்றுவதற்கு காரணமாயிருப்பது. இது எதுபோல வென்னில் குடம் தோன்றுவதற்கு மண் முதற் காரணமாக இருப்பது போலாம் உயிர்களின் வாழ்வு முழுவதும் மாயையில் நிகழ்கிறது. இருப்பது போல இருந்து இல்லாமற்போவது மாயையின் செயலாம். மாயாமலம் இறைவன் உயிர்களின் அறிவு சிறிது விளங்குவதற்காக. உபகாரமாகக் கொடுக்கப்பட்டது. இருளில் விளக்குப் போலவும். குருடனுக்குக் கோல் போலவும் உதவுவது மாயாமலம்.

"விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து" என்பது திருவருட்பயன் (30)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"நித்தமாய் அருவமாய் ஏகநிலையதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய் புவனபோகம் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே"

என்று மாயையின் இலக்கணம் சிவஞான சித்தியாரில் கூறப்பட்டது. இவ்வாறு மாயாமலம் பற்றி ஒருசிறிது தெளியப்படும். மாயையின் காரியம் மாயேயம் என்றும், உலகியலில் ஆன்மாவைச் செலுத்தும் சத்தி திரோதானம் என்றும் இவ்விரண்டும் சேர்ந்து பஞ்சமலங்கள் என்று கூறப்படும். திருவாசகத்தில்,

"குலங்களைந்தாய் களைந்தாய் என்னைக் குற்றம் கொற்றச் சிலையாம்
விலங்கலெந்தாய்விட்டிடுதிகண்டாய் பொன்னின் மின்னு கொன்றை
அலங்கலந் தாமரை மேனியப் பா ஒப்பிலாதவனே
மலங்களைந் தாற் சுழல் வன் தயி ரிற்பொரு மத்துறவே." என்று அருளிச் செய்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

ஆன்மா அரிசி போன்றது. தவிடு–மாயாமலம். முளை–கன்மமலம். உமி–ஆணவமலம். சிவஞான சித்தியாரில்,

"மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல்
மம்மர்செய் தணுவின் உண்மைவடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய்போகபந்த போத்திருத்துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றினோடும் இருமலம் இசைப்பன் இன்னும்"

என்று அருளிச் செய்கிறார் சகலாகம பண்டிதர். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாக இருப்பது. பளிங்கு போன்றது. கண் போன்றது. கண் இருளோடு கூடிய பொழுது இருளாகவும் ஒளியோடுகூடிய போது ஒளியாகவும் இருக்கும் அதுபோல ஆன்மா. மலமாயாகன்மங்களோடு கூடிப் பிறப்பு இறப்பு இன்ப துன்பங்களில் மூழ்கி மெய்ப்பொருளை அறியாமல் உழன்று கொண்டிருக்கும் மலமாயா கன்மங்கள் நீங்கி சிவத்தோடு கூடினால் பேரின்பத்தில் திளைத்திருக்கும் இவ்வுண்மையை தக்ஷணாமூர்த்தி தமது திருக்கரத்தால் தெரிவிக்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாணிழல் அடங்கு முண்மையை
கைம்மலர்க் காட்சியிற் கதுவநல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தியாதரோ"

என்பது திருவானைக்கா புராணம்.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம் ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்குமெனினும் இருளடராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்திற்
குளிக்கு முயிரருள் கூடும்படி கொடிகட்டினனே."

என்பது உமாபதிசிவம் அருளிச்செய்த கொடிக்கவி.

இனி உயிர்தான் செய்த வினையை அறிந்துசாராது. சிற்றறிவின் காரணமாக வினை சடமாகையால் செய்தவனை அறிந்து வந்து சாராது. ஆதலால் உயிர்களுக்கு வினையைக் கூட்டி வைத்து அதன் மூலமாகப் பிறப்பிறப்பு இன்ப துன்பம் தந்து பக்குவம் உண்டு பண்ணி தன்னை நினைந்து வழிபடச்செய்து தனது திருவருட்பேரின்ப வாழ்வில் வாழ வைக்கிறார் சிவபெருமான். இக்கருத்தைக் குருஞானசம்பந்தர் சிவபோக சாரத்தில் அருளிச்செய்கிறார். பாடல்கள் வருமாறு,

"பாசம்சடம் உயிரோ தானாகப் பற்றறியாது
ஈசன்இரண்டும் இணைத்தாட்டிப் பூசலென்றும்
செய்பவனே தானே திரும்பிஅருள் செய்யாமல்
உய்பவர்கள் உண்டோ உரை."

"முற்றின்பமாம் அருளின் மூழ்குவதும் மோகமிரு
சிற்றின்பமா மருளிற்சேர்குவதும் உற்றிங்கு
அறிந்தானன்னெஞ்சே அகிலாண்டமெங்கும்
செறிந்தான் செயலே தெளி"

உயிர் ஆணவம் கன்மம் மாயை, கேவலம் சகலம் சுத்தம் பிறப்பு, இறப்பு, பூதலம், நரகம், சொர்க்கம் பாவபுண்ணியம் சிவலோகம் சிவபெருமான் செய்கின்ற உபகாரம் ஆகிய எல்லாவற்றையும் தொகுத்து ஒரு பாட்டில் வழங்குகிறார் தாயுமானசுவாமிகள் பாடல் வருமாறு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்
கட்டுண்டிருந்த வெமை வெளியில் விட்
டல்லலாங் காப்பிட்ட தற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசும்பாழ் பொய்யுடல்
பெலக்கவிளையமுத மூட்டிப்
பெரிய புவனத்தினிடைப் போக்குவரவுறுகின்ற
பெரிய விளையாட்டமைத்திட்
டேரிட்ட தன் சுருதி மொழி தப்பின மனைவிட்
டிடருற வுறுக்கியிடர் தீர்த்திட்
டிரவு பகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொண்மினென்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷணாமூர்த்தியே
சின்மயா னந்த குருவே" என்று அருளிச் செய்துள்ளார்.

இதுவரை கூறிய பதிபசு பாச உண்மையில் பெறப்படும் பொருள் யாதெனில் உயிர்கள் உலகம் ஆகிய இவற்றை இயக்குபவர் சிவபெருமான் ஒருவரே.

மாகேசுவர மூர்த்தங்கள்

ஏகனாக உள்ள சிவபெருமான் ஒருவரே உயிர்கள் நன்மையடையும் பொருட்டாக அனேகமான திருமேனி தரித்துக் கொண்டு உயிர்களின் பக்குவநிலைக்குத் தக்கவாறு அருள் புரிகிறார். அவ்வகையாகத் திருமேனி பலவற்றுள்ளும் இருபத்தைந்து மாகேசுவரமூர்த்தங்கள் சிறப்பாக நூல்களில் கூறப்படும்.

மாகேசுவரமூர்த்தமாவன. 1. லிங்கோத்பவர். 2. சுகாசனர். 3. சத்திதரமூர்த்தி 4. கல்யாண சுந்தரமூர்த்தி 5. அர்த்தநாரீஸ்வரர் 6. சோமாஸ்கந்தர் 7. சக்ரவரதர் 8. திரிமூர்த்தி 9. ஹரியர்த்தர் 10. தக்ஷணாமூர்த்தி 11. பிக்ஷாடனமூர்த்தி 12. கங்காளர் 13. காமாரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

14. காலசம்ஹாரமூர்த்தி 15. சலந்தராரி 16. திரிபுராரி 17. சரபமூர்த்தி 18. நீலகண்டர் 19. திரிபாதர் 20. ஏகபாதர் 21. பைரவர் 22. இடபாரூடர் 23. சந்திரசேகரர் 24. நடராசர் 25. கங்காதரமூர்த்தி என்பது மாகேசுவர வடிவங்களாம் .

இவ்வாறுள்ள மூர்த்திகள் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்வொப்பிலாத மூர்த்தி நடராஜமூர்த்தியாம். மாகேசுரவடிவம் 25க்கும் மேலாக 36 தத்துவங்களுக்கும் அப்பால் வெட்டவெளியில் ஆனந்த தாண்டவம் செய்தருளும் அற்புதமூர்த்தி ஸ்ரீதாண்ட வேசுவரப் பெருமான் ஆவார்.

"உருவிலாத பாழில் வெட்ட
வெளியிலாடு நாத நிர்த்த
உனது ஞானபாதபத்ம மடைவேனோ" – திருப்புகழ்

பஞ்சகிருத்தியம்

ஆன்மாக்களுக்குத் தனு கரணம் புவனம் போகம் ஆகியவற்றை உண்டு பண்ணிக் கொடுத்தல் **படைத்தல்** என்ற கிருத்தியம். உலகத்திலே வினைக்குத் தக்கவாறு வாழவைத்தல், **காத்தல்** என்ற கிருத்தியம். வினை முடிவில் குறித்த காலத்தில் தேகத்தை முடிவு செய்தல், **அழித்தல்** என்ற கிருத்தியம். வினைக்குத் தக்கவாறு போகத்தில் அழுந்தச் செய்து முன்ஜென்மம் பின் ஜென்மம் தெரியாமல் கடவுளை மறைத்து உலகில் விருப்பத்தைச் செய்தல், **மறைத்தல்** என்ற கிருத்தியம். மும்மை மலம் அறுத்துத் தன்னை மறவாது நினைக்கச் செய்து பேரானந்தப் பெருவாழ்வில் வாழச்செய்தல், **அருளல்** என்ற கிருத்தியம். இவ்வாறு சிருஷ்டி, திதி, சங்காரம், த்ரோபவம், அனுக்கிரகம் ஆகிய பஞ்சகிருத்தியத்தை உயிர்களின் நன்மைக்காகச் சிவபெருமான் ஒருவரே செய்கிறார். இந்த உண்மையைத் திருவாசகம் சிவபுராணத்தில்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

''ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்'' என்றும்,

''போற்றியருளுகநின் ஆதியாம்பாதமலர்
போற்றியருளுக நின் அந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற் பாதம்
போற்றியெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லா வுயிர்க்கும் ஈறாமிணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாமுய்ய வாட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழி நீராடேலோர் எம்பாவாய்''

என்று திருவெம்பாவையிலும் கூறப்பெற்றது.

இந்த முறையில் சிவன் ஒருவரே. இந்த ஐந்து தொழில்களையும் செய்கிறார் என்பதைக் காட்சியளவையில் எல்லோரும் காணும்படியாக உணரும்படியாக விளங்குவது நான்மறையும் காணா நடராசப்பெருமான் திருமேனியாம். இவ்வுண்மையை விளக்கமாகத் தெரிவிப்பது **'உண்மை விளக்கம்'** என்ற ஞான சாத்திரம்.

''தோற்றம் துடியதனில் தோயுந்திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமா
ஊன்றுமலர்ப் பதத்தே உற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தே நாடு.'' என்று விளக்குகிறது.

துடி என்ற உடுக்கை ஏந்தியகரம் **படைத்தல்** தொழிலையும், அபயகரம் **காத்தல்** தொழிலையும், நெருப்பேந்திய கரம் **அழித்தல்** தொழிலையும், முயலகனை மிதித்த திருவடி **மறைத்தல்** தொழிலையும், தூக்கிய திருவடி **அருளல்** தொழிலையும் செய்தருளுகிறது.

இக்கருத்தைக் குமரகுருபரசுவாமிகள் சிதம்பர மும்மணிக்கோவையில் அருளிச் செய்கிறார்.

''பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி னானில வளாகமும்
ஏனைப்புவனமும் எண்ணீங்குயிரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுனி னமைத்தபொற்கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுலகடங்கலும்
மாற்றுவதாரழல்வைத்ததோர் கரமே
ஈட்டியவினைப்பயனெவற்றையு மறைத்துநின்
றூட்டுவதாகுநின்னூன்றியபதமே
அடுத்தவின்னுயிர்கட்களவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
இத்தொழிலைந்துநின் மெய்த்தொழிலாக''

என்று தெளிவாக விளக்கியருளுகிறார்.

இவ்வாறு உயிர்கள் நலன்கருதி இந்த அமைப்பில் திருக்கூத்தாடும் தெய்வம் வேறு கிடையாது. அதனால் சிவபெருமான் ஒருவரே முழுமுதற்கடவுள் என்பதை நன்றாக உணர்ந்து கொள்ளலாம்.

ஆனந்ததாண்டவம்

சிவபெருமான் எல்லா உயிர்களிலும் மறைந்து நின்று ஆடுகிறார். எல்லாரும் காணும் படியாகத் தில்லை வெளியிலும் ஆடுகிறார்.

''தில்லை மூதூராடிய திருவடி
பல்லுயிரெல்லாம் பயின்றனனாகி.'' — என்பது திருவாசகம்

இவ்வளவு பெருமை பொருந்திய அற்புதத் திருக்கூத்தாகிய ஆனந்த தாண்டவத்தைக் காண வேண்டும் எல்லாரும் காணவேண்டும் என்று அளவில்லாத பேராசை கொண்டு மிகப்பெரும்பாடு பட்டு ஆனந்த தாண்டவம் கண்டு பேரானந்த பெருவெள்ளத்தில் மூழ்கி நாமும் காணும் படியாக பேருபகாரம் புரிந்தவர்கள் இரண்டு முனிவர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவர்கள் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர் ஆகிய இருபெரு முனிவர்கள். இதனால் தான் மாணிக்க வாசகர் ''பதஞ்சலிக்கருளிய பரம நாடக'' என்று பாடுகின்றார்.

''பாம்பும் புலியுமெய்ப்பாடுபட்டுத் தேடி பார்த்துப் பயிரிட்டது
பாரளந்ததிரு மாயனும் வேதனும் பார்த்துக் களித்த துண்டு
பார்ப்பதியென்றொரு சீமாட்டியதில் பாதியைத் தின்ற துண்டு இன்னும்
பாதியிருக்கும் பறையா நீ போய் பாரென்று உத்தாரம் தாருமையே''

என்று நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் கோபால கிருஷ்ண பாரதியார் பாடுகிறார்.

கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் பதஞ்சலி முனிவர் ஆனந்ததாண்டவம் காணவேண்டித் தவம் செய்து சிவபெருமான் காட்சி வழங்காமையால் தன்னுடைய சிரத்தை அறுத்து வேள்வியிலிட்டுக் கடுமையான செயலைச் செய்து பின்பு சிவபெருமான் அவரை உயிர்ப்பித்துப் பிறகு ஆனந்ததாண்டவம் காட்டியதாக அருளிச்செய்கிறார். இது வழி நடைப்படலத்தில் வருகிறது.

''விரிகனல் வேள்விதன்னில் வியன்றலை அரிந்து வீட்டி
பொருவருந் தவத்தையாற்றும் பதஞ்சலி புலிக்காலண்ணல்
இருவரு முணர்வாற்காண எல்லையில் அருளால் ஈசன்
திருநட வியற்கை காட்டும் தில்லை மூதூரைக்கண்டான்''

''தண்டளிர்ச் சோலைத்தில்லை தபனியமன்றிலென்றும்
தொண்டையங்கனிவாய் மாது தொழச்சுராட்புருடன் உள்ளத்
தண்டருமதிக்கலாற்றா அற்புதத் தனிக்கூத்தாடல்
கண்டனன் கசிவால் உள்ளம் களிப்புற வணங்கிப் போனான்''

என்று பாடுகிறார்.

வியாக்கிரபாதர்

தவத்திற்சிறந்த மத்தியந்தனர் என்ற முனிவருக்குத் திருவருளால் ஒருபுத்திரன் தோன்றினார். அவருக்கு மழமுனி என்று திருநாமம் வைத்து வேதாகமங்களை ஓதச் செய்து ஸ்ரீபஞ்சாட்சர உபதேசமும் செய்வித்தருள மகிழ்ந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தந்தையை வணங்கி **'ஐயனே அடியேன் தவம் செய்ய விரும்புகிறேன் அதற்கு தக்க இடத்தைத் தெரிவித்தருள வேண்டும்'** என விண்ணப்பம் செய்ய அதற்கு மத்தியந்தன முனிவர், **'குழந்தாய் தவஞ்செய்வதால் கிடைப்பது தேவலோகம் அது நிலையான இன்பத்தை தராது. மீண்டும் பிறவியுண்டாகும் ஆகையால் சிவபூசை என்கிற அரிய பெரிய தவத்தைச் செய்வாயாக. அதனால் மீட்டிங்குவந்து வினைப் பிறவி சாராமல் சிவலோக வாழ்வு கிடைக்கும் அதனால் சிவபூசை செய்வாயாக'** என்றருள அதற்கு மழமுனிவர் 'சிவபூசை செய்வதற்குத் தக்க இடத்தைத் தெரிவித்தருள வேண்டும்' என்றார்.

'உலகில் ஆயிரங்கோடி தலங்கள் உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்த தலம் தில்லைவனம் அவ்வனத்தில் சுயம்புவாய் எழுந்தருளிய சிவலிங்கத்தைப் பூசிப்பாயாக. உனக்குத் திருவருள் கிடைக்கும்' என்று கூறிச் சிவமூல மந்திரத்தால் திருநீறு அணிவித்துத் தழுவி மகிழ்ந்து உத்தரவு தர மழமுனிவர் தாய் தந்தை இருவருடைய பாதகமலங்களை வணங்கிப் பாதகமலம் நீங்கும்படியாகத் தில்லைவனம் வந்து ஆலவன நிழலில் எழுந்தருளியிருந்த சிவலிங்கமாகிய திருமூலட்டானரைக் கண்டு அழுது தொழுது வணங்கி பரவசமாய்ப் பின் தெளிந்து பலந்தரும் சிவகங்கையில் மூழ்கிப் பல வகையான மலர்களால் அருச்சித்துப் போற்றி அதற்கு மேற்குத் திசையில் உள்ள தீர்த்தக்கரையில் ஒரு தரு நிழலில் சிவலிங்கம் தாபித்து இரண்டு தானங்களிலும் பூசித்து மகிழ்ந்திருந்தார்.

ஒரு நாளில் பூசைக்குக் கொய்த மலரில் சில மலர்கள் வண்டு ஊதி அரித்துள்ளதைக் கண்டு மிகவும் மனங்கலங்கி, குற்றமுள்ள மலர்களால் பூசை செய்யக் கூடாதென்று எண்ணி இரவில் வண்டு அரிப்பதற்கு முன் மலர்கொய்தால் மலர் தெரியாது; பனியால் மரம் வழுக்கும் விடிந்தால் வண்டு அரித்து விடும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"பரமேஸ்வரா பார்வதிநாயகா இந்தத் துன்பத்தைத் தவிர்த்தருள்வாயாக" என்று தோத்திரம் செய்ய, சிவபெருமான் அவருக்குக் காட்சி தர மழமுனிவர் அளவில்லாத வேதமந்திரங்களால் தோத்திரம் செய்ய மகிழ்ந்து 'அன்பனே உனக்கு என்ன வரம் வேண்டும்' என்று அருள அதற்கு முனிவர் 'சங்கரா உனது அருச்சனைக்கு நல்ல மலர் கொய்வதற்காகப் புலிக்காலும் புலிக்கையும் நகங்கள் தோறும் கண்களும் தரவேண்டும்' என்று வேண்டினார். 'அப்படியே தந்தோம்' என்றருள் செய்து மறைந்தருளினார் அதன்பிறகு நல்ல மலர்கள் கொய்து சிறப்பாகச் சிவபெருமானைப் பூசை செய்தார்.

அவருடைய தந்தை மத்தியந்தன முனிவர் வந்து கண்டு மகிழ்ந்து பின் வசிட்ட முனிவருடைய தங்கையைத் திருமணம் செய்வித்து மகிழ்ந்தார். மழமுனிவர் வியாக்கிரபாதர் என்னும் பெயர் பெற்று விளங்கினார். அவருக்கு ஒரு புத்திரன் உண்டாயினார். அப்புத்திரருக்கு உபமன்யு என்ற திருநாமம் சூட்டினார். அப்புத்திரன் வசிட்டமுனிவர் மனைவி அருந்ததியினால் போற்றப்பட்டுக் காமதேனுவின் பால் கொடுத்து வளர்த்தார். பிறகு வியாக்கிரபாதர் புத்திரனையும் மனைவியையும் தன் ஆச்சிரமத்திற்கு அழைத்துவந்தார். இங்கு அப்புத்திரருக்கு மாவின் பாலைக் கொடுக்க அவர் 'வேண்டாம் அக்காமதேனுவின் பால் வேண்டு'மென்று அழ. வியாக்கிரபாதர் 'சிவபெருமானிடம் வேண்டுவாயாக' என்று கூற அவ்வாறே உபமன்யுமுனிவர் சிவபெருமானை வேண்ட பாற்கடலை அழைத்து உண்ணும் படியாக அருள் செய்தார். இவ்வரலாறு பல நூல்களில் அருளிச் செய்துள்ளார்கள்.

"பாலகனார்க் கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச்சடையற்கே உந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீ பற." என்று திருவாசகத்திலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே."

என்பது ஒன்பதாம் திருமுறையிலும் கூறப்பட்டது.

இவ்வாறு வியாக்கிரபாதர் பெரும்பற்றாக இருந்த ஊராகையால் பெரும்பற்றப் புலியூர் என்று சிதம்பரம் பேர் பெற்றது. அவர் தாபித்துப் பூசித்த தலம் திருப்புலீச்சரம் தற்போது இளமையாக்கினார் கோயில் என்று விளங்குகிறது.

இவ்வரலாறு கோயிற் புராணத்தில் உமாபதிசிவம் அருளிச் செய்துள்ளார். பாடல்கள் வருமாறு,

கோயிற்புராணம்

"மன்னுமருந் தபோதனரின் மருவியமத் தியந்தினனா
முன்னரிய திருமுனிபா லோங்குலகந்துயர் நீங்கப்
பன்னரிய சிவஞானம் புத்திதரும் பான்மைதகத்
தன்னிகரி றிருவருளாலவுதரித்தானொருதனயன்."

"தவமெனையுமுணர்ந்த முனி தனயன் முக மிகநோக்கி
புவனமலிபோகங்கள் பொருந்தும் மருந்தவம் புரிந்தால்
சிவகதியுமிதுவன்று சிவார்ச்சன மார்ச்சனமாகில்
பவமகலும் பரபோகம் பெறலாகுமெனப் பகர்ந்தான்."

"ஞாலத்தா யிரகோடி நற்றான முள வவற்றி
னேலத்தா னலமார விடங்கொண்ட வெழிற் றில்லை
மூலத்தானத் தொளியாய் முளைத் தெழுந்த சிவலிங்கக்
கோலத்தானின் பூசை கொள்வா னென் றுரைசெய்து."

"திருநீறு நுதல் சேர்த்தித் திகமுச்சிதனைமோந்தெங்
கருநீறுபடவு தித்த காளையென வணைத்து விழி
தருநீர்மத் தியந்தினனாந் தந்தையை வந்தனை செய்து
வெருநீர்மை யன்னையையும் அடிபணிந்து விடை கொண்டான்"

"தடமா மலர்கொண்டு வணங்கியருந் தாவாமுனிதில்லை வனச்சரியே
குடபால ணைவான் மணமாமலருங் குளமுங் கரையுந்தள முங்குறுகித்
திடமார் தருவே நிழலா வெழிலார் சிவலிங்க மிருத்தி யருத்தியொடங்
கிடமாக விரண்டிடமும் பணிவுற் றிறையே துணையாக விருந்தமர்நாள்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"வண்டூதும் விடிந்தெனி லல்லெனிலோர் வழியுந் தெரியாது மரங்கண் மிகக்
கண்டூர வடர்ந்து கரஞ்சரணம் காலும் பனியால் வழுவுங்கழிதே
னுண்டூறு படுத்திய செம்மனல்வீ யொத்தேறு மரும்பு விரும்பலரைப்
பண்டூரோ டெரித்த பரம்பொருளார் பழுதென்றன ரென்று பகர்ந்தயர்வான்."

"ஆலந்தகுவா னமுதா மொழியா லருமா முனியர்ச்சனை யிச்சையினின்
சீலந்திகழ் வாய்மை மகிழ்ந்தன நீ சிந்தித்த வரம்பல செப்பென வென்
காலுங்கரமும் புலியின் மலியக் கண்ணங் கவைதங்க விரங்கிமுதற்
கோலந் திகழ் பூசைகொ ளென்றுவரங் கொண்டா னவையெந்தை கொடுத்தனனே."

"மணமே தகுபால் பெறுமாறழமா மகனார் முனியாம் வறியோ மறியோ
முணவே யினிதா மவைதா மிவர்கா ணுடையா ரென வாழ்வுடையா னெதிரே
துணர்மே லெழுவெங்க ணறங்கிநடுத் துஞ்சுந்தொழிறஞ் சென நைஞ்சழுதக்
கணமே யிறையானிறைபா லலையுங் கடல் பெற்றது கண்டு களித்திடுவான்."

இப்படி வியாக்கிரபாதர் சிவபூசை செய்து வருநாள் ஒருநாள் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். அப்போது முன்பு பரமேஸ்வரன் தாருகாவனத்து ரிஷிகள் கொண்ட செருக்கை நீக்குவதற்காகச் சிவபெருமான் தாருகாவனத்தில் சிறிது நேரம் தாண்டவம் செய்த நிகழ்ச்சியைத் தமது சிவயோகத்தில் கண்டு அந்த திருக்கூத்துத் தரிசனம் 'நமக்கு எப்போது கிடைக்கு'மென்று அதுவே சிந்தனையாக இருந்தார்.

பதஞ்சலிச்சருக்கம்

புருஷோத்தமராகியும் சிவபக்தி மிகுந்தவராயுமுள்ள விஷ்ணுவானவர், திருப்பாற்கடலில் ஆயிரம் பணா மகுடமுடைய ஆதிசேஷன் மீது அனந்தசயனனாய் அறிதுயில் கொண்டிருந்தார். ஒருநாள் சட்டென்றெழுந்து முடிமேலே அஞ்சலி கூப்பிய கரத்தோடு கண்களில் நீர் பொழிய 'ஹரஹர' 'சிவசிவ' 'சங்கரா' வென்று சிவநாமம் கூறிச் சிவானந்த பரவசராய் நின்றார் திருமகள் திகைத்தாள்.

மற்ற கருட காந்தருவர்கள் முதலான பரிசனங்கள் நடுங்கினார்கள் சிறிது நேரம் சென்றபின்பு அருளிலே கலந்த சிந்தையை மீட்டுத் தன்னியல்புக்கு வந்து அலங்கார மண்டபத்தில் பூந்தவிசில் எழுந்தருளியிருந்தார். அப்போது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதிசேடன் திருமாலை வணங்கி 'அடியேன் மீது பள்ளி கொள்ளாமல் சிவபரவசராயிருக்கின்ற காரணமென்ன அருள் செய்யவேண்டு'மென்றான்.

'சேடனே முன்பொரு சமயம் தாருகாவனத்தில் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கன்மமே பலனைத் தரும் என்று மீமாஞ்சக மதத்தராய்ச் சிவபெருமானை மதியாது திருவருளுக்கு அன்னியராய் இருந்தார்கள். அவர்களை நன்னெறிப்படுத்தவேண்டிக் காபாலி என்ற பிக்ஷாடன மூர்த்தியாய்ச் சிவபெருமான் எழுந்தருளி அடியேனை மோகினி வடிவமாக வரச்செய்து அவர்களை மயக்கி ரிஷிபத்தினிகளையும் மயக்கி அறியாமையை அகற்றி நீங்கள் சுவதந்திரர் அல்ல பரதந்திரர் என்று அவர்களுக்கு உணர்த்தினார்' ஆயினும் அவர்கள் உணராது சிவபெருமான் மீது கோபித்து பாம்பு, புலி, பூதம், உடுக்கை, நெருப்பு ஆகியவற்றை ஏவினார்கள் அவைகளின் தீய குணத்தை மாற்றி தம்மிடத்தில் வைத்துக் கொண்டார். பின்பு முயலகன் என்ற அரக்கனை அனுப்பினார்கள்.

'சுவாமியானவர் முயலகனை மிதித்து வேதம் முழங்க, பானுகம்பன். வாணாசுரன் முதலானவர்கள் வாத்தியம் முழங்க, தேவர்கள் பூமாரி பொழிய, அதுசமயம் சிவபெருமான் சிறிது நேரம் திருக் கூத்தாடினார். அந்த ஆனந்த நிருத்தம் இப்போது என் நினைவுக்கு வந்தது. அதனால் பள்ளி கொள்ளாமல் சிவானந்த வெள்ளத்தில் மூழ்கினேன்' என்று திருமால் கூறியருளினார்.

அவற்றைக் கேட்ட ஆதிசேடன் சிவானந்தமயனாய் நெருப்பிலிட்ட வெண்ணெய் போல உருகினான் அந்நிலையைக் கண்ட விஷ்ணுவானவர் 'ஆ இவன் உயர்ந்த சிவபக்தன் இவனை இனிமேல் படுக்கையாக வைப்பது தவறு என்று எண்ணி ஆதிசேடனை நோக்கி இனி உன்னை அணையாக வைத்துக் கொள்ள மாட்டேன். உன்னுடைய புத்திரனைப் பாயலாக வைத்துக் கொள்வேன் நீ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கயிலாயத்திற்குச் சென்று சிவபெருமானை எண்ணித்தவம் செய்வாயாக பார்வதிமணாளர் உனக்கு எண்ணியபடி அருள் செய்வார்' நீ புறப்படு என்று உத்திரவு தந்தார்.

ஆதிசேடன் விடைபெற்று வடகயிலையில் ஓரிடத்தில் சிவபெருமான் நிருத்ததரிசனம் வேண்டி சிவமூலமந்திரத்தை எண்ணிக் காற்றையும் உட்கொள்ளாமல் மழை, காற்று, பனி,வெயில் ஆகியவற்றை எண்ணாமல் பல காலம் கடுமையான தவத்தைச் செய்தார்.

இவ்வாறு செய்கின்ற காலத்தில் ஒருநாள் சிவபெருமான் ஆதிசேடனுடைய பக்தியின் உறுதியைச் சோதிப்பதற்காக உலகத்திற்கு தெரிவிப்பதற்காக நான்கு திருமுகமுடைய பிரமதேவராய் சரஸ்வதியும் வேதங்களும் சூழ அன்னவாகனத்தில் வந்துகாட்சி தந்தார். ஆதிசேடனாகிய அனந்தனும் பிரமாவுக்கு உபசார நமஸ்காரங்களைச் செய்தார். பிரமாவானவர், 'அனந்தனே நீ செய்த தவங்கள் போதும் போகம், வீடு, வித்தை, சித்தி ஆகியவற்றில் உனக்கு விருப்பமானவற்றைக் கேள் தருவோம்' என்று கூறினார். அவ்வசனத்தைக் கேட்ட அனந்தன் 'நான் புகழ்ந்து அழைத்தது சிவபெருமானை தங்களை அழைக்கவில்லை' என்று கூற 'வேண்டிய பயனை யார் கொடுத்தால் என்ன உனக்கு வேண்டியதைக் கேள்' என்றார் பிரமதேவர். அனந்தன் 'தாங்கள் கூறிய பயன் ஒன்று கூட எனக்கு வேண்டாம்' என்று சொல்ல பின் 'எதை விரும்பித்தவம் செய்தாய் சொல்' என்றார் பிரமதேவர்.

அதற்கு அனந்தன் **'முத்தியும் போகமும் அட்டமா சித்தியும் வித்தையும் எதற்காக? அவற்றையெல்லாம் நான் கொஞ்சமும் விரும்பவில்லை. முன்பொருசமயம் தாருகா வனத்தில் செய்தருளிய ஆனந்ததாண்டவம் தரிசனம் செய்ய வேண்டி அளவில்லாத ஆசையுடைய வனாய் உள்ளேன்' என்று கூறினார். அதற்கு பிரமாவானவர் நகைத்து 'அனந்தனே நீ முடியாத**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செயலுக்கு முயற்சி செய்கிறாய். இது ஆகிற காரியமல்ல. சிவபெருமான் வருவாரா? ஆனந்த தாண்டவக்காட்சி தருவாரா? அன்று தாருகாவனத்திற்கு யார் அழைத்து வந்தார் மதியிலாய்' என்று சொல்ல அதற்கு அனந்தன் என்றும் ஆடுபவர் சிவபெருமான், மிகவும் வேண்டினால் வேண்ட முழுதுந்தருபவர், கொடுக்கின்ற தன்மையை இயல்பாக உடையவர், கொடுக்க வில்லையானால் யார்தான் வாழ முடியும்?'' என்று அனந்தன் கூற நான்முகதேவர் 'அந்தோ அந்தோ இவ்வளவு காலம் ஆகியும் உனக்கு ஆசை தீரவில்லையே' என்று வருத்தத்தோடு கூறினார். அதற்கு அனந்தன் 'தேகம் ஒரு அளவுள்ள காலந்தானே இருக்கும் முடிவில்லாத காலமல்லவே அந்தமும் அதிகநாள் இல்லை' என்ன பிரமாவானவர்; 'இப்படி எண்ணியிருந்து முடியாமற்போய் இறந்து விட்டாயானால் பிறகு என்ன பலனைப் பெறப்போகிறாய்' என்று சொல்ல அனந்தன் 'இந்த எண்ணத்தோடு இருந்து இறந்தும் சிவபெருமான் ஆனந்த தாண்டவத்தை அடுத்த பிறவியில் உறுதியாகக் காண்பேன்' என்று கூறினான்.

இப்படி அனந்தனுடைய உறுதியைக் கண்டு கேட்டு உடனே அன்ன வாகனம் இடபவாகனமாக மாறியது. சரஸ்வதி உமாதேவியானாள் பிரமா சிவபெருமானாக ஆனார். பூதகணங்கள் தேவகணங்கள் போற்றப் பூமாரி பொழிய அனந்தனுக்குக் காட்சிதந்தார்.

காட்சியைக் கண்ட அனந்தன் அளவில்லாத அச்சமும் அன்பும் உடையவனாய் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வேதமந்திரங்களால் தோத்திரம் செய்து 'அடியேன் கூறிய புன்மொழிகளைப் பொறுத்தருள வேண்டும்' என்று கூறி மண்ணில் வீழ்ந்து நமஸ்காரம் பண்ணினார். அப்போது பரமேஸ்வரன் அளவில்லாத அருள் நோக்கம் செய்து அனந்தனுடைய சிரத்தில் தமது திருக்கரம் வைத்து 'அன்பனே இப்படிக் கடுமையான தவஞ் செய்தால்தான் நம்முடைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாண்டவக்காட்சியைக் காணமுடியும் இல்லையானால் காண முடியாது உன்னுடைய துயரம் தீர்வதாக' என்று அருளிப் பின்பு, உயிர்களுக்கு வினைவழியாக தேகமுதலியன. மாயையில் உண்டாகும் உயிர்கள் தானே உண்டு பண்ணிக் கொள்ளாது. சிற்றறிவாகையால் மாயை சடமாகையால் உண்டு பண்ண முடியாது. உயிர்களின் நன்மை கருதி நாமே பஞ்சகிருத்தியங்களைச் செய்வோம். எதுபோல வென்றால் மண்ணிலிருந்து கடமுதலானவற்றைக் குயவன் செய்வது போல. நமக்கு ஞானமே திருமேனியாம். அவை. சகளம் (உருவம்) நிட்களம் (அருவம்) சகள நிட்களம் (அருவுருவம்) ஆகியவை மூன்றாம் சத்தி உபாதானமாகக் கொண்டு பாசமற்ற அன்பர்களுக்குக் காட்சி தருவோம்.

அருவம் உருவம் ஆகிய இருவகையும் கடந்த இயல்பு நமது ஒளியாகிய ஞானானந்த பரமாக இருக்கும். அதனால் அதற்கு பரபதம் பரமஞானம் பராற்பரம் என்று பெயராகும். அவ்வகையில் இச்சை செய்தி நம்முடைய நடனமாகும்; வேதங்கள் அனைத்தும் நம்மை ஆடுகின்றான் என்று போற்றுகிறது. ஆனால் காரணம் காலம் திக்கு கருத்து இடம் அவைகளை காணமாட்டாது. தாருகாவனத்தில் முன்பொரு சமயம், நாரணன் முதலானவர்கள் காணும்படியாக நடித்தோம். ஆனால் அந்த வனம் பொறாதென்று எண்ணி உடனே நிறுத்திவிட்டோம். இப்போது இந்த இடமும் நாம் நடிப்பதற்குப் பொருத்தமானதாக இல்லை. பொருத்தமாய் பொறுப்பதாய் உள்ள மன்று ஒன்று உண்டு' என்று சிவபெருமான் அருள் செய்தார். அனந்தன் அளவில்லாத மகிழ்ச்சியடைந்து வணங்கினான்.

சுவாமி அனந்தனாகிய ஆதிசேடனை நோக்கி ''அண்டமும் பிண்டமும் சமநிலையுடையதாகும். உடம்புள் இடை நாடி இடது நாசியிலும் பிங்கலை நாடி வலது நாசியிலும் சுழுமுனை நாடி நடுவிலும் இயங்குவது போலப் பூவுலகிலும் இடை நாடி இலங்கைக்கு நேராகவும், பிங்கலை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நாடி இமயத்திற்கு நேராகவும் சுழுமுனை நாடி அவ்விரண்டிற்கும் நடுவே தில்லைவனத்தில் திருமூலலிங்கத்திற்குத் தென்புறத்தில் மறைகளும் காணாத மன்று ஒன்று உண்டு. அது தான் ஞானஅம்பலம் சுழுமுனைநாடி. அதில் எக்காலத்திலும் ஆனந்த தாண்டவம் புரிவோம். ஞானக்கண்ணுடையவரே காண்பார்கள். கண்டவர்கள் பிறக்கமாட்டார்கள். காணாதவர்கள் பிறப்பார்கள்.''

''ஆதலால் ஆயிரம் முடியுடன் அங்குச் செல்ல வேண்டாம் முன்பு அத்திரி முனிவரும் அநுசூயையும் உன்னைப் பிள்ளையாகப் பெறத்தவம் புரிந்தார்கள்; திருமால் உத்தரவுப்படி நீ யோனிவாய்ப்பட்டுப் பிறக்க அஞ்சி அநசூயை நீராடி அஞ்சலி செய்யும் போது அவள் கையினின்று ஐந்தலை அரவாகத் தோன்றினாய். அவள் அஞ்சிக்கைவிடப் பதஞ்சலி என்று பேர் பெற்றாய்; அந்தப் பதஞ்சலி என்ற நாமத்தோடு நாகலோகப்பிலவழியாகச் சென்று முடிவில் தில்லைவனம் தோன்றும். அதில் வடபாலில் ஆலமரநிழல் அடியில் திருமூலலிங்கக் குறி விளங்கும் அமரர் போற்றும் அற்புதத்தானமாகும். அங்கு உன்னைப் போலவே நமது திருநடனம் காணவேண்டுமென்று பூசை செய்து இதே சிந்தனையாகப் புலிக்கால் முனிவன் அங்குத் தவம் செய்து கொண்டிருக்கிறான். நீயும் சென்று அவனுடன் தவம் செய்து கொண்டிரு. நாம் தைமாதம் வியாழக்கிழமையில் பூச நக்ஷத்திரத்தில் மத்தியானவேளையில் ஆனந்த தாண்டவக் காட்சியைத் தருவோம்'' என்று அருளிச் செய்தார்.

ஆதிசேடர் அளவிலாத ஆனந்தமடைந்து சுவாமி அருளிச் செய்தபடி நாகலோகப்பில வழியாகச் சென்று நாகலோகத்தாராகிய சுற்றத்தார் போற்றக் கண்டு நீங்கி பிலவழியாகத் தில்லைவனம் சேர்ந்து வணங்கிப் புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரைக் கண்டு நமஸ்காரம் செய்து சுவாமி கூறிய செய்தியைச் சொல்ல அவரும் அளவில்லாத ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதஞ்சலியாகிய அனந்தரும் அங்குள்ள திருமூல நாதரையும் புலீச்சரத்தையும் வணங்கி அதன் மேல் பால் சென்று அவ்விடமுள்ள குளத்தில் மூழ்கி வடபால் ஒரு லிங்கம் தாபித்துப் பூசித்து பர்ணசாலை அமைத்துக் கொண்டு இரு முனிவர்களும் அளவிலா நாள் ஆனந்த தாண்டவத்தைக் காண ஆசையோடு இருந்தார்கள். வியாக்கிரபாதர் பூசித்த தலம் வியாக்கிரபுரம். புலீச்சரமென்று விளங்குகிறது. ஆதி சேடராகிய அனந்தர் பூசித்ததலம் அனந்தீச்சரமென்று விளங்குகிறது.

பரமேஸ்வரன் அருளிச் செய்தபடியே தைமாதத்தில் வியாழக்கிழமை பூசநக்ஷத்திரம் உச்சிவேளையில் மூவாயிரம் அந்தணர்கள் தோத்திரம் செய்ய 'பிரணவப் பொருள் வந்தான்' 'தேவ தேவன் வந்தான்' 'பிரம விஷ்ணுக்களுடைய தலைவன் வந்தான்' என்ற ஒலி கேட்டது. அவ்வேளையில் ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் சங்குகளை வைத்துப் பானுகம்பன் ஓமென்று ஊதினான்; ஆயிரந்தோள்களையுடைய வாணாசுரன் குடமுழா என்ற வாத்தியத்தைத் தொம்மென்று முழக்கினான். பஞ்சதுந்துபி என்ற வாத்திய முழங்கின. வேதங்கள் முழங்கின. கந்தருவர்கானவிசை இசைத்தார்கள். சிலம்பொலி ஒலித்தது. தேவர்கள் பூ மழை பொழிந்தார்கள். இவ்வகையான மகிழ்ச்சியான நிகழ்ச்சியைக் கண்டார்கள். செவியால் கேட்டார்கள்; புண்ணிய முனிவர்களான பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் மிகுந்ததாகமுடையவர் தண்ணீர் ஓசையைக் கேட்டது போல அளவில்லாத ஆர்வம் கொண்டார்கள்; மோகமுற்றார், தாகமுற்றார், வேகமுற்றார், தொழுதார், அழுதார், போற்றி போற்றியென்று வாயாரத் தோத்திரம் பண்ணினார்கள். அளவில்லாத காதலுடைய ஞானக்கண்ணைத் தந்தருள அஞ்ஞானம் நீங்க மெய்ஞ்ஞானம் ஓங்க இன்ன வண்ணமென்று அறியாத ஆனந்தமெய்த ஒளிமயமான ஞானமன்றில் சிவகாமவல்லியுடன் நின்று ஆடுகின்ற ஆனந்ததாண்டவத்தை இரண்டு முனிவர்களும் இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருங்கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்தின் மூழ்கி மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

அற்புதக் கூத்து

முயலகன் முதுகில் ஊன்றிய திருவடியும், குஞ்சிதபாதமாகிய தூக்கியத் திருவடியும், சிலம்பும், கழலும், பேரொளியும், அழகிய துடையும், அரையில் புலித்தோலும், கச்சும் உதரபந்தனமும், திருமார்பில் பூணூலும், வீசிய திருக்கரமும், அபய ஹஸ்தமும், உடுக்கையேந்திய வலது திருக்கரமும், அக்னியேந்திய இடதுத் திருக்கரமும், திரண்ட தோள்களும், இடது திருச்செவியில் தோடும், வலது திருச் செவியில் குழையும் குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், திருமுக மலரும் சிவகாம வல்லியை நோக்கிய திருக்கண்களும், திருநெற்றியும், பின்தாழ்சடையும், சர்ப்பாபரணமும், திருமுடியில் சந்திரனும், கங்கையும், பாம்பும் விளங்க, மார்பில் கொன்றை மாலை மணம் வீசவும், பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும் விளங்கநின்று ஆனந்த தாண்டவம் செய்தருளினார்.

வாமபாகத்தில் மலர் நிறைந்த கரிய நிறமுடைய அளகபாரமும், அழகிய நுதலும், திலகமும், வில்போன்ற இரு புருவமும், வேல் போன்ற விழிகளும், அழகிய திருச் செவியும், குமிழ மலர்போல நாசியும், சிவந்த இதழும், முத்த நகையும், பசிய நிறமும், பூங்கமுகு போன்ற கழுத்தில் அழகு பொருந்திய திருமாங்கல்யமும், பசிய மூங்கிலையொத்த தோளும், தாமரை யொத்த வலதுத் திருக்கரத்தில் செங்கழுநீர் மலரும், தொங்க விட்ட இடதுத் திருக்கரமும், கோங்கின் அரும்பைப் பழித்த தனபாரங்களும், மார்பில் மணநிறைந்த மாலையும், ரத்னா பரணங்களும், உடுக்கைபோன்ற இடையும், செம்பட்டுடையும், சிறிது சாய்ந்த நிலையும், சிவந்த தாமரை போன்ற திருவடியில் ஆடகப்பாடகமும், சிலம்பும் பொருந்திய அழகுக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருவரும் ஒவ்வாத வல்லியாகிய சிவகாமசுந்தரி கண்டு ஆனந்திக்க திருநடனம் புரிந்தருளினார்.

இப்படி ஒப்பில்லாத ஆனந்ததாண்டவக்காட்சியை உலகமக்கள் காணும்படியாகப் பேருபகாரம் செய்தவர்கள் பதஞ்சலி வியாக்கிர பாதராகிய இரண்டு அருள் முனிவர்கள் இவ்வரலாற்றைப் பாலுந்தேனும் கலந்தாற்போல சொல்லும் பொருளும் சுவை மிகப் பாடிக் கோயிற் புராணமென்ற நூலாக நமக்கு உபகாரம் செய்தவர் சந்தானக் குரவருள் நான்காவது மூர்த்தியாய் விளங்கும் உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள்.

கோயிற்புராணம் – பதஞ்சலிச் சருக்கம்

"பரந்தபெரும்பாற்கடலிற் பள்ளி கொள்வானொழிந்தொருநா
ளருந்தவ மாரனந்தன் மிசையரி யரசங்கரவென்று
கரங்கள் சிரமிசை முகிழ்ப்ப கண்ணருவி சொரிய நிமிர்ந்
திருந்தனன்முன் சலியாதவெழுதுமணி விளக்கென்ன"

ஆதிசேடன்

தெள்ளுமனந் தெளிபொழுதில் திருந்தனந்தனடி வணங்கி
வள்ளலே யடியேனா மலரமளிமிசை முன்போற்
பள்ளிகொள்ளாதுணராதிப் பரிசிருந்த படியடியேற்
குள்ளபடியருள் செய்ய வேண்டுமென வுரை செய்தான்.

திருமால்

ஆங்கவனு நகைத்தருள்கூர்ந் தனந்த னிருவலர்கமலப்
பூங்குழலு மிருவென்று புகன்றெனை யாளுடைப் புனிதன்
தாங்கரிய பெருங்கருணைத் தன்மையினா லெனக்களித்த
வோங்குதிரு வருள் கேட்கி லுலவா தென் றுரைசெய்தான்

ஆதிசேடன் அன்பு

அண்டன துயர்நடமென்றலு மஞ்சலி சிரமுற வன்பொடு
கண்டவ ரென மிக நுண்டுளி கண்டர வுருகுதல் கண்டரி
தொண்டின ரிவர்பணியென்பணி சுந்தரனடிபணி பென்பணி
பண்டென தணைவ ரென்று கொள் பண்பொழிவினியென நொந்தனன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருமால் ஆதிசேடனுக்கு அருளுரை

மாதவன்மிகவுஞ் மகிழ்ந்திறை வாழ்வட கயிலைமருங்குற
நீதவமுயல கயல் கொண்டக ணேரிழையதிபனு வந்துநின்
னாதரவமரவரம் பல வாசற வருடருமென்றபி
னேதமில பொருவி லனந்தனு மேசறு மரியை யிறைஞ்சினன்

ஆதிசேடன் தவம்

தவமிக முயலும் போது தன்னுயிர்ப் புமிழ்வ தன்றிப்
பவனெனு முணவுங் கொள்ளான் பலபக லகழ்வும் பாரான்
சிவனடி காணுங் கண்க டிப்பிய மாக்கு வான்போ
லுவமனில் கதிரோ னுள்புக் குருகநே ரோட வைத்தான்.

பிரமதேவர் காட்சி

இன்னவா றருந்தவங்க ளிவனியற் றிடந டஞ்செய்
மன்னன் மா முனிவ ரைப்போல் வாய்மைக ளளப்பானாகி
முன்னய னாகியன்ன முதுகிட மாகவேறி
யன்னவ னெதிரே சென்றா னவனுமா தரங்கள் செய்தான்.

பிரமா ஆதிசேடனை வினவுதல்

செய்தவன் றன்னை நோக்கி சினவர வுருவோய் செல்லன்
மெய்திகழ் தவங்கள் போதும் விரவு போகங்கள் வீடு
பொய்தகா வித்தை சித்தி பொருந்துவ தொன் றெமக்குக்
கொய்துரை தருது மென்று கூறினான் முனிவர் கோமான்.

பிரமா ஆதிசேடன் பேசுதல்

வாசகம் கேட்ட னந்தன் மகிழ்ந் தியான் புகழ்ந்த ழைத்த
தீசனை யென்ன வேண்டிற் றெவர்தரி னன் றுனக்குப்
பேசுகென்றனைத்தும் வேண்டாப் பெற்றிகண்டயனிகழ்ந்திங்
கேசறு தவஞ்செய் வான்வே றென்பெற வியம்பு கென்ன

ஆதிசேடன் உறுதி வாக்கியம்

முத்தியு முடிவி லாத போகமு நாலி ரண்டாஞ்
சித்தியு வித்தை யாவும் செய்வதென் றிகழ்வ னத்தி
லத்தனன் றெவர்க்கு நல்கு மானந்த நிருத்தங் காணும்
பித்துமே லிட்ட தென்று பேசினா னே சி லா தான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமா பேசுதல்

முந்தய னவனை நோக்கி முடிய நீ முடியா தொன்றைச்
சிந்தனை செய்த பித்து தீர்தரா தென நகைத்தங்
கந்தமில் சுதந்திரத்தோ னார்சொல வனத்தி லன்று
வந்தரு ணடம் புரிந்தான் மதியிலா யெனவு ரைத்தான்

ஆதிசேடன் பிரமா

ஆலவா யனந்த னென்று மாடுவா னவனே யன்றோ
சாலவா தரித்தாற் றானே தருபவன் றாரா னென்றா
லேலு மிங் கென்ன வன்னத் திறையவ னந்தோ வந்தோ
காலமு மனேகஞ் சென்று கழிந்தில தாசை யென்றான்.

ஆதிசேடன்–பிரமா ஆதிசேடன் உறுதி

நொந்தபங் கயனை நோக்கி நுடங்குட லளவேயன்றோ
அந்தமில் காலம் சேய்த்தன் றதுவுமென் றயரக் கேட்டு
யிந்தநீ யிறந்தாற் பேறிங் கென்னென வனந்தனி ன்றென்
சிந்தையிங் கிதுவாச் செத்தும் திருநடங் காண்பே னென்றான்.

சிவன் உண்மைக்காட்சி தருதல்

ஆங்கவ னுறுதி கேளா அன்னமே யானா நல்கித்
தீங்கில்பங் கயனே முன்னைத் தேவர்கள் மலர்கள் சிந்த
வோங்கிருங் கணங்கள் சூழ வொண்ணுதற் றிலக வல்லி
பூங்குழ லுமையாள் பாகம் புரந் தர னாயி ருந்தான்.

அனந்தன் துதித்தல்

"கண்டபோ தனந்த னஞ்சிக் கரசர ணாதி கம்பித்
தண்டனே போற்றி யாண்ட வமலனே போற்றி திங்கட்
டுண்டனே போற்றி நாயேன் சொன்னவை பொறுப்பாய் போற்றி
கொண்டனேர் கண்டா போற்றி கூத்தனே போற்றி போற்றி."

சிவபெருமான் தீக்ஷை செய்தல்

"ஆண்டிட வேண்டி வந்த அமலனே போற்றி யென்று
மாண்டகு மனங் கரைந்து மண்மிசை வீழ்ந் திறைஞ்ச
நீண்டசெஞ் சடையா னானை நேர்செல வுகைத் தணைத்து
காண்டகு கருணை நல்கி கைத்தல முடிமேல் வைத்து."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவபெருமான் அருள்மொழி

"இப்படித் தவங்கள் செய்தா லன்றிநம் மினிய கூத்து
மெய்ப்படத் தெரியா தன்று விளங்கிடக் கடவ துன்ற
னெய்ப்புறு துயரந் தீர்க வெனவுரைத் தெம்மை யுண்மை
செப்புது முணர்க் வென்று கூறினான் றேவ தேவன்."

சிவவாக்கியம்

"ஆரண மனைத்துநா நின் றாடுது மென்று போற்றுங்
காரணங் காலந் திக்குக் கருத்திடம் காண மாட்டா
சீரணி தேவ தாரு வனத்திடை தெரிய நின்று
நாரணன் முதலோர் காண நாடக நடித்த ஞான்று."

"அன்றரு வனம் பொறாமை யலைந் தமை யறிந்து நாமும்
வென்றிகொ ணடங்க ணொய்தின் விட்டன முனக்கு மின்று
நின்றிட மிதுவாக் காட்டு நிலயமன் றது பொறுக்கு
மன்றுள தென்றா னிந்த வையகம் வாழ்வ தாக."

சிவ ஆதிசேடன் [அனந்தன்]

"அனந்தனும் தொழுது போற்றி யடியனே னுய்யத் தேவ
ரினந்தரு மறைகள் காணா திலகுமன் றுலகி லுண்டாய்
நினந்தமி லருளாற் காட்டு நினைவுமுண் டாகி நீயே
வனந்தனில் வந்தா யென்றால் வாழ்ந்தன னன்றோ வென்றான்."

சிவவாக்கியம்

"வலங்கைமான் மழுவோன் போற்றும் வாளர வரசை நோக்கி
அலைந்திடும் பிண்ட மண்ட மவைசம மாத லாலே
யிலங்கைநே ரிடைபோ மற்றை யிலங்குபிங் கலையோ நாடி
நலங்கிள ரிமயநேர்போ நடுவுபோஞ் சுழுனை நாடி."

"நாடரு நடுவி னாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக் குறியுள ததற்குத் தென்னர்
மாடுறு மறைகள் காணா மன்னுமம் பலமொன் றுண்டங்
காடுது மென்று மென்றா னென்னையா ளுடைய வையன்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மற்றது சிதம் பரத்த வாய்மை யான் மாயா நீர்மைப்
பற்றுட னழியா தென்றும் பயின்றுள துயிர்க ளெண்ணி
னற்றவஞ் செய்தா னீடு நாடரு ஞான நாட்டம்
பெற்றவர் காண்பர் காணப் பெறாதவர் பிறப்ப ரன்றே."

'நீயினிக் காளவாயு நிலவெரி கதிரார் கண்ணு
மாயிரஞ் சிரமுங் கண்டா லஞ்சிடு மகில முன்னே
தூயவத் திரியுந் தாரம் துலங்கன சூயை தானும்
சேயென நின்னை வேண்டித்திருந்தருந் தவம் புரிந்தார்"

"அரியவர்க் குன்னை யீந்தான் அன்றுநீ பிறத்த லஞ்சி
மிருதுவாய்ப் புனிதை யாய்வந் தேற்றவஞ் சலிப்பா லெய்தி
மருவுமைந் தலையோர் பால மாசுண மாகக் கண்டு
பரிவினாற் பயத்தா னீப்ப பதஞ் சலியான பண்பால்."

"ஆங்கது வாகி யிந்த வனந்தனா நினைவி னோடும்
பாங்கினா னீங்க லாகாப் பதஞ்சலி யென்னு நாமந்
தாங்கிநீ நாக லோகந் தகுவழி சார்க நாப்ப
ணோங்கலொன் றுளதுதென்பா லுயர்பில வழியு முண்டால்."

"திடமதன் முடிவு தில்லைத் திகழ்வன மாகும் வாய்தல்
விடவட பாலி லால மென்னிழ றன்னி லந்தத்
தடவரைக் கொழுந்து மூலத் தானமார் குறியா யிந்தப்
புடவியி லமரர் போற்றும் பொற்பம ரற்புதத்து."

"பூசையங் கியற்றிக் கூத்தும் புந்திசெய்தரும் புலிக்கால்
ஆசிலா முனியிருந்தா னவனுட னமர்க நாமும்
ஓசைகொள் பூசம் பொன்னோ டுறு தினம் பொருந்து முச்சி
தேசுறு நடநீர் காணச் செய்து மென் றருளிச் செய்தான்."

அனந்தன் மகிழ்ச்சி சிவன் மறைந்தருவல்

"திருவருள் பெற்று மற்றத் திகழ னந்தனுவிழுந்து
பரிவொடு பணிந் தெழுந்து பரவச னாகி நிற்பப்
புரிகுழ லுமையா ளோடும் பூதமுங் கணமும் போற்ற
விருவிசும் பதனில் விண்ணோ ரிறையவனுற மறைந்தான்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அனந்தன் தில்லை சேர்தல்

"அரவன்ரை யாட வாடு மண்ணலஞ் செழுத்துங் கண்ணாக்
கரவிலா வழியா லெண்ணில் காலங்கள் கழிய வேறிக்
குரைகடன் மணியு முத்தும் பவளமுங் கலமுங் கொண்டு
திரைநிரை வணங்குந் தில்லை திருவெல்லை சேரவந்தான்."

அனந்தன் அருளுணர்வு

"உருகிட வுள்ளங் கண்ணீ ரோவாம லொழுக வுச்சிக்
கரகம லங்கள் கூப்பக் கணபண மணி விளங்கத்
திருவருள் வளர ஞாலம் சிவமயமாக மாயா
விருள் கெட ஞான பானு வென நில மேலெ ழுந்தான்."

பதஞ்சலி முனிவர் வியாக்கிரபாதரை காணுதல்

"எழுந்தருள் வனமிறைஞ்சி யிருந்தவா கண்டு காணாச்
செழுந்தவ வுருவை நோக்கித் திருமுனி திகைப்பத் திங்கட்
கொழுந்தணி வேணியண்ண லருளினாற் கொழும் புலிக்கா
லழுந்துமா தவனை நேர் சென் றாதர வதனாற் கண்டான்."

வியாக்கிரபாதர் வாக்கியம்

"மங்கல வுருவா மேனி மாமுனி யதிச யித்துச்
செங்கைக ளேந்தி மேனித் திகழ்வுகண்டுவந்து செல்வா
வெங்குறை வாய் நீ போவ தெவ்வள வேது நாமம்
சங்கைக ளகல வெல்லாம் சாற்றுக வென்று செப்ப."

பதஞ்சலி வாக்கியம்

"அடுபுலித் தாளோய் கேள்யா னனந்த னானந்த மான
நடநெடு வனத்து ளண்ண னயந்தவா நல்கி யென்னை
நெடியவ னமளி கொள்ளா னீர்மையா னீப்ப னீங்கித்
தடவரை மருங்கே யானும் தவம்பல காலஞ் சார."

"வாசமா மலரோ னாகி வாய்மைக ளளந்து தானாந்
தேசினி லணைந்து வந்தென் சிரமிசைக் கர மிருத்திப்
பாசம தகல நாயேன் பதஞ்சலி யாக நல்கி
ஆசிலா உபதே சங்க ளளவிலா வகை யளித்து."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"வேண்டிநங் கூத்துக் காண வியாக்கிர பாத னென்னு
மாண்டகு முனியுந் தில்லை வனத்தின னவனு நீயுந்
தாண்டவங் காண்டிர் நாகத் தலத்துயர் பிலத்தா லேறி
யாண்டிரு வென்றா னென்றா னருமுனி யயர்ந்து வீழ்ந்தான்."

வியாக்கிரபாதர் மகிழ்ச்சி

"அருள்புரி கருணை வெள்ளத் தழுத்தினா னென்னையண்ணல்
திருவுளம் பற்ற யான்முன் செய்தவ மென்னோ வென்றென்று
உருகினான் கண்ணீர் வார வுயர்பதஞ் சலி நீ தந்த
கரவிலா வருளா மென்று கைகளாற் கட்டிக் கொண்டான்."

வியாக்கிரபாதர் பதஞ்சலிக்கு உபகரித்தல்

"திண்ணமார் சிறியோன் பெற்ற செல்வமாமென்ன ஞானக்
கண்ணினா லமலன் கூத்துக் கண்டுளங் களித்தான் போல
வெண்ணிலா வின்ப முற்றங் கிலங்கு பொற் கயத்து மூழ்கப்
பண்ணிநாண் மலரான் மூலப் பரமர்தாள் பணிய வுய்த்தான்."

"வலங்கொண்டு குடபாற் றெய்வ வாவியின் மூழ்கு வித்து
நலங்கிளர் தன்னை யாண்ட நாதனை வணங்க நல்கித்
தலம்புணர் பன்ன சாலை தகுவித்துச் சாக மூல
பலங்களு மிலங்கப் பின்னாட் பரிந்தரு விருந் தளித்தான்."

பதஞ்சலி முனிவர் சிவலிங்கப் பிரதிஷ்டையும் வழிபாடும்

"மனங்களி கூரு நாளில் வனமதன் குடபாற் றெய்வப்
புனற்றடங் கண்டு மூழ்கிப் புணர்குண க்ரைமேற் போற்றத்
தனக்கு மோர் நாயனாரைத் தாபித்து வணங்கித்தங்க
வனித்தமில் சாலை வாவி யதன்வட பால மைத்தான்."

பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் அனந்தீச்சரம் புலீச்சரம் ஆகிய தலத்தில் பூசித்துக் கொண்டு ஆனந்த தாண்டவம் காண ஆசையோடு இருத்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடராசச் சருக்கம்

"ஆங்கிட மாக நாளும் அமர்ந் தனந்தீச் சுரத்துந்
தீங்கிலவண் புலீச் சுரத்தும் திகழ்சீர் மூலத் தானத்து
மோங்கிய நாதன் பாத முறவுற வணங்கி யாட
லீங்களித் தருளு கென்றங் கிருவரு மிருந்தா ரன்றே."

"கறவையான் வரவு பார்க்கும் கற்றின மெனவுங் கார்சே
ருறையுண வுணர்ந்து நோக்கி யோய்ந்தபுள் ளெனவு மோங்கற்
செறிமுகின் முழவு கேட்டு திகழ்மயிற் றிரளும் போல
யிறையவ னடமே சிந்தித் திடைத் தினம் கடத்தினார்கள்."

சிவபெருமான் வரும் ஒலி கேட்டல்

"இரவியு முச்சி யெய்த விருகர முச்சி யெய்த
வருபவ ரெதிரோம் வந்தான் றேவர்க டேவன் வந்தான்
அரியயர் பெருமான் வந்தான் என்றெழு வதற்குப் பின்னே
பரவிய ஒலியுங் கேளாப் பார்மிசைப் பதறி வீழ்ந்தார்."

சங்கஒலி

"ஆயிர நதி யுதித்த வருவரை போல வேத
மாயிரம் வகையா லோது மதுதகப் பானு கம்ப
ராயிர முகத் திரண்டா யிரங் கரத், தாலணைத்த
வாயிரஞ் சங்கு மோ மென் றறைந்தன தழங்க வங்கண்."

குடமுழாவொலி

"நடமுயல் விரகுந் தாள கதியுநல் லருளாற் பெற்ற
வடகுவ டனைய தோள்க ளாயிர முடைய வாணன்
சுடர்விடு கடகக் கையாற் றொம்மெனப் பன் முகத்த
குடமுழ வெழு முழக்கம் குரைகடன் முழக்கம் கொள்ள."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துந்துபி, வேதவொலி, கந்தருவர், கானஒலி, சிலம்பொலி

"ஐந்து துந்துபியு மாசி லருமறை யொலியு நீடு
கந்தரு வத்தர் கூடுங் கானமுங் கடவுள் பாதத்
தந்தமி றிருச் சிலம்பி னரவமுங் கேட்டா ரும்பர்
சிந்திய மந்தா ரத்தின் செழுமலர் தெரியக் கண்டார்."

இருமுனிவர்கள் ஆர்வம்

"தாகத்திற் றண்ணீ ரோசை தகவொலி செவி மடுத்து
மோகித்தா ரெழுந்தா ராற்றார் முகமெலாங் கண்ணீர் வாரச்
சோகித்தார் தொழுதார் போற்றித் துணைவனே போற்றி தோன்றா
யாகத்தா யருளா யென்றென் றலறினார் வாய்க ளார."

ஞானக்கண் பெற்று நடனங்காணுதல்

"எண்ணருங் காதல் கூரு மிருவருங் காண ஞானக்
கண்ணினை நல்க முன்னைக் காரிருள் கழிவுற் றின்ன
வண்ணமென் றறிய வாரா வளரொளி மன்றுண்மாதோ
டண்ணனின் றாடு கின்ற வானந்த நிருத்தங் கண்டார்."

தாண்டவத் திருக்கோலம்

"திருவடிநிலையும் வீசும் செய்ய காலும் சிலம்பும்
உருவள ரொளியும் வாய்ந்த வூருவுமுடுத்ததோலும்
அரைதரு புரிவுங்கச்சி னணிகளுமழகா ருந்தி
மருவிய வுதரபந்தக் கோப்பு நூல்வாய்ப்பு மார்பும்."

"வீசிய செய்ய கையு விடதரக் கரங் கவித்த
தேசுவண் டுடியு மங்கி சேறிமுன் றிரண்ட தோளும்
காசை கொண்மிடறுமல் தோடார் காதும் வெண் குழையுங்காண
மாசிலா மணிவாய் விட்டு வழங்கிடா நகை மயக்கும்."

"ஓங்கிய கமலச் செவ்வி யொளிமுக மலருங்கண்கள்
பூங்குழலுமையை நோக்கும் புரணமும் புருவப் பொற்பும்
பாங்கமர் நுதலும் பின்றாழ் படர்சடைப்பரப்பும் பாம்பு
நீங்கருந்தாரு நீரு நிலவுமே நிலவு நீறும."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவகாமசுந்தரியின் திருக்கோலம்

"கடிமல ரணைய வாரிக் காரிரு ளளகஞ் சேர்த்த
முடியுநன் னுதலும் பொட்டு முயங்கிரு புருவ வில்லும்
வடிகொள்வேல் விழியுங் காதும் வளர் குமிழ் மலருந் தொண்டை
படிவவா யிதழும் முத்த நகையுமெய்ப் பசுமை வாய்ப்ப."

"பூங்கமு கமர் கழுத்திற் பொலிந்த மங்கலநாண் பொற்பும்
பாங்கம ரமையார் தோளும் பங்கயச் செங்கை தாங்கும்
ஓங்கு செங் கழுநீர்ச் செவ்வி யொளிதரு மலருந் தாரும்
கோங்கரும் பவை பழித்த கொங்கையும் குலவு பூணும்."

"துடியம ரிடையும் பாந்தட் டொகுபணந் தகு நிதம்ப
வுடையமர் துகிலு மல்க வொல்கிய நிலையும் செய்ய
வடிமலர் மிசை யணிந்த வாடகப் பாடகக் கீழ்
விடுசுடர்ச் சிலம்பு வாய்ந்த மெல்லியல் வியந்து காண."

"ஆடிய பெருமான் வெய்யோ னலர்கதி ராயி ரத்து
கூடிய மண்ட லம்போற் குறைவிலா வகை நிறைந்து
நாடரு ஞான மன்று ணாமுய்ய வயன்மான் முன்பு
தேடரு மேனி கொண்டு திருநடஞ் செய்யக் கண்டார்."

இரு முனிவர்களின் பேரின்ப நிலை

"பொருவில் புயங்கப் புனித னடங்கட் புலன் மேவத்
தெரிபொழுதங்கத் தொரு செயலின்றிச் சிரமேவக்
கரமலர் நுந்தப் புனல் விழி கம்பித் துரைகாணா
இருவரு மின்பக் கடலுள லைந்தாரென் செய்தார்."

"தற்பரமாகுந் தலைவன துண்மைத் தன்மைப் பொற்
சிற்பர மாமம் பரவொளியுந் தன்றிருமேனிப்
பொற்புடனாடும் பொலிவும் விழிக்குட் புணராதா
லற்புதனே யிங்கார்கிலமென் றென்றயர்கின்றார்."

"காரணனே முன் காமனை வேவக் கண் வைத்த
பூரணனே நின் புகழ் நடம்யாரும் புணர்வெய்தப்
பாரிருண் மோகந்தீரருண்ஞானம் பணியென்றென்
றாரண மோ துஞ்சாகைக ளோ ராயிரமாக."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"ஒருவனை நேரே யிருவருமுன் னான் மறையஞ்சா
திரவுறுமா றேழைய மினி யெட்டும்படியின்பந்
தரை முதலாறா றெனவரு நாதா தியின் மீதேய்
பரதபராவா பரிபுரபாதா பணியென்றார்."

"கரணமனைத்தும் புலனிவை காணா கைவிட்டான்
மரண மெமக்கிங் கிதுதமியோம் வாழ் வருண்மாறிற்
றிரணமு மெய்ச் சஞ்சல மில தென்றாலொன்றா நின்
புரணமெனக் கொண்டருளுக வென்றார் நின்றார்கள்."

பக்குவமுடையோர்கள் காண ஞானங் கொடுத்தல்

"இவ்வகையே நான்மறைமுத லேனோ ரிரவெய்த
பைவிரவாரப் பணியணி நாதன் பரிவாலிப்
பொய்விரவா மெய்ப் பொலிவினர் யாரும் புணர்வெய்தத்
திவ்வியமாமம் பரபதஞானந் தெரிவித்தான்."

"நாரணன் வேதா வாசவன் வானோர் நவைசேரா
வாரணமேலோர் தாபதர் மூவாயிரவோர் நற்
சாரணர்தாவா நாரதர் பூதா திகளாசைக்
காரண ரேனோ ராடலை நேரே கண்டார்கள்."

"கண்டனர் கண்ணுக்கின் புறமுன்னே கரமுச்சிக்
கொண்டனருள்ளக் கொள்கை ததும்பக் குறியாரப்
பண்டரு வேதப் பாடலொடாடிப் பரபோகத்
தண்டனதா மெய்க் கருணையி னூடுற் றலைவுற்றார்."

"பரபதகங்காதர வரவிந்தா சனனுச்சிச்
சிரமரி கண்டா விருடரு கண்டா மிகு தெவ்வர்
புரமெரி கண்டா பவமிரி கண்டா வென வோதிக்
கரசி ந்தாவர கரகரவென்றார் கணநாதர்."

"ஆடின ரெந்தாயாக மசிந்தாமணியேயென்
றோடினர் நின்றார் ஓகைமலிந்தார் ஒளிர்கண்ணீர்
வீடினர் குன்றா மூடிய வெந்தீவினை தீரத்
தேடு மருந்தே தாவருளென்றார் சிலதேவர்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மாலயன்மேலா வாசவனேசா மதியே செங்
கோலநிலாவா பாலனநீறா கோவே திண்
காலனிலாவா காதியகாலா கதியேவண்
பாலநிலாவா காவென நேரே பணிவுற்றார்."

இப்படி ஆனந்ததாண்டவத்தை எல்லையில்லாத தவஞ் செய்த பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் கண் குளிரக் கண்டு பேரானந்த மடைந்தார்கள் பரமேசுவரன் ஆடியபோது பூதங்கள் ஆடின புவனங்கள் ஆடின, வேதாகமங்கள் ஆடின, கீதங்கள் ஆடின, ஏழண்டம் ஆடின. பிரமவிஷ்ணுக்கள் கின்னரர் கிம்புருடர் அரம்பையர் ஆடினார்கள்.

"பூதங்க ளாடப் புவன முழுதாட
வேதங்க ளாட மிகுமா கம மாட
கீதங்க ளாட கிளரண்ட மேழாட
நாதங்கொண் டாடினான் ஞானானந்தக் கூத்தே."

என்பது திருமந்திரம். சிவபெருமான். இருமுனிவர்களையும் கடாக்ஷித்து 'உங்களுக்கு என்ன வரம் வேண்டும்' என்று கேட்டருள, 'பெருமானே எப்போதும் இந்த நடனக்காட்சியை அடியேங்களும் மண்ணவர்களும் விண்ணவர்களும் கண்டு பேரின்பத்தையடையும் படி ஆடிக்கொண்டிருக்கவேண்டும் எங்கள்பூசையை ஏற்றருளவேணும்' என்று கேட்டுக் கொண்டார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

"தேவர்கடேவன் றிருவருளரங்கப்படி செய்ய
மேவியபோதங்கிருவருமிக்காடினர் மிக்கோ
ராவென வேழெண் கடலொலி போல்வைத்தலைவுற்றார்
பூவலயம்பூ மலைதக வானோர் பொழிவுற்றார்."

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கூத்தின் சிறப்பு

பிரமவிஷ்ணுக்கள் தேடிக் காண முடியாதகற்பனை கடந்த சோதியாயுள்ள பரமேஸ்வரனை நிலவுலகத்தில் எல்லாரும் காணும்படியாகப் பேருபகாரம் செய்தவர்கள் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற இரண்டு புண்ணிய மூர்த்திகள். ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமழை'' என்பது ஔவை வாக்கு. நல்லார் இருவர் உளரானபடியால் எல்லார்க்கும் பேரின்பமழை பெய்து கொண்டிருக்கிறது.

பூதங்கடந்தது சிற்றம்பலம் அதனால் அதற்கு சிற்பரவி யோமம், ஞானாகாசம், பரவெளி, ஆனந்த நிலையம், சிதம்பரம் என்று பெயராயிற்று. அதில் ஆடும் நாடகம் நாதாந்த நாடகம் என்பதாம். நாதமுடிவில் வெட்டவெளியில் ஆடுந்திருக் கூத்தாகும். இதனால் **'நாதாந்த நாடகத்தை நன்றாயருள் செய்தீர்'** என்று உண்மை விளக்கத்திலும், **'உருவிலாதயாழில் வெட்ட வெளியிலாடு நாதநிர்த்த உனது ஞானபாதபத்ம மடைவேனோ'** என்று திருப்புகழிலும் அருளிச் செய்யப் பட்டது.

திருக்கூத்தின் பயன்

திருக்கூத்தின் பயன் முத்தியின்பத்தைவிட மேலானது. தரிசன மாத்திரத்தில் முத்தியை வழங்குவது பரம ஞானிகள் முதலாக மந்தமதியினர் வரை எல்லோருக்கும் கண்டவுடன் ஆனந்தம் தருவது ஆனந்ததாண்டவம். **'தெரிசன பரகதியானாய் நமோ நம'** என்பது திருப்புகழ். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியதவங்களைச் செய்து அதனால் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியமாகிய பதமுத்தி பரமுத்தி ஆகியவற்றைப் பெறவேணும். இது செய்ய இயலாதவர்கள் கூடத் தரிசனம் செய்ய முத்தியைத் தருவது சிதம்பரம். இதற்குப் பிரமாணம் வருமாறு, கோயிற்புராணப்பாடல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மெய்மை நற்சரியை பத்தி விளங்கிய ஞானமேவா
வெம்மையொப்பவர்க்கு முத்தியிறையிலியாகவிட்ட
மும்மைநற்பதிகடம்மின் முளைத்தவர் முடிந்தோர் மூவா
செம்மலர்க் கழல் கண்டோர்கள் சிவத்தினைச் சேர்வரன்றே."

திருவாரூரில் பிறந்தால்முத்தி. காசியில் இறந்தால் முத்தி. இந்த இரண்டு நிகழ்வும் நம்முடைய எண்ணப்படி நடப்பதல்ல. அந்த இன்பமும் பின்பு கிடைப்பதாம்: ஆனால் சிதம்பரம் தரிசனம் கண்டவுடன் ஆனந்தமுண்டாகும் இப்பிறப்பிலேயே முத்தியுமுண்டாம்.

"பிறந்தில மாரூர் தன்னிற் பேசிய காசி மேவி
யிறந்தில மிரண்டு முத்தியின்பமு பின்பதாநா
முறைந்திடு தில்லைஞான யோகமார்தானமா மாற்
செறிந்தடி காணச் சீவன் முத்தராய்த் திரியலாமே."

மேலும் "கோயிற்புராணம் பாயிரத்தில் மறந்துகூடப் பூமிக்கு வரமாட்டோம் என்று செல்பவர்களைப் போல தாண்டவக் காட்சியைக் கண்டு இறந்தவர்கள் பிறவாமல் சிவலோகத்தில் இருப்பார்கள். அப்படிப்பிறவாமல் இருப்பதனால் என்ன பலன்? மறுபடி வந்து பிறந்தால் ஆனந்த தாண்டவத்தைக் கண்டு முடிவில்லாத பேரின்பத்தைப் பெறலாமே" என்று பாடுகிறார் உமாபதி சிவம். இதன் கருத்து முத்தியின்பத்தைவிட நடனக்காட்சி அதிகமான இன்பந் தருமென்பதாம். அப்பாடல் வருமாறு,

"மறந்தாலு மினியிங்கு வாரோமென்ற கல்பவர்போற்
சிறந்தார நடமாடுந்திருவாளன் திருவடிகண்
டிறந்தார்கள் பிறவாத விதிலென்ன பயன் வந்து
பிறந்தாலு மிறவாத பேரின்பம் பெறலாமால்."

கண்ணினாற் கண்டவுடனேயே ஆனந்தமும் முத்தியும் வழங்குவது. நடராசத்திருமேனி ஒன்றேயாம். இதனால்தான் திருநாவுக்கரசுசுவாமிகள், வேறுதலங்களில் இனிமேல் பிறவிவேண்டாமென்று சுவாமியினிடத்தில் விண்ணப்பம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்தார். சிதம்பரத்திற்கு வந்தவுடன் திருக்கூத்தைத் தரிசித்து மனிதப்பிறவி வேண்டுமென்று பாடினார். எதற்காக வென்றால்,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போற் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

என்று பாடுகின்றார்.

புலன்கள் ஒன்றி ஒரு நெறிய மனம் வைத்து சிவனை நினையுங்கள் தன் அடியவன் மேல் கோபித்து வந்த காலனைக் கொன்றவன் அவன் தில்லைச் சிற்றம்பலத்துள் நடனமாடுகின்றான் சென்று கண்டு தொழுது வணங்குங்கள் நீங்கள் சிதம்பரத்திற்கு என்று வந்தீர்கள் என்று கேட்பது போல் அவன் குறிப்பு உள்ளது. பாடல் வருமாறு.

"ஒன்றியிருந்து நினைமின்களுந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந்தா யென்னும் எம்பெருமான்றன் றிருக்குறிப்பே."

என்பது அத்திருப்பாடல்.

எடுத்த திருப்பாதம் சந்திரனைச் சாட எடுத்தது, எமனை வீட எடுத்தது, நாரணன் நான்முகன் இருவரும் தேட எடுத்தது, அடியோங்களாகிய நம்மை ஆண்டுகொள்ள எடுத்தது என்று அருமையாகப் பாடுகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்,

"சாட எடுத்தது தக்கன்றன்வேள்வியிற் சந்திரனை
வீடஎடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்டபாதமன்றோ நம்மை ஆட் கொண்டதே."

என்று அனுபவிக்கிறார். அதனால் அன்னமும் அன்னமும் வழங்குகின்ற தில்லைச்சிற்றம்பலம் பொன்னாற் பொலிந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விளங்குவது என்னுடைய அன்பு பெருகுமாறும், கண்டு இன்பம் அடையுமாறும், இந்தப் பிறவியை இன்னம் எனக்கு கொடுப்பானோ என்று பாடி அதனால் பெரும்பற்றப் புலியூரானை பேசுகின்ற நாள் பிறந்தநாள், பேசாத நாளெல்லாம் பிறவாநாளே இறந்த நாள் என்று பாடுகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

"அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே." என்றும்,

"கருமானின் உரியதளே உடையா வீக்கி
கனைகழல்கள் கலந் தொலிப்ப வனல்கையேந்தி
வருமானத் திரடோள்கள் மட்டித் தாட
வளர்மதியம் சடைக்கணிந்து மானேர்நோக்கி
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
அமரர்கணம் முடி வணங்க ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

என்பது பெரிய திருத்தாண்டகம்.

இதனால்தான் இந்தத் திருக்கூத்தை நினைப்பதே நியமம், தவம், கொள்கை என்கிறார் திருஞான சம்பந்த சுவாமிகள், தமது தேவாரத்தில்,

"பொன்றயங் கிலங்கொளி நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலி
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதேநியமமே." என்றுபாடுகிறார்.

ஒரு திருவடியை மடித்து ஆடுவான் வாழ்கின்ற நாளில் அடிமையாக ஏற்றுக் கொள்வான்- எமன் வந்து கூட்டிச் சென்று தன் உலகில் செக்கில் இட்டு ஆட்ட எண்ணும்போது தடுத்து ஆட்கொள்வான். வேகமாக ஆடும் பெருமான் திருக்கரத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உடுக்கையும் நெருப்பும் கரிய பாம்பையும் பிடித்து ஆடுகின்ற பெருமான் புலியூர் சிற்றம்பலத்தில் உள்ளான். அவனைப் பெற்றுக் கொண்டோம் என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடி மகிழ்கிறார். பாடல் வருமாறு,

"மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழுநாளும்
தடுத்தாட்டித் தருமனார்தமர் செக்கிலிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுகரதலத்தில் தமருகமும் எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே."

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிதம்பரதரிசனம் செய்த பொழுது மெய்யறிவு, செவியறிவு, நாசியறிவு, வாயறிவு கண்ணறிவில் கூடிவிட்டன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணங்களும் சித்தம் என்கின்ற ஒரு கரணமாகிவிட்டன. சாத்துவிகம், ராசதம், தாமதம் ஆகிய மூன்று குணங்களும் சாத்துவிகம் என்கிற ஒரு குணமாக ஆகியது இப்பொழுது கண்ணறிவு ஒன்று, சித்தம் ஒன்று, சாத்து விகுணம் ஒன்று என்கிற நிலையில் இருந்து இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்தஎல்லையில் ஒப்பில்லாத பெருங்கூத்தில் உண்டாகிய பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி மாறில்லாத ஆனந்தம் பெற்றார். பின்பு சாக்கிரநிலைக்கு வந்து 'சந்திரனைச் சடையில் வைத்த பெருமானே தேவரீர் திருநடனத்தைக் கும்பிடக்கிடைத்த இந்தப் பிறவியே எனக்கு பேரின்பம் மிகுதியாகக் கிடைத்தற்குப் பொருத்தமாக உள்ளது' என்று அஞ்சலி செய்து கண்மழை பொழிந்து பாடிப்பரவிப் பணிந்தார் என்று சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்கிறார். பாடல்கள் வருமாறு,

"ஐந்து பே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமே யாக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்தின் மூழ்கி மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

"தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதா மின்பமா மென்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்து
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்."

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேலைச் சிதம்பரம் என்கின்ற பேரூரில் அரசம்பலத்தில் ஆடுகின்ற பெருமானைக் கண்டார். கண்டவுடன் தொழுதார். விழுந்தார். எழுந்தார். எல்லையில்லாத அன்பு என்புருகச் செய்தது. ஐம்புலன்களில் புலப்படாத இன்பம் உணர்வினில் பொங்கியது தாண்டவம் புரியும் தம்பிரானாரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டு வணங்கிய போது அவருக்கு உண்டாகிய பேரானந்த நிலையை யார் அளவிட்டுச் சொல்லமுடியும் என்று பாடுகிறார் சேக்கிழார். பாடல் வருமாறு,

"காண்டலுந் தொழுது வீழ்ந்துட னெழுந்து
கரையில் அன்பென்பினை உருக்க
பூண்டவைம் புலனில் புலப்படா இன்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்க
தாண்டவம்புரியும் தம்பிரானாரைத்
தலைப்படக் கிடைத்த பின் சைவ
ஆண்டகை யாருக்கடுத்த வந்நிலைமை
விளைவையார் அளவறிந் துரைப்பார்."

ஸ்ரீ மாணிக்கவாசகர்

திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் திருப்பெருந்துறையில் ஞான தேசிகராக எழுந்தருளி ஞானோபதேசம் செய்து திருவடி தீக்ஷை செய்து சிவமாக்கி ஆண்டு கொண்டார். ஆண்டு கொண்ட பிறகு சில காலம் கழித்துத் 'தில்லைக்கு வருக' என்று அருள் செய்தார்.

தில்லையின் பெருமையையும் திருவாசகத்தின் பெருமையையும் மாணிக்கவாசகர் பெருமையையும் உலகுக்கு உணர்த்த வேண்டி தில்லைக்கு வருக என்று அருள் செய்தார். கீர்த்தித் திருவகவலில் "நாயினேனை நலமலி தில்லையுள் கோலமார் தரு பொதுவினில் வருகென" என்று பாடுகின்றார். அவ்வாறே தில்லைநகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும் ஒல்லை விடை யானைக் கண்டு அளவிலா ஆனந்தம் கொண்டு பொன்னம்பலக் கூத்தனின் ஆடலைக்கண்டு நின்றார். அசைவில்லார் நிலையோவியமானார். திருக்கூத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கலந்து பேரானந்தமடைந்து தானென்றொரு முதலில்லாத நிலையாகிய துரியாதீதநிலையில் நின்றருளினார். வெகுநேரம் கழித்து ''கைதான் தலைவைத்து கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம் பொய்தான் தவிர்ந்து போற்றி சயசய போற்றி'' என்று சாக்கிரநிலைக்கு வந்து திருவாசகத்தேன் பாடினார்.

கண்டபத்து

"இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமா
அந்தரமே திரிந்து போய் அருநரகில் வீழ் வேற்குச்
சிந்தை தனைத் தெளிவித்து சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணி கொள்தில்லை கண்டேனே."

"உருத்தெரியாக் காலத்தே என் உள்புகுந்து உள மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணி கொள்தில்லை கண்டேனே."

"அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்று மறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவரும் தொழுந்தில்லை கண்டேனே."

என்று பாடியருளினார்.

கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாளாகிய சிவகாமசுந்தரி உன் நடுவிலும் அவள் நடுவில் நீயும் பொருந்திப் பிரிவில்லாது திருமேனியிற் பாதியாகவும் சிவமின்றி சத்தியில்லை, சத்தியின்றிச் சிவமில்லை என்றபடி இருவரும் பூவும் மணமும் போலக் கலந்து அடியேனுடைய உள்ளத்துள் நடுவில் இருப்பது உண்மையானால் அடியேனை உன்னைப் பிரியாத பரமஞானிகளாகிய அடியார்கள் நடுவில் இருக்கும் படியான அருளைப் பொன்னம்பலத்தில் முடிவில்லாத முதலாகி விளங்குகின்ற பெருமானே தேவரீர் முன்னின்று என் கருத்து முடியும் வண்ணம் அருள் செய்வீராக'' என்று வேண்டுகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தில்லைக்கு வருக என்று அருளிய படி தில்லைக்கு வந்தார். வந்தவராகிய மாணிக்கவாசகர் உன் திருவடியில் கலந்தருளும்படி அருள் செய்யவேண்டும் என்று தானே வரம் கேட்கவேணும் அப்படிக்கேட்காமல் உன் அடியார் நடுவில் இருக்கும்படி செய்ய வேணும் என்று வேண்டுகிறார். இந்த வரமும் கேட்கின்ற முறை மிக அழகாக உள்ளது.

உலகில் உள்ள மனிதர்கள் தன்னுடைய முக்கியமான நல்ல காரியத்துக்குத் தனக்குவேண்டிய தகுதியுள்ள பெரியோர்களைத் தாங்கள் முன்னே நின்று இந்தக்காரியத்தை முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வார்கள். அதுபோல மாணிக்கவாசகர் தன்னுடைய முக்கியமான காரியமாகிய அடியார் நடுவில் இருக்கும் பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கும்படி தனக்கு வேண்டியவராகிய ஒப்பில்லாத உவமையில்லாத பெருந்தலைவராகிய நடராசப் பெருமானை முன்னின்று முடித்துக் கொடுக்கும்படி வேண்டுகிறார். '' கருத்தறிந்து முடிப்பான் தன்னை'' என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்; 'முன்னவனே முன்னின்றால் முடியாதபொருள் உளதோ' என்பது பெரிய புராணம்.

இதனால் மிக உயர்ந்த பெருவாழ்வு என்பது அடியார் நடுவுள் இருப்பது என்பது நன்றாக விளங்குகிறது. மாணிக்கவாசகர் சொல்லுகின்ற அடியார்கள் சாதாரணமான அடியார்களல்ல; 'பரமஞானிகள்', 'பழுத்த மனத்து அடியவர்கள்', 'கரை சேர் அடியார்', 'நெருங்கும் அடியார்கள்', 'தெருளார் கூட்டம், அவர்கள் சிவபுரத்தில் இருப்பவர்கள்', அகத்தியர், மார்க்கண்டேயர், பிருங்கி, காசிபர், கௌசிகர், கௌதமர், பரத்துவாசர், பதஞ்சலிவியாக்கிரபாதர், உபமன்யு, இரண்யவர்மன், வியாசர், சுகர், வாகீசர், திருநந்திதேவர் , சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் , திருமூலர், பரஞ்சோதிமுனிவர், சத்தியஞானதரிசனி எண்ணற்ற கோடி சிவகணங்கள், உருத்திரர் கூட்டம் ஆகிய சிவஞானச்செல்வர்கள் கூடியிருக்கும் அந்தக் கூட்டத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடுவில் இருக்கும்படியான மேலான வரத்தைப் பொன்னம்பலத்தில் ஆடும்பெருமானிடத்தில் வேண்டு கிறார். அற்புதமான வரம். அற்புதமான் பாடல் வருமாறு,

"உடையா ளுன்றன் நடுவிருக்கும் உடையா ளடுவுள் நீயிருத்தி
அடியே னடுவுள் ளிருவீரும் இருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவுள் ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே."

சிவபெருமானை வணங்க ஆன்மாக்களாகிய நமக்குத் தலையை வைத்தான். திருவடியை வாழ்த்த வாய் வைத்தான். மெய்ஞ்ஞானம் ஓங்கி வளர அனுகூலமாகச் சீரடியார் கூட்டமும் வைத்தான். இதற்கு மேலாக உமாதேவியாரோடு பொன்னம்பலத்தில் நாம் காணும்படியாக ஆனந்த தாண்டவமும் செய்கிறான். அதனால் ஆடுகின்ற பெருங்கருணையாகிய அந்த அருட்குணத்தை மிகுதியாகப் பாடி 'அல்லிப்பூ கொய்வோமாக' என்று திருப்பூவல்லியில் பாடியருளிகிறார். அப்பாடல்,

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத் தெம்பெருமான்
அணங் கொடணிதில்லை அம்பலத்தேயாடுகின்ற
குணங்கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ."

என்று ஆடுகின்ற அருட்குணத்தை வியந்து பாடுகின்றார்.

சிதம்பரம் பொன்னம்பலமென்றும், மதுரை வெள்ளியம்பலமென்றும் வழங்குகிறது. கோயில் மூத்த திருப்பதிகத்தில் பத்துப்பாட்டிலும் பொன்னம்பலம் என்றே பாடுகின்றார். கடைசிப்பாடலில்,

"நல்கா தொழியான மக்கென்றுன் நாமம்பிதற்றி நயன நீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்காமனத்தால் நினைந்துருகிப்
பல்காலுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்காநிற்கும் உயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே."

என்று பாடுகின்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூவரம்மானை என்ற நூல்.

"மன்னுவெள்ளியம்பலமும் மாசறு பொன்னம்பலமும்
என்னுமிவை யீசர்க்கு இரண்டுண்டு அம்மானை
என்னுமிவை ஈசர்க்கு இரண்டுண்டேயாமாயின்
இன்னும் இருப்பம்பல மொன்றில்லை யோவம்மானை
இருப்பம்பலம் அடியார் இதயங்கா ணம்மானை"

என்று பாடுகிறது.

திருவாதவூரடிகள் புராணத்தில் மனம் வாக்கு காயத்தால் தீயவையுடையராக இருந்தாலும் பொன்னம்பலமென்று ஒரு தடவை சொன்னால் ஸ்ரீ பஞ்சாட்சரம் இருபத்தோராயிரத்து அறுநூறு தரம் சொன்னபலன் கிடைக்குமென்று கடவுண் மாமுனிவர் பாடுகின்றார். பாடல் வருமாறு,

"தேக்கும் சடிலத்திருமுடியார் இருதாள் கருதாத் தீமனமும்
வாக்கும் செயலும் கொடியோரும் ஒரு காற்பொன் னம்பலமென்னின்
ஆக்கந் தரு மஞ்செழுத் திருபத் தோராயிரத்தோ டறுநூறு
நாக்கொண்டுரைக்கு மதற்கு நிக ரென்றான் குன்றா நற்புகழான்."

திருக்கோவையாரில் திருக்கூத்து

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகத்தைச் சிவபெருமான் தமது திருக்கரத்தால் எழுதிக் கொண்டு மேலும் அவர் பாட்டில் ஆசைப்பட்டு 'பாவை பாடிய வாயினால் கோவைபாடு' என்று சிவபெருமானே விரும்பிக் கேட்டு மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப்பட்டது. திருக்கோவையார் நானூறு பாடல்களையுடையது. அகத்துறைப்பாடல் முழுவதும் தில்லைச் சிற்றம்பலக் கூத்தனைப் பற்றியது. அற்புதமும் அருளும் நிறைந்த சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது.

அதில் 'கழற்றெதிர் மறுத்தல்'என்ற துறையில் வரும், (23)

Center for Shaiva Studies, Pondichery Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"சேணிற்பொலி செம்பொன் மாளிகைத்தில்லைச் சிற்றம்பலத்து
மாணிக்கக்கூத்தன் வடவான்கயிலை மயிலை மன்னும்
பூணிற்பொலிகொங்கை ஆவியை ஓவியப்பொற்கொழுந்தைக்
காணிற்கழறலை கண்டிலை மென்றோட் கரும்பினையே".

இப்பாட்டில் மாணிக்கக்கூத்தன் என்ற வாக்கியம் மிக்க இனிமையானது.

'பிறைதொழுகென்றல்' என்ற துறையில் வரும், (66)

"மைவார் கருங்கண்ணி செங்கரங்கூப்பு மறந்து மற்றப்
பொய்வானவரிற் புகாதுதன் பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின்றோன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே"

என்னும் இப்பாட்டில் 'மறந்து மற்றப்பொய் வானவரிற் புகாது தன் பொற்கழற்கேயடியேன் உய்வான் புகவொளிர் தில்லை நின்றோன்' என்ற வாக்கியம் மிக்க அழகானது.

''வஞ்சித்துரைத்தல்'' என்ற துறையில் வரும், (88)

"புரங்கடந் தான்அடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாய்என் றிரப்பத்தன் ஈரடிக்கென் னிரண்டு
கரங்கடந்தான் ஒன்றுகாட்ட மற்றாங் கதுங்காட்டி டென்று
வரங்கிடந் தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே."

என்னும் இப்பாட்டில் சிவபரத்துவம் அருமையாக உள்ளது.

''கண்ணயந்துரைத்தல்'' என்ற துறையில் வரும், (108)

"ஈசற் கியான் வைத்தவன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை யின்னொளி போன்றவன்றோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற் பெருநீளம் பெருங்கண்களே."

என்னும் இப்பாடல் மிக்க அழகுடையது. அகன்ற அன்பு, வாங்கிய பாசம், தில்லையின் ஒளி, திருநீறென வெளுத்து, திருவார்த்தையிற் பெருநீளம் என்கிற வாக்கியங்கள் மிக்க தித்திப்பன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

''குறியிடத்துக் கொண்டு சேறல்'' என்ற துறையில் வரும், *(118)*

"தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற்றில் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி யம்பல வன்றன்வெற்பிற்
புனைவளர் கொம்பரன் னாய்அன்ன காண்டும் புனமயிலே."

என்னும் இப்பாட்டில் 'தொழுதெழுவார் வினைவளம் நீறெழ நீறணியம்பலவன்' என்றது மிக்கச் சிறப்புடையது.

''குறை நேர்தல்'' என்ற துறையில் வரும், *(158)*

"ஓங்கும் ஒருவிடம் உண்டம் பலத்தும்பர் உய்யஅன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த்தழங் கும்மருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவர்க்கறி யேன்சிறியேன் சொல்லும் வாசகமே."

என்னும் இப்பாட்டில் 'தாங்கும் ஒருவன் வீழ்ந்தன்றழுங்கப் பிடித்தெடுத்து வாங்குமவர்க்கறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே' என்ற அருள் மொழிகள் மிக்க அழகுடையன.

''அன்னமொடழிதல்'' என்ற துறையில் வரும், *(191)*

"மூவல் தழீஇய அருள்முதலோன் தில்லைச் செல்வன்முந்நீர்
நாவல் தழீஇயஇந் நானிலந் துஞ்சும் நயந்த இன்பச்
சேவல் தழீஇச்சென்று தான் துஞ்சும் யான்துயி லாச்செயிர்எங்
காவல் தழீஇயவர்க் கோதா தளிய களியன்னமே."

என்னும் இப்பாட்டில் 'மூவல்தழீஇய அருள் முதலோன் தில்லைச் செல்வன்' என்றது மிக்க நன்றாக உள்ளது. மூவல் என்னும் திருப்பதியில் அவதாரம் செய்த ஆதி நமச்சிவாய மூர்த்திகள் திருவாவடுதுறை ஆதீனத்தின் அருள் முதல்வராக எழுந்தருளி யுள்ளார். அதனால் பல ஆன்மாக்கள் அருளைப் பெற்றார்கள், பெறுவார்கள் என்பது சத்தியம்.

''கலவியின்பங்கூறல்'' என்ற துறையில் வரும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"ஆனந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோன் அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற்றாதிவ் வணிநலமே."

என்னும் இப்பாட்டில் நான்கு வரிகளிலும் ஆனந்தம் என்பதும், ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது என்பதும் மிக்க ஆனந்தமாக உள்ளது.

திருவிசைப்பாவில் திருக்கூத்து

உயிர்கள் உணர்த்தினால் உணர்வது, அறிவித்தால் அறிவது, இயக்கினால் இயங்குவது, ஆட்டுவித்தால் ஆடுவது, அடக்குவித்தால் அடங்குவது. ஆகவே உயிர்களின் வினைக்குத் தக்கவாறு உயிரை இயக்குவது, வினையினீங்கி விளங்கிய அறிவனாகிய முழுமுதற்கண்ணுதலாகிய சிவபெருமான் ஒருவனே. இவ்வுண்மை எல்லாருக்கும் தெரியும்படியாக விளக்கிக்கொண்டிருப்பது நடராசத் திருமேனி. இக்கருத்தைத் தெரிவிக்க திருநாவுக்கரசு சுவாமிகள் தமது திருத்தாண்டகத்தில்,

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர்உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பாடாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பா ரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே."

என்று பாடுகின்றார்.

இவ்வுண்மையை உட்கொண்டு ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பா பாடிய அருளாளர்கள் ஒன்பது பேர். இதில் முதலில் இருப்பவர் திருவாவடுதுறை மடத்தில் கோயில் கொண்டுள்ள திருமாளிகைத் தேவர் இவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோயில் பதிகமாக நான்கு பதிகம் அருளியுள்ளார். இதில் முதற்பதிகம் மேற்கூறிய சித்தாந்தக் கருத்தை மூலமாகக் கொண்டுள்ளது பதினோரு பாடல்.

"தொண்டனேன் விளம்புமாவிளம்பே, பணியுமா பணியே,
கருதுமா கருதே, உரைக்குமாறுரையே,
நணுகுமா நணுகே, இசையுமாறிசையே,
நுகருமா நுகரே, புணருமா புணரே,
தொடருமா தொடரே, விரும்புமா விரும்பே,
நினையுமா நினையே."

என்ற முடிவுகளையுடைய திருப்பாடல்கள் மிக இனிமை யானவை.

"ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே"(6)

"நீறணி பவளக் குன்றமே நின்ற நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணிகொடியெம் மீசனே உன்னைத் தொண்டனேன் இசையு மாறிசையே."(6)

"தக்கன் நற் றலையும் எச்சன்வன்றலையும் தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்திருப் புருவம் நெறித்தரு ளியவுருத் திரனே
அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே எவர்க்குந் தொடர்வரியாயைத் தொண்டனேன் தொடருமா தொடரே."

என்ற முறையில் அம்பலக்கூத்தனைப் பாடிப் பரவுகிறார்.(9)

ஆன்மாக்கள் வினையினால் எண்ணில்லாத பிறப்புக்கள் எடுத்து நெடுங்காலம் உழல்கின்றன.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவரசங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேனெம்பெருமான்."

– என்பது திருவாசகம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"எழுகடல் மணலை அளவிடினதிகம்
எனதிடர்ப் பிறவி அவதாரம்." – என்பது திருப்புகழ்.

"மாதா வுடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்துவிட்டானே - நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோரன்னை
கருப்பையில் வாராமற் கா." – என்பதுபட்டினத்தார்பாடல்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்." – என்பது திருக்குறள் (10)

இதனால் பிறவி என்பது பெருங்கடல் என்று நூல்களில் கூறப்படும்.

பிறவிப்பெருங்கடலைநீந்துவது மிகப் பெரிய சாதனை நீந்திக்கரைசேரவிடாமல் உடன் பிறந்த மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் பகைவர்களாக இருந்து தடுத்து கெடுக்கிறார்கள். இந்தப்பகைவர்களை வென்று கரைசேருவதற்குத் துணையாக நின்று அஞ்சலென்று அருள்செய்பவர் பெரும்பற்றப்புலியூரில் திருவளர் திருச்சிற்றம்பலம் என்கிற கோயிலில் எழுந்தருளியுள்ளார். பாடல் வருமாறு,

கருவூர்த்தேவர் – திருவிசைப்பா

"இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால் அஞ்சலென் றருள் செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக் கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே."(2)

பூந்துருத்தி நம்பி காட நம்பி – திருவிசைப்பா

'அடியார்கள் அமருலகம் ஆளத் தேவரீர் முத்தீ வேள்வி வளர்க்கும் மூவாயிரவர்களுடன் திருச்சிற்றம்பலத்தில் மகிழ்ந்து கூத்தாடிக் குடி வாழ்க்கை கொண்டுள்ளீர் என்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டு நீ குலாவிக்கூத் தாடினையே."

உலகவாழ்வை மெய்யென்று நம்பி மனைமக்கள் சுற்றம் எனும் மாயாவலையைக் கடக்க அறியாது பாச பந்தத்தில் அழுந்தி வீணாகின்ற அஞ்ஞானிகள் தெருக்கூத்தைக் காண ஆசைப்படுவார்கள். திருவருள் வாழ்வே மெய்யென்று பாசபந்தத்தில் அழுந்தாது திருவருளையேச் சிந்திக்கின்ற மெய்ஞ்ஞானிகள் திருக்கூத்தைக்காண ஆசைப்படுவார்கள்.

கண்டராதித்தர் – திருவிசைப்பா

திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரத்தில்,

"பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்தி செய்கேன் என்னை நீ இகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடுகின்ற
அத்தாவுன் ஆடல்காண்பா னடியனேன் வந்த வாறே."

"பார்த்திருந்தடியனேனான் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே என்பனுன்னை மூவரில் முதல்வனென்பன்
ஏத்துவா ரிடர்கள் தீர்ப்பாய் தில்லைச்சிற்றம் பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூட நான் வந்தவாறே."

என்று பாடுகிறார்.

இந்தக் கருத்தில் கண்டராதித்தர் பாடுகிறார்.

"முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னோடு
ஒத்தேவாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடும் தென்றில்லை அம்பலத்துள்
அத்தா உன்றன் ஆடல்காண அணைவதும் என்று கொலோ?" (3)

என்பது அப்பாடல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாலியமுதனார் – திருவிசைப்பா

நடராசத்திருமேனி அற்புதமானது; அழகு பொங்கி வழிவது; கருத்தோடு கண்டவர் உள்ளத்தைக் கவர்வது; உள்ளத்தில் குடி கொண்டுவிடும்; இக்கருத்தில் பாடுகிறார் திருவாலியமுதனார்,

"மையல்மாதொரு கூறன் மால்விடை ஏறிமான்மறியேந்திய தடங்
கையன் கார்புரை யுங்கறைக் கண்டன் கனல் மழுவான்
ஐயன்ஆரழ லாடுவான் அணி நீர்வயல் தில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென் சிந்தையுள் ளிடங்கொண்டனவே."(1)

இவ்வகையில் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடல் உள்ளது.

"முடி கொண்ட மத்தமும் முக்கண்ணி னோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்த வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலுமென் பாவிநெஞ்சில்
குடிகொண்டவா தில்லை அம்பலக் கூத்தன் குரைகழலே".

திருவாதிரை விழாச் சிறப்பு

அம்பலக்கூத்தன் வருடம் ஆறு அபிடேகம் ஆடிக்கொள்வார். அதில் ஒன்று ஆதிரைநாள் திருவாதிரை விழா. மார்கழி மாதம் பௌர்ணமி நாளில் நிகழும் அபிஷேகக் காட்சியும் திருவீதியுலாக் காட்சியும் மிகச் சிறப்புடையது. காணக்கண் கோடி வேண்டும்.

மனிதர்கள் பெறவேண்டிய பயன் இரண்டு. ஒன்று சிவபெருமானுடைய அடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல், இரண்டு சிவபெருமானுடைய திருவிழாக் காட்சியைக் காணுதல்.

'இரண்டுமே மனிதர்கள் பெறுகின்ற பயன் என்பது உண்மையானால் என்பு வடிவாக இருக்கும் சடப்பொருளே. பெண்ணாக, பூம்பாவையாக வருவாயாக' என்று பாடினார் திருஞானசம்பந்த சுவாமிகள். சென்னை மயிலாப்பூரில் எலும்பு பன்னிரண்டு வயதுப் பெண்ணாக உயிர் பெற்று எழுந்தாள். பாடல் வருமாறு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மட்டிட்ட புன்னையங்கானல் மட மயிலை
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்."

"ஊர்திரை வேலையுலாவும் உயர் மயிலை
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சரமமர்ந்தான்
ஆதிரை நாள்காணாதே போதியோ பூம்பாவாய்."

சேக்கிழார் சுவாமிகள் பூம்பாவைப் பதிகத்தைத் தொகுத்து அருளிய பாடல்,

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதி சூடும்
அண்ணலாரடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டார் தல்
உண்மையா மெனில் உலகர்முன் வருகென உரைப்பார்."

இதனால் மார்கழித் திங்கள் திருவாதிரை விழாவை சேவிக்க மண்ணுலகத்தவர் மாத்திரமில்லை திருமால் முதலான தேவர்களும் வந்து தரிசனம் செய்து அம்பலவாணருடைய அருளைப் பெறுகிறார்கள் என்று திருப்பல்லாண்டு பாடுகிறார் சேந்தனார். பாடல் வருமாறு,

"ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முக னங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே."

என்பது அப்பாடல்.

திருமந்திரத்தில் திருக்கூத்து

சிவபெருமானின் எல்லையில்லாத கருணையினால் திருக்கயிலாயத்தில் இருந்த திருமூலதேவ நாயனார். திருவாவடுதுறையில் எழுந்தருளி அரசமரத்தின் கீழிலிருந்து மூவாயிரம் வருடம் சிவயோகத்திருந்து **'திருமந்திரம்'** என்னும் சிவஞானப் பெருநூலை அருளிச் செய்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருமூலர் தமிழ் நாட்டுக்கு வந்த காரணம், இருந்த தலம், இருந்த நிலை, செய்த செயல் ஆகியவற்றை நான்கு பாடல்களில் அருளிச் செய்துள்ளார்.

"மாலாங்க னேயிங்கு யான் வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே."

"நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள் சிவ னாவடு தண்டுறை
சீருடை யாள் பதம் சேர்ந்திருந்தேனே."

"சேர்ந்திருந் தேன் சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன் சிவ னாவடுதண்டுறை
சேர்ந்திருந் தேன் சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன் சிவ நாமங்கள் ஓதியே."

"பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன் றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன் றாகத் தமிழ்ச் செய்யுமாறே"

என்பது திருமந்திரம்.

திருமந்திரத்தில் 2722ம் பாடல் முதலாக 2803ம் பாடல் வரை ஆனந்ததாண்டவம் பற்றிப் பாடுகிறார். 81 பாடல். அதிற் சில பாடல் பற்றிப் பற்றுவோம்.

திருக்கூத்துத்தரிசனம், சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக்கூத்து என்று ஆறுவகையாக உள்ளது.

'பரமஞானிகளுக்கு எங்கும் சிதம்பரமாக இருக்கும் பரஞானத்தாற் பரத்தைதரிசித்தோர் பரமே பார்த்திருப்பர். பதார்த்தங்கள் பாரார்' என்ற சிவஞான சித்தியார் வாக்கியமும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

''பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானானந்தமே'' என்ற தாயுமான சுவாமிகள் திருவாக்கும் கூறியபடி,

''எங்குந் திருமேனி எங்கும் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாயிருத்தலா லெங்கெங்கும்
தங்கும் சிவனருட்டன் விளை யாட்டதே.''

''சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பதமா மந்தச் சுந்தரக் கூத்தனை
பொற்பதிக் கூத்தனை பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே.''

இப்பாடலில் சிவானந்தக்கூத்தன், சுந்தரக்கூத்தன், பொற்பதிக் கூத்தன், பொற்றில்லைக் கூத்தன், அற்புதக்கூத்தன் என்ற வாக்கியம் அழகாக உள்ளது.

அம்பலக் கூத்தன் ஆடும் இடம் ஆனந்தநிலையம், பாடல்கள் ஆனந்தம், வாத்தியம், ஆனந்தம், பாடலின் பொருள் ஆனந்தம், சராசரம் ஆனந்தமாக ஆனந்தக்கூத்து ஆடுகின்றான். பாடல் வருமாறு,

''ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்து கந்தானுக்கே.''

சிவபெருமான் சராசரம் எல்லாவற்றிலும் கலந்து இருப்பதால் அவர் ஆடினால் எல்லாம் ஆடும், எல்லாரும் ஆடுவர் என்பது உண்மை (இயங்குதல் – ஆடுதல்)

''வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் எழாடப்
பூதங்க ளாட புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானானந்தக் கூத்தே.''

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"தேவர் சுரர்நரர் சித்தர் வித்தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே."

"மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப்பாரே."

திருக்கூத்துக் கண்ட மெய்ஞ்ஞானிகள் நிலை

"விம்மும் வெருவும் விழுமெழும் மெய்சோரும்
தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்
செம்மை சிறந்த திருவம் பலக்கூத்துள்
அம்மலர் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே."

புளியைக் கண்டவர்களுக்கு நாவில் நீர் உண்டாகும் திருக்கூத்தைக் கண்டவர்களுக்குக் கண்ணில் நீர் உண்டாகும். உள்ளத்தில் அமுதம் ஊறும்; தேவலோகத்தில் உள்ள தேவர்களுக்கும் அதற்கு அப்பாலுள்ள தேவர்களும் பூமியில் உள்ள தேவர்களும் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற திருவடியைக் கண்டு சேவித்துச் சிவகதியைப் பெறுவார்கள் என்கிறார் திருமூலர். அப்பாடல்கள் வருமாறு,

"புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குளா னந்தத் தமுதூறும் உள்ளத்தே."

"அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
தெண்டிரை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டு சேவித்துக் கதி பெறு வார்களே." என்பதுதிருமந்திரம்

தத்துவம், சதாசிவம், சித்தம் – சிவசத்தி, சராசரம் வேதம் இவைகள் எல்லாம் இயங்கினால் உயிர்கள் வாழும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இல்லையேல், உயிர்கள் வாழாது, அதனால் சிவபெருமான் ஆனந்தக்கூத்து ஆடுகிறான்.

"தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக்கூத்தே."

உள்ளும் புறமும் ஒளியாய் விளங்கும் கூத்தனைக் கோமளக் கண்ணுடையவளாகிய சிவகாமசுந்தரி கண்டு பிரமவிஷ்ணு உருத்திரர்களாகிய மூவருக்கும் கூத்தப்பெருமானுடைய அருள் கிடைக்கும்படி அருள் நோக்கம் செய்து வேதங்களைப் பாடித் தோத்திரம் செய்கின்றாளாம்.

"தீத்திரட் சோதி திகழொளி யுள்ளொளி
கூத்தனைக் கண்ட அக்கோமளக் கண்ணினள்
மூர்த்திகள் மூவர் முதல்வ னிடைசெல்ல
பார்த்தனள் வேதங்கள் பாடினள் தானே."

பதினோராந் திருமுறையில் – திருக்கூத்து

பதினோராந் திருமுறையில் காரைக்காலம்மையார் கயிலாயத்திற்குத் தலையினால் நடந்து சென்று சிவபெருமான் 'அம்மையே' என்றழைக்கப்பெற்று 'உனக்கு என்ன வரம் வேணும் என்று கேட்க' நீங்காத இன்ப 1. அன்பு வேண்டும், 2. பிறவாமை வேண்டும், 3. மறவாமை வேண்டும், 4. தேவரீர் ஆடுகின்ற திருவடிக்கு கீழிருந்து நான் பாட வேண்டும் என்று வேண்டினார். பெரியபுராணத்தில்,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta.

"கூடுமா றருள் கொடுத்து குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழனமூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமுநீ கண் டானந்தம் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை என்றான் பரவுவார் பற்றாய் நின்றான்."

என்று சேக்கிழார் பாடுகின்றார்.

மூத்த திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

"கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழி வயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண் பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங்குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பனிடம் திரு ஆலங்காடே"

அற்புதத் திருவந்தாதி

"அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேருங் கடகம்
மறிந்தாடு கைபேரில் வான் திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு."
காரைக்காலம்மையார்

பதினோராந் திருமுறையில் பட்டினத்தார்

"ஆதரித்த மாலும் அறிந்திலனென்றஃதறிந்தே
காதலித்த நாயேற்கும் காட்டுமே - போதகத்தோல்
கம்பலத்தான் நீள்நாக கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி"

இந்தப்பாடலில் 'திருமால்காணாத திருவடியை எனக்குக் காட்டினான்' என்று பாடுகின்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அடியொன்று பாதலம் ஏழிற்கும் அப்புறம் பட்ட திப்பால்
முடியொன்றிவ் வண்டங்கள் எல்லாம் கடந்தது முற்றும் வெள்ளைப்
பொடியொன்று தோள் எட்டுத் திக்கின் புறத்தின பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச் சிற்றம்பலத் தான்தன் திருநடமே."

இந்தப் பாடலில் விஸ்வரூபதாண்டவேசுரர் திருவுருவம் கூறப்பட்டது.

"தெய்வ வேதியர் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
கடவுட் கண்ணுதல் நடமுயன்றெடுத்த
பாதப்போதும் பாய்புலிப் பட்டும்
மீதியாத் தசைத்த வெள்ளெயிற்றரவும்
சேயுயர் அகலத் தாயிரங்குடுமி
மணிகிடந்திமைக்கும் ஒரு பேராரமும்
அருள் பொதிந் தலர்ந்த திருவாய் மலரும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
கங்கை வழங்கும் திங்கள் வேணியும்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை அழுத்தியாங்கு
உள் மகிழ்துரைக்க உறுதவம் செய்தனன்
நான்முகன் பதத்தின் மேல்நிகழ் பதந்தான்
உறுதற் கரியதும் உண்டோ
பெறுதற்கரியதோர் பேறு பெற்றேற்கே."

இந்தப் பாடலில் தில்லைக்கூத்தன் திருமேனிச் சிறப்பைக் கண்டு உள்ளத்தில் பதித்து மகிழ்ந்து ஆனந்தமடைந்து பெருமிதம் எய்தி இதனால் தவம் செய்தேன். அதனால் நான்முகன் திருமால் முதலானோர் பதம் எனக்கு எளிது அரியது இல்லை, பெறுதற்கரிய பேறு பெற்று விட்டேன் என்று ஆனந்தமடைகின்றார். இதில் உருவத்திருமேனியின் சிறப்பும், அவசியமும், அதிலும் நடராசத் திருமேனியின் அற்புதக் கோலமும், அழகும் சிறப்பாகக் கூறப்படுகிறது. நடராசப்பெருமானை உள்ளத்தில் தியானிக்க முத்தியெளிதாகும். "சிந்திப்பரியன சிந்திப்பவர்க்கு சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன." என்பது அப்பர் திருவாக்கு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நம்பியாண்டார் நம்பிகள் கோயில் திருப்பண்ணியர்விருத்தம்

''அவநெறிக் கேவிழப் புக்கஇந் நான்அழுந் தாமைவாங்கித்
தவநெறிக் கேஇட்ட தத்தவ னேஅத் தவப் பயனாம்
சிவநெறிக் கேஎன்னை உய்ப்பவ னேசென னந்தொறுந் செய்
பவமறுத் தாள்வுதற் கோதில்லை நட்டம் பயில்கின்றதே.''

இப்பாடலில் ''தில்லையில் நட்டம் ஆடுவது ஆன்மாக்கள் செனனந்தோறும் செய்த பாவத்தை நீக்கி ஆண்டு கொள்வதற்காக அவநெறியில் செல்லவிடாமல் சிவநெறியில் உய்ப்பதற்காக'' என்கின்ற பொருள்சிறப்புடையது.

''புல்லறிவின் மற்றைத் தேவரும் பூம்புலி யூருள் நின்ற
அல்லெறி மாமதிக் கண்ணிய னைப்போல் அருளுவரே
கல்லெறிந் தானும் தன்வாய்நீர் கதிர்முடி மேல் உகுத்த
நல்லறி வாளனும் மீளா வழி சென்று நண்ணினரே.''

இப்பாடல் ''அற்பமதியுடைய மற்றத்தேவர்கள் புலியூரில் ஆடுகின்ற சிவபெருமானைப்போல அருள் செய்வார்களா, செய்யமாட்டார்கள். சாக்கிய நாயனார் கல்லால் எறிந்தார், கண்ணப்பர் வாயில் கொண்டு வந்த எச்சில் நீரினால் சிவன் முடியில் அபிஷேகம் செய்தார் இருவரும் செய்த செயல் மிக்க அபசாரம் அனாசாரம். ஆனால் அவர்களுக்கு மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல் சிவலோக வாழ்வைத் தந்தருளினார். சிவபெருமான் மீது அளவுபடாத அன்புடன் இருவரும் செய்தார்கள். அளவில்லாத அருளை வழங்கினார். அபசாரம் செய்தவர்களுக்கும் அருள் வழங்கும் பரம்பொருள் தில்லைக்கூத்தன்'' என்பது இப்பாடலில் தெளிவாகின்றது.

பன்னிரண்டாந்திருமுறையில் திருக்கூத்து

பன்னிரண்டாந் திருமுறையான பெரியபுராணம் திருத் தொண்டர் புராணம் என்று புகழ் பெற்றது. தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும் நடராசப் பெருமான் தமது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாக்கினால் 'உலகெலாம்' என்று முதல் கொடுக்க அந்த வாக்கியத்தை மூலதனமாக வைத்துச் சேக்கிழார் பெருமான் நாலாயிரத்து இருநூற்று ஐம்பத்துமூன்று(4253) பாடலாகச் சிதம்பரத்தில் இருந்து பாடி முடித்து சிதம்பரத்திலேயே அரங்கேற்றம் செய்யப்பட்டது. பெரிய புராணத்தில் தில்லைக் கூத்தனைப் பற்றிப் பல பாடல்கள் உள்ளன. தில்லையில் சேக்கிழாருக்கு எல்லையில்லாத அன்பு. முதற் பாடல்,

"உலகெ லா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்." (பெ.பு.-1)

உலகெலாம் என்பது பசு – பாசம். "பசு என்கின்ற ஆன்மாவை அறிகின்ற பசுஞானத்தாலும், பாசம் என்கின்ற உலகத்தை அறிகின்ற பாச ஞானத்தாலும் அறிய முடியாதவன் சிவபெருமான். அதாவது பசு பாச ஞானம் உடையவர்களால் ஓதற்கரியவன்" என்பது முதல்வரியின் பொருள்.

இரண்டாவது அடியில் அளவில்லாத கருணையும் அளவில்லாத ஆற்றலும் கூறப்படுகிறது. "தேய்ந்து அழிந்து போகிற நிலையில் இருந்த சந்திரனைத் திருமுடியில் வைத்துக் காப்பாற்றியபடியால் அளவில்லாத கருணையும் ஆயிரமுகத் தனளாகி வையகம் நெளியும் படியாக வந்த கங்கையை அறுகம்புல் நுனியில் பனிநீர் தங்கியது போல் தாங்கியபடியால் அளவில்லாத ஆற்றலும் தெற்றென விளங்குகிறது."

மூன்றாவது அடியில் "அளவில்லாத சோதிருபமாக அருவமாக அகளமாய் யாரும் அறிவதற்கு அரிதாய் உள்ள பொருள் கற்பனை கடந்த சோதி தானே எளிமையாக எல்லாரும் காணும் படியாக அம்பலத்தில் ஆனந்ததாண்டவம் புரிகிறது."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேற்கூறிய வசனங்களால் பசுஞான பாசஞான முடையவர்கள் மனம் வாக்குக்கு நினைத்தற்கும் ஓதுதற்கும் அரிய பொருளாய் அளவில் கருணையும், அளவில் ஆற்றலும் உடையதாய், அளவில் சோதியுமாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் கண்டு வழிபட்டு உய்யும் பொருட்டாக வெளியில் அம்பலத்தில் திருக்கூத்தாடுகிறார். மலரும் சிலம்பும் அணிந்த திருவடிக்கமலத்தை வாழ்த்தி வணங்குவாம்.

வாயினால் வாழ்த்தி தலையினால் வணங்கி மனத்தால் தியானிப்போமாக என்பதும் உலகம், நீர், சோதி, ஆடுதல், அம்பலம் ஆகிய ஐந்து சொற்களும் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களையும் உணர்த்தி, சோதியன் அம்பலத்தாடுவான் என்பதனால் அருவமும் அருவுருவமும் உருவமும் உணர்த்தி நம்மை வழிபடச் செய்கிறது ''உலகெலாம்'' என்ற பாடல்.

பிரமாணப்பாடல்கள் வருமாறு :

சிவப்பிரகாசம்

''பாசமா ஞானத்தாலும் படர்பசுஞானத் தாலும்
ஈசனை உணர வொண்ணா திறை அருள் ஞானம் நண்ணித்
தேசுறும் அதனால் முன்னைச் சிற்றறிவொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர்பரத்து நிற்பது ஞான நிட்டை''

மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி

''பாரறியு மறிவினுமிப் பார்மேனின்ற
பசுஞானத் தானு மெட்டிப் பார்க்கொணாத
பேரறிவே சிற்றறிவேற்கிருளை நீக்கும்
பேரொளியே யங்கயற்கண்பிரியா தானே.
யாரறிவார் தமிழருமை யென்கின்றேனென்
அறிவீன மன்றோவுன் மதுரை மூதூர்
நீரறியும் நெருப்பறியும் அறிவுண் டாக்கி
நீயறிவித்தா லறிவும் நிலமுந் தானே''

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கந்தபுராணம் சந்திரசாபப்படலம்

"தீர்ந்தன அன்றியே திங்கள் தன்னிடை
ஆர்ந்திடு கலையினை அங்கையாற் கொளா
வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினான்
சாந்தில தவ்வழித் தக்கன் சாபமே."

"மேக்குயர் தலைவராம் விண்ணு ளோர்கள்பால்
தாக்குறு வினையையும் சாபம் யாவையும்
நீக்கிய தலைவன் இந் நிலவின் சாபத்தைப்
போக்கினன் என்பது புகழின் பாலதோ."

"நெற்றியங் கண்ணுடை நிமலத் தெம்பிரான்
உற்றவர்க் கருள் புரி கின்ற உண்மையைத்
தெற்றென உணர்த்தல் போல் திங்களின் கலை
கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே."

திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்

"மையறு மனத்த னாய பகீரதன் வரங்கள் வேண்ட
ஐயமில் அமர ரேத்த ஆயிர முகத்த ளாகி
வையகம் நெளியப் பாய்வான் வந்திழி கங்கை யென்னும்
தையலைச் சடையிலேற்றார் சாய்க்காடு மேவினாரே."

திருநாவுக்கரசுசுவாமிகள்

"காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத் திருந்தவனும் காணா வண்ணம்
சீரொளியதழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந்தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகும் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப்புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாணிக்கவாசகசுவாமிகள் – திருவாசகம் – திருச்சாழல்

"மலைமகளையொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயும்மது என்னேடி
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலனேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ."

திருநாவுக்கரசு சுவாமிகள்

"காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத் திருந்தவனும் காணா வண்ணம்
சீரொளியதழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந்தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகும் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப்புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

பெரியபுராணம் – தில்லைவாழந்தணர் புராணம்

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாய்ச்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி."(1)

"ஆதியா நடுவு மாகி அளவிலா அளவு மாகி
சோதியா யுணர்வு மாகி தோன்றிய பொருளுமாகிப்
பேதியா யேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி."(2)

வேதத்தின் முதலில் நடுவில் கடைசியில் அன்பர்கள் இதயகமலத்திலும் விளங்கியிருப்பது திருச்சிற்றம்பலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருச்சிற்றம்பலம் வணங்கவருகின்ற வேளையில் திருச்சிற்றம்பலத்தின் சிறப்பையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பத்தி நிலைமையும் சிறப்பாகப் பாடுகிறார் சேக்கிழார். பாடல்கள் வருமாறு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகை மின்
பிறங்குபே ரம்பலம் மேரு
வருமுறை வலங்கொண்டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில்
அன்பர்தஞ் சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலமுன்
திரு அணுக்கன் திருவாயில்." – பெ.பு.த.கொ.பு.-104

"வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின்றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்த அன் புந்தச்
செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்தெழுந்தான்
திருக்களிற்றுப்படி மருங்கு." – பெ.பு.த.கொ.பு.-105

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்தின் மூழ்கி
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்." – பெ.பு.த.கொ.பு.-106

திருநீலகண்டநாயனார் புராணத்தில் முதற்பாடல் அழகாக அமைந்துள்ளது. "சிவகாமசுந்தரியை நோக்கும் நிலையில் நிலைபெற்ற சிற்றம்பலத்தில் முதலும் முடிவுமில்லாத அற்புதத் தனிக்கூத்தாடும் நாதனார் சிவபெருமான் அவருடைய திருவடியை வாழ்த்தி வழிபடு நலமுடையவர் திருநீலகண்டநாயனார்" என்கிறார் சேக்கிழார் சுவாமிகள். பாடல் வருமாறு, பெ.பு.திரு.நீ.நா.பு.-1

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற்றம்ப லத்தே
ஆதியும் முடிவு மில்லா அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்."

திருநாவுக்கரசு சுவாமிகள் அமுதத்திருநடம் கண்டபோது அவர் இருந்த ஆனந்த நிலையைப் பாடுகிறார் சேக்கிழார் பாடல் வருமாறு, பெ.பு.திரு.நீ.நா.பு.-167.

"கையுந் தலைமிசை புனை அஞ்சலியன
கண்ணும்பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களும் உடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்
மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும்பிடும் அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்." என்பது அப்பாடல்

திருமூலதேவநாயனார் அம்பலத்தைக் கும்பிட்ட நிலையைப் பாடுகின்றார் சேக்கிழார். பாடல்கள் வருமாறு,

"நற்பதி அங்கமர்யோக முனிவர்களை நயந்து போய்
கற்புரிசைத் திருவதிகை கலந்திறைஞ்சிக்கறைக்கண்டர்
அற்புதக்கூத்தாடுகின்ற அம்பலஞ்சூழ் திருவீதிப்
பொற்பதியாம் பெரும்பற்றப் புலியூரில் வந்தணைந்தார்." (6)

எவ்வுலகும் உய்யஎடுத்தருளியசே வடியாரைச்
செவ்விய அன் புறவணங்கிச் சிந்தைகளிவரத்திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண் வரும் ஆனந்தக் கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டங்காராமை அமர்ந்திருந்தார். (7)

ஆனந்தநடனம் செய்யும் சிவபெருமான் திருவடியில் சிலம்பு அணிந்திருப்பார். அந்தச்சிலம்பு எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும். அந்த ஒலி பரநாதஒலி என்று சொல்லப்படும். சிவயோகிகளுக்குச் சிலம்பொலி கேட்கும். சிவராஜயோகிகள் சுழுமுனை நாடியின் முனையில் என்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிறைந்திருக்கின்ற பரவிந்து என்னும் சிலம்பிலிருந்து எழும் பரநாதமாகிய ஓசை மெய்யடியார் பிறவித் துன்பத்தை நீக்கும் அந்த ஒலியின் வழியே சென்று அந்த ஒலி எதிர்ப்படுமிடத்தில் சமாதி கூடிப் பரமானந்தத் திருக்கூத்தைச் செய்யும் மகாருத்திர தாண்டவேசுவரரைத் தெரிசித்துக் தொழு வார்கள். சிலம்பொலி திருவாசகத்தில் மூன்று இடங்களில் வருகிறது.

"வாதவூரினில் வந்தினிதருளி
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்."

என்று கீர்த்தித் திருவகவலிலும் ,

"சீரார் திருவடித்திண் சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழ
தேரார்ந்த வீதி பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ."

என்று திருப்பூவல்லியிலும்

"குலம்பாடி கொக்கிறகும் பாடிகோல் வளையாள்
நலம்பாடி நஞ்சுண்டவா பாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ."

என்று திருத்தெள்ளேணத்திலும் அருளிச்செய்துள்ளார்.

சிவஞானம் பெற்ற, பெறத் தகுதியுள்ள சிவயோகி களுக்குச் சிலம்பொலி கேட்கும். சரியை கிரியை முற்றிச் சிவயோகத்தில் உறைத்து நிற்கின்ற நிலை சிவனருளால் கூடிப்பயிலுகின்ற சிவயோகிகள் உலக மக்கள் விரும்புகின்ற ஒலிக்கின்ற வெற்றொலியை விரும்பமாட்டார்கள். அம்பலவாணருடைய திருவடியை விரும்பும் சிவயோகிகள் திருவடியில் ஒலிக்கின்ற சிலம்பொலியை விரும்புவார்கள். தகுதியுள்ள யோகிகளுக்குச் சிலம்பொலியைச் சிவபெருமான் வழங்குகிறார். அவ்வொலியைக் கேட்கும் பாக்கிய முடையவர்கள் சிவஞானத்தைப் பொருந்துவார்கள். சிவஞானம் பொருந்திய பாக்கியவான்கள் சிவத்தோடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்துவிதமாக கலந்து பேரின்ப வெள்ளத்தில் திளைப்பார்கள். சிலம்பொலியை மாணிக்க வாசகருக்கு அவதாரம் செய்த அவர் திருவாதவூரில் கேட்கும் படி அருளியுள்ளார்.

சிலம்பொலி கேட்கத் தகுதி

பகைவர்களை வென்று அரண்மனைக்குச் செல்லும் அரசகுமாரனை மங்கல வாத்தியங்களுடன் வரவேற்பது போல், கருவி கரணங்களாகிய சத்துருக்களை வென்று, சிவராசதானிக்குச் செல்லுகின்ற சிவகுமாரர்களாகிய சிவயோகிகளுக்குப் பரநாத ஒலியாகிய சிலம்பொலி காட்டி அழைத்தருளுவார் சிவபெருமான். அகப்பகை புறப்பகையை வென்றவர்கள் சிவயோகத்துக்குத் தகுதியுடையவர் களாவார்கள்.

பகையை வெல்லாதவர்கள் சிவயோகத்துக்கு யோக்கியர்களாக முடியாது. இவ்வாறு ஐம்புல வேடர்களாகிய பகைவர்களை வென்று, சிவராஜயோகியாகிய சேரமான் பெருமாள், தினந்தோறும் ''பெரும்புலர் காலை மூழ்கி பித்தர்க்குப் பத்தராகி அரும்பொடு மலர் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து விரும்பு நல்விளக்குத் தூபம் விதியினால் இட்டு'' சிவபூசை செய்வார். அவருக்குப் பூசை முடிவில் சிவபெருமான் சிலம்பொலியை கேட்பித் தருளுவார்.

இதற்குப் பிரமாணம் பெரியபுராணத்தில் கூறப் படுகிறது. பாடல் வருமாறு,

"உலகு புரக்கும் கொடை வளவர் உரிமைச் செழியர் உடன்கூட
நிலவு பெருமுக் கோக்களாய் நீதி மனுநூல் நெறிநடத்தி
அலகில் அரசர் திறைகொணர மலருந் திருநீற் றொளிவளர
அகத்தும் புறத்தும் பகையறுத்து மறைகள் வளர மண்ணளிப்பார்."

"நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே எனத்தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமம் சாந்தம் மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம் முதலா யினவுந் திருவமுதும்
ஈசர்க் கேற்ற பரிசினால் அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலியளித்தார்."

இவ்வாறு திருச்சிலம்போசை ஒலிவழியே சென்று கூத்தப் பெருமானைக் கும்பிட்டு மகிழ்வார்.

திருவுந்தியார் என்கின்ற ஞான சாத்திரத்தில்,

"திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற."

என்றும் திருக்களிற்றுப்படியாரில்,

"ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசை வழியே சென்றொத் தொடுங்கில் – ஓசையினில்
அந்தத்தா னத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து" என்றும் அருளப்பட்டது.

இப்படிப் பலநாள் பூசை முடிவில் திருச்சிலம்பின் ஒலியைக் கேட்டு மகிழ்ந்தார் சேரமான் பெருமாள். ஒருநாள் சிலம்பின் ஒலி கேட்கவில்லை. அதனால் மிகவும் வருந்தி பூசையைக் கடிது முடித்து அடியேன் என்ன பிழை செய்தேனோ என்று சலித்து, இந்த உடம்பால் வேறு இன்பம் என்ன அடையப் போகிறோம் சிலம்பொலி கேட்கப் பாக்கியமில்லாத இந்த உடம்பை ஒழிப்பதே சரியென்று உடைவாளை எடுத்து மார்பில் நாட்ட உடனே அம்பலவாணர் மிக அதிகமான சிலம்பொலியைக் கேட்கும்படி செய்தருளினார்.

சேரமான்பெருமாள் மகிழ்ந்து 'பெருமானே சிலம்பொலியைத் தாமதித்து அருளியது ஏன்? என்ன; சிவபெருமான் 'அன்பனே! தில்லைச் சிற்றம்பலத்திலே சுந்தரன் பாடினான். அப்பாடலைக் கேட்டுக் கொண்டிருந் தோம். அதனால் தாமதமாகியது' என்றருளிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளை நினைக்க வைத்தார் என்பது பெரியபுராணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"பூசை கடிதுமுடித் தடியேன் என்னோ பிழைத்த தெனப்பொருமி
ஆசை உடம்பால் மற்றினிவே றடையும் இன்பம் யாதென்று
தேசின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார் பினில்நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசை மிகவும் இசைப்பித்தார்."

"ஆடற் சிலம்பின் ஒலிகேளே உடைவாள் அகற்றி அங்கைமலர்
கூடத் தலைமேற் குவித்தருளிக் கொண்டு விழுந்து தொழுதெழுந்து
நீடப் பரவி மொழிகின்றார் நெடுமால் பிரமன் அருமறைமுன்
தேடற் கரியாய் திருவருள்முன் செய்யா தொழிந்த தென்என்றார்."

"என்ற பொழுதில் இறைவர்தாம் எதிர்நின் றருளா தெழும்ஒலியால்
மன்றி னிடைநம் கூத்தாடல் வந்து வணங்கி வன்றொண்டன்
ஒன்றும் உணர்வால் நமைப் போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத் தாழ்த்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார்."

"என்னே அடியார்க் கிவர் அருளும் கருணை இருந்த வாறென்று
பொன்னேர் சடையார் திருநடஞ் செய் புலியூர்ப் பொன்னம் பலம்இறைஞ்சி
தன்னேரில்லா வன்றொண்டர் தமையுங் காண்பன் எனவிரும்பி
நன்னீர் நாட்டுச் செலநயந்தார் நாமச் சேரர் கோமானார்."

"அளவில் இன்பப் பெருங்கூத்தர் ஆட எடுத்த கழல்காட்ட
உளமும் புலனும் ஒருவழிச்சென் றுருகப் போற்றி உய்கின்றார்
களனில் விடம்வைத் தளித்தஅமு தன்றி மன்றில் கழல்வைத்து
வளருந் திருக்கூத் தமுதுலகுக்களித்த கருணை வழுத்தினார்."

"என்றும் மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்றுளா ரடியா ரவர்வான் புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்."

திருச்சிற்றம்பலத்தில் தொடங்கி திருச்சிற்றம்பலத்தில் முடிவு பெறுகிறது பெரியபுராணம் இவ்வாறு பன்னிரு திருமுறைகள் ஆனந்தக் கூத்தராகிய சிவபெருமானையும் அவர் ஆடுகின்ற திருச்சிற்றம்பலத்தையும் பலபாடல்களில் புகழ்ந்து போற்றுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவிளையாடற் புராணத்தில் திருக்கூத்து (இரசிதசபை)

திருவிளையாடற் புராணம் என்பது திருவாலவாய் என்கின்ற மதுரைப் பகுதியில் சிவபெருமான் செய்தருளிய 64 திருவிளையாடலைப் பற்றிப் பாடப்பட்ட அருள் நூலாகும். பரஞ்சோதி மாமுனிவர் பாடியது. இதில் மீனாக்ஷி திருமணப்படலம் விசேடமானது. இதில் சிவபெருமான் திருக்கைலாயத்தில் இருந்து தேவர்களும் சிவகணங்களும் முனிவர்களும் சூழ மதுரைக்கு எழுந்தருளுகிறார்.

சிவபெருமானோடு வருகின்ற முக்கியமான முனிவர்களை ஒருபாடலில் தொகுத்துக் கூறுகிறார். பரஞ்சோதி முனிவர் அப்பாடலில் முதலில் கூறப்படுகின்ற முனிவர்கள் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த தாண்டவம் கண்டருளிய வியாக்கிரபாதர் பதஞ்சலி ஆகிய இரண்டு முனிவர்களை முதலில் அறிவிக்கிறார். பாடல் வருமாறு,

"கையுங் கால்களும் கண்பெற்றுக் கதிபெற்ற கடும்புலி முனிச் செல்வன்
பையரா முடிப்பதஞ் சலிபாற் கடல் பருகி மாதவன் சென்னி
செய்யதாள் வைத்த சிறுமுனி குறுமுனி சிவமுணர் சனகாதி
மெய்யுணர்ச்சியோர் வாமதேவன் சுகன் வியாதன் நாரதன் மன்னோ."

இப்படிப்பட்ட முனிவர்கள் சிவபெருமான் திருமணத்திற்குச் சென்றார்கள். சிவராசதானியாகிய மதுரைப் பகுதியில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் திருமணவிழா மிகச்சிறப்பாக நிகழ்ந்தது. திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் கண்ணாரமுதமாய் நின்ற மீனாக்ஷி சுந்தரேஸ்வரரைக் கண்டு ஆனந்தம் பெற்றார்கள். திருவமுது உண்டு ஆனந்தம் பெற்றார்கள். பதஞ்சலி வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் திருவமுது உண்ணவில்லை. சிவபெருமான் 'நீங்கள் ஏன் திருவமுது உண்ணவில்லை' என்றார். அதற்கு 'அடியேங்கள் தாண்டவ தரிசனம் செய்யாமல் அமுது உண்பதில்லை, இது எங்களுடைய நியமமென்றார்கள். சுவாமி மகிழ்ந்து அவர்களுக்கு நடனக்காட்சியை வழங்கினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அது வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியபடலம் என்று திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டது.

தாண்டவக் காட்சியை விரும்பிய முனிவர்களுக்குச் சிவபெருமான் தலவிசேடம் அருளிச் செய்தார்.

அது எப்படியென்னில், திருவாரூர்–மூலாதாரம், திருவானைக்கா–சுவாதிட்டானம், திருவண்ணாமலை–மணிபூரகம், சிதம்பரம்–அனாகதம், திருக்காளத்தி–விசுத்தி, காசி–ஆக்ஞை, கயிலை–பிரமரந்திரம், மதுரை–துவாதசாந்தம் ஆகையால் மதுரைப்பதி அதிகமென்று அருளிக் கோயிலுக்கு எழுந்தருளினார். உடனே வெள்ளிமலை என்கிற கயிலாயமோ, வெள்ளை விடையாகிய இடபம் உருமாறி வந்ததோ, சந்திர மண்டலமோ என்று எண்ணும் படியாக, விமானத்திற்குக் கிழக்கில் வெள்ளியம்பலம் தோன்றியது. பாற்கடலில் சூரியன் உதித்தாற்போல வெள்ளியம்பலத்தில் மாணிக்கப் பீடம் உண்டாகியது. அது அன்பர்கள் உள்ளமோ, அல்லது வேதத்தின் சென்னியோ என்று எண்ணும்படியாக விளங்கியது. அதில் கோடி சூரியர் உதித்தாற் போல எல்லாங் கடந்த ஞானப்பேரொளி வடிவமாகிய சிவபெருமான் தோன்றினார்.

பூதகணங்கள் மொந்தை தண்ணுமை என்கிற வாத்தியத்தை முழக்கினார்கள். திருநந்திதேவர் முழவம் முழக்கினார். நாரணன் இடக்கை வாசித்தார். கந்தர்வ நூலின் படி அச்சுவதரன் கம்பளதரன் இருவர் பாடினார்கள். வானதுந்துபி ஐந்தும், கடல்போல் முழங்கியது. வெண்டாமரை மகளாகிய சரஸ்வதி சுருதி கூட்டினாள். சதுர்முகனாகிய பிரமர், சாமகீதத்தை யாழில் தடவிப் பாடினார். சந்திரனை மொய்த்துள்ள நக்ஷத்திரங்களைப் போலத் தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

கறுத்த நிறமும் சிவந்த முடியும் குறுகிய வடிவமும் உடைய முயலகன் முதுகில் வலது திருவடியை ஊன்றினார் அது கருங்கடலில் சூரியன் உதித்தது போல இருந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செந்தாமரைப் போது குவித்தாற் போல இடது திருவடியை எடுத்தருளித் திசைகளைக் கடந்துள்ள பத்துத் திருக்கரங்களும், அதில் திண்மையுள்ள படைகளும், தெய்வப் பெண்களின் மாங்கல்யத்தைக் காத்தருளிய நீலகண்டமும், சங்கக் குழையணிந்த திருச்செவியும், சிவந்த சடையும், திருநீற்றொளியும், சூரிய சந்திர அக்கினியாகிய மூன்று கண்களும் நாகக் கச்சும், மார்பில் பன்றிக் கொம்பும் விளங்க, மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகளாகிய சிவகாமவல்லி கண்டு நின்று மகிழவும், அவள் மேல் வைத்த பார்வையும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் தோன்ற, முடியில் கங்கை அலம்புகின்ற ஓசையும், கொன்றை மாலையில் வண்டுகள் பாடும் ஓசையும், மங்கல முழவின் ஓசையும், வேதாகம மந்திர ஓசையும், சிவந்த திருக்கரத்தில் எரியும் அங்கியின் ஓசையும், திருவடியில் சிலம்பின் ஓசையும், எத்திசையினும் நிரம்பி அன்பர்கள் செவியில் அமுதம் ஊறவும் அமல மூர்த்தியாகிய சிவபெருமான் ஆனந்த தாண்டவம் ஆடினார்.

பதஞ்சலி வியாக்கிர பாதரிருவரும் முடிமேல் அஞ்சலி கூப்பி ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள். திருவடியில் வீழ்ந்தார்கள். ஆயிரம் வேதங்களை நாவாரப் பாடினார்கள். அன்பு வளர்ந்தது; தாண்டவம் காண்பதை நியமமாகக் கொண்ட இருமுனிவர்களும் அடைந்த ஆனந்தம் சொல்லி முடியாது.

“இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரமியம்பினர் ஒருபால், துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால், தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்” என்கிற மாணிக்க வாசகர் திருவாசகப்படி விளங்கியது.

முனிவர்கள், கந்தருவர், தேவர்கள், அசுரர்கள், சிவயோகிகள், கிம்புருடர், புலவர்கள் எல்லாருங்கண்டு ஆனந்தமடைந்தார்கள். திருமணங் காண வந்த மனிதர்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கண்டார்கள். நல்லார் இருவராகிய பதஞ்சலி வியாக்கிர பாதர் மூலம் எல்லாருக்கும் ஆனந்த தாண்டவம் காணும் பேறு கிடைத்தது.

ஆதிசேடராகிய பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும். சிவபெருமான் அருளிய பெருங்கருணைப் பெற்றி நோக்கி சிவானந்தத்தேனை உண்டு மனங்கரைந்து நாதனைப் பாடினார்கள். சிவபெருமான் மகிழ்ந்து 'உங்களுக்கு என்னவரம் வேணும்' என்றருள 'இம்மன்றிலே எப்போதும் இந்தத்திருக் கூத்தைச் செய்தருள வேணும் இந்த நாடகத்தை கண்டவர்கள் உயர்ந்த கதியைப் பெறவேணும்' என்று வேண்டினார்கள். சுவாமி 'அப்படியே தந்தோமெ'ன்றருளிச் செய்தார். தந்தோம் என்று ஆடியருளினார்.

திருவிளையாடற்புராணம்

"பொன்னவிர் கமலம் பூத்த புனிதநீ ராடித் தத்த
நன்னெறி நியம முற்றி நண்ணி னார்புலிக்கா லோனும்
பன்னக முனியுந்தாழ்ந்து பரவியம் பலத்துளாடு
நின்னரு ணடங்கண்டுண்ப தடியேங்க ணியம மென்றார்."

"தன்னரு ளதனானீத்த தன்னையே தேடிப் போந்த
மின்னவிர் கயிலை தானோ விடையுரு மாறிமன்றாய்
மன்னிய தேயோதிங்கண் மண்டல மேயோ வென்ன
பொன்னவிர் விமானக் கீழ்பால் வெள்ளியம் பொது வுண்டாக."

"மின்பயில் பரிதிப்புத்தேள் பாற்கடல் விளங்கியாங்கு
பின்பதன் மிசை மாணிக்கப் பீடிகை தோன்றிற் றன்ன
தன்பர்த முளமே யாகு மல்லது வேதச் சென்னி
யென்பதா மஃதே யன்றி யாதென விசைக்கற் பாற்றே."

"அன்னதோர் தவிசி னும்ப ராயிரங் கரத்தா லள்ளித்
துன்னிருள் விழுங்குங் கோடி சூரிய ரொரு காலத்து
மன்னின ருதித்தா லொப்ப மனமொழி பக்கங் கீழ்மேற்
பின்முதல் கடந்த ஞானப் பேரொளி வடிவாய்த் தோன்றி."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"முந்துறு கணங்கள் மொந்தை தண்ணுமை முழக்கஞ் செய்ய
நந்திமா முழவந் தாக்க நாரண னிடக்கை யார்ப்ப
வந்து கந்திருவ நூலின் மரபுளி யிருவர் பாட
வைந்துதுந் துபியுங் கல்லென் றார்கலி முழக்கங் காட்ட."

"மதுமுகத் தலர்ந்த வெண்டா மரைமகள் சுருதி கூட்டச்
சதுமுகத் தொருவன் சாம கீதயாழ் தடவிப் பாட
விதுமுகத் தருகு மொய்க்கு மீனென ஞான வெள்ளி
பொதுமுகத் தமரர் தூற்றும் பூமழை யெங்கும் போர்ப்ப."

"பொருங்கட னிறத்த செந்தீப் பொங்குவளைத் குறளன் மீது
பெருங்கடல் வடவைச் செங்கண் பிதுங்கமேற் றிரிந்து நோக்கி
முருங்கட லெரியிற் சீற முதுகிற வலத்தா ளூன்றி
கருங்கடன் முளைத்த வெய்யோன் காட்சியிற் பொலிந்து நின்று."

"கொய்யுஞ் செங்கமலப் போது குவித்தென வெடுத்துக் கூத்துச்
செய்யும் புண்டரிகத் தாளும் திசைகடந் துளவீ ரைந்து
கையுந்திண் படையுந் தெய்வ மகளிர்மங் கலநாண் காத்த
மையுண்ட மிடறுஞ் சங்க வார்குழை நுழைத்த காதும்."

"செக்கரஞ் சடையுந் தேசார் வெண்டிரு நீறுந் தெய்வ
முக்கணு முரகக் கச்சும் முள்ளெயி றிமைக்கு மார்பும்
மைக்கருங் கயற்க ணங்கை வல்லியி னொதுங்கி நிற்கும்
பக்கமு மவண்மேல் வைத்த பார்வையு நகையுந் தோன்ற."

"கங்கையா றலம்பு மோசை கடுக்கைவண் டிரங்கு மோசை
மங்கல முழவி னோசை மந்திர வேத வோசை
செங்கையா டெரியி னோசை திருவடிச் சிலம்பி னோசை
எங்கணு நிரம்பி யன்ப ரிருசெவிக் கமுத மூற்ற."

"ஆடினா னமல மூர்த்தி யஞ்சலி முகிழ்த்துச் சென்னி
சூடினா ரடியில் வீழ்ந்தார் சுருதியா யிரநா வாரப்
பாடினார் பரமானந்தப் பரவையிற் படிந்தா ரன்பு
நீடினார் நிருத்தா னந்தம் காண்பது நியமம் பூண்டார்."

Center for Shaiva Studies; Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"முனிவர்கந் திருவர் வானோர் தானவர் மோன யோகர்
புனிதர்கிம் புருட ராதிப் புலவரு மிறைஞ்சி யன்பின்
கனிதரு மின்பத் தாழ்ந்தார் திருமணங் காண வந்த
மனிதருங் காணப் பெற்றார் மாதவர் பொருட்டான் மன்னோ."

"அனந்தனா முனிவர் வேந்த னளவி லானந்த மூறி
மனந்தனி னிரம்பி மேலு வழிவது போல மார்பம்
புனைந்தபுண் ணியவெண் ணீறு கரைந்திடப் பொழி கண்ணீரு
ணனைந்திரு கரமுங் கூப்பி நாதனைப் பாடு கின்றான்."

"பராபர முதலே போற்றி பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய் நின்றதற் பரனே போற்றி
கராசல வுரியாய் போற்றி கனகவம் பலத்து ளாடு
நிராமய பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி."

"ஒன்றாகி யைந்தா யையைந் துருவாகி வருவாய் போற்றி
யின்றாகிச் சென்ற நாளா யெந்திர்நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீய தாகி நடுவாகி முடிவாய் மன்று
ணின்றாடு பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி."

"அடியரேம் பொருட்டு வெள்ளி யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி
நெடியநற் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி."

"என்றுநின் றேத்தினான் பின் னிருவரை நோக்கி வெள்ளி
மன்றுணின் றாடா நின்ற மறைமுதல் கருணை கூர்ந்து
நன்றுநீ வேட்ட தென்னென் றருள் செயநாதன் பாதம்
துன்றுமெய் யன்பிற் றாழ்ந்து தொழுதுநின் றிதனைச் சொல்வார்."

"எந்தையித் திருக்கூத் தென்று மிந்நிலை நின்றி யார்க்கும்
பந்தவெம் பாச நீங்கப் பரித்தருள் செய்தி யென்னச்
செந்தமிழ்க் கன்னி நாடு செய்தமா தவப்பே றெய்தத்
தந்தன மென்றான் வேதந் தலைதடு மாற நின்றான்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அராமுனி யீது வேண்டு மாதியெம் பெரும விந்த
நிராமய பரமா னந்த நிருத்தநேர் கண்டோ ரெல்லாம்
தராதல மிசைவந் தெய்தாத் தனிக்கதி பெறுதல் வேண்டும்
பராபர வென்று தாழ்ந்தான் பகவனு மதற்கு நேர்ந்தான்."

"ஆர்த்தனர் கணத்தோர் கைகோத் தாடின ரலர்பூ மாரி
தூர்த்தனர் விண்ணோர் கண்ணீர் துளும்பினர் முனிவ ராகம்
போர்த்தனர் புளக மன்பிற் புதைந்தனர் விழுங்கு வார்போற்
பார்த்தனர் புல்லிக் கொண்டார் பரவியவ் விருவர் தம்மை."

"அனித்தமாகிய பூதமைம் பொறி புலனாதி யாறா றாகி
யினித்த மாயையோ டிருவினைத் தொடக்கினுமிருளினும்வேறாகி
தனித்த யோகிக ளகநிறைந் தாடிய தனிப்பெருந் திருக்கூத்தை
குனித்த வண்ணமாக் கண்டவர்க் கிகபரங் கொடுத்தவ னுறை கின்றான்."

இவ்வாறு ரஜிதசபை யென்கிற வெள்ளியம்பலத்தில் திருக்கூத்தாடிய அற்புத நிகழ்ச்சியை அற்புதப் பாடல்களால் பாடிய பரஞ்ஜோதி மாமுனிவர் கான்மாறியாடின படலம் (24) பாடுகின்றார்.

மாறியாடின திருவிளையாடல்

தென்னனுவந் தறுபத்து மூன்றாய்ந் தெண்ணெண்
டிண்கலைவல் லானெனஆங்கு அணைந்தோர் பட்டன்
மன்னியநாட் டியமறியாய் வளவ னாமம்
வருசகல கலாவல்லன் என்னக் கற்றாங்கு
உன்னுமுன்னோர் தாள்வருத்தம் பொறான்நொந்து ஈசன்
ஒருதாளி னின்றானென்று அழுங்கு வான்கண்டு
அன்னவட கீழ்பால்இந் திரற்கு முன்னம்
ஆடினான் கான்மாறி வெள்ளி மன்றில்.

— வீமநாத பண்டிதரின் கடம்பவன புராணம்
இலீலா சங்கிரக அத்தியாயம் -32-ம் பாடல்

பாண்டிய மன்னர்கள் சிவபத்தி மிகுந்தவர்கள். சிவப்பணி அதிகமாகச் செய்தவர்கள். அரனைச் சாட்சியாக வைத்து அர்சாட்சி செய்தவர்கள் அப்படிப்பட்ட பாண்டிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மன்னர்களில் ஒருவன் இராசசேகர பாண்டியன். சிவபெருமான் ஆடுகின்ற நடனக் கலையை நாம் கற்கக் கூடாதென்று மற்ற அறுபத்துமூன்று கலைகளும் கற்றவன். 'கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது' என்ற அப்பர் திருவாக்கின்படி ஆட்சி மாட்சியாக நடத்தி வந்தான்.

அக்காலத்தில் சோழநாட்டில் உறையூரில் இருந்து ஆட்சி செய்த கரிகாற் சோழன் அறுபத்து நான்கு கலையும் கற்றவன். அவன் சபையிலுள்ள ஒரு புலவன் மதுரை சென்று இராச சேகர பாண்டியனைக் கண்டு 'எங்கள் சோழராசனுக்கு அறுபத்து நான்கு கலைகளும் தெரியும். உமக்கு ஆடற்கலை வராது என்று கூறினான். அதைக் கேட்ட இராசசேகர பாண்டியன் ஒத்துக் கொண்டு ஆடற்கலையைக் கற்கவிரும்பி ஆடற்கலை கற்ற வல்லவரை யழைத்து உபசாரம் செய்து நிரம்பப் பொருள் கொடுத்துப் பரதக்கலையைக் கற்றான். அக்காலத்து அரசர்கள் அறுபத்து நான்கு கலையும் கற்றுச் சிவபத்தி, சிவபூசை யுடையவர்களாய், சைவதருமம் ஓங்கும்படியாக ஆட்சி செய்தார்கள். சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் சிவசமயத்தவர்களாய் விளங்கினார்கள். ஆகவே இராசசேகர பாண்டியன் ஆடற் கலையைக் கற்றவல்லவரிடம் கற்றான்.

ஆடனூல் வரம்பு கண்டவராகி யவ்வழி யாடலும் பயின்ற
நாடக நடைதேர் புலவரைத் துருவி நண்ணிய வவர்க்கெலா மகிழ்ச்சி
வீடருஞ் சிறப்பா லறுவையும் பூணும் வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்து
பாடல்வண் டரற்றுந் தாரினான் பரதப் பனுவலுங் கசடறப் பயில்வான்.

இப்படிச் சிலநாள் பரதக்கலையைக் கற்கும்போது தேகத்திற்கு வருத்த முண்டாகியது. அப்போது எண்ணினான். 'ஆகா! பரதத்தைச் சிலநாள் கற்கும் போதே நம்முடம்பிற்கு இப்படி வருத்தம் தெரிகிறதே, எண்ணில்லாத காலமாக சிவபெருமான் ஒருகாலை ஊன்றி ஒருகாலைத் தூக்கி ஆடுகிறாரே அதனால் அவருக்கு இந்த வருத்தம் இருக்குமே' ஆனால் 'அந்தத் திருக்கூத்து உயிர்கள் இகபர சௌபாக்கியம் பெறும்படியாக ஆடுகின்ற கூத்தாகையால் அத்திருக்கூத்தைத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தடுக்கக் கூடாது. ஆனால் ஊன்றிய வலது திருவடியை வீசியும் தூக்கிய இடது திருவடியை ஊன்றியும் ஆடும்படி கேட்டுக் கொள்வோமென் றெண்ணி ஒரு சிவராத்திரியில் சென்று சிவபெருமானுக்கு நான்கு காலமும் சிறப்பான பூசை செய்வித்து ஞானக்கூத்தைக் கண்டு மகிழ்ந்து ‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பெருமானே! ஊன்றிய திருவடியைத் தூக்கியும் தூக்கிய திருவடியை ஊன்றியும் மாறியாடியருள வேண்டும்’ என்று வேண்டிக் கொண்டான்.

‘அப்படி ஆடவில்லையானால் வாளில் குப்புற வீழ்ந்து இறந்து விடுவேன்’ என்று வாளைநட்டுக் குப்புறப்பாய எண்ணினான். உடனே சுவாமியானவர் இடது திருவடியை ஊன்றியும் வலது திருவடியை வீசியும் மாறியாடிக் காட்டினார். பாண்டியன் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தான். கவலையும் மும்மலமும் தொலைந்தன. பரமானந்தக் கடலில் மூழ்கினான். பாடல்கள் வருமாறு,

“உரைத்தவிக் கூத்துக் கற்கும் போதுதன் உடம்பிற் சால
வுருத்தநோ யெய்தி யிந்த வருத்தநான் மறையுந் தேறா
வுருத்தமா யறிவாய் வெள்ளி யம்பலத் தாடி நின்ற
நிருத்தனார் தமக்கு முண்டே யென்பது நினைவிற் கொண்டான்.”

“கரியதா மரைக் கண்ணானுங் கமலநான் முகனுங் காண்டற்
கரியதா ளொன்றே நோவ வாற்றநா ணிற்ப தந்தோ.
வுரியதா மிதனைக் கற்று வருத்தமுற் றோர்ந்து மீது
தெரியநா னிருப்ப தேயோ வறனெனச் சிந்தை நோவான்.”

“வடுப்படு பிறவிப் பௌவ வரம்புகாண் கின்ற நாள்வந்
தடுப்பவர் யாவ ரேனு மவர்க் கெலாம் போகம்வீடு
கொடுப்பவர் செய்யு மிந்தக் கூத்தையெப் படிநாஞ் சென்று
தடுப்பது தகா தென்றேனும் வருந்துமே சரண மென்னா.”

“இதற்கிது துணிவென் றுன்னி யெழுந்துபோய் சிவனி ராவிற்
கதக்களிற் றோருத்த லேந்தும் கதிர்மணிக் குடுமிக் கோயில்
மதக்கரி யுரியி னாற்கு வரம்பரச் சிறந்த பூசை
விதப்பட யாம நான்கும் விதிவழி யியற்றல் செய்யா.”

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"விண்டக மலர்த்தா ளேத்தி வெள்ளியம் பலத்து ளன்பர்
தொண்டக மலர நின்ற சோதிமெய் ஞானக் கூத்தைக்
கண்டக மகிழ்ந்து தாழ்ந்து கட்புனல் சோரச் செங்கை
முண்டக முடிமே லேற்றி முகிழ்த்துநின் றிதனை வேண்டும்."

"நின்றதா ளெடுத்து வீசி யெடுத்ததா ணிலமீ தூன்றி
யின்றுநான் காண மாறி யாடியென் வருத்த மெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேற் பொன்றுவ லென்னா வன்பின்
குன்றனான் சுரிகை வாண்மேற் குப்புற வீழ்வே னென்னா."

"நாட்டினான் குறித்துப் பாய நண்ணுமு னிடத்தா ளூன்றி
நீட்டினான் வலத்தாள் வீசி நிருமலன் மாறியாடிக்
காட்டினான் கன்னி நாடன் கவலையும் பாச மூன்றும்
வீட்டினான் பரமானந்த வேலையுள் வீட்டி னானே."

இராசசேகர பாண்டியன் அளவில்லாத பேரின்ப மடைந்து தோத்திரம் செய்து 'எப்போதும் இப்படியே நின்று அருள்புரிய வேண்டு'மென வேண்டிக் கொண்டான் அப்படியே நின்று அருள் செய்கிறார். பாடல் வருமாறு,

"என்று மிப்படியே யிந்தத் திருநடம் யாருங் காண
நின்றருள் செய்ய வேண்டு நிருமல மான வெள்ளி
மன்றவ வடியேன் வேண்டு வரமிது வென்று தாழ்ந்தான்
அன்றுதொட் டின்று மெங்கோன் அந்நட நிலையாய் நின்றான்."

சுவாமியானவர் வெகுகாலமாக ஒரு திருவடியை ஊன்றியும் ஒரு திருவடியை தூக்கியும் ஆடுகிறாரே அதனால் சுவாமிக்கு வருத்தமாக இருக்குமே என்று இராசசேகர பாண்டியன் மனம் கவலையுற்றது. அது நீங்கவும் மகிழ்ச்சியடையவும் உயிர்கள் பாவ புண்ணியத்திற்குத் தகுந்தவாறு முட்டுப்பட்டுக் கதிதோறும் முற்றச் சுற்றிப் பல நாளும் தட்டுப்பட்டுச் சுழல்கின்ற துன்பம் நீங்கிச் சிவகதியைப் பெறவும் எல்லையில்லாத கருணையினால் கால் மாறி ஆடுபவராகிய வெள்ளியம்பலவாணரை உள்ளத்தில் வைப்போமாக என்று தோத்திரம் பண்ணுகிறார் பரஞ்ஜோதி முனிவர் அருமையான பாடல் வருமாறு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"பொரு மாறிற் கிளர் தடந்தோளொருமாறன் மணங்கிடந்த புழுக்கமாற
வருமாறிற் கண்ணருவி மாறாது களிப்படைய மண்ணும் விண்ணு
முருமாறிப் பவக்கடல் வீழ்ந் தூசலெனத் தடுமாறி யுழலுமாக்கள்
கருமாறிக் கதி யடையக் கான்மாறி நடித்தவரைக் கருத்துள் வைப்பாம்."

என்பது அந்தப்பாடல்.

இதனால் 'பொன்னுக்கு வெள்ளி கால்மாற்று அதிகம்' என்று பழமொழி உண்டாயிற்று. அதாவது சிதம்பரம் பொன்னம்பலம்; மதுரை வெள்ளியம்பலம். பொன்னம்பலத்தில் வலது திருவடியை ஊன்றி இடது திருவடியைத் தூக்கி ஆடுகிறார். வெள்ளியம்பலத்தில் இடது திருவடியை ஊன்றி வலது திருவடியைத் தூக்கி ஆடுகிறார். இது கால்மாற்று அதிகம் ஆயிற்று என்பதாக வழங்கி வருகிறது.

"ஏராரு மாட மதுரையில் மீதேறி
மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள்கூற வருபொரு ளதிகாரம்
ஈடாய வூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலா விசார தீரவரதர குருநாதா"- *திருப்புகழ், விராலிமலை*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பேரூர்ப் புராணத்தில் திருக்கூத்து

திருவாவடுதுறை ஆதீனத்துப் புலவர் பெருமான் ஸ்ரீ கவிராக்ஷஸ கச்சியப்ப முனிவர் அருளிச் செய்தது பேரூர்ப் புராணம் 2220. பாடல் உடையது. அதில் நிருத்தப் படலம், 138 பாடல் உடையது. அதில் ஆனந்த தாண்டவம் வருமாறு,

"பாரூரும் அரவல்குல் உமைநங்கை
யவள்பங் கன் பைங்க ணேற்றன்
ஊரூரன் தருமனார் தமர் செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில்
அணி காஞ்சி வாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே."

கொங்கு நாட்டில் 'ஆதிபுரி' என்றும், 'மேலைச் சிதம்பரம்' என்றும், 'தக்ஷிண கைலாயமென்றும்', 'முத்தி நகரம்' என்றும், விளங்குவது பேரூர் என்கிற சிறந்த நகரம். மரகதவல்லியுடன் பட்டீசர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் விளங்குகிறது. அந்தத் தலத்தில் கோமுனி, பட்டிமுனி, காலவமுனி, காமதேனு ஆகியோருக்கு ஆனந்த தாண்டவம் வழங்கியுள்ளார் சிவபெருமான்.

காசிப முனிவருடைய புத்திரர் காலவமுனிவர். ஞானோபதேசம் பெற்றுப் பேரூரில் தாண்டவங் குறித்துத் தவம் செய்து கொண்டிருந்தார். மகாவிஷ்ணு தாருகாவனத்தில் தாண்டவம் கண்டவர். அத்தாண்டவம் மறுபடியும் காண வேண்டுமென்று கயிலாயத்தில் தவம் செய்யப் 'பேரூரில் நடனக் காட்சியைத் தருவோம்' என்று சிவபெருமான் அருள் செய்ய அவ்வாறே பேரூரில் கோமுனி என்ற பெயருடன் தவம் செய்ய அக்காலம் பிரமதேவர் படைப்புத் தொழில் சரியாக வராதபடியினால் சிவபெருமானை வேண்ட 'பேரூரில் கோமுனியுடன் இருந்து பட்டிமுனி என்ற பெயருடன் தவம் செய்வாயாக அங்கு நமது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடனக் காட்சியை வழங்குவோம் படைப்புத் தொழில் நன்றாக வரும்' என்று அருள் செய்ய பிரமதேவரும் பட்டிமுனி என்ற பெயருடன் தவம் செய்ய அவர்களுக்குப் பங்குனி மாதம் உத்திரநக்ஷத்திரத்தில் தாண்டவக் காட்சியைக் கொடுத்தருளினார்.

சஷ்டித்திதியும் கார்த்திகை நக்ஷத்திரமும் கூடிய நாளில் உற்சவம் ஆரம்பித்து ஒன்பது நாளும் சிறப்பான பூசை விழாவினைச் செய்து பத்தாநாள் உத்திரநாளில் காட்சியைக் கண்டார்கள். அதற்கு முன்பே ரஜித சபையை அமைக்கும் இடம் உறுதி செய்ய முடியாமல் முனிவர் மூவரும் திகைக்கும் போது சிவபெருமான் சித்தராக வந்து ஆதிலிங்கத்திற்கு வடகிழக்கில் வெள்ளியம்பலம் எழச்செய்து அம்பலவாணர் சிவகாமி திருவும் அமையச் செய்து மறைந்தருள அத்திருவுருவத்தைப் பூசித்துக் காட்சியைக் கண்டார்கள். பங்குனி மாதம் உத்திரநக்ஷத்திரத்தன்று ரஜித சபைக்கு முன்நின்றார்கள். அரசமரத்தின் அடியில் அம்பலம் தெய்வத் தச்சனால் உண்டு பண்ணினார்கள். அரசம்பலம் சிவபெருமானே உண்டு பண்ணியது.

நிருத்தப்படலம்

"அரிதா கியபணி புரிகோ முனிமுதன் முனிமூ வருமரு கேநிற்ப
வரிவீ ணையினிசை யுயர்நா ரதமுனி மகிழ்தும் புருவுட னெழுவிப்பத்
திரியா வகைபல தாளங்குறுமுனி திகழா நந்தியு மினிதொத்த
உரிதா முழவுமந் துவுநந் தியுமிரு தலையுங் கரமல ருறுவிப்ப."

இதன் பொருள் :- சிறந்த பணிகளைச் செய்யும் கோமுனிவர் முதலாகவுள்ள மூன்று முனிவர்களும் அருகிலே நிற்க, தும்புரு நாரதர் இருவரும் யாழ் வாசிக்க, அகத்தியர் முனிவர் ஆநந்தியும் தாளமொத்த, மந்துவும் நந்தி தேவரும் முழவங் கொட்ட,

"வருகந் தருவரு மலியுங் கருடரு மதுரத் துடனிசை பலபாட
ஒருகந் தழிநிலை யருளா லருளென வுறுதா பதரா கரவென்னப்
பெருகந் தரர்சிலர் வளர்சிந் தையின்மறை பெருவா ரிதியொலி படவோத
அருகந் தர்கண்முதலியதுன் மதியரு மருள்கண் டடிதொழ வணைகிற்ப."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(இ-ள்):- கந்தருவர் கருடர் முதலியோர் இனிய பல இசைப்பாடல்கள் பாட, பற்றற்ற பரம்பொருள் அருளால் அருளைப் பூண்ட தவசிகள் அரகர முழக்கம் செய்ய, விண்ணுலகவாசிகள் சிலர் வேதமந்திரங்களைக் கடல் போல் ஒலிக்க, சமணர் முதலிய பொல்லாபுத்தி யுடையோரும் திருவருளைக் கண்டு திருவடிகளை வணங்கும் பொருட்டு நெருங்க,

"ஆகா வென்பவ ரூகூ வென்பவ ரருகுற் றரியமெல் லிசைபாட
ஏகா வென்மரும் யோகவென்மரு மாகிச் சித்தர்க ளெதிரேத்தக்
காகா வெனவுர கர்கள்பன் மணியொளி கருகலத் திசைதிசை தொழுதாடப்
பாகா மொழியவள் பாகா விடையொரு பாகா வெனவவு ணர்கள்பம்ப."

(இ-ள்):- ஆகா கூகூ, என்னும் இசை வல்லோர் இருவரும் அண்மையிலிருந்து அருமையான மெல்லிசையைப்பாட, ஏகா, யோகா என்பராய்ச் சித்தர்கள் எதிரிலே துதி செய்ய, காகா என்று கூறி நாகர்கள் பல மணிகளால் ஒளி செய்ய, திசை தோறு முள்ளோர் தொழுதாட, பாகுபோலு இனிய சொல்லையுடைய உமாதேவியை வாமபாகத்திலுடையவரே, விடையை ஏறிச் செலுத்துபவரே என்று அவுணர்கள் துதித்து நெருங்க,

"மன்றா டியகுரு மணியே யடியவர்மதியா டியகளி நறவேபொய்
வென்றார் நுகர்சுவை யமிழ்தே பத்திமைவிளைவார் விளைவுயிர் விளைவேபுன்
கன்றா னெனவுயிர் களின்வைத் தருளிய கனிவே கருணைசெய் கனியேயென்
றொன்றா தரவுட னுரையா விழியிணை யுறைசிந் திடவடி யவர்தாழ."

(இ-ள்):- சபையிலே நடனமிடும் குருமணியே, அடியார்கள் அறிவிலே ஆடியருளும் களிப்பையுடைய தேனே, பொய்யை வென்ற தத்துவ ஞானிகள் நுகர்கின்ற சுவையாகிய அமிர்தமே, பத்தியை விளைக்கும் மெய்யன்பர்கள் விளைவிக்கும் சிவவிளைவே, இளைய கன்றையுடைய பசுப்போல உயிர்களிடத்து வைத்தருளிய இரக்கம் உடையவரே, கருணை செய்யும் கனியே என்று விருப்புடன் உரைத்து அடியார்கள் கண்ணீர் சிந்தி வணங்க,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"ஒருபா லுமைதன துருவின் விரவுற வொருகைத் துடியொலி எழவங்கி
ஒருவா தொருகையி னொளிரக் கவிதர யொருகை யொருகர மமை வெய்த
ஒருதாண் முயலகன் வெரிநிற் பதிவுற ஒருதாள் குஞ்சித முறவீசி
ஒருகா ளியின் முகம் விழிநோக் குறமணி வொளிரம் பலநட நவில்கின்றான்."

(இ-ள்):- ஒரு பக்கத்திலே உமா தேவியார் தமது திருமேனியிற் பொருந்த, ஒருகையிலே உடுக்கை ஒலி செய்ய, அக்கினி நீங்காமல் ஒரு கரத்திலே விளங்க, ஒருகரம் கவிய, ஒரு கரம் அபயகரமாக, ஒரு திருவடி முயலகன் முதுகிலே ஊன்றியிருக்க, ஒரு திருவடி வளைவுற வீசி ஒப்பற்ற காளியின் முகத்திலே பார்வையுற, மணிகள் ஒளிவீசும் வெள்ளியம் பலத்திலே இறைவன் நடம்புரிகின்றான்.

"தழலொத் தவிர்புரி சடையெண் டிசைதட வரவெண் மதியொடு புனறுள்ள
அழகொன் றியகுழை யசையக் குறுநகை யலரப் புருவமு முரிவெய்தச்
கழல்கட் செவியர விழிவெண் டலைதிணி தோளிற் றுயல்வர வதள் பொங்க
உழல்சில் லரிபயின் மணிநூ புரவொலி வுற்றத் திருநட நவில்கின்றான்."

(இ-ள்):- தீயை யொத்து விளங்கும் முறுக்கிய சடை எட்டுத் திசைகளையும் தடவ, பிறைச் சந்திரனோடு கங்கையும் துள்ள, அழகிய குழையசைய, புன்சிரிப்பு தோன்ற, புருவம் நெற்றியில் வளைய, பாம்பணியும் வெண்டலை மாலையும் தோளிலே தொங்க, புலித்தோல் விளங்க, இரத்தினப் பரல்களையுடைய சிலம்புகள் ஒலிக்க, வெள்ளிமன்றத்திலே திருநடனம் செய்தருளுகின்றான்.

"பூதங்களுமுறழ் கரணங்களுமெழு பொறியும் பொறியினுள் ளொளியான
பேதங் களும்வரு காலங் களுமொளி பில்குங் கலைகளு மொளிவிந்து
நாதங் களுமவை தருபோ தங்களும் நவில்வே தங்களு மறியாமே.
ஏதங் கொளுமுயிர் போதங் கெடவிர சதமன் றிடைநட நவில்கின்றான்."

(இ-ள்) பூதங்கள், அந்தக் கரணங்கள், ஐம்பொறிகள், புலன்கள், காலம், கலை, ஒளியினையுடைய விந்துநாதங்கள் முதலியவைகளும், அவைகள் தரும் அறிவும், வேதங்களும், அறியாமல் குற்றத்தை விளைக்கும் ஆன்மபோதமும் கெடும்படியாக இரஜித சபையிலே நடனம் செய்கின்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அளவா யளவத னளவா யளவத னளவுந் தணிதரு மளவாகி
அளியா யளியத னளியா யளியத னளியுந் தணிதரு மளியாகி
ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தணிதரு மொளியாகி
வெளியாய் வெளியதன் வெளியாய் வெளியதன்வெளியின் வெளிநட நல்கின்றான்."

(இ-ள்):- காண்டல் கருதல் உரை என்னும் அளவாயும், அவ்வாறு அளக்கும் அறிஞர் அளவிற்கு அளவாயும், அறிஞர் அளந்தறிந்து அறியும் படியல்லாத ஓர் அளவுடையதாயும் விந்து சத்திக்கு மேலாய் அநுக்கிரகமே தொழிலான சதாசிவருக்கு மேலாய்க் கருணையே தானான பராசத்திக்கு மேலாய் அச்சத்தியும் கீழ்ப்பட்டு ஒடுங்குதற்கு காரணமான அநுக்கிரத்தை யுடையதாயும், கலைக்கு மேலாகிய ஒளியான அசுத்தமாயை ஒளி அதற்கு மேலாகிய சுத்தவித்தை ஒளி அந்த சுத்த வித்தை. ஒளிக்கு மேலாகிய விந்துஒளியும் கீழ்ப்படுவதற்குக் காரணமாய் மேம்பட்டு ஒளிரும் ஒளிப்பொருளாய் ஆகாசவெளிக்கும் வெளியாகிய பிரகிருதிவெளி, அதற்குக் காரணமாகிய கலையான வெளி அதனினும் மேம்பட்டு விளங்கும் வெளியிலே திருநடனம் செய்கின்றான்.

"ஓரா ணவமுத லிருவல் வினைமல மூன்று முடன்முத லியநான்கும்
ஆரா வுடலிடை வுறுசாக் கிரமுத லைந்தும் மதுமுதல் வழியாறும்
சாரா வகையெழு ஞானம் பெறவரு டகவெண் ணுநர்பணி யொன்பானும்
தேரா வருள்பணி பத்துந் திகழ்தரு திகழம் பலநட நவில்கிறான்."

(இ-ள்):- ஓர்கின்ற ஆணவமாகிய வேரினையுடைய வலிய நல்வினை தீவினைகளும், மூன்று மலங்களும், தநு கரண புவன போகங்களாகிய நான்கும், உடம்பினிடையே தோன்றும் சாக்கிர முதலிய ஐந்தும், மந்திராத்துவா முதலிய ஆறத்துவாக்களும் பொருந்தாதபடி எழுகின்ற ஞானத்தைப் பெறும் பொருட்டு அருளும் தன்மையை எண்ணுகின்ற ஆன்மாக்களின் பணிகள் ஒன்பதையும், தேர்ந்தறிய முடியாத அருட்பணி என்னும் பத்தும், விளங்குதற்குக் காரணமாகவுள்ள அம்பலத்திலே இறைவர் கூத்தாடுகின்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அஞ்சக் கரமென வெட்டக் கரமென வாறக் கரமென நான்கென்னப்
பிஞ்சக் கரமுத லுருமூன் றெனவளர் பேரக்கரமுதன் மூன்றென்ன
நெஞ்சத் துறநவி லீரக் கரமென நிலையோ ரக்கர மெனநின்ற
செஞ்சொற் றிறமிரு நான்கா கியும்பிற வாயுந் திருநட நவில்கின்றான்."

(இ-ள்):- சிவாயநம என்கிற ஐந்தெழுத்தும், ஓம்ஹாம் ஹௌம் சிவாயநம என்கிற எட்டெழுத்தும் ஓம் நமசிவாய என்கிற ஆறெழுத்தும், ஓம் சிவாய என்கிற நாலெழுத்தும் ஆக உச்சரிக்கிற விதிப்படியே உச்சரித்து இவ்வாறு உச்சரிக்கிற முறைமையை விட்டுப் பஞ்சாக்கரத்தினுடைய சொரூபத்தை அறிந்து பிஞ்செழுத்தாகிய வகாரம் ஆகிய பராசத்தியையும், பெருவெழுத்தாகிய சிகாரம் ஆகிய சிவத்தையும், தன்னுடைய இருதயத்திலே வைக்கில் பேசும் எழுத்தாகிய வகாரம் ஆகிய சத்தி பேசா எழுத்தாகிய சிகாரமாகிய சிவத்தை இரண்டறக் கூசாமல் உணரும் படியும் இரண்டெழுத்து ஒரெழுத்து நிலையை உணரும் படியும், வசிய என்னும் மூன்றும் சிவய என்னும் மூன்றுமாகிய ஐந்தெழுத்தின் வகை எட்டாகியும் பிறவகையாகியும் திருநடம் நடிக்கின்றான்.

"நகரந் திருவடி மகரம் வயிறெழி லகுதிண் புயம்வக ரஞ்சீர்சால்
சிகரந் திருமுகம் யகரந் திருமுடி சிகரந் துடிகவி தகுசெங்கை
வகரம் யகரம தபயந் தருகரம் வளர்தீ நகரநன் மகரங்கீழ்
உகளும் முயலக னொளிர்வா சிகைபிர ணவமா யொருநட நவில்கின்றான்."

(இ-ள்):- திருவைந்தெழுத்திலே நகரம் திருவடியிலும், மகரம் திருவுந்தியிலும், சிகரம் திருத்தோளிலும், வகரம் திருமுகத்திலும், யகரம் திருமுடியிலும் ஆக இந்த முறைமையிலே திருமேனியாகக் கொண்டும்; சிகரம் டமருகம் ஏந்திய திருக்கரமாகவும், வகரம் வீசிய திருக்கரமாகவும், யகரம் அமைத்த திருக்கரமாகவும் மகரம் முயலகனை மிதித்த திருவடியாகவும் இந்த முறைமையிலே திருமேனியாகக் கொண்டு திருவாசி ஓங்காரமாக ஒப்பற்ற திருநடனத்தைச் செய்தருளுகின்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"தோற்றந் துடிதிதி யபயந் தொலைவெரி தோலா மறைவுநின் றிடுதாளின்
ஆற்றும் கழலினல் லருளுந் தகநனி நலிமா யையையுத றிக்கன்ம
நீற்றிக் கருமல மிருவித் திருவரு ணிலையா லுயிர்களை வாங்கிக் கொண்
டாற்றுஞ் சுகவடி வாக்கிப் பதிவுறு மருளம் பலநட நவில்கின்றான்."

(இ-ள்):- உடுக்கையேந்திய திருக்கரத்திலே சிருட்டியாகவும், அமைத்த திருக்கரத்திலே திதியாகவும், அக்கினியேந்திய கரத்திலே சங்காரமாகவும், ஊன்றிய திருவடியிலே திரோபவமாகவும், எடுத்த திருப்பாதத்திலே அநுக்கிரகமாகவும் இந்த முறைமையிலே முத்தி பஞ்ச கிருத்தியமே திருக்கூத்தாம் மற்றும் உடுக்கையேந்திய திருக்கரத்தினாலே மாயையை நீக்கி, அக்கினியேந்திய திருக்கரத்தினாலே கன்ம மலத்தை நீறாக்கி, ஊன்றிய திருப்பாதத்தினாலே ஆணவ மலத்தைச் சாய அமுக்கி, தூக்கிய திருப்பாதத்தினாலே அருளே தனுவாக நிறுத்தி, அமைத்த திருக்கரத்தினால் அருளினால் ஆனந்த வெள்ளத்திலே ஆன்மாவை அழுத்தி இன்பவடிவாகச் செய்து நிலைபெற்ற அருளாகிய அம்பலத்திலே ஆனந்த தாண்டவத்தைச் செய்தருளுகின்றான்.

"அருளோ விலையென மேலா கியவுயி ரருளான் முதன்மைய தாயங்கு
மருளா லருள்புரி தொழில் செய்குவ லென மதியுற் றதனையு மொருவிப்போய்
பொருளா கியவருளுருவா யதன்முதல் புகலென் றறிதல்செய் தருணின்றும்
தெருளார் சிவமுடன் விரவிச் சுகமுறு திருவம்பலநட நவில்கின்றான்."

(இ-ள்):- அருளென்ப தொன்றில்லை என்று உலக நிலையில் மேம்பட்டு விளங்கும் உயிர் திருவருளால் முதன்மை பெற்றும் மயக்கங்காரணமாகத் திருவருள் செய்யும் காரியங்களை நானும் செய்வன் என்று புந்தி கொண்டிருந்த தனையும் நீங்கிப் போய் அருள்வடிவாய் அவ்வருளுக்கு முதலாகிய சிவமே நமக்குச் சரண் என்று அறிந்து அவ்வருளினின்றும் தெளிந்த சிவத்துடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தை நுகரும் திருவம்பலத்தில் திருநடனம் செய்தருளுகின்றார்.

பிரகாசமிக்க வெள்ளியம்பலத்தில் சிவகாம வல்லியும் தாமும் அர்த்தநாரீச வடிவாய் நடனம் செய்யும் வேத

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிலம்பின் ஒலியும் பலவகை வாச்சியங்களின் ஒலியும் செவிகளை நிறைக்கக் குற்றமில்லாத பரிபக்குவமுடையோர் யாவரும் கேட்டனர் ஆயினும் தாண்டவத்தைக் காணாதவராய் ஏங்கி நின்றார்கள். நின்ற தவமுடையவர்கள்.

நடனம் காண வேண்டுமென்று வெள்ளியம் பலத்திலே திருக்கூத்தாடும் முழுமுதற் கடவுளே, வேதங்களுக்கு எட்டாதவரே, உயிருக்குத் துணையாக உள்ளவரே, முருகப்பெருமானைப் பெற்றருளிய மாணிக்கமே, தேவர்களால் அறிதற்கரிய தேவதேவரே, மானேந்திய திருக்கரமுடையவரே, பூதப்படையுடையவரே, எங்களுடைய வினைகளையெல்லாம் போக்கித் தேவரீருடைய ஆனந்த நடனத்தைத் தரிசிக்கும்படி அருள் செய்யும் சங்கரா என்று வேண்டித் தோத்திரம் செய்தார்கள். திருக்கூத்தைக் காணாமையால் உண்டாகிய மெலிவும், சுரந்த மேகம் பெய்யாது போகாது. அதுபோலக் கருணைக் கடலாகிய சிவபெருமான் தாண்டவக் காட்சியை வழங்காது போக மாட்டார் என்னும் மகிழ்ச்சியும் உடையவர்களாய் மனங்கரைந்து வணங்கினார்கள். அப்போது சிவபெருமான் அவர்களுக்கு ஞான நாட்டத்தைத் தந்தருளினார்.

ஊன நாடகத்தைச் செய்தருளி எல்லா உயிர்க்கும் துன்பத்தைச் செய்யும் ஆணவமல வலியைக் கெடுத்தருளி ஞான நாடகத்தைச் செய்யும் சிற்றம்பலவன் செய்தருளும் ஆனந்த நடனத்தைக் கோமுனி, பட்டிமுனி, காலவமுனி, காளியும், காமதேனுவும் இன்னும் மாதவஞ் செய்த முனிவர்கள் பலரும் திருக்கூத்தைக் கண்களால் பருகி பேரானந்த வெள்ளத்தில் மூழ்கினார்கள். மனவாக்குக்கு எட்டாத சிவபெருமான், ஸ்ரீபஞ்சாட்சரமே உறுப்பாகக் கொண்டு சிவகாமியோடு கூத்தாடும் ஆனந்த நடனம் பூவுலகம் சொர்க்கலோகம் ஆகியவற்றிலுள்ள எல்லா செல்வங்களையும் விட உயர்ந்ததாக எண்ணுகின்ற மெய்யன்பர்களுக்குப் பிறப்பு இறப்பு இல்லாத பெருவாழ்வு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிடைக்குமென்பதில் ஐயமுளதோ, அவர்கள் சிவானந்த தேனைப் பருகுவதைத் தவிர வேறொன்றையும் விரும்ப மாட்டார்கள். நடனக்காட்சியைக் கண்ட அனைவரும் ஆனந்த மயமாக நின்று ஆடினார்கள். பிரமன், விஷ்ணு, உருத்திரர்கள், முனிவர்கள், விநாயகர், முருகன், பைரவர், வீரபத்திரர், பூதகணங்கள், அட்டதிக்குப் பாலகர், காளி, பன்னிரு சூரியர்கள் முதலான சகலரும் ஆடினார்கள்.

"மலையாடின வாரிதியாடின மன்னு மீரேழ்
உலகாடின வோங்கிய வண்ட மனைத்துமாட
விலகாத விராட்புரு டப்பெயர் வேந்துமாடிற்
றிலகீசுர னாடினா டாதவர் யாவரம்மா."

இவ்வாறு மேலைச் சிதம்பரத்தில் சிவபெருமான் திருக்கூத்தாடிய சிறப்புப் பற்றிப் பேரூர்ப்புராணத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துக் கச்சியப்பமுனிவர் பெருமான் அருளிச் செய்துள்ளார்.

பனிமதி நுதல்எம் பிராட்டிமேற் கடைக்கண்
பாய்த்திநீ ஆடும்ஆ னந்தத்
தனிநடம் காண அருள்வையேல்
மற்றுஓர் பேறும்வேண் டுவனோ?
நனிஅரம் பையரதம் குழைகல்கொண்டு எறிய
நறுவினைக் கோட்டுவா னரம்அக்
கனிகள்கைப் பறித்துமீச் செல எறியும்
கற்குடி மாமலைப் பரனே!

– மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(திருக்கற்குடி மாமலை மாலை)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிதம்பரபுராணத்தில் திருக்கூத்து

சைவ பரஞ்சோதி மாமுனிவர் அருளிச் செய்தது சிதம்பர புராணம். இது 10 சருக்கம். 814 திருவிருத்தங்களையுடையது. இதில் சிதம்பரத்தல மகிமையும் சபாபதியின் பெருமையும் நிரம்ப அருளிச் செய்துள்ளார்.

சபாநாயகர் துதி

"நீர்தாங்கும் பார்தாங்கும் நெடுமாலு மலரயனு நிரந்து போற்ற
வார்தாங்கு புளகமிகு களபமுலை மலைவனிதை மகிழ்ந்து காணத்
தார்தாங்கு சடாமவுலி நிலவெறிப்பப் பொதுவினடந் தயங்கா நிற்குஞ்
சீர்தாங்கு வேதாந்த நாதாந்தப் பரஞ்சுடரைச் சிந்தை செய்வாம்."

(இதன் பொருள்) திருமாலும் பிரமாவும் வரிசையாக நின்று துதிக்க, மலைமகள் மகிழ்ந்து காணச் சடா மவுலியில் நிலவு ஒளிவீச, பொதுவில் நடிக்கும் வேதமுடிவிலும் நாதமுடிவிலும் விளங்கும் பரஞ்சுடராகிய அம்பலவாணரைச் சிந்தையில் தியானம் செய்வோமாக என்பதாம்.

"உருவமொரு நாலாகி யுருவருவத் திருவுருவ மொன்றே யாகி
யருவமொரு நாலாகி யப்பாலா யப்பாலு மள விடாத
பொருவிகந்த வுயிர்க டொறு புணராமற்புணர்ந் தருவே பொழிந் தெல்லோர்க்கும்
கருதரிய திருச்சிற்றம் பலத்திலகும் பேரொளியைக் கருத்துள் வைப்பாம்."

(இ-ள்):- பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேஸ்வரன் என நான்கு உருவமாகியும், அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கமாகியும், விந்து நாதம் சத்தி, சிவம், என அருவம் நான்காகியும், ஆக நவந்தருபேதமாகியும், அதற்கு மேலு மாகியும், அதற்கு மேலும் எண்ணிக்கைப் படாத சராசர சீவகோடிகளிலெல்லாம் கலந்தும், கலவாமல் கருணை யென்னும் அமிர்தத்தைச் சொரிந்து கொண்டு யாவரும் நினைத்தற்கரிய ஞானசபையிலே பிரகாசிக்கும் பரஞ் சோதியை இதயார விந்தத்தில் வைப்போமாக என்பதாம்.

"அருமறையின் சிரத்தொளியா யனந்தமாய் பூரணமா யசல மாகி
யொருமுதலா யுண்மையா யுணர்வாகி யானந்த வுருவ மாகி
யிருமலமற் றிருப்போர்கள் விருப்பாகி மணிமன்று ளென்று ஞானத்
திருமகிழ நின்றாடுஞ் சிதம்பரத்தை யெந் நாளுஞ் சிந்தை செய்வாம்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(இ-ள்):-வேதங்களின் சிரசாகிய உபநிடதங்களின் பிராகாசமாய், இறுதியில்லாததாய், எங்கும் பரிபூரணமாய், அசைவில்லாததாய், ஒப்பற்ற முதலாகியும் சத்து சித்து ஆனந்த சச்சிதானந்தமயமாய், அஞ்ஞானமாகிய ஆணவ மலமும், மயக்கமாகிய மாயா மலமும், ஆசையாகிய கன்ம மலமும், ஆகிய மும்மல மற்றவர்களாகிய பதஞ்சலி வியாக்கிர பாதரும், அவர்களின் வழிவந்த பரமஞானிகளுக்கு விருப்பமாய் நவரத்தின மயமான திருச்சிற்றம்பலத்தில் ஞான சத்தியாகிய சிவகாமசவுந்தரி ஆனந்த பரவசமாகி காணும்படி நடனம் செய்யும் ஞானாகாச சொரூபமாய் விளங்கும் சிதம்பரத்தை எந்த நாளிலும் தியானம் செய்வாம்.

சிவகாமியம்மன் துதி

"இருபதமுந் துடியிடையுந்திகழுடையுந் தனதடமு மியற்பொற் பூணும்
கருவிழியும் செவ்வாயும் வெண்ணகையும் பசுந் தோளும் கழுநீர்க்கையும்
பொருவருமங் கலநாணும் கந்தரமும் புரிகுழலும் புனிதன் கண்ணும்
திருவருளு முலாவு மெழிற் சிவகாமசுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம்."

(இ-ள்):- உபயபாதார விந்தங்களும், உடுக்கைக்கு ஒப்பாகிய சிற்றிடையும், பொன்னாலாகிய ஆபரணங்களும், பட்டாடையும், பெரிய தனங்களும், கரிய விழிகளும், சிவந்த பவளம் போன்ற திருவாயும், வெண்ணிலவு பொழியும் புன்சிரிப்பும், பச்சை மூங்கிலுக் கிணையான தோளும், செங்கழுநீர் மலரையேந்திய திருக்கரமும், ஒரு காலத்திலும் நீங்காமல் ஒப்புவமையில்லாத திருமங்கல நாணும், சங்குக்கு ஒப்பாகிய கழுத்தும், சுட்டி முதலாகிய சிரோபூஷணங் களணிந்த அளகபாரமும், பாதாதி கேச சுவாமியின் திருநயன நோக்கமும், கருணாரசமும், வீணையினிடத்து விரல்கள் சஞ்சரிப்பது போல உலாவிக் கொண்டிருக்கிற திருவழகு நிறைந்த சிவகாம சவுந்தரியின் சரணார விந்தங்களை இதய கமலத்திலும் சிரத்திலும் அணிந்து கொள்வாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தகரவித்தை

சிதம்பர புராணத்தில் சிதம்பரத் தலபெருமை அதிகமாக அருளிச் செய்துள்ளார். மற்றைய எந்த தலத்துக்கும் இல்லாத பெருமை சிதம்பரத்திற்கு உண்டு. அது மிகப் பெருமை பொருந்திய தகரவித்தையென்பதாம்.

தகரவித்தையென்பது பிண்டத்திலும் உண்டு. அண்டத்திலும் உண்டு. பிண்டம் என்கிற சரீரத்தில் இருதயஸ்தானத்தில் சிறியதாக உள்ள வெளியில் சிவபெருமான் சூக்கும சித்தாக நர்த்தனம் செய்தருளுகின்றார். 'இதயகமலத் தூறும் தேனவன் காண்' என்று திருநாவுக்கரசு சுவாமிகளும், 'தில்லைமூதூ ராடிய திருவடி பல்லுயிரெல்லாம் பயின்றனனாகி' என்று மாணிக்கவாசக சுவாமிகளும் அருளிச் செய்துள்ளார்கள். தகராகாசம்யென்பது சிறிய ஆகாசம், சிறிய வெளி, சிற்றம்பலம், ஞானவெளி, ஞானாகாசம், சிதாகாசம் என்று பல நாமங்களையுடையது.

பெரியபுராண சூசனத்தில் தில்லைவாழந்தணர் புராண சூசனத்தில் சிதம்பரத்தினது மகிமை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதியது

சாந்தோக்கியோப நிடதத்திலே பிரம்புரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே இருக்கும், ஆகாசமத்தியில் விளங்கும், அதிசூக்கும சித்தை அறிதல் வேண்டுமென்று தகரவித்தை சொல்லப்பட்டது. இங்கே பிரமபுரமென்றது இச்சரீரத்தையும், புண்டரீக வீடென்றது இருதயகமலத்தையும், ஆகாசமென்றது பராசத்தியையும், அதிசூக்கும சித்தென்றது பரப்பிரமமாகிய சிவத்தையு மென்றறிக. புறத்தும் இப்படியே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப் பிரமாண்டத்தினுள்ளே இருக்கும். தில்லைவனம் புண்டரீகவீடெனவும், தில்லைவனத்தில் இருக்கும் ஆகாசமெனவும், அத்திருச்சிற்றம்பலத்திலே நிருத்தம் செய்யும் பரப்பிரம சிவம் அதிசூக்கும சித்தெனவும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சொல்லப்படும். இவ்வாகாசம் பூதாகாசம் போற் சடமாகாது சித்தேயாம் ஆதலால் சிதம்பர மெனப்படும்.

இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்கும் தானமாதலால் தில்லை வனமும் சிதம்பரமெனப் பெயர் பெறும். இத்தகரவித்தையை உபாசிக்கும் முறைமை கைவல்லியோபநிடதத்தில் சிவனது தகரோபாசனா விதிப்பிரகரணத்திலே ''ஏகாந்த ஸ்தானங்களிலே சுகாசனத்தில் இருந்து சுத்தனாகி நேராகிய கழுத்துத் தலை உடம்புகளை உடையனாய் அத்தியாச்சிரமஸ்தனாய இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கி பத்தியால் தனது ஆசிரியரை இறைஞ்சி இருதய புண்டரீகத்தைத் துகளற்ற சுத்தமாகக் கருதி அதன் மத்தியத்திலே தெளிவுடையவராய் சோகம் இல்லாதவராய் எண்ணப் படாதவராய் வெளிப் படாதவராய் அனந்த ரூபராய் சிவனாய் அமிர்தராய், பிரமயோனியாய் தத்பதமாய் ஆதிமத்தியாந்தவிகீனராய் ஏகராய் விபுவாய் சித்தாந்தரூபராய் அரூபராய் அற்புதராய் உமாசகாயராய் பரமேசுவரராய் பிரபுவாய் முக்கண்ணராய் நீலகண்டராய் பிரசாந்தராய் பூதயோனியாய் சமஸ்த சாட்சியாய் இருப்பவரைத் தியானித்து அதனால் முனியாகி இருளின் மேற் போவான்.

அவர் பிரமா; அவர் சிவன்; அவர் இந்திரன், அவர் அழிவற்றவர், மேலானவர், சுவப்பிரகாசர், அவரே விஷ்ணு அவர் பிராணன்; அவர் காலன், அக்கினி, அவர்சந்திரன், அவரே இருந்ததும் இருப்பதுமாகிய எல்லாமானவர், என்றும் உள்ளவர் அவரை அறிந்து அதனால் மிருத்தியுவைக் கடப்பன். முத்திக்கு வேறு வழியில்லை'' என்று கூறப்பட்டது.

இதனால் பிரமவிஷ்ணு ருத்திரர்களோடு கூடிய சகல சகத்தும் சிவனது விபூதியே ஆதலால் சிவனே சருவோற் கிருஷ்டர் என்பது தெளிவுறுத்தப்பட்டமை காண்க. மிருத்தியு என்பது ஆணவமலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமசூத்திர சிவாத்துவித சைவ பாடியத்தில் இந்த தகரவித்தையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வடமொழியில் ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியார் அருளிய சைவபாடியம் தமிழில் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் சீடர் காசிவாசி செந்திநாதையர் எழுதியது (உபநிடத உபக்கிர மணிகை) வித்தைகள் பலவற்றைக் கூறிப் பின் மேலே கூறப்பட்ட வித்தைகளுள் எவ்வெவர்க்கு எந்தெந்த வித்தை பிரியமோ அவ்வவர் அததைக் குரு உபதேசத்தினால் அறிந்து உமா சகாயராகிய சிவபருமானை உபாசனை செய்து நிரதி சயானந்த மடைக. இவ்வித்தைகள் அனைத்துள்ளும் தகராகாய வித்தையே மிகுத்து எல்லா உபநிடதங்களிலும் கூறப் பட்டிருக்கின்றது. விளக்கிருந்த இடம் விளக்கெனத் தானியாகு பெயராய்ப் போந்தவாறு போலத் தகராகாயம் எனப்படும் சூக்குமாகாயம் விளங்கும் தில்லையானது சிதம்பரம் எனப்படும்.

அந்தச் சிதம்பரத்தின் பெயர்களாகிய 1. இரண்மயகோசம் 2. சத்து 3.பரம் 4. விவிக்தம் 5. புண்டரீகம் 6.குகை 7. ககனம் 8. அற்புதம் 9. சத்தியமாயதனம் 10. சபை 11. சத்தியம் 12. பரம வியோமம் 13. பரமாலயம் 14. ஆகாயம் இவை சிதம்பரத்தின் நாமங்களாம். இவ்வாறு முண்டகம், சாந்தோக்கியம், கைவல்லியம், தைத்திரீயம், மகா நாராயணம், கேநம் முதலிய உபநிடதங்களில் கூறப்பட்டுள்ளது. சிதம்பர மான்மியத்துப் பத்தாம் அத்தியாயச் சுலோகங்களானும். அச்சுலோகங்களின் பொருளை அடக்கிய,

"அத்தன் பரதத் துவனித்த நடத் தமரும் பொதுவின் பெயர்மன் றமலஞ்
சத்தும் பரிரண் மயகோ சமகத் தனிபுண் டரிகங் குகைவண் ககனம்
சுத்தம் பரமற் புதமெய்ப் பதமச்சுழுநா வழிஞா னசுகோ தயநற்
சித்தம் பரமுத் திபரப் பிரமந் திகழுஞ் சபைசத் திசிவா லயமே."

என்னும் கோயிற்புராணச் செய்யுளானும் அறியப்படும். (இருக்கு வேதம்.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுவேதாசுவதரோப நிடதம்

"மூன்று வேதங்களின் நிதியாய்ப் பெரியோர் பற்றி நிற்கும் பரமாகாயத்தாயுள்ள அழியாப் பொருளை அறியாதவ னெவனோ அவனுக்கு அவ்வேதத்தினாற் பயன் என்? அதனை அறிபவர்களே கிருத்தார்த்தராயமர்ந்தனர்'' என்றும்;

தைத்திரீயோபநிடதம்

"இதய குகைக் கண்ணதாகிய பரமாகாயத்தில் இருக்கும் சச்சிதானந்த பிரமத்தை எவன் அறிகின்றானோ அவன் சர்வஞ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு சமஸ்த வேட்ட போகங்களையும் துய்க்கின்றனன் '' என்றும்;

கடோபநிடதம்

"அவன் அறுவித அத்துவாவின் கரைக் கண்ணதாகிய அந்தப் பரப்பிரமத்தின் பரமாகாய சிவபதத்தை அடைகின்றனன்'' என்றும்;

பிருகதாரணியோப நிடதம்

"எது இதயத்துள் ஆகாசமாயிருக்கின்றதோ அதில் அனைத்தையும் வசீகரிப்பவரும் அனைத்துக்கும் ஈசானரும் அனைத்துக்கும் அதிபதியுமாயினார் அமர்கின்றனர்'' என்றும்;

சாந்தோக்கியோபநிடதம்

"பிரமபுரம் என்னும் இதிலே தகர புண்டரீக வீடு உள்ளது. இதிலே தகராகாசம் உள்ளது. இந்தத் தகராகா சத்துக்குள்ளேயுள்ளது நாடற்பாற்று அறியற்பாற்று. ஆகாயத்திலிருந்து பூதமனைத்தும் உற்பத்தியாகி ஆகாயத்தைப் போய் அடைகின்றன'' என்றும்;

மகாநாராயணோப நிடதம்

"இந்த அந்தப் பிரமம் அழியாத பரமா காயத்துள்ளது. பிரமபுரத்திலே இருப்பதாய் பாவமிலதாயுள்ள தகர புண்டரீக வீடு என எதுவுண்டோ. அதிற் சோகமிலதாகிய தகராகாசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உள்ளது அதனுள் உள்ளது உபாசிக்கற்பாற்று'' என்றும்; இன்னும் அனேகசுருதி, சிவாகமங்கள், உபநிடதங்களிலே இந்த தகரவித்தை அதிசயமாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த தகரவித்தையைப் பற்றிச் சிதம்பரபுராணத்தில் நன்றாகக் கூறப்பட்டுள்ளது. சிதம்பரமான்மியச் சருக்கத்தில் உள்ளது.

"சொற்றவுடற் கமலநிக ருளக்கமலம் பிரமமுறை தொன்மை தன்னால்
நற்றகைய புண்டரீக வகமாயிற் றந்தவக நண்ணலா லூன்
பற்றுடலம் புரமெப்பேர் படைத்தது புண் டரிகவகம் பற்றி நித்தம்
பெற்றபிரமங் ககன வுவமையாற் ககனமெனப் பேசிற் றாமால்.''

இப்பாடல், சரீரம் பிரமபுரம், இதயம் புண்டரிகவீடு, அதிலுள்ள ஆகாயம் சுத்தவெளி, சிதாகாசம் அதிலுறைகின்ற பிரமம்-சிவம் என்று அருளியது.

"தனைநிகராம் பேரருளே மூப்பிறுதி முதற்குணங்க டயங்கு மென்னு
நினைவொடுநீ பல்காலும் பாவித்தா லனுபவத்தி னிலைவந் தெய்து
மனையதென வருந்தகர வித்தையிது காயம்போ லண்டத் துள்ளும்
இனையமுறை மையினிற்கும் காயத்தின் பரிசுனக்கிங் கிசைத்தோ மிப்பால்.''

இப்பாடல், மூப்பு இறப்பு முதலிய மாயையின் குணங்கள் கூடிய தேகமாயினும், பலகாலம் பாவித்தால் அனுபவத்தில் தகரவித்தையாகிய ஞானநிலை கைகூடும். இப்படி 'பிண்டத்தில் உள்ளது போல் அண்டத்தில் விளங்கும் தகரவித்தையைக் கூறுவோம்' என்று வேதவியாச முனிவர் சைமினி முனிவருக்குக் கூறினார். இப்பாடல் கருத்து கீழ்க்கண்ட திருவாசகப் பாடலோடு ஒத்துள்ளது.

நல்கா தொழியா நமக்கென்றுன் நாமம் பிதற்றி நயனநீர்
மல்காவாழ்த்தா வாய்குழறா வணங்காமனத்தானினைந்துருகிப்
பல்காலுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம்பல மென்றே
ஒல்காநிற்கும் உயிர்க்கிரங்கியருளா யென்னை யுடையானே.

"அண்டமதிற் பாவிக்கு முறைமைகே ளண்டமருள் பிரமற் கண்டம்
வண்டகைய வடிவதனாற் பிரமபுர மவ்வண்ட வடிவி னோர்க்குக்
கொண்டவுளப் புண்டரிகம் புலியூரென் றருமறைகள் கூறலாலே
யெண்டருபுண் டரிகவக மெனப்படுமப் பதியின்னு மிசைப்பக் கேட்டி.''

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இப்பாடல் பிரமாண்டம் பிரமத்திற்கு சரீரம் இதில் இதயஸ்தானம் பெரும்பற்றப் புலியூர். இதனால் புண்டரீக புரம் சிதம்பரம் என்பதாம்.

"அப்பெருஞ்சிற் றம்பலத்து ளானந்தத் தாண்டவநின் றாடா நின்ற
மெய்ப்பொருளே நுண்ணியவந் தரமலின மடையாளம் விகார மின்றி
யொப்பிகந்து நிறைந்திருக்கு மம்பரத்தோ டுடன்மிகவு முவமை யெய்து
மிப்பரிசா னுண்ணியவா காயமென வேதமெலா மிசையா நிற்கும்."

இப்பாடல் பெருமை பொருந்திய சிற்றம்பலத்துள் ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற மெய்ப் பொருளாகிய சிவம் சூக்கும சொரூபமாய் மாறுபாடு இல்லாததாய் ஒப்பில்லாததாய் நிறைந்திருக்கும் ஆகாயத்துடன் ஒப்புடையதாய்ச் சிறிய ஆகாயமென சிற்றம்பலமென்று வேதங்களெல்லாம் புகழ்ந்துரைக்கும் என்பதாம்.

"பூதவா காயம்போற் சடமாகா தருட்சித்தாய்ப் பொலித லாலே
யோதரும்ம் பரமான சபாபதியைச் சிதம்பரமென் றுரைத்த தந்தத்
தீதகன்ற சிதம்பரமெந் நாளுமில காநிற்குஞ் செயலா லென்று
மேதமிலாப் பதியதற்குஞ் சிதம்பரமென் றருணாம மெய்திற் றாமால்."

இப்பாடல் சிற்றம்பலம் பூதகாயம் போல் சடமாகாது. அருளுருவாய் ஞானாகாச சித்துருவாய் விளங்குவது ஞான சொரூபமான சபாபதியை ஞானாகாசமென்றே சொல்லப் பட்டது. குற்றமில்லாத பரமசிவன் சிற்சொரூபமாய் ஆனந்த தாண்டவம் செய்கிறபடியால் குற்றமில்லாத அத்தலத்திற்குச் சிதம்பரமென்று பெயர் கிடைத்தது என்பதாம் சிதம்பரம் என்ற சொல். தனந்தன என்ற ஓசை உடையது. 'தனந்தன' என்பது நடன ஓசை.

"திகழ்ந்தவருட் சிதம்பரமாந் திருச்சிற்றம் பலத்துறையும் தேவுன்னாலே
புகழ்ந்திடவுந் தியானத்திற் புணர்ந்திடவும் பணிந்திடவும் பூசை செய்து
மகிழ்ந்திடவும் பெறக்கடவ னிப்படிநீ நடத்தியேன் மலமா யாதி
யகழ்ந்தரிய பரஞான வெளிவீட்டி லடைவதற்கோ ரைய முண்டோ."

இப்பாடல் அருள்விளங்கும் சிதம்பரத்தில் திருச்சிற்றம்பலத்தில் ஆடுகின்ற பரமேஸ்வரன் உன்னாலே புகழவும், தியானம் செய்யவும், பணியவும் பூசை செய்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மகிழவும் கிடைத்திருக்கிறான். அப்படியே செய்தாயானால் மலகன்ம மாயா சம்பந்தம் நீங்கி பரஞான வெளிவீட்டில் சேர்வதற்குச் சந்தேகமில்லை என்பதாம்.

சொற்கமையா தெனவுரைத்த வளவிலாப் பதியவற்றுட் சுரர்களேத்து
மெய்க்கதிர்சூ முலகமொரு வடிவான விராட்புருட னிதய மான
பொற்கமலம் பொற்பொதுவே யவ்வெல்லை யளவையாற் போற்றற் கெட்டா
சிற்கருணை முதனிலையா யுறையுமென முறையிடுமத் தெய்வ வேதம்.

இப்பாடல் இவ்வளவென்று சொல்லுதற்கரிய சிவத்தலங்கள் அனேகமா யிருப்பினும் உலக வடிவான விராட் புருடனுக்கு உள்ளக் கமலமாக விளங்குகின்றது கனகசபை பொன்னம்பலத்தின் மகிமை இவ்வள வென்றறிந்து தோத்திரம் செய்தற்கரியது. ஞான வடிவமான பரமசிவன் தலங்களுக் கெல்லாம் முதலாகக் கொண்டு நடனம் செய்கின்றது எனத் தெய்வத் தன்மை பொருந்திய வேதங்கள் ஓதி முறையிடுகின்றது என்பதாம்.

ஆதலினா லெத்தலமு மித்தலத்துக் கொவ்வாதா லாவி யுள்ளப்
போதிலுட லிடத்தளா யிருந்தாலும் விசேடித்தும் புணருமா போ
லோதலுறு மற்றையவை யவந்தன்னி லுறாதுநா னென்போ ருள்ள
மீதுகரம் வைத்துரைப்பக் கண்டனமான் மற்றுறுப்பின் வியப்பா முள்ளம்.

இப்பாடல், ஆதலால் எந்தத்தலமும் இந்தச்சிதம் பரத்தலத்திற்குச் சமானமாகாது உயிரானது உடல் முழுவதும் வியாபித்திருந்தாலும் நானென்று சொல்லுகிறவர்கள் கரத்தை மார்பில் வைத்துச் சுட்டிக் காட்டுவதல்லாமல் வேறு அவயவங்களைத் தொட்டுக் காட்டுவதில்லை இதை பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். எல்லா அவயவங்களிலும் இதயத்தானமே அதிகம். அதுபோல விராட்புருடன் இதயகமலமான சிதம்பரத்தலமே எத்தலத்திற்கும் அதிகமாம் என்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka

சிதம்பரபுராணம் துச்சகச் சருக்கம்

"பொதுவி னாட்டலைக் காணிலப் புரத்திடை மாயிற்
கதிய டைந்திடக் கண்டனம் கடற்றலத் தெந்தப்
பதியி னும்பெரி திப்பதி பகர்விராட் புருட
னிதய பங்கய மீதென விருக்கிசைத் தலினால்."

இப்பாடல் திருச்சிற்றம்பலத்தில் அம்பலவாண மூர்த்தியின் நடனக் காட்சியைத் தரிசனம் செய்தாலும் அந்த எல்லைக்குள் இறந்தாலும் சிவபதவியை அடையக் கண்டோம். அதனால் சகல தலங்களிலும் சிதம்பரத்தலமே அதிகம் அதெப்படி யென்றால் விராட்புருடன் இதயாரவிந்தத்தலம். சிதம்பரமென்று இருக்குவேதம் சொல்லுகிறபடியால் அத்தலமே உத்தமத்தில் உத்தமம் என்று கூறுகிறது.

"இன்ன தென்னமன் றிறைகொளும் பூசையாலெந்த
நன்னெடும் பதிப் பூசையு நடந்ததே யாகும்
பொன்னி னம்பல வாணர்க்கு பூசையின் றேலப்
பன்னெடும் பதிப் பூசையாற் பயன்கள்வே றென்னோ."

சிதம்பரத்தில் பூசை நன்றாக நடந்தால் மற்ற எல்லாத் தலங்களிலும் பூசை நடைபெற்றதாகும். அம்பலவாணருக்குப் பூசை நடைபெறவில்லையானால் மற்ற எல்லாத் தலங்களிலும் பூசை நடைபெற்றாலும் பூசை செய்யாமலிருப் பதற்கு ஒப்பாம்.

சிதம்பரத்தல தரிசனம் – உயர்வும் – பலனும்

அம்பலவாணரைக் காணாமல் வேறு எந்தத் தலங்களைக் கண்டாலும் பயனில்லையாம். அம்பலவாணரைக் கண்டு வணங்கினால் ஆணவ முதலாகிய பகையை வென்று அருளைப் பெறலாம்.

மற்றத் தலங்களைக் கண்டு வணங்குவதெல்லாம் அம்பலவாணரை வணங்குவதற்கு அநுகூலமாயிருக்கும். அம்பலவாணரைத் தரிசனம் செய்வது வேறுதல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தரிசனத்திற்குக் காரணமாகாது, சிவயோகிகள் உள்ளத்தில் தரிசனம் செய்கின்ற ஞானநிலைக்கு வேறு வழிபாடு சமானமாகாது போலாம். ஆதலால் சிதம்பரதரிசனத்திற்குச் சமானமான தரிசனம் வேறு கிடையாது. வேறு எந்தத் தலங்களைத் தரிசனம் செய்தாலும் எனக்குச் சிதம்பர தரிசனம் கிடைக்க வேண்டுமென்று தரிசனம் செய்தால் மேற்படி தரிசனம் செய்ததால் பலனுண்டாம். சிதம்பரதல தரிசனம் ஆசையில்லாமல் செய்த தப செபங்கள் சித்தியாக மாட்டாது பயனில்லாமற் போகும். சிதம்பரத்திலிருந்து சந்தேகம் கொண்டு வேறு தலத்திற்குச் சென்று முத்தியடைவோ மென்று சென்று இறந்தால் முத்தியில்லையாம். பாடல் வருமாறு,

"எப்பதி களினுமுள்ள விறையருண் மூர்த்தி யாவும்
செப்பருஞ் சிதம்பரத்துட் டிருவத்த யாமந் தன்னி
லொப்புற வடைதலானூ லுரைக்குமெக் காலத்துள்ளும்
அப்பெருங் காலச் சேவை யதிகவுத் தமமா மென்றே."

அர்த்தசாமத்தில் எல்லாத்தலங்களிலும் உள்ள சத்திகளும் சிதம்பரத்தில் வந்து குவிதலால் அர்த்தசாம தரிசனம் அதிக உத்தம பலனாம்.

"மாலயன் முதலா யுள்ள வானவர் குழுவுக் கெல்லா
மேலவன் புராரி யென்று விரித்திடுஞ் சுருதியாவும்
தாலமேற் றலங்க ளிந்தத் தலத்தினுக் கொவ்வா
றோலிடு மந்தவேதம் உரைக் கலா தென்றெனன்தகைமையென்றால்"

இப்பாடல் "விஷ்ணு பிரமன் முதலான தேவர்களுக் கெல்லாம் தலைவன் சிவனேயென்றும், எல்லாத் தலங்களுக்கும் முதலாக இருப்பது தில்லைப் பதியென்றும், வேதமெல்லாம் சொல்லும் இதனால் வேறு எந்தத் தலமும் சிதம்பரத்திற்கு ஒப்பாகாதாம்" என்றும் கூறுகிறது.

அதிகமொப் பானதேவ ரரன்றனக் கில்லை தில்லை
முதுபதி தனக்குமிந்த முறைமைவா னோரை வேணி
மதியவற் கொப்பென்றுள்ளு மனத்தரே பதித ரெந்தப்
பதியுமிப் பதிக்கொப்பென்னும் பதகரும் பதித ராவார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

''சிவபெருமானுக்குச் சமானமானவரும் மேலானவரும் இல்லை. அதுபோல சிதம்பரத்திற்குச் சமானமான மேலான தலங்களில்லை. உண்டு என்று எண்ணினவர் பாதகனினும் பாதகன்'' என்பதாம்.

''ஓதுபன் னெறியுள்வேத வொழுக்கமே யுயர்ச்சி முத்தி
சாதனம் பலவுட்பூதி சாதனந் தலைமை வெற்பின்
மாதொரு பாகற்கேற்க வழிபடும் பூசை தன்னு
ளாதர மவன்றன் அன்பர்க் கன்பினி ளளிக்கும் பூசை.''

அநேகசாத்திரங்களில் சொல்லும் ஆசாரங்களை விட வேதத்திற் சொல்லும் ஆசாரமே உத்தமம் மோட்ச சாதனமாகிய அநேகவித சாதனத்திலும் திருநீறு உருத்தி ராக்கமே உத்தமம் சிவபெருமானுக்குச் செய்கின்ற சகல பூசைகளிலும் அவனுடைய அடியாருக்குச் செய்கின்ற பூசையே உயர்ந்ததாம்.

''வேதமந் திரத்துட் போத மிகுஞ்சத வுருத்திர ம்பே
ராதிமந் திரத்தி னாடு மஞ்செழுத் ததிக மென்று
மேதமி லறங்க ளாதி யீந்திடும் விரதந் தன்னிற்
சீதரன் முதலோர் பேணும் சிவார்ச்சனை பெரிய தாகும்.''

வேதங்களில் சொல்லும் மந்திரங்களுக்கெல்லாம் உத்தமமாகியது உருத்திரமந்திரம். உருத்திர மந்திரத்தில் நடுநாயகமாக விளங்கும் பஞ்சாட்சரமே உத்தமம். தானதருமம் பலவிரதங்களினும் மேலானது. விஷ்ணு முதலான தேவர்கள் ஆவலோடு செய்யும் சிவபூசையே உயர்ந்ததாம்.

''வருணமெண் ணிலவுள் வேத மறையவ ருயர்ந்தோர்நீதி
யருளுமாச் சிரமந் தன்னுட்டுறந்தவ ரதிக ரன்பு
பெருகிய வறத்திற் கொல்லாப் பேரறம் பெரிது நன்றாந்
தருபவ ரவருட் டக்க தேசிகர் தலைவ ராவார்.

இப்பாடல் அநேக சாதி பதங்களில் வேதமோதும் வைதிக பிராமணரே அதிகம். ஆச்சிரமங்களுக் கெல்லாம் ஞானத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யுணர்த்தும் சந்நியாசமே அதிகம். எல்லா அறங்களிலும் உயிர்களைக் கொல்லாஅறமே அதிகம். நன்மையைக் கொடுக்கின்றவர்களில் ஞானோபதேசம் செய்யும் குருவே அதிகம் என்பதாம்.

"பற்பல ஞானந் தன்னுட் பரசிவ ஞான மேலாம்
பொற்புறு மிவைகள் போலப் புடவிமேற் பதிக டம்முட்
கற்பனை யில்லா ஞானக் ககனமென் றிருக்கோ லிட்ட
வற்புதங் கொண்ட தில்லை யம்பல மதிக மன்றே."

பலவகையான ஞானத்தில் சிவஞானம் உயர்ந்ததாம். இவைகள் போல 'உலகிலுள்ள எல்லாத் தலங்களிலும் சிதம்பரம் உயர்ந்த'தென்று இருக்கு வேதம் கூறியுள்ளது.

"பத்தியு நியமந்தானு முயர்ச்சியும் பழுதொன் றின்றி
முத்தியு முத்தி நல்கும் முழுமுத றானு நீங்காச்
சத்தியுஞ் சிவமு மான தனிச்சுட ராடல் கண்டு
வித்தக வீடு காண்டி வேறிதற் கைய மின்றால்."

இப்படிச் சைமினி முனிவருக்கு வேதவியாசர் அருளிச் செய்ததாகச் சிதம்பரபுராணத்தில் கூறப்பட்டது.

சிவதத்துவ விவேகம்

திருவாவடுதுறை யாதீனத்துச் சிவஞான சுவாமிகள் மொழி பெயர்த்தது.

"மலைமக டுணைவன் முக்கண னீல மணிமிடற் றவனென வானோர்
திலகனே யுன்னைத் தகரமாங் குகையுட் டியானஞ்செய் திடுமுறை செப்பி
யலரவன் முகுந்த னீசனோ டெவையு மையநின் விபூதியென் றுரைக்கு
மலவிரு டுமித்துச் சிவச்சுடர் விளக்க வந்தவகை வல்லிய மறையே."

இப்பாடல் தகராகாசத்தில் சிவபெருமானைத் தியானம் செய்கின்ற முன்றகூறிப் பிரம விஷ்ணு உருத்திரன் ஆகியோரும் மற்றத் தேவர்களும் உன்னுடைய அருளினால் மகிமை பெற்றார்களென்று சிவஞானம் தரவல்ல கைவல்லிய உபநிடதம் உரைக்கின்றது என்று கூறியது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மிகுமது சுருதி கூறுமுன் றகர வித்தையை வேறுள விசேடப்
பகுதிக ளானுந் தயித்தி ரியந்தான் பகர்ந்திடும் வள்ளலே மாயோ
னகமுறு பொருளா யுனைத் தியானிப்பா னவன்றனை நடுவனோதிடுமவ்
வகையறி யாத பேதைகண் மயக்கான் மற்றொரு வாறுகொள் ளுவரே."

இப்பாடல் உயர்ந்த சுருதியில் கூறப்பட்ட உன் தகரவித்தையை விசேடப் பகுதியாய் தைத்திரீய உபநிடதம் உரைக்கும். மகாவிஷ்ணு இதயகமலத்தில் சிவபெருமானை தியானிப்பதால் சுருதியில் நடுவில் விஷ்ணுவைக் கூறும் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள மதியில்லாதவர்கள் வேறு வகையாகப் பொருள் கொள்வார்கள் என்று இரங்கிக் கூறுகிறது.

மன்றில் நின்நடனம் கண்டகண் கொண்டு
மற்றினிக் காண்பது யாது என்று
ஒன்றிய சிந்தை உறுதிகொள் ளுவனேல்
உய்குவேன்; எனக்குஅது போதும்;
குன்றவர் ஏனல் குரல்களை அறைக்கண்
கொண்டுபோய்க் குவித்துஅடும் யானைக்
கன்றினால் மிதிப்பித்து உதிர்தினை அளக்கும்
கற்குடிமா மலைப் பரனே!

— *மீனாட்சி சுந்தரம்பிள்ளை*
(திருக்கற்குடி மாமலை மாலை)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சித்திர சபையில் திருக்கூத்து

திருக்குற்றாலத் தலபுராணம் – திருநடச்சருக்கம்

சித்திரசபை. திரிகூடராசப்பக்கவிராயர் பாடியது. கூத்தர்கோயில்

திருக்குற்றாலம் சித்திரசபை என்பது அதில் தேவர்களும் முனிவர்களும் அனேக காலம் கடுமையான தவஞ் செய்தார்கள். திருக்கூத்துத் தரிசனம் செய்வதற்காக வாசுகி என்ற நாகராசனும் ஆனந்ததாண்டவம் காண வேண்டித் திருக்குற்றாலம் சென்றான். அங்கே தவம் செய்கின்றவர்களைப் பார்த்துத் திகைத்து இவ்வளவு கடுமையான தவம் செய்கின்றவர்கள் முன்பு நான் என்ன தவத்தைச் செய்வேன் என்று எண்ணித் திருவருளால் செய்வேன். தவம் முற்றாவிடினும் புல்லாக அல்லது மரமாக நின்றேனும், அருளைப் பெறுவோம். திருநடனம் காண்போம் என்று உறுதி கொண்டு அகத்திய முனிவரிடத்தில் சிவதீக்ஷை பெற்று விபூதி ருத்ராக்ஷதாரணம் செய்து தவநெறியில் நின்று காற்றை ஆகாரமாக உண்டு இரண்டாயிரம் ஆண்டும் நீரிலும் நெருப்பிலும் பொருப்பிலும் நின்று கொடியதவத்தைச் செய்தான். சிவபெருமான் மனமிரங்கி உமாதேவியுடன் விநாயகர் சுப்பிரமணியர் உடன்வர பூதக் கூட்டம் பொருகடல் போல் வர – திரிகூடமலைக்கு எழுந்தருளினான். தவம் செய்த தேவர்களும் முனிவர்களும் வாசுகியும் பரமேஸ்வரன் வரவை ஆசையோடு நோக்கி நின்றார்கள்.

"கருமணி மிடறு மூன்று கண்களும் புயங்க ணான்கும்
குருமணி வடமுஞ் செம்பொற் கொன்றை மாலையுமுந் நூலும்
மருமமும் பணிலத் தோட்டு மாசுணக் கம்பிக் காது
முருவமும் பொலிந்து தோன்றத் தோன்றினா னுமையோர் பாகன்."

இக்காட்சியைக் கண்ட தவத்தோரெல்லாம் அளவில்லாத ஆனந்த மடைந்தார்கள், அழுதார்கள், தொழுதார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"தரங்கநீ ருலகுக் கெல்லாம் தவமலாற் பொருள்வே றுண்டோ
புரந்தர னயன்மா லாதி புலவர்மா முனிவர் காணத்
திரம்பெறு திருக்குற் றாலச் சித்திரப் பொதுவாந் தெய்வ
வரங்கினி லாடப் போந்தா னகிலமு மாடல் காண்பான்."

வாணாசுரன் ஆயிரங்கரங்களினால் முழவு என்ற வாத்தியத்தை முழக்க, பானுகம்பன் ஆயிரம் வாய்களிலும் சங்கத்தொலி ஒலிக்க அச்சுவதரன் கம்பளதரன் இரண்டு செவிகளிலும் இனிமையாகப் பாட, முயலகன் முதுகின் மேல் நின்று கூடிய இலயம் சதிபிழையாமை கொடியிடை உமையவள் காண ஒருகரத்தில் உடுக்கையும், ஒருகரத்தில் அக்கினியும், ஒரு கரம் அபயமும், ஒரு கரம் வரதமும் விளங்கத் தேவர்கள் பூமழை பொழிய வேதம் கீதம் பாடவும், பிரம விஷ்ணுக்கள் துதிசெயச் சித்திரசபையில் ஆனந்த தாண்டவத்தைச் செய்தருளினார்.

"ஏண்டவ ரிருவர் சிவசிவ சிவவென் றேத்திட விருவரி லொருவன்
காண்டக வரிய சரணநூ புரங்கள் கலின்கலின் கலினெனக் கலிப்ப
வாண்டகை யமரர் சயசய சயவென் றார்த்திடச் சித்திர சபைக்கே.
தாண்டவம் பணிவார் தமக்கெலா முத்தி தகுந்தகுந் தகுமென நடித்தான்.

துடித்திர ளமரர் துந்துபித்திரளாஞ் சோபனக் கவுரிபொற் றாளம்
பிடிப்பளாஞ் சுருதி சுருதியாயிரமாம் பேரிசை வாக்குநா மகளே
படிப்பளா மயன்மா லிமையவர் பரவிப் பார்ப்பரா மகிலநா யகனே
நடிப்பனாம் பொதுவோர் சித்திரப் பொதுவா நடநவில் காட்சியார் நவில்வார்.

இப்படித் திருக்குற்றாலச் சித்திரச் சபையின் திருக்கூத்து திருக்குற்றாலத்தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

சித்திர சபை – திருவிருத்தப் பாடல்

ஆயிர முகக்கங்கை யலையெறிந் தாடமல
 ராடகக் கொன்றை யாட
வரவாட வாலவெண் பிறையாட வெண்டலைக
 ளாடவெள் ளறுகு மாட
ஞாயிறுத யம்பொரு சடாமகுட மாடவளர்
 நகைமுகக் கருணை யாட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நாககுண் டலமாட வதளாட வொருகையி
    னாதவெண் டுடியு மாட
மேயவொரு கையிலெரி யாடிட வமைத்தொருகை
    வீசியொரு கையா டவோர்
வீரவொண் கழலாட வுயிர்வர்க்க மானந்த
    வெள்ளந் திளைத் தாடவே
சேயிதழ்ச் சீறடிச் சிவகாமி யம்மையிரு
    திருநயன வண்டு மாடச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
    திருநடம் புரிவ ரதனே.

— திருக்குற்றாலச் சித்திர சபைத் திருவிருத்தம் (10)

— தொட்டிக்கலை மதுரகவி சுப்பிரமணிய முனிவர் இயற்றியது.

“வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கை
கொம்பார் சோலைக் கோலவண்டி யாழ்செய் குற்றாலம்
அம்பா னெய்யோ டாடலமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்.”

— திருஞானசம்பந்தர்

“உற்றாரை யான்வேண்டேன்ஊர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்
குற்றாலத்தமர்ந் துறையும் கூத்தாவுன் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.”

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

வேணுவனப்புராணம் திருநெல்வேலி – தாமிரசபையில் திருக்கூத்து

ஸ்ரீ நெல்லையப்பர் திருக்கோயில் பாண்டிய நாட்டுத் திருத்தலம். சுவாமி நெல்லையப்பர். சாலிவாடீஸ்வரர். வேணுவன மகாலிங்கேஸ்வரர் சுயம்பு மூர்த்தி அம்பாள் காந்திமதியம்மை வடிவுடையம்மை. இங்குள்ள சபை தாமிர சபையாகும். நடராசர் தாமிர சபாபதி என்றழைக்கப்படுகிறார். பின்னால் உள்ள நடராசர் சந்தன சபாபதி என்றழைக்கப்படுகிறார். சிலாரூபம் வேதபட்டர் என்ற அந்தணர் சுவாமி திருவமுதுக்காகக் காய்ந்த நெல் மழையினால் நனையாதபடி, வேலியிட்டு ரக்ஷித்த படியால் சுவாமிக்கு நெல்வேலி நாதர் என்ற திருநாமம் ஏற்பட்டது. அதனால் இத்தலம் திருநெல்வேலி என்ற பெயரைப் பெற்றது அம்பாள் நாமம் காந்திமதி.

இறைவர் மூங்கில் வடிவாக இருந்து பாற்குடம் சுமந்து சென்ற அன்பனைக் கால் இடறச் செய்து தன்மீது பால் கொட்டி அபிஷேகம் பண்ணிக் கொண்டார். அதனால் அவன் கோபித்து வெட்டிய படியால் சிவலிங்கத்தில் வெட்டப்பட்ட அடையாளம் உள்ளது. இதனால் இத்தலம் வேணுவனம் என்ற பெயரைப் பெற்றது.

வேணுவனம் என்ற இத்தலத்தில் சிவபெருமானுடைய ஆனந்ததாண்டவத்தைக் காண வேண்டுமென்று உமாதேவி மிகுந்த ஆசையுடையவளாய்ச் சிவபெருமானிடம் வேணுவனத்தில் தாண்டவக் காட்சியைக் கொடுத்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள்.

உமாதேவியின் வேண்டுதலுக்காக உயிர்கள் நலம் பெறுவதற்காக, திருநெல்வேலியில் தாமிர சபையில் பானுகம்பன் இரண்டாயிரம் கரங்களால் ஆயிரம் சங்கத்தை முழக்க, அகத்திய முனிவர் முறையோடு யாழ்வாசிக்க, சாரதர் எனும் பூதகணத்தவர் பாட, தும்புருவும் நாரதரும் கின்னரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்னும் வாத்தியத்தை வாசிக்கவும், சிவபெருமான் முயலகன் முதுகில் வலது திருவடியை ஊன்றி இடது திருவடியை எடுத்தருளி அருள்தர வருகின்ற வரவு போன்று ஒரு மலர்க்கரம் வீசி ஒப்பற்ற மற்றொரு கரத்தால் அபயம் அளிக்கும் முத்திரையைக் காட்டி, இடது திருக்கரத்தில் அக்கினியை தாங்கியும், வலது திருக்கரத்தில் உடுக்கையை வைத்தும், உமாதேவியை நோக்கியும், புன்னகை காட்டியும், படர்ந்த சடை ஆடவும், கங்கை ஆடவும் சந்திரன் ஆட தோள்களில் தொங்கும் பாம்பு ஆடவும் இரு செவிகளிலும் குழை. தோடு ஆடவும், மார்பில் மாலைகள் ஆட, உடுக்கை ஆட, கனல் ஆட, திருவடியில் சிலம்பு ஆட, திசைகள் ஆட, அண்டங்கள் ஆட, தேவர்கள் ஆட, சராசரம் அனைத்தும் ஆட பரமேசுவரன் ஆனந்த தாண்டவம் உமாதேவி கண்டுகளிக்கும் படியாக ஆடியருளினார். பாடல்கள் வருமாறு,

"ஒரு முயலகனுட னெறுநெறு நெறுவென ஒருதாள்வைத்
திருமையி னொருபத மிசைதிசை திசைகொள வியல்வீசித்
தரவருள் வரவென விரவொரு கரமலர்த் தளிர்வீசிப்
பொருவற வொருகரமபயம துறமுறை பொலிவித்தான்."

"எரியகல் ஒருகரம் மிசைகொடு மழைமுகில் இடிஎன்னப்
பெருகதிர் துடிஒரு கரமலர்மிசை கொடுபிறழ் பூசல்
கருவிழி உமையவள் மதிமுகம் மிசைதிகழ் கண்ணாகி
திருமுக மதியினில் நகைநில வெழஅருள் திகழ்வுற்றான்."

"படர்சடை ஆடப் பகிரதிஆடப் பனிகால் மெய்ச்
சுடர்மதி ஆடப் படவர வாடச் சுடர் வீசிப்
புடைதிகழ் காதில் குழைபொரு தாடப் புயமாடத்
தடவரை மார்பில் தொடைகளு மாடத் தகுமன்பால்."

"கரமரு வும்பொற் றுடியுடன் அங்கிக் கனலாடப்
பரிபுரம் அஞ்சொல் பெற எதிர் கொஞ்சிப் பதமாடப்
திரமிடும் எண்திக்குடன் உயர் அண்டத் திரள்ஆட
அருள்மிகு மன்பில் திருநடம் அன்புற் றருள்செய்தான்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அல்லல் வினைத்தீர் நல்ல தவத்தோர் அத்தாநல்
வல்லி இடத்தா நல்லநடத்தா மத்தாகல்
வில்ல நினைத்தோர் உள்ள அகத்தா புறத்தாவேய்
இல்லில் சுகத்தாள் தன்னை அளித்து ஆள்எனநின்றார்."

"அந்தமில் பூதகணங்கள் தபோதனர் அயன்மாலோடு
இந்திரன் வானோர் சந்திர சூரியர் இசைபாடும்
தந்திரன் கானவர் அம்புவியோர் புகழ்தரும் யாரும்
வந்தனையோடு பணிந்து புகழ்ந்து மகிழ்ந்தார்கள்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாலங்காடு இரத்தினசபையில் திருக்கூத்து

"கருதிய இந்தச் சபைதனில் நம்தாள் கண்டோர்கட்
கிருமையின் இன்பக் கதியை அளிப்போம் இது உண்மை
தரும்வரம் இனிஎன் உளதுரை என்றான் தனியன்பால்
மருவிய இன்பக் கௌரியும் இதுவே வரம் என்றாள்."

ஆலங்காடு–வடவாரண்யம் என்ற பெயருடையது. காரைக்காலம்மையார் தலையினால் நடந்து சென்று சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவ தரிசனம் கண்டு திருவடி நிழலில் இருந்து பாடிக் கொண்டிருக்கின்ற அற்புதத்தலம் மூவர் தேவாரமும் உடையது. காளியின் செருக்கு அடங்குமாறு ஊர்த்துவதாண்டவம் ஆடியருளிய திருத்தலம் பஞ்ச சபைகளில் இரத்தின சபையாக விளங்குவது சுநந்தர் என்ற முனிவரும், கார்க்கோடகன் என்ற நாகமும் வடவாரண்யத்தில் வெகுகாலம் சிவபெருமான் நடனக் காட்சியைக் காணத்தவம் செய்தார்கள்.

முனிவர் நெடுங்காலம் தவத்தில் இருந்த படியால் அவர்மேல் முஞ்சிப்புல் முளைத்து மூடியது அதனால் முஞ்சிகேச முனிவர் என்று பேர் பெற்றார். அதுகாலம் நிம்பன் –சும்பன். சண்டன் – முண்டன் என்ற அசுரர்கள். தேவர்களுக்கு அதிக துன்பத்தைச் செய்ய தேவர்கள் பார்வதி தேவியாரை வேண்ட பார்வதி தேவியார் தோளிலிருந்து சத்தியையும் சேனைகளையும் உண்டுபண்ணி அசுரர்களைத் சங்காரம் செய்தருளினார்.

சும்பனுடைய தங்கையின் (குரோதி) புத்திரனாகிய இரத்தபீசன் தன்னுடலில் இருந்து ஒருதுளி இரத்தம் சிந்தினால் தன்னைப் போல அசுரன் உண்டாகும்படி வரம் பெற்றவன். மாமன்மாரைச் சங்கரித்த செய்தியறிந்து யுத்தத்திற்கு வர சப்தமாதர்கள், அவனுடன் யுத்தம் செய்யும் போது அவனுடைய இரத்தம் கீழே விழாதபடி உமையம்மையார், காளியைத் தோற்றுவித்துக் காளியை நோக்கி 'இரத்தபீசனுடைய இரத்தம் பூமியில் விழாதபடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உண்பாயாக' என்று உத்திரவிட அவளப்படியே அவ்வசுரனுடைய இரத்தத்தைக் குடித்தாள். உமாதேவி இரத்த பீசனை அழித்தாள். இமையவர் துன்பத்தைத் தீர்த்தாள்.

காளிக்குச் சண்டியென்கிறபெயரும். தெய்வீகசத்தியும் சிவபெருமானிடம் நர்த்தனம் செய்து வசிக்கின்ற பேற்றையும் கொடுத்துதவி தேவி கைலாயத்திற்கு எழுந்தருளினாள். பிறகு காளிதேவி அசுரனுடைய உதிரத்தைக் குடித்த படியால், வரம்பெற்ற படியால் செருக்கடைந்து, மாமிச நிணம் புசித்து மோகினி இடாகினி பசாசு பூதகணங்களோடு உலகமுழுதும் உலாவித்திரிந்து மக்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து வருத்தினாள்.

நாரதமுனிவர் கார்க்கோடக முனிவர் மூலம் காளியின் கொடுமையைக் கேட்டுக் காளியின் பக்கம் செல்லக் காளி நாரதரை விழுங்க வர அவர் மறைந்து விஷ்ணுவோடு சென்று சிவபெருமானிடம் காளியின் தீச் செயலைக் கூற 'காளியினால் வரும்துன்பத்தைப் போக்குவோம்' என்று கூறி வடவாரண்யம் சென்றார். சிவபிரானுடன் வந்த பூத சேனைகளுடன் காளியின் சேனை எதிர்த்துத் தோற்று ஓடிகாளிக்குக் கூறினார்கள்.

காளி சிவபெருமானைக் கண்டு பயந்து 'நிருத்தயுத்தம் செய்வோம்.' என்று கூற அவ்வாறே சுவாமியானவர். கார்கோடகன் சுநந்தமுனிவர் ஆகியோருக்குத் தாண்டவக் காட்சியை வழங்கவும், காளிசெருக்கு அடங்கவும் பாண்டரங்கமாகிய சண்டதாண்டவத்தை நிகழ்த்தியருளினார். வாணாசுரன் முழவு என்ற வாத்தியத்தை முழக்கினான். பானுகம்பன் ஆயிரம் வாய்களிலும் சங்கநாதம் செய்தான். பூதகணங்கள் பலவகை வாத்தியங்களை முழக்கினார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். பலவகையான சுவைபொருந்திய நடனம் செய்யும் பொழுது நடனவேகத்தினால் சுவாமியின் திருச்செவியின் குண்டலம் கீழே விழ அப்போது தனது திருவடியினாலே எடுத்துக் காதில் அணிந்து கொண்டார். அதுபோழ்து நிகழ்ந்த தாண்டவம். ஊர்த்துவ தாண்டவம் என்பதாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இத்தாண்டவத்தின் மூலம் காளி தோற்றுச் செயலற்று நாணிப்பணிந்தாள். சுவாமியானவர் இங்கு 'ஒரு சத்தியாக இரு' என்று அநுக்கிரகித்துச் சுநந்தர் கார்க்கோடகன் ஆகிய இருமுனிவருக்கும் இன்னும் எண்ணில்லா முனிவர்களுக்கும் காரைக்காலம்மையாருக்கும் 'சண்டதாண்டவம்' என்ற ஊர்த்துவதாண்டவத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார். அவர்களால் நமக்கும் அந்தக்காட்சி கிடைத்துள்ளது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

"முத்தா முத்திதரவல்ல முகிழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர் போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங்காடாவுன் அடியார்க் கடியேன் ஆவேனே."

திருவாசகம்

"தேன்புக்கத் தண்பனை சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடி
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ."

திருவாலங்காட்டுப் புராணம்

"இன்சுவை பொழியுஞ் சாய லபிநய மிலங்கச் செவ்வாய்
புன்சிறு முறுவல் பூப்பப் புரணவா னந்தம்பூரித்
தன்புறு மவையோருள்ள மயர்தர வியங்கட் கேற்ப
வின்படு நடனங் காளி யோடரன் விளைத்த வேலை."

"மடிதரு முலக மென்ன வயங்கரு ணல்கி மெல்ல
வடிபெயர்த் தாடல் செய்ய வருகுறுங் காளி நோக்கி
யொடிவுறு நாணின் மேவி யொளிமுக மிறைஞ்சியொல்கி
வடிவுறு பாவைபோலச் செயலற மயங்கி நின்றாள்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்புகழ்

"அதலசேட னாராட அகிலமேரு மீதாட
அபினகாளி தானாட அவளோ டன்
றதிரவீசி வாதாடு விடையிலேறு வாராட
அருகுபூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில் வேத னாராட
மருவுவானு ளோராட மதியாட
வனசமாமி யாராட நெடியமாம னாராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்." — *திருக்கழுக்குன்றம்*

"வேதவெற்பி லேபுனத்தில் மேவிநிற்கு மபிராம்
வேடுவச்சி பாதபத்ம மீதுசெச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்க ஆறிரட்டி புயநேய
ஆதரத்தொ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே
காதுமுக்ர வீரபத்ர காளிவெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலர்பத்தி இமையோரை
ஓதுவித்த நாதர்கற்க ஓதுவித்தமுனி நாண
ஓரெழுத்தி லாறெழுத்தை ஓதுவித்த பெருமாளே."

பரமேஸ்வரனுடைய திருக்கூத்தைப் பாடாத அருளாளர்கள் யாருமில்லை. பரமஞானி – பட்டிணத்துச் சுவாமிகள் அடியேனுக்கும் எல்லாருக்கும் தந்தையை, முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் தலைவனை, அழிவில்லாதவனை, எல்லாருக்கும் தாயாகிய சிவகாம சுந்தரிக்குப் பிரியமானவனை, பொருளாக இருப்பவனை, பொன்னம்பலத்தில் ஆடுந்தலைவனைத் தரிசிக்க இந்தக் கண்கள் எத்தனைகோடியுகம் தவம் செய்ததோ என்று ஆச்சரியமாகக் பாடுகிறார். பாடல் வருமாறு,

"அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க்கதிபதியை
நித்தனை யம்மை சிவகாம சுந்தரிநேசனை யெங்
கத்தனைப் பொன்னம் பலத்தாடுமை யனைக்காணக் கண்கள்
எத்தனை கோடியுகமோ தவஞ் செய்திருக் கின்றவே."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குமரகுருபரசுவாமிகள் நூல்களில் திருக்கூத்து

குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதாரம் செய்தவர். ஐந்தாவது வயதில் திருச்செந்திலாண்டவன் திருவருளால் சிவஞானமும் சிவ்கலையு முணர்ந்தவர். அவர் இயற்றிய சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை நூல்களில். சிதம்பர நடனத்தைப் பற்றி அருளியுள்ளார். அதிற் சில பாடல் வருமாறு.

சிதம்பரமும்மணிக்கோவை

மனதைப் பல வழிகளில் ஓடச்செய்கின்ற பஞ்சேந் திரியங்களாகிய ஐந்து பாம்புகளை ஆட்டுகின்ற சித்தராகிய உம்மை ஒரு பாம்பு ஆட்டுவிக்கத் தேவரீர் ஆடுகின்ற காரணமென்ன என்று வினாவாகக் கேட்கிறார்.

"ஓட்டுவிக்கக் கூட்டினைவிட் டோடும் பொறியரவைந்
தாட்டுவிக்குஞ் சித்தர்நீ ரானக்காற் - கூட்டமிட்டு
மன்றாடு மும்மையொரு மாசுணநின் றாட்டுவிக்க
நின்றாடு கின்றதென்கொ னீர்."

இது பதஞ்சலி முனிவர் செய்த தவத்தின் பெருமையைக் கூறியது. ஐந்து பாம்பை ஆட்டுகின்ற நீர். ஒரு பாம்பு ஆடும்படிவேண்ட ஆடுகின்றீரே என்று நயந்தோன்றப் பாடியது.

மலைகளே புயங்கள், விண்வெளியே திருமேனி மூதண்டமே திருமுடி, மேருமலையே வில்லாகவுடைய உமாபதியாகிய சிவபெருமான் நின்று ஆடுதற்குச் சிற்றம்பலம் பற்றுமோ என்று பாடுகிறார்.

"வேதண்டமே புயங்கள் விண்ணே திருமேனி
மூதண்ட கூடமே மோலியாம் கோதண்டம்
ஒற்றைமா மேரு வுமாபதியார் நின்றாடப்
பற்றுமோ சிற்றம்பலம்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இது சிவபெருமான் விசுவரூபன் என்பது கூறி விசுவரூபனாயுள்ள சுவாமி சிற்றம்பலம் சிறிய சபை இடம் போதுமா? என்று வினவி விசுவரூபனாயுள்ள பரமேசுவரன் நமக்காகத் திருமேனிதரித்துச் சிற்றம்பலம் என்ற ஞானவெளியில் ஆடுகின்றான் அதாவது கண்ணுக்கடங்காப் பெருமான் கண்ணுக்கடங்கும்படி நடிக்கின்றான் என்று அவன் எளிமையை வியந்து கூறி உண்மையும் நன்மையும் சொல்லியது. **'தேசன் சிவலோகன் திருச்சிற்றம்பலத்தே ஈசனார்'** என்று திருவாசகம் அருளியதும்,

> **"உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக**
> **இலகுபேர் இச்சா ஞானக் கிரியையுட் கரணமாக**
> **அலகிலா உயிர்ப் புலன்கட்கு அறிவினை ஆக்கி ஐந்து**
> **நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்."**

என்று சிவஞான சித்தியார் அருளியதையும் கலந்து காணவும்.

சிவபெருமான் தன்னை அடைந்தவர்களைத் தன்னைப் போலச் செய்பவர். சீவபோதம் நீக்கிச் சிவபோதம் பெறும்படியாகச் செய்பவர் சிவமாகச் செய்பவர். ஆனால் அவரை வேறொருவர் அவரியல்பை மாற்றித் தம்மைப் போலச் செய்ய முடியாது. ஆனால் ஒருவர், தம்மைப் போலச் செய்துவிட்டார். அவர் யாரென்னில் பதஞ்சலி முனிவர். அளவில்லாத தவத்தைச் செய்து பரமேஸ்வரனை எப்போதும் பதஞ்சலியாது ஆடும்படி செய்து பதஞ்சலியாராக்கினார் என் பிறவி ஓடும்படி அவர் ஆடும்படி செய்து பதஞ்சலியாராகிய முனிவர் சிவபெருமானைப் பதஞ்சலியாராக ஆக்கினார்.

> **"சென்றவரைத் தாமாக்குந் தில்லைச் சிற்றம்பலத்து**
> **மன்றவரைத் தாமாக்க வல்லவர் யார் என்றுமிவர்**
> **ஆடப் பதஞ்சலியா ராக்கினா ரென்பிறவி**
> **சாடப் பதஞ்சலியார் தாம்."**

"பதஞ்சலிக்கருளிய பரமநாடக" என்பது – திருவாசகம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருமுறை கும்பிட்டால் சிவகதிகூடும் என்று சொல்லுவது போல் வீசிய இடது திருக்கரம் குஞ்சிதபாதத்தைக் காட்டுகிறது அமைத்த வலது திருக்கரம் ஒரு தடவை கும்பிட்டால் போதும் என்பது போல இருக்கிறது கண்ணே காதாக வுடைய பதஞ்சலி முனிவர் காணும்படி சிவபெருமான் ஆடுகின்ற திருக்கூத்து என்று இந்தப்பாடல் கூறுகிறது. பாடல்.

"கூடுங்கதி ஒருகால் கும்பிட்டால் போதுமென
நாடுமபி நயத்தை நாடிற்றால் – ஓடியகட்
காதனார் காணவொரு கால்காட்டிக் கையமைத்து
நாதனார் செய்யும் நடம்."

இந்தப்பாடல் நல்ல சுவையும் உண்மையும் மலிந்திருப்பது. கதி என்பது நிலையான சிவலோக வாழ்வு. அது சிவகதி என்று கூறப்படும். **'கதியது பரமா அதிசயமாக'** என்பது திருவாசகம்.

"பற்றாங் கவை அற்றீர் பற்றும் பற்றாங் கதுபற்றி
நற்றாங்கதி அடைவோ மெனில் கெடுவீ ரோடி வம்மின்.
தெற்றார் சடைமுடியான் மன்னு திருப் பெருந்துறை இறைசீர்
கற்றாங் கவன் கழல் பேணின ரொடுங் கூடுமின் கலந்தே."

என்பதும் திருவாசகம். தரிசனமாத்திரத்தில் கதிதருவது சிதம்பரதரிசனம் இதனால்தான் அருணகிரிநாதர்.

"சிவசிவ ஹரகர தேவா நமோ நம
தெரிசன பரகதி யானாய் நமோ நம." என்று பாடினார்.

கால்காட்டிக் கையமைத்து நாதனார் செய்யும் நடம், என்னும் வாக்கியம் அழகாக உள்ளது. ஒருகால் கும்பிட்டால் போதும் கதிகூடும் என்பது நன்றாக உள்ளது.

சிதம்பரச் செய்யுட் கோவை

உயிர்களுக்குப் பிறப்பைக் கொடுப்பவர். பிரமதேவர் உயிர்கள் செய்த வினைக்குத் தக்க பிறவியைத் தருவார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆனால் சிதம்பர தரிசனம் செய்தவர்கள். பிரமதேவரிடத்தில் வரமாக 'எனக்கு ஒரு பிறப்புத்தர வேண்டும்' என்று கேட்டால் அவர் கொடுக்கமாட்டார். ஏனெனில் பரமேஸ்வரனுடைய திருக்கரத்தில் முந்தின பிரம தேவருடைய கபாலம் இருப்பதைப் பார்த்துப் பயந்து 'சிவபெருமானுடைய அடியார்களுக்குப் பிறப்புக் கொடுத்தோமானால் நம்முடைய தலையையும் கிள்ளி விடுவார்' என்ற பயத்தினால் சிதம்பரதரிசனம் செய்தவர்களுக்குப் பிறப்புத் தரமாட்டார் என்பதாம்.

"வரத்திற் பிறப்பொன் றருள் கெனினும் வள்ளல்
கரத்திற் கபாலத்தைக் காணூப் – புரத்தை
இரும்புண்ட ரீகபுரத் தெய்தினார்க் கீயான்
அரும்புண்ட ரீகத் தயன்."

இப்பாடலில். புண்டரீகபுரம் என்பது விராட் புருடனுக்கு இருதய கமலாமகையால் சிதம்பரத்திற்குப் புண்டரீகபுரம் என்று பெயர். புண்டரீகம் தாமரை. தாமரையில் வசிப்பவர் பிரமாவாகையால் பிரமனுக்குப் புண்டரீகத்தயன் என்பதாயிற்று.

சிவபெருமான் ஆடுகின்ற இடம் பொன்மன்றம் என்று கூறப்படும் அது பொற்றாம்மரை மலர்போல் உள்ளது. அந்த மன்றில் ஆடுகின்ற சிவபெருமான் தேனாக உள்ளார். சிவகாம வல்லியினுடைய கண்களாகிய வண்டுகள். அந்தத்தேனை உண்டு களிக்கிறது. இப்படி உருவகமாகப் பாடுகிறார். பொற்றாமரை. தேன் – வண்டு.

"பொன் மன்றம் பொற்றாமரை யொக்கு மம்மன்றிற்
செம்மல் திருமேனி தேனொக்கும் அத்தேனை
உண்டுகளிக்கும் களிவண்டை யொக்குமே
எம்பெரு மாட்டி விழி."

சிவபெருமான் திருநடனத்தைக் காணுகின்ற ஆற்றல் சிவகாமவல்லி ஒருத்திக்குத்தான் உண்டு. அவள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கூத்தைக் கண்டு அக்கூத்தின் பயனை உயிர்களின் பக்குவத்திற்குத் தக்கவாறு கூட்டுகிறாள் ஊட்டுகிறாள்.

தாய்ப்பால் உண்ணும் பருவமுள்ள இளங்குழவிக்கு பிணிவருமானால் அப்பிணியை நீக்க நேரே குழந்தைக்கு மருந்து கொடுக்காமல் தாய்மருந்துண்டு மருந்தின் சாரமாகவுள்ள பாலைக் குழந்தைக்கு ஊட்டி குழந்தையின் பிணியை நீக்குவது உலக வழக்கம். அதுபோல எல்லா உயிர்களுக்கும் தாயாகிய சிவகாமவல்லி உயிர்களுக்கு உள்ள மும்மல நோய் நீங்கத் திருக்கூத்தாகிய மருந்தைக் கண்டு, உண்டு, அனந்த கோடி குழந்தைகளுக்கும் உள்ள மலநோயைப் போக்கி இன்பத்தை உண்டு பண்ணுகிறாள்.

திருவானைக்காப் புராணம்

"இளங்குழவிப் பிணிக்கீன்ற தாய்மருந்து நுகர்வதுபோ லிருளின் மாண்ட
களங்குமளவு மலமுயிர்கட் கொழியவரு ணடங்காணுங் கடன்மீக் கொண்டு
வளங்குலவு தனதுபெருங் கற்புமொரு கணவரிறை மாண்புந் தோன்ற
விளங்கு மிரணிய மன்றினி ன்றருளு மணிவிளக்கை விளம்பி வாழ்வாம்."

— *கச்சியப்ப முனிவர்*

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

"கூடிய இலயஞ் சதிபிழையாமை கொடியிடை யுமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே அங்கணா எங்குற்றாய் என்று
தேடிய வானோர் சேர்திருமுல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ் சுடரே."

கூற்றின் தன்மை பொருந்திய சக்கரப் படையுடைய திருமால் முதலானவர்கள் வணங்கத் தில்லைவனத்தில் சோலையில் உள்ள மலர்களில் தேனொழுகவும், மன்றத்தில் பசும்பொன் ஒளி ஒழுகவும், ஒரு திருவடியை ஊன்றி கொன்றை மலரில் வண்டு பாடவும், மகுடம் ஆடவும், பிறைத் துண்டம் ஆடவும், புலித்தோலாடவுழ், அண்டம் ஆடவும், அகிலமும் ஆடவும், மேகம் ஓடுகின்ற கூந்தலையுடைய சிவகாமவல்லியோடு கறைக் கண்டனாகிய சிவபெருமான் ஆடுகின்ற திறத்தைக் காணுங்கள் காணுங்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்று இப்பாடலில் அறிவுறுத்துகிறார். கண்பெற்ற பயன் நடனக் காட்சியைக் காண்பதேயாகும். காணவில்லையானால் காணாத கண்ணெல்லாம் 'காணாத கண்களே' என்பார் திருஞான சம்பந்தர். பாடல் வருமாறு,

"கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத
லோரிறைஞ்சக் கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும்
பசும்பொன் மன்றத் தொருதா ளூன்றி
வண்டுபாடச் சுடர் மகுடமா டப்பிறைத்
துண்டமா டப்புலித் தோலுமா டப்பகி
ரண்டமா டக்குலைந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோடுங் கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ.

மூர்த்திதலம்தீர்த்தம் மூன்றும் சைவ சமயத்தில் முக்கியமாக வழிபாட்டுக்கு அவசியமானதாக உள்ளது. அவன் எழுந்தருளியிருக்கும் ஊர்தலமென்றும், அத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருமேனி மூர்த்தியென்றும், அக்கோயிலைச் சார்ந்துள்ள நீர்நிலைகள் தீர்த்தமென்றும் கூறப்படும்.

தலத்திற்குச் சென்று அவ்வூரை வணங்கித் தீர்த்தத்தில் மூழ்கி, மூர்த்தியை மனம்வாக்கு காயத்தினால் வழிபாடு செய்தலும் மிகமுக்கியமாம். இவ்வழிபாட்டை முறையாகச் செய்பவர்க்கு ஒப்பற்ற ஞானவாசகம் சொல்ல ஞானாசிரியர் வருவார் என்று தாயுமான சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

என்பதாம்.

சிவபெருமான் எல்லையில்லாத கருணையினால் மூர்த்தியாகவும் தலமாகவும் தீர்த்தமாகவும் விளங்கி மனிதர்கள் அறிந்தோ அறியாமலோ வந்து மூழ்கி கண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வழிபடுவர்களுக்குப் புண்ணியத்தைக் கூட்டி பாவத்தைப் போக்கி அருள் செய்கிறான் என்று விநாயகர்புராணம் கூறுகின்றது.

"மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்க்கங்கை முதலான
தீர்த்தமாக அறிந்தறியாத் திறத்தினாலுமுயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமைஅகற்றிஅறிவிப்பானெவனப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணமடைகின்றாம்.

என்பது அப்பாடல்.

மூர்த்தி தலம் தீர்த்தம்

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்திலுள்ளவை எல்லாம் சிறப்புடையதே. ஆயினும் எல்லாவற்றினும் சிறப்புடையதுசிதம்பரத்தலம்–நடராஜமூர்த்தி– சிவகங்கைத்தீர்த்தம் என்பது தெளிவு பெறும்படி கூறியுள்ளார் குமரகுருபரசுவாமிகள்.

தீர்த்த மென்பது சிவகங்கையே
ஏத்தருந் தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே. என்பது அப்பாடல்.

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்த ஆலகால விஷத்தைச் சிவபெருமான் உண்டு கண்டத்தில் நிறுத்தி தேவர்களுக்கு வந்த கண்டத்தைப் போக்கினார். தேவமாதர்களுடைய கழுத்தில் மங்கல நாண் நிலைபெற்றது. சிவபெருமானுடைய கழுத்து கறுப்பாக நீலமணி போல விளங்கியது சிவபெருமானுடைய கழுத்து கறுப்பாக இல்லையானால் தேவமாதர்களுடைய மார்பும் கையும் சிவப்பாகப் போய்விடும். ஏன், சிவபெருமான் விஷத்தை உண்ணாமலிருந்தால் தேவர்கள் அனைவரும் இறந்திருப்பார்கள். தேவமாதர்கள் அனைவரும் கையினால் மார்பில் அடித்துக் கொள்வார்கள். அதனால் கையும் மார்பும் சிவந்திருக்கும் என்று உண்மையும், நயமும், சுவையும் தோன்றப் பாடுகின்றார் குமரகுருபர சுவாமிகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப மன்று ளாடும்
நாயகன் கண்டம் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற் றம்மா
நாயகன் கண்டங் கராதேலந் நாட்டமரர் சேயிழை மாதருக்குச் செங்கைகளும்
கொங்கைகளுஞ் சிவக்கும் போலும்

இக்கருத்தை மதுரைக் கலம்பகத்தில் ஒருவகையாகப் பாடுகிறார்.

"நம்பா நினக்கோல முறையோ வெனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவ ரென்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர் கூடற் றடங்காவில் வண்டீர்." என்பது அப்பாடல்.

இக்கருத்து, கந்தபுராணத்தில் திருக்குற்றாலப் படலத்தில் அழகாக.

"செற்றாலம் உயிரனைத்தும் உண்டிடவே நிமிர்ந்தெழலும் சிந்தை மேற்கொள்
பற்றாலங் கதுநுகர்ந்து நான்முகனே முதலோர் தம் பாவை மார்கள்
பொற்றாலி தனையளித்தோன் புகழ்போற்றி முகின்மேனிப் புத்தேள் வைகும்
குற்றாலம் ஆவதொரு வளநகரைக் குறுமுனிவர் குறுகி னானால்"

என்று நயம்பட கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் பாடுகிறார்.

"வாழ்த்துமின் றில்லை நினைமின் மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு – வீழ்த்த
புறநெறியாற்றா தறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மெய்க்கண்ட சாத்திரங்களில் திருக்கூத்து

சிவசம்பந்தமான நூல்கள் எண்ணில்லாதன. அவை மூன்று வகையாக இருக்கும். 1. சிவதோத்திரம், 2. சிவசாத்திரம், 3. சிவபுராணம் என்பதாகும். தோத்திரம் என்பது பன்னிரு திருமுறை முதலாக மற்ற அருளாளர்கள் பாடியது. சாத்திரம் என்பது.

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிருந்திருபா உண்மை பிரகாசம் – வந்தவருட்
பண்பு வினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று."

என்ற பதினான்கு மெய் கண்ட சாத்திரங்களும் பண்டார சாத்திரங்களுமாம்.

புராணம் என்பது வேதவியாசர் பாடிய வடமொழியில் உள்ள பதினெட்டுப் புராணமும் அதன் வழியாகத் தமிழில் உள்ள கந்தபுராண முதலாக உள்ள மற்றதல புராணங்களுமாம். இவ்வெல்லா நூல்களுக்கும் முதனூலாக விளங்குவது சிவபரம்பொருள் அருளிச் செய்த வேத சிவாகமம் என்கிற அருள் நூல்களாம், மற்றச் சமயங்கள். எல்லாவற்றிற்கும் அந்தச் சமயத்தலைவர்களாகிய உயிர்வர்க்கமென்கிற ஆன்மாக்களால் செய்யப்பட்ட நூல்களே பிரமாண நூல்களாக இருக்கும்.

சைவ சமயத்திற்குப் பேர்றிவே சொரூபமாக விளங்கும் முழு முதற்கடவுளாகிய சிவ்பெருமான் அருளிச் செய்தது பிரமாண நூலாக உள்ளது. சிற்றறிவுடைய ஆன்மாக்களால் செய்யப்பட்ட நூல்கள் குறைவுடைய தாயும் இருக்கும். பதி பசு பாச உண்மைகளை முன்பின் முரண் இல்லாமல் உள்ளபடி சொல்லும், சிவஞான சித்தியாரில்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"வேதநூல் சைவநூ லென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லனாதியம லன்தருநூ லிரண்டும்
ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினான் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையின் ஒழிபொருள்வே தாந்தத்
தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்."

இதற்குச் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த பொழிப்புரை.

வேதசிவாகமம் இரண்டும் ஏனையோர் செய்யப்படும். வழிநூல் சார்புநூல் பூர்வ பக்க நூல்களினின் ஒன்றாக வைத்து எண்ணுவதற்கு ஒருவாற்றானும் இயைபு இன்றி அவை யனைத்திற்கும் முதனூலாகி அநாதி முத்தனாகிய இறைவனால் தரப்படும் நூலாக ஏனைய எல்லாம் இவையிரண்டினின்றும் விரிந்த நூல்களாகலின் இவ்விரு வகை நூலுமே நூலென்று உயர்த்துக் கூறப்படுவனவாம். முதனூலை ஒன்றாக வைத்தெண்ணாமல் இங்ஙனம் இருவகைப்படுத் தெண்ணியது என்னையெனின் அஃதொக்கும் முதல்வன் பெருங் கருணையாளன் ஆதலின் உலகத்தார் உய்தற் பொருட்டும் சத்திநிபாதம் உடையார் உய்தற் பொருட்டும், திருவுளத்திற் கருதிப் பொருள் பல படத் தோன்றும் சூத்திரமும் அதனை யவ்வாறாக வொட்டாது தெளித்து உரைக்கும் பாடியமும் போல முறையே வேதமுஞ் சிவாகமமும் செய்யப்பட்டன.

ஆகலான் அவையிரண்டும் முறையானே பொது நூல் சிறப்பு நூல் எனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும் போல வேறுவைத்தெண்ணப்பட்டன. இங்ஙனம் வேதத்திற் கூறும் கருமகாண்டப் பொருள்கட்கு இன்றியமையாது வேண்டப் பட்டு எஞ்சி நின்றன வாய பொருள்களையும் வேத முடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக் கொண்டு இனிது விளக்குவது சிவாகமம் ஆகலான். இதனின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேறாய வேதத்தின் பூர்வபக்கப் பொருளைச் சொல்லும் ஏனை நூல்கள் எல்லாம் பூர்வ பக்க நூலெனவும் அதன் சித்தாந்த சிவாகமம் பொருளைச் சொல்லுவதாய சித்தாந்தம் நூலெனவுமாம்.

சிவாகமத்தின் சிறப்பு கூறியவாறு,

"அருமறையா கமமுதனூல் அனைத்தும் உரைக்கையினான்
அளப்பரிதாம் அப்பொருளை அரன் அருளால்அணுக்கள்
தருவர்கள்பின் தனித்தனியே தாம் அறிந்த அளவில்
தர்க்கமொடுத் தரங்களினாற் சமயஞ் சாதித்து
மிருதிபுரா ணங்கலைகள் மற்றும் எல்லாம்
மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம்வே தாங்கஞ்
சுருதிசிவா கமம் ஒழியச் சொல்லுவ தொன்றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணாதே."

(பொ – ரை) நூலெனப்படுவன எல்லாம் ஒரு நிகரன ஆதல் இன்றி முதனூல் வழிநூல் சார்பு நூல் பூர்வபக்க நூல் எனப் பல்வேறு வகைப்பட்டு மேன்மேனூல்களை நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கள் மென்மையுடையனவாம். அவற்றுள் ஏனைச் சமய நூல்கள் எல்லாம் முதல் நூலாகிய வேதாகமப் பொருளை முழுவதும் உள்ளவாறு உணரமாட்டாதார் அவற்றுட் சிலபொருளைச் சமுத்திரகலசநியாயம் பற்றி ஆண்டாண்டு எடுத்துக் கொண்டு தத்தம் அறிவளவுக்கு ஏற்பத் தொகுத்தும் விரித்துஞ் செய்த நூல் ஆகலான், அவையெல்லாம் பூருவ பக்க நூலெனப்படும். சமயநூல் அல்லவாகிய மிருதி புராணங் கலைகள் மற்றும் என்பதனால் தழுவப்படும் உபாகமம் முதலாயின எல்லாம் அவ்வேதாகமப் பொருளை உள்ளவாறு உணர்ந்தோர் அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற் பொருட்டு நால்வகை யாப்பினுள் ஒன்றான் வழிப்படுத்துச் செய்த நூல் ஆகலான், அவை வழிநூல் எனப்படும். ஏனைக் காருடந் தக்கிணம் முதலிய ஆகமகங்களும், சிக்கை கற்பசூத்திரம் முதலிய வேதாங்களும் முறையே அவ்விரண்டனையும் உள்ளவாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உணர்தற்குச் சார்பாய்ப் புடைபட்டு நிகழுதலின், அவை சார்பு நூல் எனப்படும் இவ்வாறன்றி வேதாகமங்களின் அடங்காத பொருளாய் ஒன்றனை எடுத்துக் கொண்டு சுதந்திரமாய்ச் செய்யும் நூல் ஒன்றும் இல்லை உண்டு என்று சொல்லி பிணங்கும் பேதைகள் என் கடவார்.

எ–ம் எல்லாம் அருமறை ஆகமத்தே காணப்பட்டு அடங்குதலை இனிது விளக்கியவாறு.

"ஓதுசம யங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க தின்றி
நீதியினான் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினான் இவையெல்லாம் அருமறையாகமத்தே.
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீ ழடங்கும்."

(பொ – ரை) கண்ணில்லார் பலர் குழீஇக் கொண்டு வேழம் நின்றுழித் தலைப்பட்டுக் கையினால் தைவந்து வேறுவேறு கூறும் இலக்கணங்கள் எல்லாம் கண்ணுள்ளான் ஒருவன் கண்டு கூறும் அதன் இலக்கணத்துள் ஏகதேசமாய்க் காணப்பட்டு அடங்குமாறு போல, ஏனைச்சமய நூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனாயவாறு பற்றி அவ்வந் நூல்களிற் கூறும் பொருளியல் புகளெல்லாம் முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏக தேசமாய்க் காணப்பட்டு அவற்றுள டங்கும். சிவபிரானாற் செய்யப்பட்டு அவனையே தமக்கு முதலாகக் கொண்டுரைக்கும் அவ்விருவகை நூலும் அவ்விறைவன் திருவடியில் அடங்கும். (எ – ம்.)

மேற்கண்ட பாடலில் வேதசிவாகமங்களின் பெருமைகள் விளக்கப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

[அ] வேதசிவாகமப் – பெருமையும் – அவசியமும்

சிவபெருமான் கருணையினால் உருவத்திருமேனி தரித்துக் கொண்டு வேதாகமங்களை அருளிச் செய்யவில்லையானால் உயிர்கள் நன்னெறி தெரிந்து உயர்ந்த கதியடைய முடியாது. திருமால் முதலான தேவர்களுக்கும் குருபரம்பரையும் சிவநெறியும் தெரியாமல் நற்கதியடைய மாட்டார்கள்.

"ஆரண மாகமங்கள் அருளினா லுருவுகொண்டு
காரண னருளானாகில் கதிப்ப வரில்லையாகும்
நாரணன் முதலாயுள்ள நரர்சுரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே."

என்பது சிவஞான சித்தியார்.

"மையா ரொண் கண்ணார் மாடநெடுவீதி
கையார் பந்தோச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தானுல கேத்தச்
செய்யானுறை கோயில் சிற்றம் பலந்தானே."

இப்பாடலில் 'உலகம் ஏத்தி உய்வதற்காக வேதாகமங்களைச் சிவபெருமான் அருளிச் செய்தார்' என்று திருஞான சம்பந்த சுவாமிகள் அருளியுள்ளார்.

திருவாசகம்

"மன்னவனே யொன்று மாறு அறியாச் சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே விட்டிடுதி கண்டாய் மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவனே சொற் கழிந்தவனே கழியாத் தொழும்பர்
முன்னவனே பின்னும் ஆனவனே இம் முழுதையுமே."

இத்திருவாசகப் பாடலில் மெய்ம்மையுடையதாய் உயர்ந்ததா யுள்ள வேதாகமங்களை அருளிச் செய்தவனே என்று பாடுகிறார் மாணிக்கவாசகர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருமந்திரம்

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே."

மெய்ப்பொருளாகிய இறைவன் அருளிய நூல் வேதாகமம். இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய வேதம் நான்கு சிவாகமம் 28 காமிக முதலாக வாதுள மீறாக வடமொழியில் உள்ளது இந்த நூலுக்குச் சமானமான நூலோ உயர்ந்த நூலோ இல்லை. வேதாகமங்களுக்குச் சமானமான நூல் உண்டு என்றும், உயர்ந்தநூல் உண்டு என்று கூறுகின்றவர்களும் வேதாகமத்தைப் பழிப்பவர்களும் நரகத்தில் கிடப்பார்கள். அவர்கள் நரகத்தில் இருந்து மீள முடியாமல் ஏங்கி இளைப்பார்கள் என்று 'சிவதருமோத்தரம்' என்ற ஞானநூல் கூறுகின்றது. சிவதருமோத்தரம் முருகப்பெருமான் அகத்தியருக்கு உபதேசம் செய்தருளியது.

பாடல் வருமாறு,

ஒப்பிலி யநாதி முத்த னோதிய வேதமாதிக்
கொப்புயர் உரைப்போர் நிந்தை யுரைப்பவ றுன்னுவாரும்
வெப்பெரி நிரயந் தன்னுள் வீழ்ந்து வெந்துருகிவீயா
ரெப்பொழு தேறுவா மென்றிளைத் திளைத் தேங்குவாரே.

[ஆ] ஆதிசைவரின் பெருமையும் அவசியமும்

ஆலய நிர்மாணம் சிவலிங்கமுதலிய மூர்த்திபிரதிஷ்டை, கும்பாபிஷேகம், நித்திய, நைமித்திக, காமியபூசை, உற்சவாதி முதலியன எல்லாம் சிவாகமத்தில் சிவபெருமான் அருளிச் செய்த பிரகாரம் செய்ய வேண்டும். அதுவும் காசிப, கௌசிக, கௌதம, பரத்வாச, அகத்தியர் ஆகிய பஞ்சரிஷி கோத்திரத்தில் வந்த ஆதிசைவர்கள்தான் செய்ய வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'சிவன் முகத்திலே செனித்த விப்பிரசைவர்
இவரே யருச்சனைக்கென் றெண்.' என்பது சைவசமயநெறி.

"தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழி வழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைசிவ வேதியர்க்கே யுரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமையாம்புகழும் பெற்றியதோ."

என்பது பெரியபுராணம்.

பெரியபுராணம் பாடிய அருளாளராகிய சேக்கிழார் சுவாமிகள் சோழநாட்டு முதலமைச்சர் முக்காலமும் ஆலயத்தில் செய்யப்படும் பூசை முதலியன சிவவேதியர்க்கே உரியன என்றும் மற்றவர்க்கு உரிமையில்லையென்பதை தேற்றேகாரத்தால் சிவவேதியர்க்கே உரியன என்று பாடுகின்றார்.

இது முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணத்தில் அருளியது. திருஞானசம்பந்தர் சிதம்பரதரிசனம் செய்து முதலில் பாடியது.

"கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம் பலமேய
முற்றாவெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே." என்பதுஅத்தேவாரம்

இதில் உள்ள முக்கியக் கருத்தைச் சேக்கிழார் சுவாமிகள்,

"ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால்
வாழிதிருத் தில்லைவாழ் அந்தணரை முன் வைத்தே
ஏழிசையும் ஓங்க எடுத்தார் எமையாளும்
காழியர்தங் காவலனார் கற்றாங் கெரியோம்பி."

இத்திருப்பாட்டில் ''ஊழிமுதல்வராகிய சிவபெருமானுக்குப் பூசைத்தொழில் செய்கின்ற உரிமை உடையவர்களாகிய அந்தணரை முன் வைத்துப்பாடினார்'' என்று அருளிச் செய்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரத்திருப்பாட்டில் உமாதேவியை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமானை வழிவழியாக அடிமைசெய்யும் வேதியர்குலத்தில் வந்த சடையனார் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தந்தையாரை அறிவிக்கின்றார். பாடலில்,

"மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானியார் பால்
தீதகன் றுலக முய்யத்திரு வவதாரஞ் செய்தார்."

என்று பாடுகின்றார்.

மூன்று காலமும் முட்டில்லாமல் நடராசப்பெருமானைப் பூசிக்கின்ற மூவாயிரம் அந்தணர்களுக்கு மூர்த்தியாக உள்ளவர் சிவபெருமான் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்கின்றார்.

"முட்டாத முச்சந்தி மூவா யிரவர்க்கு மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக
விட்டானை மலை எடுத்த இராவணனைத் தலைபத்தும் நெரியக்காலால்
தொட்டானைப்புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாமன்றே."

திருவிளையாடற் புராணம்

இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்தில் சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் நாட்டில் மழையில்லாமையால் வந்த துன்பம் நீங்கவேண்டி அகத்தியமுனிவரை வேண்டினார்கள். அகத்தியர் சிவபெருமானைப் பூசிக்கும் முறைகளைக் கூறி 'ஆலயத்தில் சிவலிங்கம் தீண்டுவதற்கு அருகரல்லாத வேதப் பிராமணர் முதலாக மற்ற வருணத்தோர் ஆசாரியன் தந்த இட்ட லிங்கத்தில் ஆகமவிதியால் பூசைசெய்க. அர்ச்சனைக் குரியரல்லாத" சாதியார் பொருள் கொடுத்து ஆதிசைவரால் பூசை செய்க' என்று கூறுகின்றாரென்று பரஞ்சோதி முனிவர் பாடுகின்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"ஆதியிவ் விலிங்கந் தீண்டற்கருக ரல்லாத வேத
வேதியர் முதலோ ரிட்ட விலிங்கத்திவ் விதியாலர்ச்சித்
தோதிய விரதநோற்க வர்ச்சனைக்குரிய ரல்லாச்
சாதியர் பொருணோர்ந்தாதி சைவராற்பூசை செய்தல்."

என்பது திருவிளையாடற் புராணம்.

ஆதிசைவர்கள் மாத்திரம் சிவமூர்த்தங்களைத் தீண்டி அர்ச்சிக்க உரிமையுடையவர்கள். மற்றப் பிராமணர்கள் தீண்டக்கூடாது. தீண்டினால் ஆதி சைவரால் பரிகாரம் செய்ய வேண்டும் என்று அருணகிரிப் புராணம் கூறுகின்றது.

"வைதிகர் பெறினும் சைவ தீக்கையை வாய்க்கவேதம்
கையினாற் பரார்த்தலிங்கம் தீண்டுதல் கடனோவன்று
வையகந் தனக்கு நாசம் வருமிவர் தீண்டிற்சுத்த
சைவராற் பரிகாரத்தைப் புரிகநூல் சாற்று மாற்றால்."

என்பது அந்தப்பாடல்.

வேதம் ஓதுகின்ற பிராமணரே தீண்டக்கூடாது என்றால் மற்ற வருணத்தாருக்குச் சிறிதும் உரிமையில்லை யென்பது சொல்லாமலே விளங்கும்.

பிரம சூத்திர சிவாத்துவித சைவ பாடி யத்தில் 'ஆதிசைவர் சிவப்பிராமணர் இவர்கள் சதாசிவராலே தீக்ஷிக்கப்பட்ட கவுசிகர்-காசிபர், பரத்துவாசர், கவுதமர், அகஸ்தியர் என்னும் ஐவர்' என்று காரணாகமங் கூறுகின்றது.

இந்தச் சிவசிருஷ்டர்களாகிய கவுசிகர் முதலிய ஐந்து ரிஷி கோத்திரத்தில் ஜனித்துச் சமயதீக்ஷை, விசேடதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியபிஷேகம் பெற்றவர்களே சர்வாதிகாரிகள் என்றும், உத்தமோத்தம சிவாசாரியர்கள் என்றும், பரார்த்தப்பிரதிஷ்டை, பரார்த்த பூசைகள் செய்தற்கு உரியவர்கள் என்றும், மற்றையோர் உரியரல்லர் என்றும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதனால் அவர்களே வேதாகம விற்பன்னர்களாகிக் கிருத கிருத்தியர்களாய் முப்போதும் சிவலிங்கத்தை அர்ச்சித்தலான் முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் என்றும் சொல்லப்படுவார். (கிருதகிருத்தியர் – விதிப்படி நடப்பவர்) இவர்களை 'முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கடியேன் என்று ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரும்அருளியுள்ளார்' என்று கூறப்பட்டது.

காசி முதலிய வடநாட்டில் வேதமுறை. கங்கை முதலிய புண்ணியநதிகளில் நீராடினால் அவர்கள் பரிசுத்தவான்களாக ஆகிவிடுகிறார்கள். அதனால் சுவாமி மீது நீரை ஊற்றி புஷ்பத்தை போட்டுக் கும்பிடலாம் என்கிற பொதுவான கங்கா மகத்துவம் அதிலும் சிவலிங்கத்தை மற்ற அபிஷேக அலங்காரம் பூசை உபசாரம் இவையெல்லாம் அங்குள்ள உரிமையுள்ள பிராமணர்கள்தான் செய்வார்கள். பொது மக்களுக்குப் பூசை உரிமையில்லை.

[இ] வடமொழி – தமிழ்மொழி – பெருமையும் அவசியமும்

நம் தமிழ்நாட்டில் சிவாகம முறைப்படி பிரதிஷ்டை பூசை முதலியன அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள சிவ பக்தர்கள் நமது வாக்கியமாகிய சிவாகமத்தைப் போற்றுவார்கள் இகழ மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் ஆதிகாலத்தில் சிவபெருமான் அமைத்துள்ளார். **தற்காலம் புதிய சிவபக்தர்கள் உண்டாகி வடமொழி வேண்டாம். வேதாகமம் வேண்டாம் என்று சொல்கிறார்கள். இது சிவாபசாரம் ஆகமவிரோதம் பெருங்குற்றம் இது.**

'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க' என்ற வாக்கியத்திற்கு விரோதமானது. 'வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்' என்ற அப்பர் சுவாமிகள் வாக்கியத்துக்கு விரோதமானது. மேலும் சைவர்களுக்கு வடமொழியும் தமிழ்மொழியும் சொந்தமானது சொந்தமான

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மொழியை அன்னியமென்று கூறுவது மிக அறியாமை; பேதைமை. இரண்டு மொழியும் சிவபெருமான் அருளிச் செய்துள்ளார். அது வருமாறு.

காஞ்சிப்புராணம்

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர் எனில்
கடல்வரைப்பின் இதன் பெருமை யாவரே கணித்தறிவார்."

இதில் வடமொழியை முதலில் கூறி அதற்கு இணையாகத் தென்மொழியைக் கூறுவதால் வடமொழிக்கு முதலிடமும் தென்மொழிக்கு இரண்டாவது இடமும் அமைந்துள்ளது. வடமொழி அண்ணன் தென்மொழி தம்பி. தந்தையானவர் இரண்டு வீடு மகனுக்கு வாங்கி வைத்தார். அதில் ஒரு வீடுதான் எனக்குச் சொந்தம் இன்னொரு வீடு வேறொருவருடையது என்று சொல்லுவானா? சொன்னால் அவனைப் புத்தியுடையவன் என்று பெரியோர்கள் எண்ணுவார்களா? ஆதலால் இரண்டு மொழியும் நம்முடையதே.

வடமொழி சமைக்கும் மொழி. தென்மொழி சாப்பிடும் மொழி. பிரதிஷ்டை (ஸ்தாபனம்) பூசை உபசாரம் யாகாதி முதலான கிரியைமொழிக்கு சமஸ்கிருதம். சுவாமியைப் புகழ்ந்து பாடுவதற்குத் தமிழ்மொழி. முக்கியமான சமயத்திற்கு விசேட சமயத்திற்கு அணிந்து கொள்கிற பட்டுச் சேலையைப்போல தமிழ்மொழித் திருமுறைகள்- சுவாமியைப் புகழ்ந்து பாடுவதற்குத் திருமுறையைப் போல வேறு பாடல் இல்லை. அதனால் புகழ்ந்து தோத்திரம் பண்ணுவதற்காகவே பயன்படுத்த வேண்டும். ''சொற்றமிழ் பாடுகென்றார் தூமறைபாடும் வாயார்'' என்பது பெரிய புராணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்

"மறைமுதற் கிளர்ந்தவாயான் மதிமுகிழ் முடித்தவேணி
இறைவர்தம் பெருமைநாட்டி இலக்கணஞ் செய்யப்பெற்றே
அறைகடற் வரைப்பிற்பாடை அனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த் தெய்வத்தை உண்ணினைந் தேத்தல் செய்வாம்."

இதில் மற்ற மொழிகளைத் தமிழ்மொழி வென்றது ஆரியத்தோடு சமானமாக உள்ளது என்பது குறிப்பானது 'ஆரியந்தமிழோடிசையானவன்' என்பது அப்பர் தமிழ். இதுகாறுங் கூறியவற்றால் சைவர்களாகிய நமக்கு முதனூல் வேதாகமங்களாம். இதனால் பரார்த்தபூசை, ஆன்மார்த்த பூசை ஆகியவை சிவாகமவிதிப்படியே செய்யவேண்டும் ஆகமவிதிதான் சிறந்தது. விதி என்றாலே ஆகம விதிதான் ஆகம விதிதான் தலைவிதியை நீக்கும்.

"பெரும்புலர் காலை மூழ்கி பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்புநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்கு
கரும்பினிற் கட்டிபோல்வர் கடவூர் வீரட்டனாரே."
என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

"எண்ணி லாகமம் இயம்பிய இறைவர்தம் விரும்பும்
உண்மை யாவது பூசனை என்று உரைத்தருள
அண்ண லார்தல அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து."

"நங்கைஉள்நிறை காதலை நோக்கி
நாயகன்திரு வுள்ளத்து மகிழ்ந்தே
அங்கண் எய்திய முறுவலுந் தோன்ற
அடுத்த தென்கொல் நின்பால்என வினவ
இங்கு நாதநீ மொழிந்தஆ மகத்தின்
இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
பொங்கு கின்றதென் ஆசை என் றிறைஞ்சி
போக மார்த்த பூண் முலையினாள் போற்ற."

என்பது பெரியபுராணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அம்மானே ஆகமசீலர்க்கருள் நல்கும்
பெம்மானே பேரருளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளிஅம்மானே."

என்பது சுந்தரர் தேவாரம்.

இதனால் பரார்த்தபூசை கோயிலில் சிவாகமவிதிப்படி சிவப்பிராமணர் செய்ய வேண்டும் மற்றையோர் சமய, விசேட, நிருவாணதீக்ஷை பெற்று இட்டலிங்கபூசை செய்ய வேண்டும். எல்லாம் சிவாகமவிதிப்படி தான் செய்ய வேண்டும் என்பது பெறப்பட்டது.

சாத்திர நூலான உண்மை விளக்கத்தில் திருக்கூத்து

வேதாகமங்களின் சாரமாய-தோத்திரரூபமாய் விளங்குவது பன்னிரு திருமுறைகள் சிவாகமத்தில் சரியாபாதம் கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு வகையாக இருக்கும். இதில் ஞானபாதப் பொருளைத் தெளிவு படச் சொல்லுவது சாத்திரம் என்கிற மெய்கண்ட நூல்கள் பதினான்கும்.

ஞானபாதப் பொருளாவன பதி, பசு, பாச உண்மைகளைக் கூறுவது. மேற்படி சாத்திர நூல்களில் உண்மையை விளக்கிக் கூறும் நூல் ஒன்று. அதன் பெயர் உண்மை விளக்கம் என்பது. அந்த நூலில் முப்பதாவது பாடல் முதலாக முப்பத்தொன்பதாவது பாடல் வரை பத்துப் பாடல் ஆனந்த தாண்டவத்தைப் பற்றிக் கூறுகின்றது.

30வது பாடல்

"நற்றவத்தோர் தாம் காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றாடல் உள்ளபடி - பெற்றிடநான்
விண்ணார் பொழில் வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணார் அருளாலே சாற்று."

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நல்லதவமுடைய ஆன்மாக்கள் தரிசிக்கத் தக்கதாக நாதமுடியிலே சிவபெருமான் பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு நிருத்தஞ் செய்கிற முறைமையை அடியேன் தரிசிக்கத்தக்கதாகத் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி யிருக்கும் மெய்கண்டதேவனே குளிர்ந்த கிருபையினாலே அருளல் வேண்டும்(எ-று)

36 தத்துவங்களில் 36வது தத்துவமாக இருப்பது, நாததத்துவம் அந்த நாததத்துவ முடிவில். அதாவது நாதாந்தம் என்கிற எல்லையில் திருவைந்தெழுத்தே திருமேனியாகக் கொண்டு நிருத்தம் செய்கிறார் என்பது முக்கியமான விஷயம். இது நாதாந்த நாடகம் என்று சொல்லப்படும் இந்த நாடகத்தை எல்லோரும் காணும்படியாக வெளியில் ஆடும்படியாகச் செய்தவர்கள் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற இரு முனிவர்கள்.

"எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாய நமவென்னும் திருவெழுத் தஞ்சாலே
அவாயமற நின்றாடு வான்."

எட்டும் இரண்டும் உருவாயிருக்கிற யகாரமாகிய ஆன்மாவிடத்திலே செய்யும் நடனத்தைப் புதல்வனே சொல்லக்கேள். பரமசிவன் சிகாரமாகிய பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு ஆன்மாக்களுக்குப் பிறவி யென்கிற அபாயம் ஒழியும்படியாக நிருத்தம் செய்தருளுவான்(எ-று)

எட்டும் இரண்டும் உருவானலிங்கத்தே நட்டம் என்பதில், எட்டு என்பது அகாரம் இரண்டு என்பது உகாரம் 'ம்' என்பதால் மகாரமும் இனம் பற்றிக் கூட்டினால் அகரம் உகரம் மகரம் என்று ஆகி அது ஓம் என்கிற பிரணவ உருவமாகும். இந்தப்பிரணவம் சமட்டிப் பிரணவமாகும் (சமட்டி தொகுத்தல்) இந்தப் பிரணவ பீடத்தில் நின்று நர்த்தனம் செய்கிறார் என்றும், பிரணவம் தாரகப் பிரமம் என்றும் சொல்லப்படும். லிங்கம் என்பது தோற்றம் ஒடுக்கம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆகிய இரண்டுக்கும் உரிய சொல்லாகக் குறியாக இருப்பது. பிரணவம் என்கிற ஓம் என்கிற எழுத்தில் 'ஓ' என்பது வாய் திறத்தலினாலும் 'ம்' என்பது வாய் மூடுவதினாலும் உண்டாகிற ஒலி திறத்தல் என்பது தோற்றம் மூடுதல் என்பது ஒடுக்கம் இலிங்கம் படைத்தல் காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதாகிய பரமேசுரப் பிரபாவம் லிங்க சித்திரித்தல் சிருட்டி சங்காரகாலத்திலே தோற்றமும் ஒடுக்கமும் உண்டாதற்குக் காரணமாயிருத்தலால் இலிங்கம் எனப்படும் என்றுஞ் சொல்வர். லிங்-லயம், 'கம்- தோற்றம். இன்னும் இலிங்கம் என்பது நாதவிந்து ரூபமாக இருக்கும் **'நாதவிந்து கலாதி நமோநம'** என்பது திருப்புகழ் - இதனால் தோற்றம் ஒடுக்கம் ஆகிய தொழிலைச் செய்கிற தாண்டவேசுவரர் - அவற்றைக் குறிக்கும் பிரணவ பீடத்தில் நின்று பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு நிருத்தம் செய்கின்றான் என்பது எட்டும்-இரண்டும் உருவான லிங்கத்தே நட்டம்'. என்பதால் உணரப்படும்.

> **ஈசன்மேவரு பீடமாய் ஏனையோர் தோற்றும்**
> **வாசமா எலா எழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்**
> **காசி தன்னிடைமுடிப்பவர்க் கெம்பிரான் கழறும்**
> **ஆசில்தாரகப் பிரமமாம் அதன் பயன் ஆய்ந்தான்.**

என்பது கந்தபுராணம். இவையெல்லாம் ஓம்சிவாயநம என்கிற பஞ்சாட்சர எழுத்துக்களே என்பது முடிவு. ஓம்-பீடம்-சிவாயநம- நடராசர்

> **"ஆடும் படிகேணல் அம்பலத்தா னையனே**
> **நாடும் திருவடியி லேநகரம் கூடும்**
> **மகரம் உதரம் வளர்தோள் சிகரம்**
> **பகருமுகம் வாமுடியப் பார்."**

மாணாக்கனே பொன்னம்பலமுடையான் நிருத்தம் செய்கிற முறைமையைச் சொல்லுகிறோம் கேள். மெஞ்ஞானிகள் விரும்புகிற திருவடியிலே நகாரமாகவும், திருவுந்தியிலே மகாரமாகவும், வளராநின்ற திருத்தோளிலே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

சிகாரமாகவும், புகழப்படுகின்ற திருமுகத்தில் வகாரமாகவும், திருமுடியிலே யகாரமாகவும் கொண்டருளித் திருநடனம் செய்வானென்று அறிவாயாக.

இது தூல பஞ்சாட்சர முறைமையை அறிவித்தது. பாதாதி முதலாகத் திருமுடியந்தமாகக் கூறப்பட்டது. "வேத மந்திர ரூபா நமோ நம" என்ற திருப்புகழின்படி சிவபெருமான் திருமேனி மந்திரசொரூபமாக உள்ளது என்பதாம். நமசிவாய என்ற இந்தத் தூல பஞ்சாக்கரம் இம்மைப் பயனை வழங்குவது.

"சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்.
தங்கும் மகரமது தான்."

ஒலிக்கின்ற தமருகமேந்திய திருக்கரம் சிகாரமாகவும், வீசிய திருக்கரம் வகரமாகவும், அமைத்த அபயகரம் யகரமாகவும், அக்கினியேந்திய திருக்கரம் நகரமாகவும், முயலகனை மிதித்த திருப்பாதம் மகரமாகவும் கொண்டு சூக்கும பஞ்சாட்சர திரு நடனத்தைச் செய்தருளுகின்றான். இது சூக்கும பஞ்சாட்சர நடனத்தை அறிவித்தது. சூக்கும பஞ்சாட்சரம் முத்திப் பயனைத் தருவது. இதனால்தான் 'திருவாய் பொலிய சிவாயநம என்று நீறணிந்தேன்- தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்துள்ளார். 'நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்' என்கிறார் மாணிக்கவாசகர்.

தூலபஞ்சாக்கர நடனம் உலகியலில் ஆன்மாக்களை செலுத்துவது. சூக்கும பஞ்சாட்சர நடனம் ஆன்மாக்களை அருளியலில் செலுத்துவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்- ஆங்காரம்
அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்."

பிரணவமந்திரமே திருவாசியாகவும், அந்த ஓங்காரத்தில் பொருந்தி நீங்காமல் இருக்கும் திருவைந்தெழுத்தே நிறை சுடராகிய பரமேசுவரனாம். நான் எனது என்னும் செருக்கற்றவர்கள் இவ்வுண்மையை அறிவார்கள். அழகிய திருவம்பலத்தான் செய்யும் இத்திருக்கூத்தை மெய்யன்புடன் தரிசிக்கப் பெற்றவர்கள் ஜெனனமரணம் இல்லாதுசிவ கதியைப் பெறுவார்கள்.

இது ஓங்காரமென்கிற பிரணவமே திருவாசியாகவும் நிருத்தம் செய்கிற சுவாமியே திருவைந்தெழுத்தாகவும் உள்ளது என்று அறிந்து வழிபாடு செய்தல் நன்மையாம். இது ஓம்சிவாயநம என்பது குறிப்பாக உணர வேண்டிய விஷயமாகும். இது ஆங்காரம் அற்றுப் போனால் விளங்கும் ஆங்காரம் என்பது யாதென்றால் சிவஞான சித்தியாரில்,

"ஆங்காரம் புத்தியின்கண் உதித்தகந் தைக்கு வித்தாய்
ஈங்கார்தான் என்னோ டொப்பார் என்றியா னென்ன தென்றே
நீங்காதே நிற்குந்தானும் மூன்றதாய் நிகழு மென்பர்
பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தைச தந்தான் என்றே" என்றும்,

தாயுமானவர் பாடலில்,

"ஆங்கார மானகுல வேடவெம் பேய் பாழ்த்த
ஆணவத்தினும் வலிது காண்
அறிவினை மயக்கிடும் நடுவறியவொட்டாது
யாதொன்று தொடினு மதுவாய்.' என்றும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கந்தரலங்காரத்தில்,

"ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார் தினைப்போ தளவும்
ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என் செய்வார் யமதூதருக்கே."

என்றும், ஆங்காரத்தின் தன்மை கூறியது.

இனி ஓங்காரத்தின் உயர்வு

"உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய்நின்ற மெய்யா"
– என்பது திருவாசகம்

உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்துட் பொருளை
ஐயன்எனக் கருளியாவாறார் பெறுவா ரச்சோவே –திருவாசகம்

"ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத்துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே."

"ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே" – திருமந்திரப் பாடல்கள்

ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்திலந்த மருள்வாயே. – என்பது திருப்புகழ்

"ஓமென்னும் பதமதனில் வேத மாதி
யுற்பவிக்கு மாலம் வித்தி னுதிக்குமாபோல்
ஓமென்னும் பதமதனையுரைத்தார் தாமே
யோதினர்கள் வேதாதி யுரைகளெல்லாம்
ஓமென்னும் பதப்பொருளை யுணர்ந்தார் தாமே
யுணர்ந்தாரும் வேதாதி யொருமைகூர
ஓமென்னும் பதமொழித்தஞ் செழுத்துமாதர்க்
கொழுங்குடைய சூத்திரர்க்கு முரைக்கலாமே."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்பது சிவதருமோத்தரம். இது ஓங்காரத்தின் சிறப்புக்கூறியது. இதனால் பிறப்பறுதலுக்கு உபாயம் கூறப்பட்டது.

"தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்- ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

தமருகமேந்திய திருக்கரத்திலே சிருட்டியாகவும், அமைத்த திருக்கரத்தில் திதி என்கிற ரட்சித்தலும் அக்கினியேந்திய திருக்கரத்தில் சங்காரமும், ஊன்றிய திருவடியிலே திரோபவமும், எடுத்த பொற்பாதத்திலே அனுக்கிரகமும் செய்வானென்று அறிவாயாக.

சிவபெருமான் ஒருவரே பஞ்ச கிருத்தியமும் செய்தருளுவார் என்பது உணர்த்தப்பட்டது. இது 'ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்' என்ற திருவாசகத்தால் நன்கு விளக்கப்பட்டது பஞ்சகிருத்தியம் முழுவதும் சிவன் ஒருவனே செய்கிறான் என்பது நடராசத் திருமேனியினால் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். படைப்பு முதலியவற்றைப் பிரமன் முதலானவர்கள் செய்கிறார்கள் என்பது உபசாரம்.

ஆனந்த தாண்டவத்தின் நோக்கமும், பலனும்

"மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாயஅமுக்கி அருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதந் தான்."

எந்தையாகிய பரமேசுவரன் தாண்டவம் செய்வதன் நோக்கம், ஆன்மாக்களைப் பேரின்ப வெள்ளத்தில் மகிழவைத்தல். இன்பவெள்ளத்தில் இருக்கவேண்டுமானால் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் நீங்க வேணும். மும்மல நீக்கத்திற்காக உடுக்கையை உதறி அதனால் மாயாமலத்தை நீக்கி, நெருப்பேந்திய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கரத்தால் கன்மமலத்தைச் சுட்டு நீக்கி, ஊன்றிய திருவடியினால் முயலகன் என்கிற ஆணவமலத்தை அமிழ்த்தி, அருள் என்கிற எடுத்த பொற்பாதத்தால் திருவருளைத் தந்து ஆன்மாக்களை ஆனந்தக்கடலில் திளைக்கவைக்கிறார். இதற்காகவே ஆனந்த தாண்டவத்தைச் செய்கின்றான் என்று இந்தப் பாடல் தெரிவிக்கிறது. திருவாசகத்தில் திருவம்மானையில்,

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
கல்லைப் பிசைந்து கனியாக்கித்தன் கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை
தில்லைநகர் புக்கு சிற்றம்பல மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்."

"மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்து
தானந்த மானிடத்தே தங்கியிடும்- ஆனந்தம்
மொண்டருந்தி நின்றாடல் காணுமருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து."

முடிவான மௌனமுடைய ஞானிகள் கர்த்தாவினுடைய கிருபையினாலே மூன்று மலங்களையும் நீக்கி ஆன்மபோதம் முடிந்தவிடத்திலே உதயமாகும் ஆனந்த வெள்ளத்தை முகந்து கொண்டு அநுபவிப்பதுதான் ஆன்மாக்களை இரட்சிக்க வேண்டுமென்னும் காருண்ணியமே திருமேனியாகக் கொண்ட திருவம்பலத்தான் திருநிருத்தம் செய்யும் முறைமையாம் (எ=று)

கேட்டுச் சிந்தித்து தெளிந்து நிட்டை கூடின பரமஞானிகள் மும்மலத்தை வென்று நீக்கி ஞானம் உதயமாகும், நிலைபெற்ற வேளையில் திருநிருத்தத்தில் உண்டாகிய ஆனந்த வெள்ளத்தை நன்றாக முகந்து அநுபவிப்பார்கள். அதற்காகவே அவன் திருக்கூத்தாடு கின்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாசகம்

"உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ."

"தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ."

என்று அருளிச் செய்யப்பட்டது.

"பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா ஒருவன்- வரைமகள்தான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு."

மனம் வாக்கு காயத்திற்கெட்டாத பரமேஸ்வரன் கருணையினால் பஞ்சாக்ஷரமே திருமேனியாகக் கொண்டு பராசத்தியாகிய திருவம்பலமே இடமாகக் கொண்டு மலைமகள் காணும்படிக்கு ஆடுகின்ற திருக்கூத்தை விரும்பிக் கண்டவர்களுக்குப் பிறப்பு உண்டோ! பிறவி இல்லையாம் (எ=று)

ஆன்மாக்களுடைய பசு கரணங்களுக்கு எட்டாத அரிய பொருளாக உள்ளவர் உமாதேவியார் காணும்படியாக நிருத்தம் செய்வது ஆச்சரியம். எட்டாதபொருள் கிட்ட வந்து ஆடுதல் என்பது நம்முடைய நன்மைக்காக அதனால் அந்தத்திருக்கூத்தை விரும்புவர்களுக்குப் பிறப்பு இல்லையாம்.

"கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாய்
சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்பது பெரிய புராணம். இது சிவனுடைய எளிமையை வியந்தது.

சிவபெருமானுடைய வடிவம் மந்திரவடிவம்

"சுத்தமாம் விந்துத் தன்னிற் றோன்றிய வாத லானும்
சத்திதான் பிரேரித் துப்பின் றானதிட்டித்துக் கொண்டே
அத்தினாற் புத்திமுத்தி யளித்தலா லரனுக்கென்றே
வைத்தவா மந்திரங்கள் வடிவென மறைக ளெல்லாம்."

என்பது சிவஞானசித்தியார்.

"நாதாந்த நாடகத்தை நன்றா யருள் செய்தீர்
ஓதீர் எழுத்தஞ்சும் உள்ளபடி – தீதறவே
அஞ்செழுத்தீ தாகில் அழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச அருட்குருவே சாற்று."

மண்முதலாக நாதமீறாக உள்ள தத்துவங்கள் முப்பத்தாறு தத்துவங்கள் மூன்று வகையாக உள்ளது. அது அசுத்தம் 24, சுத்தா சுத்தம் 7, சுத்தம் 5. இம்மூன்றும் மாயாசம்பந்தமானது அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, சுத்தமாயை என்று கூறப்படும். சிவபெருமான் மாயையைக் கடந்தவராதலால் அவர் ஆடுகின்ற இடம் ஞானாகாசம் – அருள்வெளி சிற்பரவியோமம் என்று கூறப்படும். நாததத்துவம் கடந்த திருக்கூத்தாகையால் அந்த நாடகம் நாதாந்தநாடகம் என்று அருளப்பட்டது. மாணவன் மிகவும் மகிழ்ந்து நாதாந்த நாடகத்தை நன்றாயருள் செய்தீர் என்று இந்தப்பாட்டில் ஆசிரியரைப் பாராட்டி மகிழ்கிறான்.

பட்டினத்துச் சுவாமிகள்

"பூதமுங் கரணம் பொறிக ளைம்புலனும் பொருந்திய குணங்க ளோர்மூன்றும்
நாதமுங் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிற்குநா ளுளதோ.
வாதமும் சமய பேதமுங் கடந்த மனோலய வின்பசா கரமே
யேதுமொன் றறியேன் யாதுநின் செயலே இறைவனே யேகநா யகனே."

என்பது அத்திருப்பாடல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"ஆறாறையுநீத் ததன்மேனிலையைப்
பேறா அடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகம் குளிர் வித்தவனே."

என்பது கந்தரனுபூதி. தில்லைத் திருநடம் கண்டவர்க் கெல்லாம் ஆனந்த முண்டாகும்.

ஒரு சமயம் திருமால் வாற்கவி என்கிற அசுரனை சங்காரம் செய்வதற்காகப் புறப்பட்டுத் தில்லை வந்து அம்பலத்தில் ஆடும் ஆனந்ததாண்டவத்தைக் கண்டார். தொழுதார் பரவசமாய் அறிவிழந்து கண்களில் நீர் பெருகத் திருக்கூத்தில் வந்த பேரின்பத்தில் மூழ்கி நான்குமாதம் எழுந்திருக்கவில்லை. பின்பு எழுந்து வணங்கி மகிழ்ந்து சென்றார் என்று கந்தபுராணம் கூறுகிறது.

"அங்கதற்பின் முறையாக அச்சுதன்பாற் கடல்அகன்று
நங்குழுவெ லாஞ்சூழ நாவலந்தீ வகத்தணுகி
எங்கள்பிரான் அருள்நடஞ்செய் எல்லையிலாத்தில்லைதனில்
துங்கமணி மன்றுதனைத் தொழுதுபர வசமானான்."

"செல்லரிய பரவசமாய்த் திருமுன்னே வீழ்ந்திறைஞ்சித்
தொல்லைதனில் அறிவிழந்து துணைவிழிகள் புனல் பெருகப்
பல்லுயிர்க்கும் உயிராகும் பரமசிவ பூரணத்தின்
எல்லைதனில் புக்கழுந்தி எழுந்திலன் ஈரிருதிங்கள்."

என்பது அப்பாடல்.

சைவசமயத்திற்குப் பெருஞ்செல்வமாகக் கிடைத்த பேரருளாளர்கள் சமயாசாரியர் நால்வரும் சந்தானாசாரியர் நால்வரும். இவர்கள் இவ்வுலகத்திற்குச் செய்த உபகாரம் அளவில்லாதன. சந்தானாசாரியர் நால்வரும் ஒருவர் மூலமாக ஒருவராக உபதேசம் பெற்றவர்கள். மெய்கண்ட சிவத்தின் மாணவர் அருணந்தி சிவம்; அருணந்தி சிவத்தின் மாணவர் மறைஞான சிவம்; மறைஞான சிவத்தின் மாணவர் உமாபதிசிவம், உமாபதிசிவத்தின் ஞானப்புதல்வர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருணமச்சிவாயர். அவரிடத்தில் உபதேசம் பெற்றவர் சித்தர் சிவப்பிரகாசர். அவரிடத்தில் உபதேசம் பெற்றவர் நமச்சிவாய மூர்த்திகள்.

திருவாவடுதுறை ஆதீன குரு முதல்வர் நமச்சிவாய மூர்த்திகள் முதல் தற்போது 7.4.1983 முதலாக அருளாட்சி செய்துவரும் சீர் வளர் சீர். சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வரையுள்ள திருவாவடுதுறை மகா சந்நிதானங்கள் சைவமும் தமிழும் ஓங்கி வளரச் சிறப்பான சிவப்பணி செய்து திருவருளை மக்களுக்கு வழங்கி வந்துள்ளார்கள். இன்னும் எல்லையில்லாத காலம் ஆதீனப்பணி சிறப்பாக வளர அம்பலவாணரை வாழ்த்துவோமாக. உமாபதிசிவம் பூசித்த ஞானமா நடராசப்பெருமான் திருவாவடுதுறை ஆதீனத்தில் பூசையில் இருந்துகொண்டு அருள் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குஞ்சிதாங்கிரிஸ்தவம் – என்ற நூலில் – திருக்கூத்து

உமாபதி சிவாச்சாரியார் தினமும் தில்லைநடராசப் பெருமானைப் பூசித்து அருள் பெற்றவர். வடமொழி தென்மொழி இரண்டிலும் அருள் நூல்கள் பல இயற்றி அருள் வழங்கியுள்ளார். அவர் அருளியுள்ள நூல்களில் ஒன்று வடமொழி குஞ்சிதாங்கிரிஸ்த்வம் என்பது 315-ஸ்லோகங் களையுடையது நடராாசமூர்த்தியின் பெருமை சிறப்பாக கூறப்படுகிறது அதனுடைய தமிழாக்கம் சில இங்குக் கூறப்படுகிறது.

விநாயகப்பெருமான் தோத்திரம்

சர்வமங்களங்கள் நிறைந்த தில்லைவனத்தில் சிதம்பரத்தில் நடராசருடைய ஆலயத்தில் மேற்குத்திக்கில் உள்ள கோபுரத்தின் கீழ் அழகுவாய்ந்த கோஷ்டத்தில் பிரகாசிப்பவரும், பக்தர்களுக்கு இஷ்டங்களை கொடுப்பதில் கற்பகவிருக்ஷம் போன்றவரும், நிருத்தனத்தில் அதிக ஆனந்தத்தோடு கூடினவரும், துர்வாஸர் முதலிய எல்லா முனிவர்களால் விசேஷமாக துதிக்கப்பட்டவரும், எல்லாவற்றிற்கும் ஈஸ்வரரும், முதலில் உண்டானவரும், நாசமற்றவருமான விநாயகர் மிகவும் நம்மை ரக்ஷிக்கட்டும்.

14. பதஞ்சலி பகவானானவர் வேதசாகைகளில் இதரர்களால் அறிய முடியாமல் இருக்கும்படி ஆங்காங்கு ஓதப்பட்டுள்ள விதிகளைத் திரட்டி நடராசமூர்த்தியின் நித்திய பூசை, மகோத்ஸவம், ஸம்புரோக்ஷணம் முதலியவைகளுக்கு சூத்திர ரூபமான ஓர் கிரந்தத்தை இயற்றி திருஸகஸ்ர முனீச்வரர்கள் என்கிற தீக்ஷிதர்களிடம் கொடுத்தார். அத்தீக்ஷிதர்கள் அம்முறை வழுவாமல் எந்த நடராஜ மூர்த்தியை வம்சபாரம்பர்யமாக பூசை செய்து கொண்டு வருகிறார்களோ அந்தக் குஞ்சிதாங்கிரிம்–தூக்கி வளைக்கப்பட்ட சரணங்களை உடையவருமான நடராஜ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூர்த்தியை வணங்குகிறேன்) (குஞ்சிதாங்கிரிம் என வரும் இடங்களில் மேலுள்ள வாசகத்தை நினைவில் கொள்ளவும்.)

15. சகல பக்தர்களுக்கும் சௌக்யத்தை செய்கிறவரான நடராசமூர்த்தியானவர் ஆறுகாலங்களிலேயும் தன்னைப் பூசை செய்ய வேண்டிய நிமித்தம் தீக்ஷிதர்களிடம் ஸ்படிகமயமான ஓர் லிங்கத்தை கொடுத்தாரோ அந்த குஞ்சிதாங்கிரிம்.

16. ஒரு சமயம் பிரமாவானவர் அந்தர்வேதி என்னும் பெரியக்ஷேத்திரத்தில் ஆயிரம் வருஷங்களால் ஸாதிக்கத் தகுந்த ஓர் யாகத்தை நடத்தினார். அக்காலம் வியாக்கிர பாதருடைய வாக்கியத்தினால் தீக்ஷிதர்கள் அங்கு ஸதஸ்யர்களாக வரிக்கப்பட்டார்கள். அக்காலம் பூசை செய்ய வேண்டிய நிமித்தம் அங்குள்ள ஆஹவகநீய குண்டத்திலிருந்து எந்தபரமசிவத்தின் அருளால் இரத்தின ஸபாபதி என்கிற ஓர் திருவுருவமானது உண்டு பண்ணி அவர்களிடம் கொடுக்கப்பட்டதோ அந்த மூர்த்திக்கு மூலமாயும் ஒன்பது இரத்தினங்களால் இழைக்கப்பட்ட மகுடத்தை உடையவருமான குஞ்சிதாங்கிரிம்.

42. யாதொரு நடராசமூர்த்திக்கு தென்புறத்தில் இப்பொழுதும் விஷ்ணுவானவர் மணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஆலயத்தில் தென்புறம் கால் இரண்டும் வடபுறம் தலையும் வைத்து ஐந்தலை நாகப்படுக்கையில் சயனித்தும் எப்பொழுதும் நித்திரையை செய்கிறவராக இருந்த பொழுதும், தனது ஹிருதயத்தில் தேவியோடு கூட யாதொரு நடராசமூர்த்தியின் பாதத்தைத் தியானம் பண்ணுகிறாரோ அப்படிப்பட்டவரும் விநாயகரை புத்திரராக உள்ளவருமான குஞ்சிதாங்கிரிம்.

46. முன்னொரு காலம் பசுபதியான எந்த பரமேஸ்வரர் தேவர்கள், முனிவர்கள், திருசகஸ்ரமுனீச்வரர்கள் இவர்களோடு கூடிய மனோமயம் என்று கூறப்பட்டுள்ள மூன்றாவதாக சொல்லப்பட்ட நிருத்தன சபையில் காளியோடுகூட ஒரு காலை உயரத்தூக்கி நடனஞ்செய்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அக்காளியை ஜெயித்தாரோ, எல்லாத்தேவர்களும் மஹரிஷிகளும் ஊர்த்வதாண்டவ மூர்த்தியான பரமேச்வரனை பிரபு வென்றும் சொல்லுகிறார்களோ, ஒவ்வொருநாளும் பரிசுத்தர்களான திருஸகஸ்ரமுனீச்வரர்கள் பூசை செய்கின்றார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

53. முன் ஒருகாலம் அர்ஜுனன் யாதொரு பரமேஸ்வரனுடைய லிங்கம் என்கிற பாவத்தினாலே கிருஷ்ணனை பூசை செய்தானோ அந்த நிர்மால்யம் எல்லாவற்றையும் பீமனுடைய மானஸ பூசையில் உள்ள எல்லா நிர்மால்யத்தையும் கைலையங்கிரியில் விளங்குகிற சங்கரனுடைய பாதங்களில் நன்கு பார்த்து அதன் காரணத்தைத் தனது தோழனும் குருவுமான கிருஷ்ண்னிடம் கேட்டானோ, அப்படிப்பட்ட சித்ஸபையில் நடனம் பண்ணுகிறவரான குஞ்சிதாங்கிரிம்.

54. கிருஷ்ணன் யமுனா நதியின் வடகரையில் எந்த பரமேச்வரனை சிவலிங்கத்தில் ஒவ்வொருநாளும் பூஜை செய்தாரோ யமுனையில் மிதந்து வருகிற அந்த கிருஷ்ணனுடைய பூஜா நிர்மால்யங்களை எடுத்துக்கொண்டு உபமன்யு என்கிற முனிச்ரேஷ்டர் தீக்ஷை இல்லாதவனுடைய பூஜா நிர்மால்யமானது நிர்மால்யமாக ஆகாது என்ற கருத்துடன் அந்நிர்மால்யங்களால் பரமசிவனை பூஜை செய்தார். அக்கிருஷ்ணனனன் இவ்விருத்தாந்தத்தை அறிந்து சீக்கிரமாக அம்முனிவரை அணுகி அம்முனிவரால் தீக்ஷை செய்விக்கப்பட்ட அக்கிருஷ்ணனுடைய பூஜாலிங்கத்திற்கு மூலஸ்தானராயும், பரிசுத்தமான நடனத்தைச் செய்கிறவராயும் உள்ள குஞ்சிதாங்கிரிம்.

58. ஒரு சமயம் தேவேந்திரன் குரங்குமுகம் உள்ள (முசுகுந்தசக்கரவர்த்தியினால்) தனது சத்ருக்களான அசுரர்களை சம்கரித்து அவ்வரசனிடம் தியாகராஜ மூர்த்தியையும் மற்றும் ஆறு தியாகராசமூர்த்திகளையும் கொடுத்து பூலோகத்திற்கு அனுப்பினான் அந்த அரசனும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூலாதாரக்ஷேத்திரம் என்று சொல்லுகிற திருவாரூரிலும், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்குவளை, திருவாய்மூர், திருக்காரவாசல், திருமறைக்காடு என்கிற ஏழு சிவஸ்தலங்களிலும் அம்மூர்த்திகளை ஸ்தாபித்து பிராமணர்களைக் கொண்டு பூசை செய்துவந்தான். அம்மூர்த்திகளுக்கு மூலஸ்தானமும் மஹரிஷிக் கூட்டத்தினால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

64. இடது கையில் அக்கினியையும் வலதுகையில் டமருகத்தையும் அபீதிமுத்திரையையும் நீட்டிய இடதுகை ஒன்றால் கொஞ்சம் தூக்கி வளைக்கப்பட்ட தாமரைப்பூவுக்கு ஒப்பான இடது பாதத்தை போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கிற விஷயத்தில் இந்த சரணமானது ஸமர்த்தம் வாய்ந்தது என்று பிராணிகளுக்கு காண்பித்துக் கொண்டு சித்ஸபையில் நடனம் செய்கிறவரும் உபநிஷத்துக்களாலே ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவருமான குஞ்சிதாங்கிரிம்.

116. யாதொரு பரமேச்வரனின் க்ஷேத்திரமான சிதம்பரத்தில் காகுஸ்தன் என்கிற அரசனுடைய வம்சத்தில் உண்டான தசரதன் என்கிற ஓர் அரசன். புத்திரப்பேறை அளிக்கிற வேள்வியை வஸிஷ்டர் முதலிய முனிவர்களின் வாக்கியத்தால் அனுஷ்டித்து ஸ்ரீபீஜத்தோடு கூடின பஞ்சாக்ஷரத்தை ஜபித்து ஒருவருஷகாலம் அங்கு வசித்து ஸபையில் நடராஜமூர்த்தியை தரிசித்து நடராஜ மூர்த்தியின் அனுக்கிரகத்தால் விஷ்ணுவின் அம்சம் தாங்கின ராமன் முதலான குமாரர்களை அடைந்தானோ அப்படிப்பட்ட பாபத்தைப் போக்கடிப்பவரான குஞ்சிதாங்கிரிம். (இவ்விதம் தில்லைவனமஹாத்மியம் என்னும் புராணத்தில் கூறப்படுகிறது.)

117. அகஸ்தியருடைய உபதேசத்தால் தண்டகாரண்யம் என்றவனத்தில் விரஜாஹோமத்தினால் உண்டான விபூதியில் உட்கார்ந்துகொண்டவரும் ஸீதா விரஹத்தோடு கூடியவரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேதஸார சிவஸகஸ்ரநாமஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்தவரும் தசரதரின் புத்திரருமான ராமரை, யாதொரு பரமேச்வரரானவர் சிவகீதோபதேசத்தினால் சோக மற்றவராகச் செய்தாரோ தனது பாசுபதாஸ்திரத்தையும் கொடுத்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

202. மனிதர்களுடைய வருஷம் தேவர்களுக்கு ஒருநாள் ஆகும் இது பிரஸித்தமானது அம்மனித வருஷத்தில் உள்ள மார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாசி – இந்த ஆறுமாதங்களில் உள்ள மஹாபிஷேக பூசைகள் யாதொரு நர்த்தனமூர்த்திக்கு உஷக்காலம், காலஸந்தி, உச்சிக்காலம், ஸாயரக்ஷை இரண்டாங்காலம் அர்த்தயாமம் ஆகிய ஆறுகால பூசைகளாக ஆகிறதுகளோ அப்படிப்பட்ட அஷ்டதிக் பாலகர்கள் முதலிய தேவர்களால் துதிக்கப்பட்டவரான குஞ்சிதாங்கிரிம்.

227. நந்திகேச்வரர் கைலாஸத்தில் தாழ்வரையில் வஸிக்கிற தேவர்களைக் குறித்து 'ஏ! தேவர்களே இவ்விடத்தில் ஏன் வஸிக்கிறீர்கள் பூமிக்கு ஹ்ருதயகமலத்தில் உள்ளதும் அகிலக்ஷேத்திரங்களுக்கு ஆதாரமும், புண்டரீகம் என்று பெயர் உள்ளதுமான சிதம்பரக்ஷேத்திரத்தை அடையுங்கள். அங்கு பரமேஸ்வரர் 1000-கலைகளோடு விளங்குகிறார்' என்று பிரியமான வார்த்தையால் யாதொரு நடராசதரிசனத்தின் பொருட்டு அப்பர்வதத்திலிருந்து அத்தேவர்களை சீக்கிரமாக போகும்படி ஆக்ஞாபித்தாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

268. பிராரப்தம் என்கின்ற கர்மாவானது அனுபவத்தினாலேயும், மிகவும் பயத்தை செய்கிறதான ஸஞ்சிதம் ஆகாமியம் என்கிற இரண்டும் ஞானத்தினாலேயும் நாசத்தை அடைகிறதுகள் என்று வேதவாக்கு சொல்லுகிறதுகள். இது பிரஸித்தம். அப்படிப்பட்ட அந்த கர்மங்களைத் தனது நடன விலாஸத்தோடு கூடின உருவத்தை ஒரு சமயம் எதேச்சையாய் பார்த்தமாத்திரத்தினால் போக்கடித்தும் பிராணிகளுக்கு சகல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுகங்களையும் அளித்தும் யாதொரு பரமேஸ்வரன் ஸபையில் விளங்குகிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

271. ஓ ஸ்வாமின் ஏ.கிருஷ்ணா, இந்தயுத்தரங்கத்தில் தங்கம் போன்ற சரீரமுள்ளவரும், விபூதி அணிந்தவரும், சூலம் ஏந்தியவரும், முகத்தில் இருந்து நெருப்புப் பொறிகளை பூமியில் வாரி இறைக்கிறவரும் இரண்டாம் பேர் இல்லாதவருமான ஓர் புருஷன் உலாவுகிறார் அவர் யார் சொல்லும் என்று வினயத்தோடு வேண்டின அர்ஜுனனிடம் வாஸுதேவர் ஒரு முகூர்த்தகாலம் யோகத்தினால் தியானம் செய்து யாதொரு மேச்வரனுடைய மஹாத்மியத்தைச் சொன்னாரோ அப்படிப்பட்ட உபமானம் இல்லாதவரான குஞ்சிதாங்கிரிம்.(இக்கதை பாரதம் துரோண பருவத்தில் கூறப்பட்டுள்ளது).

276. யாதொரு பரமேச்வரன் தனது சிரசில் உள்ள சந்திரனுடைய அமிர்தநுரையினால் பிடிக்கப்பட்டதும், காந்தியால் அடக்கப்பட்ட சந்திரன் அக்கினி சூரியன் மின்னல் இவைகளுடைய பிரகாசத்தை உடையதும், வைரத்திற்கு ஒப்பானதும் எப்பொழுதும் பிரகாசிக்கிறதுமான லிங்கத்தை (சந்திர மௌளீச்வரர்) என்கிற ஸ்படிகலிங்கத்தை ஒவ்வொரு காலங்களிலேயும் தன்னைப் பூசிப்பதற்காக ஸந்தோஷத்துடன் திருஸகஸ்ர முனீச்வரரள் என்கிற பிராம்மணர்களிடம் கொடுத்தாரோ ஸம்ஸார பயத்தைப் போக்கடிப்பவரான குஞ்சிதாங்கிரிம்.

278. யாதொரு பரமேச்வரனுடைய சத்தியான சிவகாம ஸுந்தரியம்பாளின் பிரஸாதத்தினால் இப்புவியில் சிதம்பரத்தில் உள்ள ராஜசபை என்கிற ஆயிரங்கால் மண்டபத்தில் மஹானும், ஆதிசேஷனின் அவதாரமுமான பதஞ்சலி யோகீச்வரர் பிராணிகளின் மனது வாக்கு சரீரம் இவைகளின் உள்ளதும், நீண்டதுமான மலத்தை (அஞ்ஞானம்) அபசப்தம் ரோகம் போக்கடிப்பதற்கும், பரமேச்வரனை வேதத்தில் சொன்னமுறைப்படி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூஜிப்பதற்கும், பாதஞ்ஜலம் என்று பெயர் உள்ளதுகளான யோகசாஸ்திரம் (யோகஸூத்திரம்) சப்தசாஸ்திரம் (மஹா பாஷ்யம்) ஔஷதக்கிரந்தம் சரகஸம்ஹிதா அர்சாகிரந்தம் (சிதம்பரேச்வரநித்ய பூஜா ஸூத்திரம்) இவைகளை இயற்றினாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

286. ஹிமயபர்வதத்தின் தாழ்வரையில் பரமேச்வரன் கௌரியோடு கூட ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் தருணம் தனது முகத்தில் உள்ள வேர்வையில் இருந்து உண்டானதும், காந்தியினால் ஸூர்யனை அதிக்கிரமித்ததுமான குழந்தையைக் கூப்பிட்டு பௌமன் என்கிற பெயரையும் மேஷம் விருக்ஷிகம் என்கிற இரண்டு வீட்டையும், கடனைப் போக்கடிக்கிற சக்தியையும், ஆடுவாகனத்தையும் அக்குழந்தைக்கு அளித்தாரோ அப்படிப்பட்ட தேவர்களால் துதிக்கப்பட்டவரான குஞ்சிதாங்கிரிம்.

299. யாதொரு பரமேச்வரனுடைய தாண்டவத்தைப் பார்க்கவேண்டி ராக்ஷஸேந்திரன் (ராவணன்) மிகவும் பக்தியோடு அக்கினியில் பத்துத் தலைகளையும் அறுத்து ஹோமம் செய்தானோ அவ்விதமே கைலாசத்தின் தாழ்வரையில் ஆதிசேஷன் தலைகளின் கூட்டங்களை அக்கினியில் ஹோமம் பண்ணினானோ, மற்றும் இதரர்களான தேவர்கள் தைத்தியர்கள் ஸித்தர்கள் ஸாத்தியர்கள் கடினமான தபஸில் தங்கள் தங்கள் சரீரங்களை பொசுக்கினவர்களாக ஆனார்களோ அப்படிப்பட்ட நரஸிம்ஹரால் துதிக்கப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

301. உலகத்தில் ஐச்வர்யங்களோடு கூடினவர்களான பிர்ம்மா விஷ்ணு இவர்களை ஆதியாக உள்ள தேவர்கள் இருக்கிறார்கள் என்பது வாஸ்தவமே. அவ்விதம் இருந்த போதிலும் அவர்களுக்குள் ஒருவராவது யுகாந்த காலத்தில் உயிரோடு இருப்பவர் இல்லை. அக்காலத்தில் மஹரிஷியும் இரண்டாம் பேர் அற்றவரும், தேவரும், உலகை கடந்தவரும் முதல்வரும், பிரபுவுமான ருத்திரர் ஒருவர் தான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரகாசிக்கிறார் என்று நீண்ட வாக்குகளை உடைய வேதங்கள் யாதொரு பரமேச்வரனைக் குறித்துச் சொல்லுகிறதுகளோ, அப்படிப்பட்ட பஞ்சபூதங்களுக்கும் உற்பத்தி விநாசத்தை செய்கிறவரான குஞ்சிதாங்கிரிம்.

305. சம்புவான நடராஜர் எனக்கு ரொம்பவும் பலமான மஹாமந்திரங்களுடைய சித்தியையும் பிறப்பு இறப்பை போக்கடிக்கிற ஆத்மபோதத்தையும், பெற்றான் சாம்பான் முதலியவர்களுக்கு முத்தியை அளிக்கக்கூடியதும், உலர்ந்ததுமான ஏடு எழுதி அனுப்பின காரணம்பற்றி உண்டான கௌரவத்தையும் கொடுத்துத் தனது தாண்டவத்தையும் காண்பித்து மிகவும் ஸுகத்தோடு கூடினவனாக செய்கிறாரோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

310. மஹான்கள் சிவ,ஹர, கிரிஜாகாந்த, தேவ என்கிற நாமாக்களை ஸதா உச்சரித்து, பரிசுத்தர்களாய்த் தள்ள முடியாததும், அதிகமான கிலேசத்தை உண்டு பண்ணி வைக்கிறதுமான மாயா விமோஹத்தைத் தள்ளியும் கொடுமையும் முக்குணஸம்பந்தத்தோடு ஆசை என்கிற பிசாசத்தை தியானம் செய்து நீக்கியும் சிவஸ்வரூபியான பரமேச்வரனை எப்பொழுதும் ஸேவிக்கிறார்களோ அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

311. பிர்மநிஷ்டர்களான ஸந்யாஸிகள் எப்பொழுதும் பரமேச்வரனுக்குப் பிரியங்கரமான க்ஷேத்திரங்களை அடைந்தும், பஸ்மருத்திராக்ஷங்களால் தனது சரீரத்தை அலங்கரித்தும், பரமேச்வரனுடைய வேதாந்தங்களில் கூறப்பட்ட சரித்திரத்தைக் கேட்டும் மிகவும் மூன்று காலங்களில் பூசித்தும் உற்பத்தி அற்றதான பிர்மபதத்தை அடைகிறார்களோ, அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

312. நான் எப்பொழுதும் பரமேச்வரனான நடபதியை நமஸ்கரித்து நல்லபத்தினியையும் நல்ல புத்திரனையும் அடைந்தேன். பரமேச்வரனுடைய ஸந்நிதியில் வேதமந்திரங்களை பாராயணம் செய்து லக்ஷீமி கடாக்ஷரத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடைந்தேன். யாகங்களில் விபுவான பரமேச்வரனை உத்தேசித்து ஹவிஸுகளை அர்ப்பணம் செய்தேன். நித்தியமான பரமேச்வரனைச் சரணமாக அடைந்தேன் அப்படிப்பட்ட குஞ்சிதாங்கிரிம்.

314. உமாபதியான என்னுடைய வாக்கில் இருந்து உண்டானதும் சித்ஸபையில் பரமானந்த தாண்டவம் செய்கிற சம்புவான பரமேச்வரனைப் பற்றினதுமான இந்த ஸ்தோத்திரத்தை ஒவ்வொருநாளும் அடிக்கடி எவர்கள் படிக்கிறார்களோ அவர்கள் இப்புவியில் மிகவும் முதலில் பத்தினி புத்திரன் பொருள் முதலிய ஸகல இஷ்டங்களையும் அடைந்து ஞானத்தோடு கூடினவனாகி இறுதியில் கைவல்யம் என்ற பெயருள்ள பதத்தையும் அடையட்டும்.

315. உமாபதி என்று பெயருள்ள வர்ணாச்ரமியான நான்முந்நூற்றுபதின்மூன்று எண்களோடு கூடின ஸ்ரீ குஞ்சிதாங்கிரிஸ்தவ ராஜம் என்று பெயருள்ள ஸ்துதியை சொல்லி ஸபாபதியினுடைய நடனத்தை ஸாக்ஷாத்தாகப் பார்த்தேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்புகழில் திருக்கூத்து

நமது பாரத நாட்டில் அருளாளர்கள் நிறைய அவதாரம் செய்துள்ளார்கள். பரமேசுவரனுடைய திருவருளைப் பெற்று அந்த திருவருளைப் பாடலாகப்பாடி நாமெல்லாம் திருவருளைப் பெறுவதற்காக கொடுத்துள்ளார்கள். ஞானிகளுடைய ஞானப்பாடல் மூலமாகக் கடவுளை அறிய, அடையமுடியும். அப்படிப்பட்ட ஞானிகளில் ஒருவர் அருணகிரிநாத சுவாமிகள் இவர் திருவண்ணாமலையில் அவதாரம் செய்தவர். பரஞ்சுடர் உருவாய் வந்த முருகப்பெருமான் திருவருள் பெற்றவர் நாடுமுழுவதும் சுற்றி முருகப்பெருமான் எழுந்தருளி யிருக்கும் தலங்களைத் தரிசித்து மதுரங்கனிந்த திருப்புகழ்ப்பா பாடியருளினார். வேதாகம, உபநிடத, புராண, இதிகாச, சாத்திர, தோத்திரக்கருத்துக்கள் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம் ஆகிய நூல்களில் அருளிச் செய்துள்ளார். சைவசித்தாந்தக் கருத்துக்கள் இவர் பாடலில் நிறைய உள்ளது. சிதம்பரத்தலத்துக்கு 67 திருப்புகழ்பாடியுள்ளார். அதில் சிலபாடல் வருமாறு,

திருப்புகழ்

"அவகுண விரகனை வேதாள ரூபனை
அசடனை மசடனை ஆசார வீனனை
அகதியை மறவனை ஆதாளிவாயனை அஞ்சுபூதம்

அடைசிய சவடனை மோடாதி மோடனை
அழிகரு வழிவரு வீணாதி வீணனை
அழுகலை யவிசலை ஆறான வூணனை அன்பிலாத

கவடனை விகடனை நானாவி காரனை
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியனை அலியனை ஆதேச வாழ்வனை வெம்பிவீழும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

களியனை யறிவுரை பேணாத மாநுட
கசனியை யசனியை மாபாத னாகிய
கதியிலி தனையடி நாயேனை யாளுவ தெந்தநாளோ.

மவுலியி லழகிய பாதாள லோகனு
மரகத முழுகிய காகோத ராஜனு
மநுநெறியுடன் வளர் சோணாடர் கோனுட னும்பர் சேரும்

மகபதி புகழ்புலி யூர் வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற வானாடர் கோவென
மலைமகளுமைதரு வாழ்வேம னோகர மன்றுளாடும்

சிவசிவ ஹரஹர தேவாந மோ நம
தெரிசன பரகதியானாய்ந மோநம
திசையினு மிசையினும் வாழ்வே நமோ நம செஞ்சொல்சேரும்

திருதரு கலவிம ணாளாந மோ நம
திரிபுரம் எரிசெய்த கோவேந மோநம
ஜெய ஜெய ஹர ஹர தேவாசு ராதிபர் தம்பிரானே."

இந்தத்திருப்புகழில் முன்பகுதி 12 வரிகளும் ஆன்மாவினுடைய தாழ்வையும் சிறுமையும் கூறப்படுகிறது. பின்பகுதி 12 வரிகளும் சிவசுப்பிரமணிய சுவாமியின் பெருமையும் ஆதிசேடன், பதஞ்சலி, இரண்யவர்மன், தேவேந்திரன் முதலானோர் வணங்குகின்ற தன்மையும், சிவசிவ ஹரஹர என்ற சிவநாம முழக்கமும், தெரிசன மாத்திரத்தில் பரகதியாகிய முத்திப்பேறும், சர்வ வியாபகமும், சிவமே முருகன் என்பதையும் தெளிவாக அருளிச் செய்கிறார். அருணகிரிநாத சுவாமிகள்.

திருப்புகழ்

"தாது மாமலர் முடியா லேபத
றாத நூபுர அடியா லேகர
தாள மாகிய நொடியா லேமடி பிடியாலே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சாடை பேசிய வகையா லேமிகு
வாடைபூசிய நகையா லேபல
தாறு மாறுகொல் மிகையா லேயன நடையாலே

மோகி மீறிய முலையா லேமுலை
மீதி லேறிய கலையா லேவெகு
மோடி நாணய விலையா லேமயல் தருமானார்

மோக வாரிதி தனிலே நாடொறு
மூழ்கு வேனுன தடியா ராகிய
மோன ஞானிக ளுடனே சேரவு மருள்வாயே.

காத லாயருள் புரிவாய் நான்மறை
மூல மேயென வுடனே மாகரி
காண நேர்வரு திருமால் நாரணன் மருகோனே

காதல் மாதவர் வலமே சூழ்சபை
நாத னார்தம திடமே வாழ்சிவ
காம நாயகி தருபா லாபுலி சையில் வாழ்வே

வேத நூன்முறை வழுவா மேதினம்
வேள்வி யாலெழில் புனைமூ வாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை புரிகோவே

வீறு சேர்வரை யரசாய் மேவிய
மேரு மால்வரை யெனநீள் கோபுர
மேலை வாயிலின் மயில்மீ தேறியபெருமாளே."

இந்தத் திருப்புகழ் இனிய அமுதம் போன்றது சொல்லழகு பொருளழகுடன் கூடியது. முதல் மூன்றடிகள் முடியாலே, அடியாலே, நொடியாலே, வகையாலே, நகையாலே, மிகையாலே, முலையாலே, கலையாலே, விலையாலே என்று வரும் வழி எதுகைகள் படிப்பவர்க்கு மதுரமாக இன்பந்தருவன.

திருப்புகழ் ஏடுகளை வாழ்நாள் முழுவதும் ஓடி நாடி தேடிச் சேகரித்துச் சோதித்து அச்சிட்டு அடியார்க்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வழங்கியவர். வடக்குப்பட்டு சிறந்தமுருகனடியார் திரு.வ.சுப்பிரமண்யபிள்ளையவர்கள்.இவர் இல்லையானால் திருப்புகழ் இல்லை திருப்புகழை ஓதுகின்ற அடியார்கள் இந்தச் சான்றோருக்கு நன்றி செலுத்தும் கடமை உடையவர்களாக இருக்க வேண்டும்.

திரு.வ.சுப்ரமண்யபிள்ளையவர்கள் முதன்முதலாக இத்திருப்புகழை 1871ல் சிதம்பரம் தீட்சிதர் ஒருவர் தர இதன் இனிமையைப் பருகி உள்ளம் உருகி ஏடுதேடி செப்பம் செய்து அச்சிட்டு உதவினார். எனவே திருப்புகழ் வெளிவருவதற்குக் காரணமாக இருந்தது இத்திருப்புகழ் என உணர்க.

திருமுறை பன்னிரண்டும், சாத்திரநூல்கள் ஒன்பது, திருப்புகழ் ஆகிய அருள்நூல்கள் இவ்வளவும் சிதம்பரத்தலத்திலேயே கிடைக்கப்பெற்றது. இதனால் நடராசப்பெருமான் இந்நூல்களைப் பாதுகாத்து நமக்குக் கொடுத்துள்ளார் என்பதை அன்பர்கள் உணர்ந்து மகிழ்வீர்களாக.

இத்திருப்புகழில் காதல்மாதவர் வலமே சூழ்சபை முதலாக உள்ள பாடற்கருத்துக்கள் மிகச்சிறப்புடையது. மெய்யன்புடைய மாதவர்கள் கனகசபையை வலம்வந்து வணங்குகிறார்கள். வேதநூலில் கூறியபடி தவறாமல் தினந்தோறும் சிவபெருமானை பூசை, யாகம், உற்சவம் ஆகியன செய்து மேன்மை பெற்றவர்களாய் விளங்குகின்ற மூவாயிரம் அந்தணர்கள் வாழ்கின்ற பதியென்றும் கூறுகின்றது. தில்லைவாழந்தணர்கள் மிகச் சிறப்புடைய வர்கள் திருஞானசம்பந்தருக்குச் சிவகணங்களாகக் காட்டினார். அவர் திருநீலகண்டயாழ்ப்பாணருக்கும் காட்டியருளினார்.

“அண்டத் திறைவர் அருளால் அணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமை கணநாத ராய்த் தோன்ற
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார்.”

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்பது பெரியபுராணம். கோயிற்புராணத்தில் தில்லை வாழந்தணர்களை சிறப்பித்துக் கூறி அதில் தில்லைக் கூத்தப் பெருமான் மூவாயிரவரில் ஒருவர் குறைய நாம் இவர்களில் ஒருவர் என்று இரண்யவர்மனுக்குக் கூறியருளினார். மேலும் திருத்தொண்டத்தொகையில் **'தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'** என்று சிவபெருமானே அடியெடுத்துக் கொடுத்தருளினார். இதனால் அவர்கள் பெருமை அளப்பரியது.

திருச்செந்தூர் திருப்புகழில் திருக்கூத்தின் சிறப்பு அழகான வருணனையில் அமைந்துள்ளது பாடல்.

"அமுதுததி விடமு மிழு செங்கட் டிங்கட்
பகலினொளிர் வெளிறெயிறு துஞ்சற் டிஞ்சித்
தலையுமுடை யவனரவ தண்டச் சண்டச் சமனோலை

அதுவருகு மளவிலுயி ரங்கிட் டிங்குப்
பறைதிமிலை திமிர்தமிகு தம்பட் டம்பற்
கரையவுற வினரலற வுந்திச் சந்தித் தெருவூடே

எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கிளையுமுது வசைதவிர இன்றைக் கன்றைக் கென நாடா

திடுககடி தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுட் டுண்டுட்
டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப் பகிராதோ

குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற் கொடியாடக்

குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலல திர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் தொகுதீதோ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
தமருகம ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக் குஞ்சற் குருநாதா

திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரளளறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதிதழுவு செந்திற் கந்தப் பெருமாளே."

இத்திருப்புகழில் பிற்பகுதி 12 வரிகளில் 9 வரிகள் ஆனந்த தாண்டவத்தில் நிகழும் செயல்களை மிகவும் அழகான சந்தத்தில் அழகாகப் பாடுகிறார் அருணகிரிநாத சுவாமிகள்.

குமுத மலருக்குப் பதியாகிய சந்திரனது பிறை தனது அமிர்த கிரணங்களை மிகவும் பொழியவும், திருவடியில் அணிந்துள்ள சிலம்பானது வேதவொலியைச் செய்யவும் வளைவுடைய சடை அத்திருநடனத்திற்கிணங்க அசைந்து தொங்கவும், ஒரு பக்கத்தில் கொடியிடையுடைய சிவகாமசுந்தரி ஆடவும், மேன்மை பொருந்திய கங்காநதி அசையவும், பாடல்கள் வாத்தியங்களின் இனிய ஒலி மிகுதி யாகப் பொங்கவும், பாதகமலத்திலுள்ள வீரகண்டாமணி அதிர்ந்து ஒலிக்கவும், டெகு டெகுட டெங்கட் டெங்க தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் தொகுதீதோ திமிதம் என்று முழவுகள் முழங்கவும், சிவந்த கரத்திலுள்ள உடுக்கையின் தாளவொத்துடனும் ஆநந்தநிருத்தம் புரிந்து அன்பர்களுக்கு என்றுமகலாத இன்ப வீட்டை வழங்கும் பரதநாடகத்திற்கு ஆசிரியராகிய சிவபெருமான் என்று அருமையான தெளிவான சொற்களால் தாண்டவத்தை வருணிக்கிறார் அருணகிரிநாதசுவாமிகள்.

தில்லைக்கலம்பகத்தில் திருக்கூத்து

தில்லைக்கலம்பகம் இரட்டைப்புலவர்கள், பாடியது. சொற்சுவை பொருட்சுவை உடையது. கலம்பகத்திற்கு இரட்டையர்கள் என்று புகழ் பெற்றவர்கள். அந்த நூலில் சில பாடல் தில்லையை பற்றி காண்போம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"சீர்கொண்ட மன்றமென்றும் திருச்சிற்றம்பலமென்றும்
ஏர்கொண்ட பொழிற்றில்லை எழிற்பொன்னம்பலமென்றும்
வார்கொண்ட முலையுமையாள் வாழ்பேரம் பலமென்றும்
பேர் கொண்ட கனகசபைப் பெரும்பற்றப்புலியூரோய் ." இதுதரவு.

"பூலோக முதலாய புவனங்கள் அளிப்பதுவும்
சாலோகம் தருவதும்நின் சரணாரவிந்தமன்றே
பூமீது வலஞ்செய்து புகழ்ந்தோதும் அடியவர்க்குச்
சாமீபம் அளிப்பதும்நின் தாட்கமல மலரன்றே."

நீரூரும் சடைமௌலி நிலவெறிப்ப மறையொலிப்பச்
சாரூபம் தருவதும்நின் தாமரைப்பூஞ் சரணன்றே.

இவை மூன்றுந் தாழிசை, அதனால் இது தனிச்சொல்

அலம்புநீர் மூழ்கியும் அஞ்செழுத்து நவின்றும்
பொலம்புனை நறுமலர் புனைந்தும்
சிலம்படி பரவுதும் செனனமறற் பொருட்டே. இது சுரிகதம்

இப்பாடல்களில் சிதம்பரத்திருக்கோயிலின் சிறப்புப் பெயர்களையும், இம்மை மறுமை சொர்க்காதிலோகங்களை அடைவிப்பதும், சாலோக சாமீப சாரூப பதமுத்தி தருவதும் திருவடிக் கமலமே என்றும் சிவபூசை பிறவியில்லாமல் செய்யுமென்றும் அழகாகக் கூறப்பட்டது.

சிவபெருமான் திருச்செவியில் கம்பளதரர் அச்சுவதரர் என்ற இரண்டு இசைவல்லார் குண்டலங்களாக இருந்து பாடிக்கொண்டிருக்கிறார்கள். பதஞ்சலிமுனிவர், வியாக்கிர பாதர் என்ற இரண்டு முனிவர்கள் சிவபெருமானைக் கண்டவர்கள். அயலவராய் பிரம விஷ்ணு ஆகிய இருவரும் காணாதவர்கள். உண்ணாமுலையாளாகிய சிவகாமியின் முலை உண்ணாதவர்கள் விநாயகர் சுப்பிரமணியர் ஆகிய இரண்டு பேர் சிவபெருமானுடைய சத்திகள் சிவகாமவல்லி கங்கை ஆகிய இரண்டு பேர். இப்படி இரண்டுபேர் என்ற வரிசையில் ஒரு வெண்பா பாடல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"காதில் இரண்டுபேர் கண்டோர் இரண்டுபேர்
ஏதிலராய்க் காணார் இரண்டுபேர்- பேதைமுலை
உண்ணார் இரண்டுபேர் ஓங்குபுலி யூரருக்கு
பெண்ணான பேரிரண்டு பேர்."

திருவடிச்சிறப்பு

"தில்லைமூ வாயிரவர் பூசைபுரி பாதம்
தேவருட னேஇருவர் தேடரிய பாதம்
வல்லமா காளியொடு வாதுபுரி பாதம்
மாமுனிவற் காயமனை மார்பிலுதை பாதம்
சொல்லவே பரவையிடம் தூது சென்ற பாதம்
தொல்புலிப தஞ்சலியும் தொண்டுசெயும் பாதம்
அல்லலாம் ஏழ்பிறவி தீரநட மாடும்
ஆதிபுலி யூரர்திரு அம்பலவர் பாதம்."

எனப் பாதவகுப்பு திருவடிச் சிறப்புப் பற்றி நன்றாகப் புகழ்ந்தது.

"தவபுரத்தை இழந்துகொடு நரகில் வீழ்வர்
சாலகடங் கடராவர் தகுவ ராவர்
அவபுரத்தில் அம்பரத்தை அடைவர் தில்லை
அம்பலத்தில் திருநடத்தை அறியா தோர்கள்
பவபுரத்தை அகல்வர் அந்தப் புரத்தை ஆள்வர்
பரமபுரத் து அடைவர்நிதி படைத்து வாழ்வர்
சிவபுரத்தில் வீற்றிருப்பர் எம்மை ஆளச்
சிதம்பரத்தில் திருநடத்தை தெரிசித்தோரே."

இந்தப்பாடல் திருநடத்தைத் தெரிசனம் செய்யாதவர்கள் தவநெறியை இழந்து நரகில் வீழ்வர், வேடராகுவர், ராக்ஷஸராகுவர், வீணாக உலகில் கதியற்றவராவார் என்றும்; சிதம்பரதரிசனம் செய்தவர்கள் பிறப்பு , இல்லாமல் தேவலோகத்தை ஆள்வார்கள், பரமபுரத்துக்குச் செல்வார்கள், அருட்செல்வ முடையவராவார்கள். எம்மை ஆள்வதற்காகச் சிவபுரத்தில் வீற்றிருப்பார்கள் என்று தெரிவிக்கின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"தெரிசிக்க முத்திதரு நித்த ரத்தர் சிகரப் புயத்தர் புலியூரில்
இருவர்க்கு நிர்த்த மிடுசிற் சபைக்குள் இறைபொற் பதத்தைமறவாமல்
பரிசிக்க முத்தி வசனிக்க முத்தி பணிதற்கு முத்தி மலராலே
மருசிக்க முத்தி பிரதக் கிணத்தில் வருதற்கு முத்திதருவாரே."

இப்பாடல், நடராசப்பெருமானைத் தரிசிக்கமுத்தி, தலத்தை தொட்டுவணங்க, முத்தி, சிவபெருமானைப் பாட ஜெபிக்க பேச முத்தி, மலரினால் அருச்சிக்க வணங்க முத்தி, பிரதக்ஷணம் செய்ய முத்தி இப்படிப் பலவகையாலும் ஆன்மாக்களுக்கு முத்தியை வழங்குகின்றார். நித்தர் அத்தர் சிகரப்புயத்தர் இருவர்க்கு நிர்த்தமிடுகின்ற சிற்சபைக்குள் விளங்கும் இறைவர்இவர் என்று விளக்குகிறது. நன்றாக உள்ளது.

"நிதம்பதட மயிலே கொள் ளிடங்கடந்தோம் இனிச்சற்று நேரஞ் சென்றால்
பதம்பரவும் ஆயிரக்கால் மண்டபமும் திருமதிலும் பசும்பொன் தேரும்
சதம்பெறுகால் மண்டபமும் சிவகங்கை யுடன் கனக சபையுந் தில்லைச்
சிதம்பரமும் கோபுரமும் தில்லைமூ வாயிரவர் தெருவுந் தானே."

சிதம்பரத்தில் உள்ள பெருமை பொருந்திய ஆயிரங்கால் மண்டபம், மதில், தேர், நூற்றுக்கால் மண்டபம், சிவகங்கை, கனகசபை, கோபுரம், தில்லைமூவாயிரவர் தெரு ஆகிய சிறப்புடைய பொருள்களையெல்லாம் கூறப்பட்டது.

அம்மானை

"தென்புலியூர் அம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெந்நாளும் மேவுங்காண் அம்மானை
வெம்புலியொன் றெந்நாளும் மேவுமே ஆமாகில்
அம்பலத்தை விட்டே அகலாதோ அம்மானை
ஆட்டை விட்டு வேங்கை அகலுமோ அம்மானை."

இப்பாடலில் அம்பலத்தில் புலியொன்று எப்போதும் உள்ளது என்றாள் ஒருத்தி; அதற்கு மற்றொருத்தி ஆட்டை கண்ட வேங்கை போகாதோ என்றாள்; ஆட்டை விட்டுப் போகுமா என்றாள் இன்னொருத்தி. ஆடல் என்ற தாண்டவத்தைப் புலியென்கிற வியாக்கிரபாதர் எப்போதும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அம்பலத்தில் அகலாது கண்டு கொண்டிருப்பார் என்று சிலேடையாக அமைந்துள்ளது.

"நில்லாத எழுபிறப்பும் தொல்லை அல்லல்
நீக்குசிவ காமவல்லி நிலையும் தொல்லை
செல்லாரும் பொழில்புடைசூழ் சிதம்பரமும் தொல்லை
திருமூலட்டானமொடுசிவகங்கை தொல்லை
சல்லாபம் தருமகுடா கமமும் தொல்லை
தலபுராணமும் தொல்லை சபையும் தொல்லை
சொல்லாரும் நான்மறையும் தொல்லை தில்லைச்
சோதிநடமாடுவதும் தொல்லை தானே."

இப்பாடல்; மாறி மாறி வருகின்ற எழுவகைப்பிறப்பும் பழமை ஆனால் துன்பம். அவற்றை நீக்குகின்ற சிவகாமசுந்தரி, திருக்கோயில், சிதம்பரம், திருமூலட்டானம், சிவகங்கை, மகுடாகமம், தலபுராணம், சிற்சபை, நான்குவேதம், ஆனந்ததாண்டவம் ஆகிய சகலமும் மிகப்பழமையே என்று கூறியது. **'தில்லைமூதூர்'** என்ற திருவாசகமும் உணர்க.

ஊசல்

"தொல்லைமறை அம்பலவர் ஊசல் ஆடச்
சுரர்முனிவர் மலரயன்மால் தொழுது போற்றக்
குல்லைமகிழ் சண்பகம்மா தவிமந் தாரை
கொன்றைமலர் சொரிந்து அடியர் குணங்கள் பாட
முல்லைமுகை நகையரும்ப பசும்பொன் ஓலை
முகமதியின் முத்தரும்ப அரம்பை மாதர்
தில்லைவளம் புகழ்இனிது ஆடீர் ஊசல்
சிவகாமசுந்தரியார் ஆடீர் ஊசல்."

இப்பாடல் நடராசர் சிவகாமசுந்தரி இருவரையும் நன்றாக ஊசல் ஆட்டியது சிறப்பு.

சிவபெருமானைக் கையினால் தொழுதாலும், கண்டுதெரிசித்துத் துதித்தாலும், தலையினால் வணங்கி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னாலும், வாக்கினால் பாடினாலும், தில்லைக்கு வெளியிலே நின்று சேவித்தாலும் பிறப்புத் தொலைந்துபோகும். பக்கத்தில் வராது. பாடல் வருமாறு,

"கரத்தால் தொழுதிடினும் கண்டிரைஞ் சினாலும்
சிரத்தால் வணக்கம் செயினும் - உரைத்திடினும்
தில்லைக் கப்பால் நின்றுசேவித்தாலும் செனனம்
எல்லைக்கப் பால்நிற்கு மே."

"போரு வானவர்சூழ்ந்தசிற் றம்பலம்
புலிப தஞ்சலி போற்றுசிற் றம்பலம்
பாரு ளோர்கள் பரவுசிற் றம்பலம்
பரமன் நாடகம் ஆடுசிற் றம்பலம்
ஏருலாவுசிற் றம்பலம் செம்பொனால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலம் எம்பிரான்
சீருலா முறை பாடு சிற்றம்பலம்
செம்பொன் அம்பலம் தில்லைச்சிற்றம்பலம்."

சிற்றம்பலச் சிறப்புக் கூறியது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பஞ்சசபைகள்

1. சிதம்பரம் கனகசபை சிதம்பரத்தில் பஞ்ச சபை (சபை மன்றம் அம்பலம் பொது) ஒரு பொருட்கிளவி
   1. சிற்றம்பலம் 2. கனகசபை 3. பேரம்பலம்
   4. நிருத்தசபை 5. இராசசபை.
2. திருவாலவாய் (மதுரை) இரஜித சபை வெள்ளியம்பலம்
3. திருவாலங்காடு இரத்தினசபை
4. திருநெல்வேலி தாமிரசபை
5. திருக்குற்றாலம் சித்திரசபை

தாண்டவவகை

தாண்டவவகை பல வகையாக உள்ளது. 108-64-7 என்று பலதரமாக நூல்களில் கூறப்படுகிறது. இதில் ஏழு தாண்டவம் சிறப்பாகக் கூறப்படுகிறது. ஆனந்ததாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் காளிகா தாண்டவம் சதுர தாண்டவம், சம்மார தாண்டவம், சந்தியா தாண்டவம், திரிபுரதாண்டவம் என்பன.

அவமாகிய பிறவிப் பெருங்கடலைத் தாண்டச்செய்வது சிவமாகிய பரமேஸ்வரன் ஆடுகின்ற ஆனந்ததாண்டவம். தரிசனம் எல்லாவற்றிலும் மிகச்சிறப்பான தரிசனம் நடராஜ தரிசனம். தேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்தில் ஈசனாக நின்று ஆடுகின்றான்.

(அ) நடராசர் அபிஷேகம்

முதற்காலம்: மனிதர்களுக்கு 365 நாள் ஒருவருடம் இது. தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும் - இந்தக் கணக்கின்படி ஒரு நாள் என்கிற ஒரு வருடத்தை ஆறுகாலமாக வகுத்து ஆறுதடவை, ஆறுகால பூசை என்கின்ற முறையில் நடராசருக்கு பூசை நடைபெறும் பூசை என்பது அபிஷேகம் முதலியன என்பதாம் - மார்கழிமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அதிகாலையில் நடராசருக்கு மகா அபிஷேகம் நடைபெறும் இது பிராதக்காலம் முதற்கால பூசை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரண்டாங்காலம்: மாசி மாதத்தில் வளர்பிறை சதுர்த்த சித்திதியில் இரவு ஏழு மணிக்குக் கனகசபையில் நட்ராசருக்கு பூசை அபிஷேகம் நடைபெறும் இது சங்கவகாலம் காலசந்தி பூசை.

மூன்றாங்காலம் : சித்திரைமாதம் திருவோண நக்ஷத்திரத்தில் கனகசபையில் இரவு ஏழு மணியளவில் அபிஷேகம் நடைபெறும் இது உச்சிக்கால பூசை. மாத்யானீக காலம்.

நான்காங்காலம் : ஆனிமாதம் உத்திரநக்ஷத்திரத்தை பத்தாவது திருநாளாகக் கொண்டு நடைபெறும் பிரமோற்சவ நாளில் பெருமான் சிவகாமி அம்மையாருடன் ஒன்பதாம் நாள் தேரின் மீது வலம் வந்து அன்று இரவு தேரில் இருந்து இறங்கி ஆயிரங்கால் மண்டபத்திற்கு எழுந்தருளி நடு இரவுக்குப் பின் நடைபெறும் சிறப்புடைய ஆனித்திருமஞ்சனம் ஆகும். சந்தியாகாலம் சாயங்காலபூசை.

ஐந்தாங்காலம் : ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தசித்திதியில் கனகசபையில் இரவு 7 மணியளவில் நடராசருக்கு அபிஷேகம் நடைபெறும். உபசந்திகாலம்.

ஆறாங்காலம் : புரட்டாசி (சுக்லபக்ஷ) வளர்பிறை சதுர்த்தசித்திதியில் இரவு 8 மணியள்வில் கனகசபையில் நடராசருக்கு அபிஷேகம் நடைபெறும். இது நித்திய அத்தயாம பூசையாகும்.

இங்குக் கூறப்பட்ட ஆறுகால பூசையில் மார்கழித்திருவாதிரை, ஆனித்திருமஞ்சனம் இரண்டும் பெருவிழா நிறைவாக ஆயிரக்கால் மண்டபத்தில் உதயகாலத்திற்கு முன் நடைபெறும் அபிஷேகம். மற்ற நான்கும் கனக சபையில் சித்சபைக்கு முன் உள்ள இடத்தில் நடைபெறும். இந்த ஆறுஅபிடேகம் மூன்று நக்ஷத்திரத்திலும் மூன்று திதியிலும் நடைபெறும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வது அதிகமான பலன். திருமுறைகளிலும் மற்ற நூல்களிலும் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளது.

"ஆடினாய் நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரியாத சிற்றம்பலம்
பாலினால் நறுநெய்யாற்பழத்தினாற்
பயின்றாட்டி"

— *சம்பந்தர்*

"ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
பாலா னைந்துடன் ஆடும் பரமனார்." — *அப்பர் சுவாமிகள்*

"நெய்யும் பாலும் தயிருங்கொண்டு
நித்தல் பூசனை செய்யலுற்றார்.
தேனெய் பால்தயிர் ஆட்டுகந்தானே." — *சுந்தரமூர்த்தி சுவாமிகள்*

ஆகவே பால், தயிர், நெய், தேன், பஞ்சாமிர்தம், பழவர்க்கம் இளநீர், விபூதி, சந்தனம், அர்க்கியசலம் இவற்றால் அபிஷேகம் செய்தல் அளவில்லாத புண்ணியம். பஞ்சகவ்ய அபிஷேகம் மிகச் சிறப்புடையது.

நடராசர் அபிஷேககால வெண்பா

"சித்திரையி லோணமுதற் சீரானி யுத்திரமாம்
சத்த தனு ஆதிரையும் சார்வாகப் பத்திவளர்
மாசியரி கன்னி மருவுசதுர்த்தசிமன்
றீச ரபிஷேகத் தினமாம்."

[ஆ] சிவபூசா மகிமை

சிவபெருமான் மனிதப் பிறவியை வகுத்தது. எதற்காக என்றால் தன்னைப் பூசித்துத் திருவருளைப் பெறுவதற்காக,

"மாநுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயத்
தானிடத் தைந்து மாடும் அரன்பணிக்காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்த ரன்றனையர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலுமூகர் ஒன்றையு முணராரந்தோ."

என்பது சிவஞான சித்தியார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுந்தரர் தேவாரம்

பிரமவிஷ்ணு, இந்திரன், குபேரன், நவக்கிரகங்கள் அகத்தியர், வசிஷ்டர், விசுவாமித்திரர், சனகாதி முனிவர்கள், துருவாசர், நாரதர், கௌதமர், பதஞ்சலி முனிவர், வியாக்கிர பாதர், மார்க்கண்டேயர், திருநந்திதேவர், மகாலக்ஷ்மி, சரஸ்வதி, காமதேனு ஆகிய மேலோரெல்லாம். சிவலிங்க பூசை செய்து உயர்ந்த பதவியைப் பெற்றுள்ளார்கள். இன்னும் சிவபெருமானின் அம்சமாகவுள்ள பார்வதி, கணபதி, பைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் ஆகியவர்களும் சிவபெருமானை பூசை செய்துள்ளார்கள். இராமர், வாமனர், கிருஷ்ணர், வராகமூர்த்தி, பஞ்சபாண்டவர்கள் ஆகியோரும் சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்றார்கள்.

"இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கம்இல் புலிவானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித்தார் பெறும் ஆரருள் கேட்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே."

காஞ்சிப்புராணத்தில் விஷ்ணு வியாசருக்குக் கூறியது

"வானமேத்தயான் வைகுந்த வாழ்வு பெற்றதுவும்
ஞான நான்முகன் சத்திய உலகம் நண்ணியதும்
ஏனை விண்ணவர் தத்தம திருக்கையெய்தியதும்
ஆனுயர்த் தவனருட்குறி அருச்சனைப் பயனால்."

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவிளையாடற்புராணம்

"வண்டுளறும் தண்டுளாய் மாயோனிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர் தொழவாழுன் னிறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென்றுணர்ந்திலையால்."

இது தேவேந்திரனுக்கு துருவாசர் கூறியது. இன்னும் கழுகு, நாரை, யானை, எறும்பு,குரங்கு, பாம்பு, காகம் ஆகிய பிராணிகளும் சிவனைப் பூசித்துப் பேறுபெற்றன. இவையெல்லாம் அருள் நூல்களில் சொல்லப்பட்டது.

[இ] சிவபூசை செய்யாதவர் இழிவு

''முதுமொழிமேல் வைப்பு'' என்னும் நூலில்,

"எறும்புகடை யானைமுதல் ஈசனைப் பூசித்துப்
பெறுங்கதி கண்டுந்தேறார் பேய்கள்- அறிந்த
உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்." – என்பது அந்தப்பாடல்

திருநாவுக்கரசு சுவாமிகள் பூசை செய்யாத மனிதர்கள் இரைதேடும் பிராணிகளுக்குச் சமம் என்கிறார்.

"பூக்கைகொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கை கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே யிரை தேடி யலமந்து
காக்கைக்கே யிரை யாகிக் கழிவரே."

குருஞானசம்பந்தர் தனது பாடலில்,

"ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுட னைந்தெழுத்தை நீ நினையாய் - சீ. சீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே யுனக்கென்ன வாய்." என்றும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரபுலிங்க லீலையில்,

"பூசனை செயாதகை புராந்தகன் புகழ்
பேசுதல் இலாதவாய் பெற்று உழன்றிடும்
நீசர் தம்மினும் நெடுவனத்திடைத்
கூசுதல் இலாத குரங்கு நன்றரோ." – என்றும்,

திருக்கருவைப்பதிற்றுப் பத்தந்தாதியில்,

"சிவகருமம் செய்யார் திருநீறு சாத்தார்
தவநெறியாம் சைவநெறி சாரார்- அவனிதனில்
கான்பரந்த பச்சைக்களா நிழலைக் கைதொழார்
ஏன்பிறந்தார் மானிடரா யின்று." – என்றும்,

பட்டினத்தார் பாடலில்,

"பொன்னை நினைந்து வெகுவா யுருகுவர் பூவையன்னாள்
தன்னை நினைந்து வெகுவா யுருகுவர் தாரணியில்
உன்னை நினைந்திங் குனைப் பூசியாத உலுத்தரெல்லாம்
என்னையிருந்து கண்டாயிறைவா கச்சியேகம்பனே." – என்றும்

திருப்புகழில்,

அரகரா எனாமூடர் திருவெணீறிடாமூடர்
அடிகள் பூசியா மூடர் கரையேற
அறிவுநூல் கலா மூடர் நெறியிலே நிலாமூடர்
அறம் விசாரியாமூடர் நரகேழிற் புரளவீழ்வர். – என்றும்,

திருமந்திரத்தில்,

புண்ணியஞ் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்செயா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறையீசனை
நண்ணறியாமல் நழுவு கின்றாரே. – என்றும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாயுமானவர் பாடலில்,

"எல்லா முதவுமுனை யொன்றிற்பாவனை யேனுஞ்செய்து
புல்லர்யினுமொரு பச்சிலையாயினு போட்டிறைஞ்சி
நில்லேன் நல்யோக நெறியுஞ்செயேன் அருணீதியொன்றும்
கல்லேன் பரமேயெவ்வாறு கதி காண்பதுவே." – என்றும்

இதுவரை சிவபூசை செய்யாதவர் இழிவு பற்றிக் கூறியது.

(ஈ) சிவபூசை செய்பவரின் உயர்வு

இனிச் சிவபூசை செய்பவர் உயர்ந்த பலனைப் பெறுவார் என்று உயர்வு பற்றிக் கூறுவது.

"நித்தலும் நியமஞ்செய்து நீர்மலர் தூவிச்
சித்தமொன்ற வல்லார்க் கருளுஞ் சிவன் கோயில்
மத்த யானையின் கோடும் வண்பீலியும் வாரித்
தத்துநீர்ப் பொன்னிச் சாகரமேவு சாய்க்காடே."

– *திருஞானசம்பந்தர்*

"பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கொண்டாங்கு ஆர்வத்தை யுள்ளே வைத்து
விரும்புநல் விளக்குத்தூபம் விதியினாலிட வல்லார்க்குச்
கரும்பினிற் கட்டிபோல்வர் கடவூர் வீரட்டனாரே."

– *திருநாவுக்கரசர்*

"அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோ டஞ்சு நான்கும்
துறுபறித் தனைய நோக்கிச் சொல்லிற் றொன்றாகச் சொல்லார்
நறுமலர்ப் பூவும் நீரும் நாடொறும் வணங்கு வார்க்கு
அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே."

– *சுந்தரமூர்த்தி சுவாமிகள்*

"முத்தனே முதல்வா முக்கணா முனிவா மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத்திருப்பெருந் துறையில் செழுமலர்க் குருந்த மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால் அதெந்து வேயென் றருளாயே.

– *ஸ்ரீ மாணிக்கவாசகர்*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"சித்தமேபுகுந் தெம்மை யாட் கொண்டு தீவினை கெடுத் துய்ய லாம்
பத்தி தந்துதன் பொற்கழற் கணே பன்மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவுலகுக்கும் அப்புறத் தெமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்க ணஞ்சென்னி மன்னி மலருமே."

— திருவாசகம்

சிவபூசைக்குப் பத்திரபுஷ்பம் கொடுக்கின்ற மரம், செடி சிவலோகத்திற்குச் செல்லும். பூசை செய்வதற்கு வேண்டிய உதவி செய்தவர்கள் சிவலோகம் செல்வார்கள். சிவபூசையைக் கண்டவர்கள் கேட்டவர்களும் சிவலோகம் செல்லுவார்கள். சிவபூசையில் அன்புள்ள சுற்றத்தாருக்கும் சிவலோகம் உண்டு.

இதற்குப் பிரமாணம் சிவதருமோத்தரத்தில்,

"அருச்சனைக் குபயோகங்களாகிய தருக்களாதி
கற்புறு சிவலோகத்தைக் கலப்பதே திண்ணங்கண்டோம்
அற்புதன் பூசைதன்னை அருவினையறுவரன்பாற்
தற்பரன் பூசை கண்டோர்சிவபுரமதனைச் சார்வார்." — என்றும்,

திருத்தணிகைப்புராணத்தில்,

"ஈட்டும் பூசனைசெ யன்பர்த மூவேழ் சுற்றமு மேவல்செய் தவருங்
கேட்டவர் மகிழ்ந்தோர் வேட்டவர்முகமன் கிளந்தவர் கண்டவ ரிவரும்
பாட்டளி மூசு மலர்முத லளித்த பாதவ முதலிய வுயிருஞ்
சேட்டொளி திளைக்குஞ் சிவபுரம் வாழ்ந்து பிறந்துழிச் செல்வரா யுயர்வார்."

என்றும் கூறியுள்ளது.

விரதம் தவம் தீர்த்தமாடல் யாகஞ்செய்தல் ஆகியவை சிவபூசையில்லாதவர்க்குப் பயன் தராது. இச்செயல்களோடு சிவபூசை உடையவர்களானால் அதிகமான பலன் பெறுவார்கள். இதற்குப் பிராமணம் திருக்காளத்திப் புராணத்தில்,

"பழிப்பில் விரதந் தவந்தீர்த்தம் வேள்வி முதலாற் பயனென்னே
யிழைக்கின் றனவா மவைமுழுது மிலிங்க பூசை யில்லார்க்கு
வழுக்குஞ் செயல்களாய்ப் பவிக்கும் மிதனோ டவையும்வந்தக்கால்
விழுப்பம் பெரிதும் விரைந்தளிக்கும் மிதனிற் பணிவோர் மிகச் சதுரர்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவஞ் செய்தல், நீரில் நின்று தவஞ்செய்தல் ஆகிய கடுமையான தவஞ் செய்தாலும் சிவபூஞ்ச செய்யவில்லையானால் அத்தவம் வீண் செயலாம். சிவபூசையில்லாதவர் சென்மம் வீண். அவர் செய்யும் மற்ற தவம், விரதம், புண்ணியமும் வீணாம் இது உண்மை. சிவபூசையில்லாமல் மற்றத் தவ விரதபுண்ணியங்களைச் செய்பவர்கள் பிறந்து, சுகித்து, சொர்க்காதி போகங்களை அனுபவித்துஉழல்வார்கள். சிவபூசை செய்பவர்கள் சிவலோகமுத்தியைப் பெறுவார்கள் இதற்குப் பிரமாணம் சிவரகசியம் என்கிற நூலில்,

"புரியு மாதவ மைந்தழற்கிடை பூம் புனற்கிடை புரியினும்
அரிய பூசனை செய்தி லாரெனி னந்திகே ளவை யவமதாம்
தெரிதருஞ் சிவ பூசை யற்றவர் செனனமும் தவ விரதமும்
உரிய புண்ணிய கோடியும்பல மொன்று மில்லைய துண்மையே."

"வழிதரும் பல புண்ணியங்கள் மாதவங்களு மாற்றி னோர்
சுழிதருஞ்சன னத்தில் வந்து சுகித் திறந்து சுவர்க்கமுற்
றழிதரும்பல புவன போகமும் அனுபவித் துழழ் வார்களான்
மொழிதருஞ் சிவ பூசைசெய்தவர் முத்திபெற் றிடு வார்களே."

கோயிற்புராணத்திலே மத்தியந்தன முனிவர் தன் புத்திரராகிய மழமுனிவருக்குக் கூறியது. சிவபூசையில்லாது மற்றத் தவங்கள் செய்தால் சொர்க்கலோக முதலான போகவாழ்வு பொருந்தும் பிறவி உண்டாகும். சிவபூசை செய்தால் பிறவிதொலையும் என்று கூறியருளினார். பிரமாணப்பாடல் வருமாறு,

"தவமெவையு முணர்ந்தமுனி தனயன்முக மிக நோக்கி
புவனமலி போகங்கள் பொருந்துமருந் தவம்புரிந்தால்
சிவகதியு மிதுவன்று சிவார்ச்சன மார்ச்சனமாகில்
பவமகலும் பரபோகம் பெறலாகுமெனப்பகர்ந்தான்."

சிவபெருமான் உமாதேவிக்கு ஆக்மோபதேசம் செய்தருள அவற்றைக் கேட்டருளிய உமாதேவி தேவரீருக்கு ஆகமங்களிலே சொன்ன விஷயங்களில் எது மிகப்பிரியமான செயல் என்று கேட்கச் சுவாமியானவர். எனக்குப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூசையில்தான் அதிக விருப்பம் என்று கூறியருள உமாதேவியும் காஞ்சிபுரத்தில் வந்து சிவபெருமானைப் பூசைசெய்தாள் என்று பெரிய புராணம் அருளிச் செய்கிறது. பாடல் வருமாறு,

"எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனைஎன உரைத்தருள
அண்ண லார்தமை அருச்சனைபுரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவள் ஆயின பெருந்தவக்கொழுந்து."

— சேக்கிழார்சுவாமி

சிவபூசையில் பலவகையான கிரியைகள் உண்டு அவற்றைச் சோடசோபசாரம் (16) என அருள் நூல்கள் கூறும். இதில் ஒன்று பத்ரபுஷ்பங்களால் சிவநாமங் கூறி அருச்சனை செய்தல். ஆகமவிதிப் படி தூய்மையாக மந்திரஞ் சொல்லி அருச்சனை செய்யவேணும்.ஒருமுறையுந் தெரியாத குரங்கு ஒன்று வில்வமரத்தில் உள்ள இலையைப் பறித்துக் கீழே போட்டது. அது மரத்தடியில் இருந்த உமாமகேசுவரர் திருமேனியில் விழுந்தது. உடனே சிவபெருமான் அக்குரங்கை அழைத்து 'வில்வத்தினால் நம்மை அருச்சித்தபடியால் பூலோகத்தில் சோழவம்சத்தில் அரசனாகப் பிறந்து- உலகத்தை ஆள்வாயாக' என்று அருள் செய்தார். அப்படியே பிறந்து முசுகுந்தச் சக்கரவர்த்தியென்று பெயர் பெற்று பூவுலகமுழுதுமாண்டு சிவனருளைப் பெற்றது. இவ்வரலாற்றைக் கூறி அறிவில்லாத குரங்கு ஒருமுறையும் தெரியாமல் வில்வஇலையைப் பறித்துப் போட்டதற்கு இறைவர் மகிழ்ந்து பேரருளை வழங்கினார் என்றால் முறையாக வில்வத்தால் அருச்சனை செய்பவர்கள் பெறும் பேற்றை யாராலே கூறமுடியும் வியந்து உரைக்கின்றது கருவூர்ப்புராணம். பாடல் வருமாறு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

“அறிவில் ஓர்முசுஅமலன்மேல் வில்வமென்தழையை
வெறிதில் இட்டு இவ்வாறு அடைந்தது என்றால் விடைப்பாகன்
நறியமென்மலர்த் தாளினில் அதுகொடு நவைதீர்
உறுதியால் வழுத்துநர்பெறும்பேற்றை யார் உரைப்பார்.”

“ஆதலால் கருவூர்க்கு இணையாயதோர் தலனும்
தீதில் ஆநிலை நாயகன் போல் ஒரு தேவும்
போதுசூழ்சினை வில்லுவம் போல் ஒரு பூவும்
ஓதநீர் உலகத்தில் இன்றென்பர் நூல் உணர்ந்தோர்.”

இதனால் சிவபூசையில் ஒரு அங்கமாக உள்ள அருச்சனை முறை தெரியாத குரங்கு செய்து பெரும்பேறு பெற்றதென்றால் சிவபூசை முழுவதும் முறையாகச் செய்பவர்கள் பேறு பெறுவார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆதலால் சிவபூசை அவசியம் செய்யவேண்டுமென்பது நன்றாக விளங்குகிறதல்லவா.

கண்ணபிரான் துவாபரயுக முடிவில் வைகுந்தம் செல்ல எண்ணும் போது முனிவர்கள் கண்ணபிரானிடம் கலியுகத்தில் எப்படி நாங்கள் இருப்பது என்று கேட்டார்கள் அதற்குக் கண்ணன் ‘‘சிவபிரான் திருவடிக்கமலம் உண்டு, தீர்த்தமுண்டு, மலருண்டு, வெண்ணீறு உண்டு, ஐந்தெழுத்து உண்டு ஆகையால் நீங்கள் கவலைப்படவேண்டாம்’’ என்று அருள் செய்தார் என்று கூர்ம புராணம் கூறுகின்றது.

“திங்களங் கண்ணிப்புத்தேள் சேவடிக் கமல முண்டு
கொங்கலர் மலரு முண்டு குளிர்புனல் எங்குமுண்டு
தங்குமஞ் செழுத்து முண்டு தவளவெண் ணீறுமுண்டு
வெங்கலிக் குடைவ தென்னே வெளிற் றிவுடையரே போல்.”

கண்ணன் உபமன்யு முனிவரிடத்தில் தீக்ஷைபெற்றுச் சிவபூசை செய்தபடியால் இப்படிச்சொல்ல முடிந்தது. ஆகையால் சிவாகம விதிப்படி ஆசாரியபிஷேகம் பெற்ற சற்குருவினிடத்தில் சமய, விசேட, நிருவாண தீக்ஷை பெற்றுத் தேகம் உள்ள பொழுதே சிவபூசை செய்யவேண்டு மென்பதை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உணர்வார்களாக. சைவாசாரியரிடத்தில் தீக்ஷை பெற்றவர்களுக்குச் சிவபூசை செய்ய உரிமையுண்டு. முறைதெரியும். இல்லாதவர்களுக்கு முறை தெரியாது. உரிமையில்லை. ஆகவே தீக்ஷை அவசியமானது. தீக்ஷையில்லையானால் மோக்ஷமில்லையென்பது பழமொழி. பிறவியில்லாமல் சிவகதியைப் பெறுவதற்குச் சிவதீக்ஷை. சிவபூசை சிவபுண்ணியம் சிவனடியார்பத்தி சிவதருமம் சிவநூல் கற்றல் கேட்டல் சிவாலயதரிசனம் ஆகிய செயல்கள் அவசியமானது.

"கன்றெடுத்து விளவெறிந்து காலெடுத்த
மழைக்குடைந்த காலி காக்க
குன்றெடுத்த மால்விடையின் கொடியெடுத்து
வடிவெடுத்துக் கூறொ ணாத
மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்
சாத்தியன்பின் வழிபட் டோர்கள்
இன்றெடுத்த உடற்பிறவி இனியெடா
வண்ணமெண்ணம் எய்து வாரே."

— சிவரகசியம்

[உ] பதஞ்சலி வியாக்ரபாத மகிமை

பதஞ்சலி வியாக்ரபாதர் இருவரும் தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும்படிப் பரமேஸ்வரனைச் கைலாயத்திலும் தில்லைவனத்திலும் அனேக காலம் தவஞ்செய்து கடுமையான நோன்பிருந்து அளவில்லாத பத்தி பண்ணி உடலை வெறுத்து ஒறுத்து அதன்பின் தை மாதம் (குருவாரம்) வியாழக்கிழமையில் பூசநக்ஷத்திரம் உச்சிக்காலத்தில் சிவபெருமானுடைய தாண்டவக் காட்சியைக் கண்டார்கள்.

"விரிகனல் வேள்வி தன்னில் வியன்றலை அரிந்துவீட்டி
பொருவருந் த்வத்தை யாற்றும் பதஞ்சலி புலிக்கா லண்ணல்
இருவரு முணர்வாற் காண எல்லையி லருளா லீசன்
திருநடவியற்கை காட்டும் தில்லைமூ தூரைக் கண்டான்.
என்று கந்தபுராணம் கூறுகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"புவனங்க டமக்குளிரு வோரழியாத் திருவருளோர் புகலு மன்னோர்
தவமொன்று பதஞ்சலியு திகழ்வேங்கைத் தாளுடைய தலைமையோனும்
இவர்கின்ற தமனியல்பே ரம்பலத்து ளிறைபார்வை யெய்தப்பெற்றார்
அவரன்றே லப்பார்வை யார் பெற்றா ரவர்க்குவமை யவரேயம்மா."

என்று சிதம்பரபுராணம் கூறுகின்றது.

அளவில்லாத பெருமை பொருந்தியவர்கள் இருவரும் அவர்கள் செய்த உபகாரத்தினால் எத்தனையோ காலமாக எத்தனையோ ஆன்மாக்கள் ஆனந்ததாண்டவத்தைக் கண்டு பேரின்ப பெருவாழ்வு பெற்றுள்ளார்கள். அந்த இரண்டு முனிவர்களும் தில்லைவனத்தில் நடராஜாசந்நிதி மேற்கு வீதியில் தனித்தனியாக சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வெகுகாலம் பூசை செய்த திருக்கோயில் இருக்கிறது. புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் பூசித்த தலம் இளமையாக்கினார் கோயில்திருப்புலீச்சரம் என்று விளங்கு கிறது. திருநீலகண்டநாயனாருக்கும் அவர் மனைவிக்கும் பெறலரும் இளமையும், பேரின்பமும், வழங்கிய திருக் குளமும், கோயிலும். அதற்கும் மேற்கே ஆதிசேடராகிய பதஞ்சலி முனிவர் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து வெகு காலம் பூசித்த திருக்கோயிலும் கயிலாயத்திலிருந்து பாதாள வழியாக வந்தேறிய திருக்குளமும் உள்ளது.

இதற்கு **'அனந்தீச்சரம்'** என்று பெயர் இந்த இரண்டு கோயிலில் இரண்டு முனிவர்களும் வெகுகாலம் பூசை செய்தபடியினரல் சிவபெருமான் தில்லைக்குத் திருக்கூத்தாட வந்தார். ஆகையால் இரண்டு திருக்கோயிலையும் நன்றாக பாதுகாப்பதும், பூசை செய்வதும் மிகமிக அவசியமானது சிவபெருமான் திருநடனம் செய்ய அந்த இரண்டு கோயிலும் காரணமாக இருந்ததென்றால் அக்கோயிலின் பெருமையைச் சொல்லி முடியுமா! அன்பர்கள் உணர்வார்களாக! தரிசிப்பார்களாக! ஆனந்தம் அடைவார்களாக!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பலவகை நடனங்கள்

[அ] திருவிழா வரலாறு

முதல் விழா	–	பிரகிருதி நடனம்
இரண்டாம் விழா	–	இருவினை நடனம்
மூன்றாம் விழா	–	முக்குண நடனம்
நான்காம் விழா	–	அந்தக்கரண நடனம்
ஐந்தாம் விழா	–	பஞ்சேந்திரிய நடனம்
ஆறாம் விழா	–	காமாதி ஆறான நடனம்
ஏழாம் விழா	–	சப்தகோடி மகா மந்திரபத நடனம்
எட்டாம் விழா	–	வித்தியாதத்துவமும் ஆணவமும் நடனம்
திருக்காப்பு நாள்	–	திரோதாயி நடனம்
திருச்சாந்து திருவெழுச்சியில்	–	நவபத நடனம்
திருவிழாப் புறத்தில்	–	சத்திமுத்தி நடனம்
திருவனந்தலில்	–	வாதனை நடனம்
பத்தாம் விழா	–	பேரின்பாதீத நடனம்
பதினோராம் விழா	–	பதி பசு பாச நடனம்

[ஆ] நவ தாண்டவ ஸ்தலங்கள்

கைலாஸம்	–	ஸந்தியா நிருத்தம்
திருவெண்காடு	–	புஜங்க தாண்டவம் (ஹஸ்தி நடனம்)
வடஆலங்காடு	–	ஊர்த்துவ தாண்டவம் (8 கைகள்)
சிதம்பரம்	–	பரமானந்த தாண்டவம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மதுரை, கீழ்வேளூர்	–	வியத்தியஸ்த தாண்டவம் (10 கைகள்)
கும்பகோணம், வைகல்	–	அம்பிகா தாண்டவம்
வழுவூர்	–	வாமாங்கிரிமுக தரிசனம் (8கைகள்)
பேரையூர்	–	ஸம்ஹார தாண்டவம்
உத்தரகோசமங்கை	–	அதிரகசிய தாண்டவம் (குஞ்சிதபாதத்தில் பேயார்)

(இ) எழுவகை நடனங்கள்

சத்தவிடங்கத் தலங்கள்	சத்தவிடங்கர்	நடனம்
திருவாரூர்	– வீதிவிடங்கர்	– அஜபாநடனம் (மூச்சுவிடுதல்-போல் நடனம்)
திருநாகைக் காரோணம்	– சுந்தரவிடங்கர்	– பாராவார தரங்க நடனம் (கடல் அலை போல் நடனம்)
திருநள்ளாறு	– நகரவிடங்கர்	– உன்மத்த நடனம் (பித்துக்கொண்டவன் ஆடுவதுபோல் நடனம்)
திருமறைக்காடு	– புவனிவிடங்கர்	– ஹம்ஸபாத நடனம் (அன்னப்பறவை நடப்பது போல் நடனம்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்காறாயில்	– ஆதிவிடங்கர்	– குக்குடநடனம் (கோழியைப்போல் ஆடுதல்)
திருவாய்மூர்	– நீலவிடங்கர்	– கமலநடனம் (தாமரைமலர் அசைவது போல் ஆடுதல்)
திருக்கோளிலி	– அவனிவிடங்கர்	– பிருங்கநடனம் (வண்டு மலருக் குள்ளே குடைந்து குடைந்து செல்வது போல் நடனம்)

சத்த விடங்கத் தலங்களாவன : பாடல்

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில் பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ ஞானமா நடராசப்பெருமான் அஷ்டோத்தர நாமாவளி

ஓம் சதாசிவ தாண்டவாய நம:
ஓம் மகேச்வர தாண்டவாய நம:
ஓம் ரௌத்ர தாண்டவாய நம:
ஓம் ஓங்கார தாண்டவாய நம:
ஓம் சிந்மஹாவ்யோம தாண்டவாய நம:
ஓம் சச்சிதானந்த தாண்டவாய நம:
ஓம் தகராகாச தாண்டவாய நம:
ஓம் அநவரத தாண்டவாய நம:
ஓம் ஆநந்த தாண்டவாய நம:
ஓம் சந்தியா தாண்டவாய நம: 10

ஓம் கௌரி தாண்டவாய நம:
ஓம் திரிபுர தாண்டவாய நம:
ஓம் காளீ தாண்டவாய நம:
ஓம் ஹம்ச தாண்டவாய நம:
ஓம் அஜபா தாண்டவாய நம:
ஓம் உன்மத்த தாண்டவாய நம:
ஓம் பாராவாரதரங்க தாண்டவாய நம:
ஓம் வீசி தாண்டவாய நம:
ஓம் குக்குட தாண்டவாய நம:
ஓம் பிரம தாண்டவாய நம: 20

ஓம் கமல தாண்டவாய நம:
ஓம் ஹம்சபாத தாண்டவாய நம:
ஓம் ஞானசுந்தர தாண்டவாய நம:
ஓம் பிருங்கி தாண்டவாய நம:
ஓம் அபயப்பிரத தாண்டவாய நம:
ஓம் ஹாலாஸ்ய தாண்டவாய நம:
ஓம் ஸ்வரூப தாண்டவாய நம:
ஓம் மூர்த்தி தாண்டவாய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம் சாஸ்வத தாண்டவாய நம:
ஓம் நிச்சல தாண்டவாய நம: 30
ஓம் நிராமய தாண்டவாய நம:
ஓம் கைவல்ய தாண்டவாய நம:
ஓம் மோக்ஷ தாண்டவாய நம:
ஓம் சித்கனானந்த தாண்டவாய நம:
ஓம் வாக்கோசர தாண்டவாய நம:
ஓம் ஞானஸ்வரூப தாண்டவாய நம:
ஓம் அகண்டாகார தாண்டவாய நம:
ஓம் ஜகன்மோகன தாண்டவாய நம:
ஓம் ஹேலாகலித தாண்டவாய நம:
ஓம் சர்வ தாண்டவாய நம: 40
ஓம் தட்சத்வம்ச தாண்டவாய நம:
ஓம் சப்தலோகைக தாண்டவாய நம:
ஓம் கஜசம்ஹார தாண்டவாய நம:
ஓம் ஆதிசிதம்பர தாண்டவாய நம:
ஓம் அஷ்டஹஸ்த தாண்டவாய நம:
ஓம் சித்சபா தாண்டவாய நம:
ஓம் அபஸ்மாரஹர தாண்டவாய நம:
ஓம் தில்லாரண்ய தாண்டவாய நம:
ஓம் புண்டரீகபுர தாண்டவாய நம: 50
ஓம் குஞ்சிதபாத தாண்டவாய நம:
ஓம் வியாக்ரபுர தாண்டவாய நம:
ஓம் அகோர தாண்டவாய நம:
ஓம் விஸ்வரூப தாண்டவாய நம:
ஓம் ஹ்ரீம்கார தாண்டவாய நம:
ஓம் விஜய தாண்டவாய நம:
ஓம் பீம தாண்டவாய நம:
ஓம் மகாப்ரளய தாண்டவாய நம:
ஓம் பத்ர தாண்டவாய நம: 60
ஓம் பைரவானந்த தாண்டவாய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம் மகாட்டகாச தாண்டவாய நம:
ஓம் மகாஹங்கார தாண்டவாய நம:
ஓம் மஹோக்ர தாண்டவாய நம:
ஓம் மகாயுகாந்த தாண்டவாய நம:
ஓம் மகா கல்பாந்த தாண்டவாய நம:
ஓம் மகாமன்வந்தர தாண்டவாய நம:
ஓம் மகா சண்டோப தாண்டவாய நம:
ஓம் மகா பிரசண்ட தாண்டவாய நம:
ஓம் ரத்ன சபா தாண்டவாய நம:
ஓம் கனக சபா தாண்டவாய நம: 70

ஓம் ரஜத சபா தாண்டவாய நம:
ஓம் தாம்ர சபா தாண்டவாய நம:
ஓம் சித்ர சபா தாண்டவாய நம:
ஓம் காமதகன தாண்டவாய நம:
ஓம் மகா தோர் தாண்டவாய நம:
ஓம் நந்திமத்தள தாண்டவாய நம:
ஓம் சக்தி தாண்டவாய நம:
ஓம் நிசா நிச்சல தாண்டவாய நம:
ஓம் பரிப்ரமண தாண்டவாய நம:
ஓம் உத்தண்ட தாண்டவாய நம: 80

ஓம் பிரமராயித தாண்டவாய நம:
ஓம் சவ்ய தாண்டவாய நம:
ஓம் ஊர்ஜித தாண்டவாய நம:
ஓம் கராப்ஜத்ருத கால தாண்டவாய நம:
ஓம் பஞ்சகிருத்ய தாண்டவாய நம:
ஓம் ஊர்த்துவ தாண்டவாய நம:
ஓம் கங்காள தாண்டவாய நம:
ஓம் பதஞ்சல்யனுக்ரக தாண்டவாய நம:
ஓம் பிரதோஷ தாண்டவாய நம:
ஓம் விருஷச்ருங்கமத்ய தாண்டவாய நம: 90

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம் மிருத்யுமதன தாண்டவாய நம:
ஓம் ப்ரௌட தாண்டவாய நம:
ஓம் விநோத தாண்டவாய நம:
ஓம் பிந்துமத்ய தாண்டவாய நம:
ஓம் கலாரூப தாண்டவாய நம:
ஓம் விராட்ரூப தாண்டவாய நம:
ஓம் முனி தாண்டவாய நம:
ஓம் புஜங்கலாலித தாண்டவாய நம:
ஓம் பிட்சாடன தாண்டவாய நம:
ஓம் தத்வ தாண்டவாய நம: 100

ஓம் கல்யாண தாண்டவாய நம:
ஓம் மனோக்ரு தாண்டவாய நம:
ஓம் ஆரபடீ தாண்டவாய நம:
ஓம் காளகூடதர தாண்டவாய நம:
ஓம் அசல தாண்டவாய நம:
ஓம் பரிபூர்ண தாண்டவாய நம:
ஓம் பஞ்சாக்ஷர தாண்டவாய நம:
ஓம் அத்புத தாண்டவாய நம: 108

ஓம் சிவகாமசுந்தர்யம்பிகா சமேத சித்சபேசாய நம:

ஓம் பவாய தேவாய நம:
ஓம் சர்வாய தேவாய நம:
ஓம் ஈசாநாய தேவாய நம:
ஓம் பசுபதே தேவாய நம:
ஓம் ருத்ராய தேவாய நம:
ஓம் உக்ராய தேவாய நம
ஓம் பீமாய தேவாய நம:

ஓம் சிவகாமியம்பா சமேத சிதம்பரேஸ்வராய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடராஜர் தோத்திரப் பாடல்கள்

"பூங்கமலத் தயனுமலர்ப் புண்டரிகக் கண்ணானும்
தாங்குபல புவனமுமேற் சகலமுமா யகலாத
ஓங்கு மொளி வெளியேநின் றுலகுதொழ நடமாடும்
தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம்பலம் போற்றி."

"ஆரணங்கண் முடிந்தபதத் தானந்த வொளியுலகிற்
காரணம் கற்பனை கடந்த கருணைதிரு வுருவாகி
பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்குமணி மாடத்திருச்சிற்றம்பலம் போற்றி."

"தற்பதமாய்ப் பரபதமாய் தாவிலனு பூதியதாய்
அற்புதமா யாரமுதா ஆனந்த நிலயவொளிப்
பொற்பினதாய்ப் பிரிவிலதாய்ப் பொருளாகியருளாகும்
சிற்பரமாமம் பரமாம் திருச்சிற்றம்பலம் போற்றி."

"வையகமின் புறநின்ற மருமலிபொற் பதம் போற்றி
கையமரு நிலைபோற்றி கருணைமுகமலர் போற்றி
மெய்யிலகுமொளி போற்றி விரவியெனையெடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி திருச்சிற்றம்பலம் போற்றி."

— கோயிற்புராணம்

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

"ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா யேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி."

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி."

— பெரியபுராணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
மாண்புடை யோனுமாய் வலிகொள்வான்றொடர்
பூண்பதின் றாய்நயம் புணர்க்கும் புங்கவன்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம்."

— கந்தபுராணம்

"உண்மையறிவானந்த வுருவாகி யெவ்வுயிர்க்கு முயிராய் நீரின்
தண்மையனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசரா சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் னானந்தக் கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கும்
அண்மையதா யம்பலத்து ளாடியருள் பேரொளியை யகததுள் வைப்பாம்."

"பொருமாறிற் கிளர்தடந்தோ ளொருமாறன் மனங்கிடந்த புழுக்கமாற
வருமாறிற் கண்ணருவி மாறாது களிப்படைய மண்ணு விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூசலெனத் தடுமாறி யுழலுமாக்கள்
கருமாறிக் கதியடையக்கான் மாறி நடித்தவரைக் கருத்துள் வைப்பாம்."

— திருவிளையாடற் புராணம்

"பூமாது பொலிவெய்த முகுந்தன் காக்கும்
புவிமாது வளம்பெருகப் புலமை சான்ற
நாமாது நலந்தழைப்ப விருள்கால் சீக்கு
நகைநிலவு தவழ்மவுலி நன்னீக் கங்கை
மாமாது புனறுளிப்ப மறைகள் வாழ்த்த
வளர்தில்லை யம்பலத்துள் வாம நீங்காத்
தேமாது விழிகுளிர்ப்ப வமரர் போற்றத்
திருநடஞ்செய் நூபுரத்தாள் சென்னி சேர்ப்பாம்."

— சேதுபுராணம்

"நிறங்கட்கப் புறநாத னினைந்துட்சிற் கனனாகிச்
செறிந்தச் சித்திரகாயந் திருந்தக்கட் செவிகாண
அறங்கட்குப் புகலாகு மகண்டப்பொற் பொது நாளும்
பிறங்கப் பொற் புடனாடும் பெரும்பற்றப் புலியூரே."

— திருவாலவாயுடையார் — திருவிளையாடற் புராணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருச்சிற்றம்பலம்

"பொருப்பைப் பண்பொடுங் குனித்துச் சண்டவெம்
புரத்தைப் பொன்றமுன் சிரித்துக் கண்டவன்
கரப்பொற் குன்றடுந் திறத்துச் சிங்கமென்
கருத்துட் டங்குமஞ் செழுத்துச் சம்புவண்
டரக்குக் கொண்பதஞ் சலிக்குத் தென்றலந்
தழைப்பத் தொந்தொமென் றிசைத்துச் சந்ததம்
திருத்தச் செம்பதம் புரிப்பித் தன்புறுந்
திருச்சிற்றம்பலம் திருச்சி ற்றம்பலம்."

திருவம்பலம்

"அருளுந்தொகும் பொருளுந்திருந் தழகுந் தொழுங் குலமுந்தரும்
பரிவொன்றுசந் ததியும் புகும் பழியஞ்சுமொண் டொடியும் பொருந்
துருவுந்திறம் பிறவுந்துளங் கொளியும் பிறங்கறிவுஞ்செழுந்
திருவும்பெரும் புகழுந்தருந் திருவம்பலந் திருவம்பலம்."

பொன்னம்பலம்

"முன்னங்கருங்கண்ணன் கிடந் திம்மண்குடைந் துண்ணைந்துறுந்
தன்னண்டமென்றன்னம் பறந்தின்ன பெருங்கின்னம்படும்
பன்னும்பழஞ்சொன்மந்திரம் பன்னுங்களென் றுன்னும்பதம்
பொன்னஞ்சிலம் பின்னந்தரும் பொன்னம்பலம் பொன்னம்பலம்."

சபாபதி

"திருமேவுஞ் சதுவேதச் சிரமேவும் பரஞ்சோதி
யருமேவுந் திருவுருக் கொண்டம்மையுடன் செம்மைபெற
மருமேவும் பெரும்பற்றப் புலியூர்மா மணிமன்றுட்
குருமேவும் படிமேவிக் கூத்தாடுங்கழல் போற்றி."

"சங்கேந்தும் மலர்க்குடங்கைப் புத்தேளும் மறைக்கோவும் தழல்கால் சூலம்
அங்கேந்தும் அம்மானும் தத்தமது தொழில் தலைநின் றாற்றச் செய்தோர்
பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப இருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்கேந்தும் மணிமன்றுள் குனித்தருளும் பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்"

— *காஞ்சிப்புராணம்*

"பொன்னனிநூ புரஞ்சிலம்ப வடிபெயர்க்குந் தொறுமங்கைப் புணர்செந்தீயு
மின்னொளிவே ணியிற்புனலுமெழுந்து பொறி திவளையிவை விரவ வீசி
மன்னியநீள் பகைமுடிப்ப வுடலமுயன் றாங்கிரண்டும் வயங்கியாடத்
துன்னியபே ரொளிமன்றி னடநவிற்றும் பெருமானைத் தொழுதுவாழ்வாம்."

— *திருவானைக்காப்புராணம்*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"முதிருஞ்சுவை மதுரம்பெற மொழியுந்தமிழ் விரகன் புகழ்
பதிகம்புனை பவனம்பினர் பவபஞ்சனன் அமலன் கதிர்
உதிரும்படி பகிரண்டமும் உடையும்படி இலகும்படி
அதிரும்படி நடனம்புரி அதிருங்கழல் அதிருங்கழல்."

— *அருணாசலபுராணம்*

"நீர்தந்த கமலமலர் அயனெடு மால் அமரர்தரு நீழல் வைகும்
போர்தந்த குலிசன் முதலியர் பரவப் புலியும் ஒருபணியும்போற்ற
கார்தந்த குழ லிமய வனிதைமுகம்மலர்ந்துவிழிகளிப்பநாளும்
சீர்தந்த கனகமணி மன்றாடும் பேரொளியைச் சிந்தை செய்வாம்."

— *கருவூர்ப்புராணம்*

"சொல்லாலும் பொருளாலும் மெவரே செய்யுந்
தொழிலாலும் விழியாலும் சுருதி யாலும்
நல்லோர்க ளளவாலும் மிருவ ராலும்
நாடரிய பேரொளியா ஞான மூர்த்தி
யெல்லாருந் தொழுதிறைஞ்சும் தில்லைமன்று
ளிலங்கியெழும் விராட்புருடனிதயந் தன்னிற்
செல்லாத நாதாந்தச் சிரத்தி னின்று
திருநடஞ்செய் யரன்பதமே சிந்தை செய்வாம்."

— *திருவையாற்றுப்புராணம்*

"திருமார்பன் முதலான தேவருக்கெல்
லெமறையோன் சிவனே யாமென்
றொருவாய்மை மறைகரைந்த துண்மையெனத்
தெளிந்துலக முய்ய முத்தீ
மருவாருங் குழலுமைபத் தினிவளர்ப்ப
விடக்கரத்து வயங்க வேந்திப்
பெருவாழ்வு தரவரசம் பலத்தாடும்
பேரொளியைப் பேணி வாழ்வாம்."

— *பேரூர்ப்புராணம்*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"இதந்தரு மடந்தையொ டியைந் துயிருடம்பென
விதம்ப டுலகங்களின் விரிந்தொளி விளங்குவார்
மதங்க மொடுதுந்துபி வளங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழ லிறைஞ்சுவாம்."

— *திருவாதவூர்டிகள் புராணம்*

"அம்புலிச் செஞ்சடையாட அருட்கரத்தில்மானாட அயன் கபாலம்
தம்பெருமான் கரத்தாட தாழ்சடையும் நீண் முடியும் தயங்கி யாட
வெம்புலியும் பதஞ்சலியும் வியந்தாட விளங்கிழையாம் விமலை யாட
நம்பர்நடமா டுங்கழலே நமதுமுடிக் கணிசெய்மணி நகையா மாதோ."

— *திருமயிலைப்புராணம்*

"பூமேவு அயன்மாலும் சதிமுறைவாத் தியமியற்றப் புலித்தா ளோனும்
நாமேவு வியாகரண பாடியஞ்செய் பதஞ்சலியும் நயந்து போற்ற
ஓமேவு பொருள் கண்ட சச்சிதா னந்தவெளி யுருவ மாகித்
தேமேவு மலர்மன்றுள் உமைகாண நடம்புரிதாள் சென்னி சேர்ப்பாம்."

— *திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்*

"பூமேவு மடற்கமலப் பொகுட்டுறையும் அந்தணனும் பொலிவி னோங்கி
தேமேவு பசுந்துளவத் திருமாலும் காண்பரிய செல்வ ரேனும்
பாமேவு பதஞ்சலியும் புலிப்பதனும் கண்டுதினம் பணிந்து போற்ற
மாமேவு மணிமன்று ணடம்புரி பொற் பதமிறைஞ்சி வழுத்தல் செய்வாம்."

— *உத்தரகோசமங்கைத் தல புராணம்*

"கடல்சூழ் வையங் கதித்தமணிக் கவினார் வையம் எனக்கொடுபோந்து
அடல் நின்ற திரிபுரம்வென் றருளும் முறுவல் நிலவெறிப்ப
மடல்சூழ் கோதை முகநோக்கி மன்றுள் நடமா டிய இறைவன்
மிடல்சூழ் மணிநூ புரபாதம் விரைமென் கமலம் துதிசெய்வாம்."

— *திருவோத்தூர் புராணம்*

"நீருலவு செஞ்சடைபின் தாழமுய லகன்மீது நின்று மன்றில்
தாருலவு குழலுமையாள் கண்களிப்ப அன்பர்பவந் தகைதீர்ந் துய்யக்
காருலவு மிடறிலங்கக் கைவீசிக் குஞ்சிதத்தாள் காட்டி யாடும்
சீருலவும் ஆவடுதண் டுறைமருவு பரம்பொருளைச் சிந்தை செய்வாம்."

— *திருவாவடுதுறைப்புராணம்*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"சொல்கொண்ட சதுர்வேதந் துதித்துவந் தனைகூற சுரர்வந் தேத்த
வெல்வந்த தவமுனிவ ரிருபுடையும் விழிபொழிநீர் மாரி பெய்ய
வல்வந்த முலையுமையாள் வரிநெடுங்க ணருள்கொழிப்ப மன்று ளாடும்
வில்வந்தண் ணிதழிபுனை விமலனிரு பதகமலம் விருப்பம் செய்வாம்."

— சென்னிமலைத் தலபுராணம்

"சீராரும் சதுர்மறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல் புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரும் மணிமன்றுள் எடுத்த திருவடி போற்றி."

— சேக்கிழார் புராணம்

திருவளர்பூஞ் சிவகங்கைத்தீரத்தோர் பாகத்துத் தேவிகாண
முருகுளருஞ் சுகந்தமலர் முகுந்தன்முத லோன்இறைஞ்ச முரசமார்ப்பத்
தருவளரு நான்மறையும் சயசயவென் றேத்தவெழு தவத்தோர் வாழ்த்த
மருவளருந் திருத்தெய்வ மன்றினடம் புரிசிவன்றாள் மலர்கள் போற்றி.

— திருத்தவத்துறை புராணம்

மன்னுமலப் பகைபுணர்தீர்த் தான்மமக டூஉப்புணரும் வலியான்மிக்குத்
துன்னுநிக மாகமஞ்சொல் வலியாலாட் கொளும் வலியால்தோலா அன்பால்
இன்னுநட நவில்வலியால் ஆடல்வல்லார் எனும் பெயர் பூண்டேம மன்றுள்
பன்னுகருணை யின்மருவு மாதேவர் குஞ்சிதத்தாள் பரசி வாழ்வாம்.

— திருக்குடந்தைப் புராணம்

படிமுதனா லிரண்டாய தூலமே னியுமனுமுற் பகரா றாய
மடிவரிய சூக்குமமே னியுமதிசூக் குமமேனி மயமே யாகக்
கடிதலிலா வவ்வதிசூக் குமமேனி நோக்கியுளங் களிப்ப வேத
முடியுரையு மணிமன்று ணடநவிலும் பெருவாழ்வை முன்னி வாழ்வாம்.

— வீரவனப் புராணம்

உலகெலாம் படைத்தேந்து மிருவர்விழி யருளுங்கற் பகமு மாகி
பலவெலாம் புடைத்துடைய வொருகரும்பி னிருசுரும்புக் கருளுங் கோவாய்
வலமெலாம் படைத்தடைந்த வண்டிரண்டு மகிழ்ந்தாட ஆடா நிற்கும்
நலமெலாம் படைத்தசுவை யானந்தப் புதுத்தேனை நாவிற் கொள்வாம்.

— திருவையாற்றுப் புராணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வந்துதரி சித்திடுவார் மலமாசு மண்ணவெழு மாண்புபோலச்
சிந்துபல சிகரமந்தாகினி வெவ்வினைக் காடுதீத்தலே போன்
முந்துசுடர் விட்டெழுசெந் தழலின்மே னோக்கவொளிர் மூவாமன்றில்
நந்துதிரு வருள்பெருக நடநவிலும் பெருமானை நயந்துவாழ்வாம்.

— பட்டீச்சுரப் புராணம்

சிவமாகிச் சத்தியாய் நாதவிந்து வாய்ச்சதா சிவமு மாகி
நவமாரு மகேசனுருத் திரனெடுமால் நான்முகன்மற் றியாவு மாகித்
தவமாரு மிரசிதசிற் சபையில்வலத் தாண்மாறித் தையல் காண
உவமான மின்றிநிருத் தம்புரியும் பேரொளியை யுளத்தில் வைப்பாம்.

— கடம்பவன புராணம்

"திருமாலும் போதினனும் தேவருமா முனிவருமே செறிந்து போற்ற
மருவாரும் பொழினிலவுந் தில்லைமணி மன்றாடன் மகிழ்வான் றன்னை
உருவாகித் தானுயிர்கட் குருவாக்கி யளித்தடக்கி யுய்யச் செய்யும்
பெருமானை நிருமலனைச் சிவனையடி பணிந்துளத்திற் பேணு வாமே."

இதுவு மது

"சின்மயனைச் சிவனை மல வலிதொலைய விஞ்ஞான கலர்க்குச் செப்பும்
சொன்மயனைத் துகளிலியைத் துலையிலியைப் புலியரவுஞ் சுரர்க் கொப்பாரும்
பொன்மயனும் புகழவருள் புரிவானை யனைத்துயிரும் பொருந்திப் பேத
மின்மயனைப் பதம்பணிவா ரெணியவர மெணியபடி யெய்து வாரே."

— சிவதருமோத்தரம்

"ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி அருள் ஞான மூர்த்தியா யகில மீன்ற
மாதினையும் ஒருபாகத் தடக்கிவானோர் மகுடசூளா மணியாய் வையம்போற்றப்
பாதிமதி யணிபவளச் சடைகள் தாழப் படரொளி யம்பலத்தாடும் பரனார்பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்து தளராத பேரன்பு வளரா நிற்பாம்.

— சிவஞான சித்தியார்

"ஓங்கொளியா யருண்ஞான மூர்த்தியாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத் தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துதி செய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றல்செய்வாம்."

— சிவப்பிரகாசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சத்தியஞா னானந்த மயமாய் நின்ற
தற்பரனே சத்தனென வருவ னாகிப்
பத்தியினா னினைந்தேத்த வருவ ரூபப்
பான்மையா யுத்தியுத்தப் பரிச தாகிப்
புத்தியா னதுவுமுத்தி தானு நல்கப்
பொருந்துபிர விருந்தகனா மியல்ப தாகி
நித்தியமாஞ் சத்தியுருத் தரித்து மன்று
ணின்றுநடஞ் செய்வோன்றா ணினைதல் செய்வாம்.

— ஸ்ரீ சிவாக்கிரயோகிகளின் சிவநெறிப் பிரகாசம்

உலகினும் உயிரினும் ஒன்றி நின்றருள்
குலவிய ஒளியுயிர் குறிக்க ஐந்தொழில்
இலகிய மன்றினுள் எழில் நடஞ்செய்வோன்
வலமிகு மலரடி வழுத்து வாமரோ.

— சிவபுண்ணியத்தெளிவு

மலரவன்செய் தொழிலொருகை மாயவன்செய் தொழிலொருகை வானோராதிப்
பலர்புகழும் உருத்திரநா யகன்செய்தொழி லொருகைமறை பரவும் ஈசன்
புலர்வருஞ்செய் தொழிலொருதாள் சதாசிவன்செய் தொழிலுமொரு பொற்றா ளாகக்
கலரணுகா மணிமன்றுள் நடநவிலும் பெருமானைக் கருதி வாழ்வாம்.

— திருவரன்குளப்புராணம்

பூமேவு முத்தொழிலாற் றுதலின்வலி யதுமறைப்பின் பொலிவையாற்ற
ணாமேவு மதற்குவலப் பதமமையப் படிந்தாலு நாமு நோக்க
லாமேவு முறையென்றே யருள்பதங்குஞ் சிதமாயே யதனை நோக்க
வோமேவு கனகசபை நடநவிலும் பெருவாழ்வை யுன்னி வாழ்வாம்.

— ஸ்ரீசிவஞான யோகிகள் சரித்திரம்

ஏற்றர்வாட் போக்கி இராசலிங்கர் கூற்றினுக்கோர்
கூற்றர் சுரும்பார் குழல்பாகர் — நீற்றர்எமை
நன்றாடல் கண்டோ நயவாமை வேண்டியவர்
மன்றாடல் கண்டோமம் மா.

— வாட்போக்கிக் கலம்பகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொன்பூத்த மணிமன்றுள் ஆனந்த நடங்காணப் புகுவோர்க்குஇந்தக்
கொன்பூத்த குஞ்சிதமென் பாததரி சனத்தினே கூடு முத்தி
மென்பூத்த பிறமுயற்சி வேண்டல்எனுங் குறிவரத அபயத்தின் மேவ
மன்பூத்து நடங்குனிக்கும் பெருவாழ்வைப் பணிந்தேத்தி வாழ்வா மன்னோ.

— ஏமநாதசபா மான்மியம்

தனிப்பாடல்

ஒருகோடி ரவிஒளியும் ஒருமுக் கண்ணும் ஓங்குமிளம்
பிறைநதிசேர் சடையும் ஊன்றும்
திருமேவு வலப்பதமும் தூக்கும் மற்றைத் திருவடியும்
புலியதனின் உடையும் செய்ய
குருமேவும் அக்கினிக்கை வீசு செங்கை கோதில்அப
யங்கைதம ருகக்கை நான்கும்
உருகுஆர்வத்து இடப்பாலின் உமையு மாக ஒளிருநட
ராசனையாம் உன்னு வாமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவகாம சுந்தரி தோத்திரப் பாடல்கள்

"மன்றின்மணி விளக்கெனலாம் மருவுமுக நகை போற்றி
ஒன்றிய மங்கலநாணி னொளிபோற்றி உலகும்பர்
சென்று தொழ் அருள் சுரக்கும் சிவகாம சுந்தரிதன்
நின்ற திரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி."

— *கோயிற்புராணம்*

"உலகமுழுதும் பயந்துங் கன்னிமை நீங்கா திறைபா லுவந்து வைகி
அலகிலுயிர்க் கருள்சுரந்து பேரறமெண் ணான்கியற்றி யனைத்துங் காக்குந்
திலக நுதற் செங்கனிவாய் சிவகாம சுந்தரியாந் தேனைச் செம்பொன்
மலையரை குலவிளக்கை யிருள் தீர வெமதகத்துள் வைத்து வாழ்வாம்."

— *உத்தரகோசமங்கைப்புராணம்*

"அறத்தாளே உயிர்க்கெல்லாம் அமுதளிக்கும் குணத்தாளே அழகார் பச்சை
நிறத்தாளே அடியவர்க்கு நிதியளிக்கும் நெறியாளே நினையார்க் கென்றும்
புறத்தாளே தில்லைநகர்ச் சிவகாமி என அமர்ந்து புனித நல்கும்
திறத்தாளே எமைவளர்க்கும் கரத்தாளே நின்மலர்த்தாள் சிரங் கொள்வேனே."

— *திருமயிலைத் தலபுராணம்*

"கருணைபொழி விழிமலரும் மதிமுகமும் குறுமூரல் கதித்த வாயும்
அருணவெயில் பொழியுமணி மங்கலநாண் ஒளிமிடறும் ஆரம் பூண்ட
கருணைமுகிண் முலையும்இடு கிடையும் இளந் தளிரடியும் தயங்கக் காட்டித்
தெருண்மலிய எமதுளம்வாழ் சிவகாம சுந்தரியைச் சிந்தித் துய்வாம்."

— *திருவோத்தூர் புராணம்*

"பரந்தெழுந்த அமண்முதலாம் பரசமய விருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளி விளங்க
அரந்தைகெடப்புகலியர் கோன் அமுது செயத்திருமுலைப் பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரிபூங்கழல் போற்றி."

— *சேக்கிழார் புராணம்*

"ஆடக சிதம்பர அணங் குமை அணங்கிலா
நாடக னனந்தக்க நன்குபுனை பங்கினாள்
ஏடக மணம்பொருவ மெங்கணும் இயைந்துளால்
பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம்."

— *திருவாதவூரடிகள் புராணம்*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எச்சமெனல் சிலதவிரச் செயவெனும்வாய் பாட்டுவினை யெச்ச மும்பார்
மெச்சவினை முதலினொடு பிறவுமேற் றிடுமெனுஞ்சொல் வீணே யாகக்
கச்சமிலின் புயிரடைய நடங்காண்பா ளென்றறிஞர் கருதி யேத்த
நிச்சமது கண்டுவப்பித் தருள்பரிபூ ரணிபதமுண் ணிறுத்தி வாழ்வாம்.

— வீரவனப் புராணம்

"அப்பாலைக் கப்பாலைக் கப்பாலா யறிவறிய வமலைதன்னை
அப்பாலுந் தானாகித் தொழிலைந்து மியற்றாதே யியற்று வாளை
முப்போது மலர் தூவி முடிசாய்த்து மனத்தகத்து முன்னு வாரை
தப்பாதே பிறப்பறுக்குஞ் சிவகாம சுந்தரியைப் பணிவாந் தாண்முன்."

— சிவதருமோத்தரம்

பரந்தபரா பரையாதி பரன்திச்சை
    பரஞானம் கிரியைபர போக ரூபம்
தருங்கருணை உருவாகி விசுத்தா சுத்தத்
    தனுகரண புவனபோ கங்கள் தாங்க
விரிந்தஉபா தானங்கள் மேவி ஒன்றாய்
    விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
    அன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம்.

— சிவப்பிரகாசம்

ஒற்கமில் இருண்மலத் தொளியின் நீங்கியே
நற்கதி பெறவருள் நயந்து போற்றுவாம்
சிற்கனன் தன்னொடு சிறப்பின் ஓங்கியே
கற்கொளி போன்றுளாள் கமல பாதமே.

— சிவபுண்ணியத் தெளிவு

இளங்குழவிப் பிணிக்குஈன்ற தாய்மருந்து நுகர்வதுபோல் இருளின் மாண்ட
களங்குலவும் மலம்உயிர்கட்கு ஒழியஅருள் நடங்காணுங் கடன்மீக்கொண்டு
வளங்குலவு தனதுபெருங் கற்புமொரு கணவர்இறை மாண்பும் தோன்ற
விளங்கும்இர ணியமன்றில் நின்றருளும் மணிவிளக்கை விரும்பி வாழ்வாம். 11

— திருவானைக்காப் புராணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூரணியைத் தனுகரண புவனபோ கங்கள்தமைப் புரக்கும்மாயா
காரணியைப் பசுபாச மலமகல மெய்ஞ்ஞானக் கண்ணில் தோன்றும்
ஆரணியைப் பரமசிவன் ஆனந்த நடத்தின்வைத்த அருட்கண் ணாளைக்
சீரணிகொள் பொழிற்றில்லைச் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம்.

— பிரமோத்தர காண்டம்

நிறைந்திடும் பரன்ஐந் தொழின்முறை குயிற்ற நிகரிலாச் சிவமுதலாக
அறைந்திடும் ஏழுபேதமாய் மன்னி யடைதாற் கேற்றிடத்தானும்
உறைந்திடு சத்தி முன்னெழு வகையாய் உயிரொருஎப் புவனமும் அளித்துச்
சிறந்தசிற் சபையி னிருத்த சான்றாகித் திகழ்சிவகாமியைப் பணிவாம்.

— ஏமநாத சபா மான்மியம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கண்ட ஆனந்தக்கூத்து

பெரியபுராணம்

மனிதப் பிறவியில் அவசியம் காண வேண்டிய காட்சி நடனக்காட்சி. அது எல்லோருக்கும் கிடைப்பது அரிது. **'கட்டையிருக்கையில் சிதம்பரம் போய் நான் காண வேண்டுமையே'** என்பது கோபாலகிருஷ்ணபாரதியார் பாடிய நந்தனார் சரித்திரக்கீர்த்தனை. தெரிசனம் என்றாலே சிதம்பர தெரிசனம் நடராச தெரிசனம் என்று பெரியோர்கள் கூறுவது நினைவுக்கு வரும்.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் வேதவனத்தில் கதவு திறக்க அடைக்கப்பாடியருளி இருந்தபோது திருநாவுக்கரசு சுவாமிகள் கனவில் உமையோர் பாகம் உடையவர் பொன்மேனியில் வெண்ணீறு புனைந்த திருக்கோலத்தோடு காட்சி தந்து ''வாய்மூரில் இருப்போம் தொடரவா'' என்று அருளிச் செய்தார்.

உடனே திருநாவுக்கரசு சுவாமிகள் சுவாமி திருவேடத்தின் பின் வேகமாகச் சென்றார் அப்போது பாடிய திருப்பதிகம்,

''எங்கே யென்னை இருந்திடந் தேடிக் கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென் கொலோ.''

காட்சி கொடுப்பார் போலக் காட்டிப் பொற்கோயில் ஒன்றைக்காட்டி மறைந்தருளினார். அந்நிகழ்ச்சியைத் திருஞானசம்பந்தர் கேட்டு உடனே அங்கு வந்து திருநாவுக்கரசருக்குப் பக்கத்தில் நின்றருளினார். அது சமயம் திருநாவுக்கரசர்,

''திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித் தாருநின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.''

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெரியபுராணம்

"அழைத்துக் கொடுபோந் தணியார்போல்
காட்டி மறைந்தார் என அயர்ந்து
பிழைத்துச் செவ்வி யறியாதே
திறப்பித் தேனுக்கே யல்லால்
உழைத்தா மொளித்தால் கதவந்தொண்டு
உறைக்கப்பாடி அடைப்பித்த
தழைத்த மொழியார் உப்பாலார்
தாமிங் கெப்பால் மறைவதென."

"மாட நீடு திருப்புகலி மன்ன ரவர்க்கு மாலயனும்
நேடி இன்னங்காணாதார் நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேத்தி அரசுங் காணக்காட்டுதலும்
பாட அடியார் என்றெடுத்துப் பரமர் தம்மைப் பாடினார்."

நடனக்காட்சியை இருவருக்கும் காட்டினார் என்று சேக்கிழார் பெருமான் அருளிச் செய்துள்ளார்.

திருத்தாண்டகம்

"பாட அடியார் பரவக்கண்டேன்
பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல் கண்டேன் கங்கையாளை
கோடலரவார் சடையிற் கண்டேன்
கொக்கி னிதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே."

திருஞானசம்பந்தர் புராணத்தில் மேற்கண்ட நிகழ்ச்சியை இவ்வாறு பாடுகிறார்.

"அங்கவர் ஏ்கச்சண்பை ஆண்டகையா ரும்அப்பர்
எங்குற்ற தென்று கேட்ப எய்தினார் திருவாய்மூரில்
பொங்கிய காதலால் என்றுரைத்திடப் போன தன்மை
சங்கையுற்று என்கொல் என்று தாமும் அங்கணையப்போந்தார்."

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"அந்நிலை அணைந்தபோதில் அம்பிகையுடனே கூட
மன்னிய ஆடல் காட்டத் தளிரிள வளரும் பாடிச்
சென்னியால் வணங்கி வாய்மூர் அரசொடுஞ் சென்று புக்கங்கு
கின்னியல் புறமுன் கூடி இருவரும் போற்றி செய்தார்."

திருஞானசம்பந்தர் தேவாரம்

"தளிரிள வளரென உமைபாடத் தாளமிடவோர் கழல் வீசிக்
கிளரிள மணியர வரையார்த் தாடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருள்நல்கி வெண்ணீறணிந்தோர் சென்னியின் மேல்
வளரிள மதியமொ டிவராணீர் வாய்மூரடிகள் வருவாரே."

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புகலூரில் செங்கல் செம்பொன்னாகப் பெற்று மகிழ்ந்து திருப்பனையூர் சென்று வணங்கச் செல்லும் போதில் ஊர்ப்புறத்தில் திருநடனக்காட்சியைச் சிவபெருமான் காட்டக் கண்டு பதிகம்பாடி மகிழ்ந்தார் பெரிய புராணத்தில்,

"பதிகம் பாடித்திருக்கடைக்காப் பணிந்து பரவிப்புறம்போந்தே
எதிரில் இன்பம்இம்மையேதருவார் அருள்பெற் றெழுந்தருளி
நிதியின் குவையும் உடன்கொண்டு நிறையும் நதியும் குறைமதியும்
பொதியுஞ் சடையார் திருப்பனையூர் புகுவார் புரிநூல்மணிமார்பர்."

"செய்யசடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத் தொடுங்காட்சி
எய்தஅருள சென்றங்கெழுந்த விருப்பால்விழுந்திறைஞ்சி
ஐயர்தம்மை அரங்காட வல்லார் அவரே அழகியர் என்று
உய்யஉலகு பெறும்பதிகம் பாடி அருள்பெற்றுடன்போந்தார்."

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

"மாடமாளிகை கோபுரத்தொடு
மண்டபம் வளரும் வளர்பொழில்
பாடல் வண்டறையும் பழனத் திருப்பனையூர்த்
தோடுபெய் தொரு காதினிற் குழைதூங்கத்
தொண்டர்கள் துள்ளிப்பாட நின்
றாடுமாறு வல்ல ார் அவரே அழகியரே.

என்று பாடி மகிழ்கிறார்.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கட்டுரையாசிரியர் **சிவஸ்ரீ தி. கணேசன்**

முதுநிலை ஸ்ரீசிவாகம சைவ சித்தாந்த ஆராய்ச்சியாளர்,
தி ப்ரெஞ்ச் இன்ஸ்டிடியூட், பாண்டிச்சேரி

அச்சாகி வெளிவர வேண்டிய முக்கியச் சைவநூல்கள் (கிரந்தம்)

1. காமிகாகமம் : *ஞானபாதம் (18 படலங்கள் முழுதும், 19 ஆவது முற்றுப் பெறாமலும்)*

2. பௌஷ்கராகமம் : *தற்சமயம் நமக்குக் கிடைத்திருப்பது ஞானபாதம் மட்டுமே: 8 படலங்களைக் கொண்ட இவ்வாகமம் சைவசித்தாந்தத்தின் பிரமாண இயலைப் பற்றியும் விரிவாகச் சிந்திக்கிறது. அகோரசிவாசாரியார் தொடங்கி பல சைவ ஆசாரியர்களால் மேற்கோளாகக் கொள்ளப்படும் முக்கிய ஆகம நூல்; உமாபதி சிவாசாரியார் (சந்தானாசாரியாரினும் வேறானவர்) மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாலிவாடி ஞானப்பிரகாசர் என்னும் சைவ ஆசாரியார் இயற்றிய மிக விரிவான உரையையும் உடையது.*

3. தேவீகாலோத்தராகமம் : *இதற்கு வியாக்கிர புரநிவாஸி ஸதாசிவசிவாசாரியார் என்பார் இயற்றிய உரை உள்ளது; இதுவரை வெளிவராதது.*

4. த்விசதிகாலோத்தராகமம் : *காலோத்தராகமத்தின் 200 சுலோகம் கொண்ட ஒரு பிரிவு; இது மந்திரங்கள் முதலியவற்றைப்பற்றி விளக்குவது. இதற்கு அகோர சிவாசாரியாரியற்றிய உரையும் உளது.*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. சதரத்னஸங்கிரஹம்: பல சைவாகமங்களினின்றும் தேர்ந்தெடுத்த 100 சுலோகங்களைக் கொண்டது; சைவசித்தாந்தக் கருத்துக்கள் யாவும் ஒரு சேர அமைந்த நூல். உமாபதி எனும் தில்லையில் வாழ்ந்த சைவ ஆசாரியார் இயற்றியது. இதற்கு உல்லேகநீ எனும் விரிவ்ான உரையும் உள்ளது. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தில்லையில் வாழ்ந்த மறைஞானதேசிகர் இயற்றியதாகக் கருதக் கூடியது.

6. கிரியாகிரமத்யோதிகை என்னும் அகோரசிவா சாரியார் பத்ததி: இதற்கு காஞ்சீபுரத்தைச் சேர்ந்த கச்சபேசுவரசிவாசாரியார் இயற்றிய உரை உளது.

6. மறைஞானசம்பந்தர் மற்றும் அவருடைய சீடர் மறைஞானதேசிகர் நூல்கள்:

1. ஆத்மார்த்தபூஜாபத்ததி: ஆகமங்கள், மற்றும் சைவபுராணங்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட மிகப் பெரிய தொகுப்பு நூல்; சௌசம் தொடங்கி நித்தியபூஜை முடித்து ஆகமசிரவணம் ஈறான அனைத்து நித்தியக் கிரியைகளையும் மிக விரிவாக விளக்குவது. சைவ ஆஹ்னிகம் என்றும் ஆசிரியரால் வழங்கப்படுவது.

2. தீக்ஷாதர்சம்: சைவ ஆகமங்கள் கூறும் தீக்ஷைகளின் வகைகள் அவற்றைச் செய்யும் முறை ஆகியவற்றை மிக விரித்துக் கூறும் நூல்; இதுவும் பல ஆகமங்களினின்றும் மேற்கோள்களாகத் தொகுத்த நூல்.

3. வருணபத்ததி வியாக்கியானம் விலோசனம் (தீக்ஷா பாகத்தின் உரை அச்சாகிவிட்டது)

4. சைவசமயநெறி திருஷ்டாந்தம்: தமது ஆசிரியரியற்றிய சைவசமயநெறி என்னும் தமிழ் நூலின் ஒவ்வொரு செய்யுளுக்கும் மறைஞானதேசிகர் ஆகமங்களிலிருந்து அதற்கு இணையான கருத்துக்களைக் கொண்ட மேற்கோள்களைத் தொகுத்துக் கூறுவது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. சிவஞானசித்தி ஸ்வபக்ஷதிருஷ்டாந்தம்: சிவஞான சித்தியார் சுபக்கத்தின் ஒவ்வொரு செய்யுளுக்கும் அதற்கு இணையான ஆகம சுலோகங்களைத் தொகுத்துக் கூறுவது.

6. சைவஷோடசகிரியா பிரகாசம்: ஸூப்ரபேதம் முதலான சில் ஆகமங்களின் சரியா பாதத்தில் கூறப்படும் சைவர்களுக்கான ருதுஸங்கமனம். கர்ப்பாதானம் முதலான பதினாறு சடங்குகளைப் பற்றிக் கூறுவது.

7. சிவாக்கிரயோகிகளுடைய நூல்கள்

1. கிரியாதீபிகா: இதுவும் சைவ நித்தியானுஷ் டானங்களைக் கூறுவது; பல ஆகமங்களினின்றும் நிறைய மேற்கோள்களைக் கொண்டது

2. சைவ ஸந்நியாஸபத்ததி: சைவர்கள் மேற்கொள்ளும் ஸந்நியாஸ தீக்ஷையைப் பற்றிய மிக விரிவான நூல்; ஆகமங்களின் அடிப்படையில் விரிவாக எழுதப்பட்டது. சைவத்தில் இச்செய்தியைப் பற்றி விளக்குவது இந்நூல் ஒன்றே.

3. சிவஞானபோத விஸ்த்ருத பாஷ்யம் என்னும் ப்ருஹட்டீகை : வடமொழியிலமைந்த சிவஞான போதத்திற்கு மிகப் பெரிய விரிவான உரை; தர்க்கம், நியாயம், மீமாம்ஸை, வேதாந்தம் முதலான சாத்திரக்கருத்துக்களுடன் ஒப்பிட்டு சைவசித்தாந்தக் கருத்துக்களை மிக உறுதியாக நிறுவுவது; இவ்வுரையின் அடிப்படையிலேயே மாதவச் சிவஞானசுவாமிகள் மெய்கண்டாரின் சிவஞான போதத்திற்குத் தமிழில் திராவிடமாபாடியம் எனும் மிகச் சிறப்பான உரையை வரைந்தனர்.

8. ஸூலோசனபத்ததி: திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த மிக விரிவான பத்ததி நூல்; சிவபெருமான் மற்றும் அம்பிகை ஆகிய தெய்வங்களின் பிரதிஷ்டை விதிகளைக் காமிகம் மற்றும் ஸ்ரீ வித்யா ஸம்பிரதாயங்களின் அடிப்படையில் அமைந்த பத்ததி நூல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

9. சிவாகமாதி மாஹாத்ம்ய ஸங்கிரஹம்: யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலி (சாலிவாடீ) என்னும் என்னும் சிவக்ஷேத்திரத்தில் தோன்றி இறுதியில் தில்லையில் வாழ்ந்த ஞானபிரகாசர் என்னும் சைவ ஆசாரியார் இயற்றிய ஆகமத் தொகுப்பு நூல்; சிவாகமம் மற்றும் ஆதிசைவர்களின் பெருமைகளை விரிவாகக் கூறுவது.

9. பிரமாணதீபிகா: மேற்கூறிய ஞானபிரகாசர் இயற்றிய நூல்: சைவசித்தாந்த சாத்திரங்களின் முக்கியக் கருத்துக்களையும், பிரத்தியக்ஷம் முதலான பிரமாணங்களைப் பற்றி ஆராயும் நூல்; அதற்கு அவ்வாசிரியரே வரைந்த உரையும் உள்ளது.

10. சிவபூஜாஸ்தவம் மற்றும் அதன் உரை: 11-12 ஆம் நூற்றாண்டுகளில் சோழ நாட்டில் வாழ்ந்த ஞானசம்பு சிவாசாரியார் இயற்றியது; நித்தியானுஷ்டானத்தில் இயற்றப்படும் சிவபூஜையின் உட்கருத்துக்களை மிக விரிவாக விளக்குவது; இதன் உரை மிக விரிவானது; சைவாகமக் கருத்துக்கள் மற்றும் சைவ சித்தாந்தசாத்திரத்தின் மந்திரசாத்திரக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பொக்கிஷம்.

12. ஞானாவரணபாஷ்யம்: 17ஆம் நூற்றாண்டில் தருமபுரம் மடத்தில் விளங்கிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் வடமொழிச் சிவஞான போதத்திற்கு இயற்றிய செய்யுள் வடிவில் அமைந்த வடமொழி உரை. பெரும்பான்மை மெய்கண்டாரின் சிவஞானபோதச் சூர்ணிகை, உதாரணச் செய்யுள் ஆகியவற்றின் வடமொழி ஆக்கம்.

13. சிவதர்மம் : மிகத் தொன்மை வாய்ந்த சைவ நூல்; சைவர்களின் எல்லாப் பிரிவினர்க்கும் பொதுவானது; சிவபக்தியின் மாட்சியையும் சிவபெருமானுக்கு எல்லாவகையிலும் தொண்டு மற்றும் வழிபாடுகளை இயற்றுவதை விளக்கும் நூல். மிகப் பழங்காலந்தொட்டே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சைவத்தையும் சிவபக்தியையும் பொதுமக்களிடம் பரப்பவும் வலியுறுத்தவும் எழுந்த நூல்; சிவபக்தியின் மூலம் மக்களுக்குத் தொண்டாற்றுவதை வலியுறுத்தும் நூல்; சரியை மற்றும் கிரியை நெறிகளை இந்நூல் போதிக்கிறது; நந்தியம் பெருமான் ஸநத்குமார முனிவருக்கு உபதேசிப்பதாக அமைந்தது; 12 அத்தியாயங்கள் உடையது; ஸ்மிருதி உரைகளிலும், பல சைவ நூல்களின் உரைகளிலும் மேற்கோள்களாக எடுக்கப்பட்ட நூல். மேலும், சோழமன்னர்கள் பல சிவாலயங்களில் இந்நூலை வக்காணிப்பதற்காக நிபந்தங்களை ஏற்படுத்தியுள்ளனர் என்று பல கல்வெட்டுக்கள் மூலம் அறிகின்றோம். ஞானசம்பந்தப் பெருமான். அப்பர் பெருமான் ஆகியோர் பரப்பிய சைவநெறிகளுக்கும் சிவதருமம் போதிக்கும் சைவநெறிகளுக்கும் மிகுந்த தொடர்பு இருப்பது தெரிகிறது.

14. சிவதருமோத்தரம்: மேற்கண்டநூலைப் போன்றே மிகப் பழமையானதொரு சைவநூல்; ஷண்முகக்கடவுள் அகத்தியமுனிவருக்கு உபதேசிப்பதாக அமைந்துள்ளது; இந்நூலும் சிவபக்தியையும் சைவத்தொண்டையும் வலியுறுத்துகின்றது; சைவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிகள்(தருமங்கள்), சிவபுண்ணியங்கள் அதன் பயன்கள், சைவர்கள் விலக்கவேண்டிய பாவங்கள் அவற்றால் ஏற்படும் தீங்குகள் ஆகியவற்றையும் விளக்குகிறது; மேலும், ஆகமங்களை ஓலைச் சுவடிகளிலோ பொன் முதலான உலோகப் பட்டயங்களிலோ எழுதி, வழிபட்டு, யானை முதலான வாகனங்களில் ஏற்றி ஊர்வலம் வந்து அவற்றைப் பிரதிஷ்டை செய்துவழிபடுதல், தக்க சிவயோகிகளுக்கு அந்நூல்களைத் தானமாகக் கொடுத்தல், சைவமடம், நந்தவனம் ஆகியன அமைத்தல் முதலிய பல செய்திகளைத் தன்னகத்தே கொண்ட நூல்; முன்னமே கண்டபடி 16 ஆம் நூற்றாண்டுச் சைவ ஆசாரியரான மறைஞானசம்பந்தர் இந்நூலை வடமொழியினின்றும் மிக அழகான தமிழ்ச் செய்யுளாக ஆக்கித் தந்துள்ளார். தம்முடைய தமிழ் மற்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடமொழி நூல்களில் பல இடங்களில் சிவதருமோத்தரம், சிவதருமம் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்களாகப் பல செய்யுள்களையும் சுலோகங்களையும் எடுக்கிறார். மேற்கண்ட இவ்விரு நூல்களும் 12 அத்தியாயங்கள் கொண்டவை.

15. சுருதிஸூக்திமாலை: மிகப் புகழ் பெற்ற சைவ ஆசாரியரான ஹரதத்தாசாரியார் இயற்றியது; வேதங்களால் போற்றப்படும் முழுமுதற்கடவுள் சிவபெருமான் ஒருவரே என்று வேதமந்திரங்களின் துணைகொண்டே நிறுவும் நூல்; இதற்கு தெலுங்கு சோழ வமிசத்தைச் சேர்ந்த சிவலிங்கபூபதி என்பவர் இயற்றிய உரையும்(அச்சானது), ஈசுவரபட்டர் என்பார் இயற்றிய உரையும் உள்ளன. சுருதிஸூக்திமாலை தமிழில் செய்யுள் வடிவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வாழ்ந்த பிற்காலச் சைவ ஆசாரியர்களால் பெரிதும் போற்றப்பட்டது.

16. சிவதத்துவவிவேகம்: அப்பயதீக்ஷிதர் எனும் மிகச் சிறந்த சைவ ஆசாரியரால் இயற்றப்பட்டது; அவ்வாசிரியரே இயற்றிய மிக விரிவான உரையையும் கொண்டது; வேதம் முதலிய நூல்களால் மிகுதியும் போற்றப்படும் முழுமுதற்கடவுள் சிவபெருமான் ஒருவரே என்னும் கருத்தைப் பலவழிகளிலும் எண்ணற்ற நூல்களின் துணைகொண்டும் நிறுவுவது. இவ்வகையான நூல்கள் சைவத்திற்குப் பொக்கிஷமானவை; வைணவத்தின் தாக்குதல்களிலிருந்து சைவத்தைக் காத்து வைதிகசைவமார்க்கத்தை நிறுவுவதற்காகவே எழுதப்பட்ட நூல்கள் இவை.

மேற்கண்ட நூல்களைத் தவிர இன்னும் பல நூல்களும் உள்ளன. அவற்றைப் போற்றிப் பாதுகாத்துப் புத்தகவடிவில் பதிப்பிக்க வேண்டியது சைவர்களாகிய நம் ஒவ்வொருவருடைய கடமை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்

கட்டுரையாசிரியர் **சிவஸ்ரீ இரா. மாணிக்கவாசகன்**
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், தேசிய கல்லூரி, திருச்சிராப்பள்ளி.
(ஆனந்ததாண்டவம் நூலாசிரியரின் மூத்த திருமகனார்)

அச்சாகி வெளிவர வேண்டிய முக்கியச் சைவநூல்கள் (தமிழ்)

1. சிதம்பர புராணம்
2. திருவானைக்கா புராணம்
3. திருவாஞ்சியத்தல புராணம்
4. திருமயிலைத்தல புராணம்
5. திருப்பரங்கிரித்தல புராணம்
6. திருவோத்தூர்தல புராணம்
7. பேரூர்ப் புராணம்
8. திருவாவடுதுறைப் புராணம்
9. திருவாரூர்ப் புராணம்
10. கோயிற் புராணம்
11. கருவூர்ப் புராணம்
12. திருக்காளத்திப் புராணம்
13. சேதுபுராணம்
14. காஞ்சிப்புராணம்
15. வெஞ்சமாக்கூடல் புராணம்
16. அவிநாசித்தல புராணம்
17. அம்பர்ப் புராணம்
18. புகழ்ச்சோழர் புராணம்
19. கரபுர நாதர் புராணம்
20. பவானித்தல புராணம்
21. பழனித்தல புராணம்
22. விருத்தாசல புராணம்
23. அருணகிரிப் புராணம்
24. திருநெல்வேலித்தலபுராணம்
25. திருப்புனவாயில்தல புராணம்
26. உத்தரகோசமங்கைத்தலபுராணம்
27. திருப்பைஞ்ஞீலித்தல புராணம்
28. திருக்குற்றாலத்தல புராணம்
29. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை நூல்கள்

மற்றும் அனைத்து தலபுராணங்களும், மற்றுமுள்ள சைவ அறிஞர்களின் நூல்களும் அவசியம் உரையுடன் வெளிவரல் வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கருவி நூற்பட்டியல்

I. இதிகாசம்
சிவரகசியம்

II. உத்தரவேதம்
திருக்குறள்

III. சிவாகம உபாகமம்
சிவதருமோத்தரம் (தமிழ்மொழிபெயர்ப்பு – மறைஞானசம்பந்தர்)

IV. பன்னிரு திருமுறைகள்
திருஞானசம்பந்தர் தேவாரம்
திருநாவுக்கரசர் தேவாரம்
சுந்தரர் தேவாரம்
திருவாசகம், திருக்கோவையார் மாணிக்கவாசகர் அருளியது.
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறை
திருமந்திரம், பதினோராந்திருமுறை, பெரியபுராணம்.

V. புராணங்கள்
1. கோயிற்புராணம் – உமாபதிசிவம்
2. திருவிளையாடற்புராணம் – பரஞ்சோதிமுனிவர்
3. கந்தபுராணம் – கச்சியப்ப சிவாச்சாரியார்
4. பேரூர்ப்புராணம் – கச்சியப்ப முனிவர்
5. திருக்குற்றாலத் தலபுராணம் –
6. வேணுவனப் புராணம் –
7. திருவாலங்காட்டுப் புராணம் –
8. திருவாதவூரடிகள் புராணம் – கடவுண்மா முனிவர்
9. சிதம்பர புராணம் – பரஞ்சோதியார்
10. காஞ்சிப் புராணம் – சிவஞான முனிவர்
11. அருணகிரிப்புராணம் – சைவஎல்லப்ப நாவலர்
12. திருத்தணிகைப் புராணம் – கச்சியப்ப முனிவர்
13. திருக்காளத்திப் புராணம் – ஆநந்தக் கூத்தர்
14. கருவூர்ப்புராணம் –
15. கூர்மபுராணம் –
16. திருஆனைக்காப்புராணம்–கச்சியப்பமுனிவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

VI. மெய்கண்ட சாத்திரங்கள்

1. சிவஞானபோதம் –
2. சிவஞான சித்தியார் –
3. சிவப்பிரகாசம் –
4. திருவருட்பயன் –
5. கொடிக்கவி –
6. உண்மைவிளக்கம் –
7. திருவுந்தியார் –
8. திருக்களிற்றுப்படியார் –

VII. மற்றுமுள்ள சைவ அறிஞர்களின் நூல்கள்

1. சிவஞானமுனிவர் பாடல்கள்
2. பட்டினத்தார் பாடல்கள்
3. தாயுமானவர் பாடல்கள்
4. சிவப்பிரகாச சுவாமிகள் பாடல்கள்
5. அருணகிரியார் பாடல்கள்
6. பிரமசூத்திர சிவாத்துவித சைவ பாடியம் – காசிவாசி செந்திநாதய்யர்.
7. குஞ்சிதாங்கிரிஸ்தவம் – உமாபதிசிவம்
8. குமரகுருபரர் பாடல்கள்
9. சைவ சமயநெறி – மறைஞான சம்பந்தர்
10. பெரிய புராண சூசனம் – ஆறுமுக நாவலர்
11. மூவரம்மானை –
12. நந்தனார் சரித்திரக்கீர்த்தனை – கோபால கிருஷ்ண பாரதியார்
13. முதுமொழிமேல் வைப்பு – வெள்ளியம்பலவாணத் தம்பிரான்
14. மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவதீக்ஷையின் பெருமையும், அவசியமும்

கட்டுரை ஆசிரியர் : இரா. முருகேசன், எம்.ஏ.,
சேக்கிழார் நிலையம், நித்தியானந்தபுரம், திருச்சிராப்பள்ளி-8.

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்திங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

'தீக்ஷை' என்ற சொல்லுக்கு 'கொடுப்பதும்', 'கெடுப்பதும்' என்பது பொருள். தீ=கொடுப்பது. க்ஷை=கெடுப்பது. அதாவது அஞ்ஞானத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்று பொருள். தீக்ஷை என்பதற்குச் 'சிவபெருமானின் கிரியாசத்தி வியாபாரம்' என்றும் பொருள் கொள்ளலாம். முதலில் சிவபெருமான், கிரியா சக்தியைப் பதித்துப் பின்புதான் ஞானத்தை விளங்கச் செய்கின்றார். சிவபெருமானைச் சிவாகமங்களில் விதித்தபடி வழிபாடு செய்வதற்குரிய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதுதான், சிவதீக்ஷை பெறுவதன் நோக்கமாகும்.

ஞானத்தால் மட்டுமே வீடுபேறு அடையமுடியும் என்பது சைவ ஆகமங்களின் முடிந்த கொள்கை. ஞானத்தைத் தவிர வேறு எந்த வகையிலும் வீடு பேறு அடையமுடியாது. ஞானத்தைப் பெறுவதற்குச் சரியை, கிரியை, யோகங்களாகிய தவத்தை மேற்கொள்ள வேண்டும். 'கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' எனச் சிவப்பிரகாசம் கூறும்.

விரும்பிய மந்திர அதிகாரம் அர்ச்சனா அதிகாரம்
மேவும் யோக அதிகாரம் எனச் சமயம், விசேடம்
வரும் பொருவுஇல் நிருவாணம், மந்திரங்கள், கலைகள்
வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்
இறங்குஅடைவில் தொகை பதினொன்று எண்பது ஒன்று ஐம்பத்து ஒன்று
இருநூற்றோடு இருபத்துநாலு ஆறாறு ஐந்தில்
பரந்த நெறி அறுவகையும் ஒருவி நினைவு அரிதாம்
பரபதத்துள் உயிர் விரவப் பயிற்றும் அன்றே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்று தீக்ஷைகளின் வகைகளையும், தீக்ஷைப் பெறுவதின் பயனையும் மிக அழகாக சிவப்பிரகாசம் கூறுகின்றது. இதன் மூலம் சமய தீக்ஷைப் பெற்றவர்களுக்கு மட்டுமே குருநாதர் உபதேசித்த மந்திரத்தை ஜெபிக்கும் உரிமை உண்டு என்றும், விசேட தீக்ஷை பெற்றவர்களுக்கே சிவபூஜை செய்வதற்கும் சிவயோகப் பயிற்சி செய்வதற்கும் உரிமை உண்டு என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

ஒரு சிலர் 'எனக்கு ஞானம் கைவந்துவிட்டது. எனவே கிரியைகள் தேவையில்லை' என்றும் கூறுகின்றனர். ஆனால் கிரியைகள் 'உறங்குபவரது கையில் இருக்கும் பொருள் தானே நழுவுவது போல சமய நடைமுறைகள் அவர்களிடமிருந்து நழுவிவிடும்' என்று நமது ஞான நூல்கள் கூறுகின்றன.

ஒண்பொருட்கண் உற்றார்க்கு உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போல் காண். -*திருவருட்பயன்*

குறிப்பிடம், காலம், திக்கு, ஆசனம் கொள்கை, குலம், குணம், சீர்
சிறப்புறு விரதம், சீலம், தவம், செபம், தியானம் எல்லாம்
மறுத்து அற ஒழிதல் செய்தல் மருவிட; மன்னு செய்தி
உறக்கு உறுபவர்போல் வாய்மை ஒழிந்தவை ஒழிந்து போமே. - *சிவப்பிரகாசம்*

ஞாலம் அதில் ஞான நிட்டை உடையோருக்கு
நன்மையொடு தீமை இல்லை; நாடுவது ஒன்று இல்லை
சீலம் இல்லை; தவம் இல்லை; விரதமொடு ஆச்சிரமச்
செயல்இல்லை; தியானம் இல்லை; சித்தமலம் இல்லை
கோலம் இல்லை; புலன்இல்லை; கரணம் இல்லை;
குணம்இல்லை; குறிஇல்லை; குலமும்இல்லை;
பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணம் மருவிப்
பாடலினொடு ஆடல் இவை பயின்றிடினும் பயில்வர்.

- சிவஞான சித்தியார்

பாலர் சில செயல்களைச் செய்தாலும் பயன் கருதி செய்வதில்லையாதலால், பாலர் உவமை மாயாமல நீக்கத்தையும், பித்தர் விருப்பு வெறுப்பின்றிச் செயல்களைச் செய்வதால் பித்தர் உவமை கன்மமல நீக்கத்தையும், பேய்பிடித்தவன் தன்னை மறந்து எதையும் செய்வதால் பிசாசர் உவமை ஆணவமல நீக்கத்தையும் குறிக்கும். எனவே சமய நியதிகளை நாமே கைவிடலாகாது. தன்னைத்தானே ஞானி என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூறிக்கொள்வது ஆணவமல முனைப்புக் காரணமாகவே என்பது சாத்திரங்களின் முடிபு.

இனி'ஆலய வழிபாடு மட்டும் போதும். சிவதீக்ஷை பெற்று ஆன்மார்த்த சிவபூஜை செய்ய வேண்டியதில்லை என்று கூறுபவர்களுக்கு சாத்திரங்களிலிருந்து விடை.

இவ்வுலக மக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:-

1. சிவபெருமான்தான் முழுமுதற் கடவுள் என்பதையும் சைவ சாத்திரத் தோத்திர நூல்களையும், பிரமாணமாக ஏற்றுக் கொள்ளாதவர்கள்.

2. மேற்கண்ட கருத்தை ஏற்றுக்கொண்டு 'சிவதீக்ஷை' பெறாமல் வழிபடுபவர்கள்.

3. சிவதீக்ஷை பெற்று வழிபடுபவர்கள்.

சிவபெருமானை முழுமுதற் கடவுள் என்று ஏற்றுக் கொள்ளாதவர்களை அவர் தண்டிப்பதில்லை. நரகத்துக்கும் அனுப்புவதில்லை. ஆனால் அவரவர் செய்யும் வினைக்குத் தகுந்த மாதிரிப் பயன்களைக் கொடுப்பார்.

சிவபெருமானை முழுமுதற் கடவுள் என்று ஏற்றுக்கொண்டு தீக்ஷை பெற இயலாத நிலையில் உள்ளவர்களை, மறுபிறப்பில் தன்னை நெறிப்படி வணங்கக்கூடிய சூழ்நிலையில் பிறக்க வைக்கின்றார். சிவதீக்ஷைப் பெற்று நியதிப்படி தன்னை வழிபடுபவர்க்குப் பெருமான் கீழ்க்கண்ட இம்மைப் பயன்களையும், மறுமைப் பயன்களையும் அருளுகின்றார்.

இம்மைப் பயன்கள்

1. ஐந்தெழுத்து மந்திரத்தை அதிகாரம் பெற்றுக் கணிக்கும் பொழுது, அதற்கு அதிதெய்வம் 36 தத்துவங்களையும் கடந்த சொரூப சிவம். ஆகையினால் இவர்கள் முன் துர்தேவதை களினால் ஏவப்படும் பில்லி, சூனியம் முதலியன பலிக்காது.

ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார்நோக்கும்
மாதிரத்தினும் மற்றை மந்திரவிதி வருமே. — பெரியபுராணம்

2. பிராணாயாமம் என்பது இருவகைப்படும். (1) சகர்ப்பப் பிராணாயாமம். (2) அகர்ப்பப் பிராணாயாமம். தீக்ஷை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெற்றவர்கள் சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்து சகர்ப்பப் பிராணாயாமம் செய்வதால் இருதய நோய் வராது.

3. கிரியையைச் செய்யும்பொழுது மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு பாவனையால் கிரியை செய்யவேண்டும். அந்த பாவனைகளைச் செய்வதால் ஐந்து பொறிகளும் உயிரின் கட்டுப்பாட்டுக்குள் வரும். ஐந்து புலன்களையும் வெல்லலாம். பாவனையால் உயிர் தூய்மை பெறும்.

4. முத்திரைகளைப் பிடிப்பதாலும், நியாசங்களைச் செய்வதாலும் நவீன மருத்துவமான பிஸியோதெரபி மற்றும் ரெய்க்கி (தொடுகலை)யினால் கிடைக்கும் பயன்களை அடையலாம்.

5. சிவநெறியில் நிற்பவர்கள் அறிந்து பாவம் செய்வதில்லை. அறியாமல் செய்கின்ற பாவங்களைச்

சிவபெருமான் போக்குகின்றார். உதாரணமாக, மார்ஜனம், அகமர்ஷணம் என்ற இரண்டு கிரியைகள் உள்ளன. மார்ஜனம் என்பதில் தூலதேகம சுத்தியாகிறது. அகர்மர்ஷணம் என்பதில் சூக்குமதேகம் சுத்தியாகிறது. திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட சமயத்தில் அவருடைய தந்தையார் சிவபாத இருதயர் தோணிபுரத்து குளத்தினுள் 'அகமர்ஷணம்' செய்து கொண்டிருந்தார் என்று சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திக்கவேண்டியது. இங்கு நாம் செய்த பாவங்களை பட்டியலிட வேண்டிய அவசியமில்லை.

"பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி,
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி" – தேவாரம்

6. சகளீகரணம் என்ற கிரியையைச் செய்யும்பொழுது மட்டும்தான் பெருமான் உடலை இடமாகக் கொள்கின்றார். "எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்" என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" உடலிடம் கொள்ள வேண்டுமானால் சகளீகரணம் என்ற கிரியையைச் செய்யவேண்டும்.

மறுமைப் பயன்கள்

இவ்வுலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் இறப்பு என்பது தவிர்க்கமுடியாத ஒன்று. ஆயினும் எல்லா உயிர்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இறப்பைக் குறித்து அச்சம் கொள்கின்றன. உயிர்களுக்கு இந்த அச்ச உணர்வு ஏன் ஏற்படுகின்றது? இந்த உடலை நீத்தவுடன் செல்கின்ற இடம் எது என்பது தெரியாத காரணத்தி னாலேதான் இந்த அச்சம் உண்டாகின்றது. செல்கின்ற இடம் இப்பொழுது இருப்பதைவிட பாதுகாப்பானதாகவும், இன்ப மளிப்பதாகவும் இருக்குமேயானால் இந்த உயிர் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

சிவதீக்ஷை பெறாத உயிரை எமன் வாங்கி வினைக்கீடாகப் பிறவியில் செலுத்துவான். ஆனால் சமயதீக்ஷை பெற்ற உயிரை ஸ்ரீ கண்ட பரமேஸ்வரும், விசேட தீக்ஷை பெற்ற உயிரை அனந்தேஸ்வரரும், நிர்வாணதீக்ஷை பெற்ற உயிரைச் சதாசிவரும் வாங்கி அந்தந்தப் பதங்களில் வைப்பர். எமன் வாங்குகின்ற உயிர்தான் நரகம் மற்றும் ஆவி உலகங்களுக்குச் செல்லும். சிவதீக்ஷை பெற்ற உயிர்கள் அங்கு செல்ல வேண்டியதில்லை.

சிவதீக்ஷை பெற்று பதமூத்திகளில் தங்கிய உயிர்களுக்கு, போகத்திலே வைராக்கியம் பிறக்குமானால் அங்கிருந்தே பரமுத்தியைத் தலைக் கூடுவர். போகத்தில் வைராக்கியம் பிறக்காத உயிர்கள் 'தவஞ்செய் நற் சார்பினில் உதித்து, தவங்களை முற்றுவித்து பரமுத்தி' தலைக்கூடுவர்.

தானம், யாகம், தீர்த்தம், ஆச்சிரமம், தவங்கள்
சாந்தி, விரதம், கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனம் இலா சுவர்க்கம் பெற்று இமைப்பளவில் மீள்வர்
ஈசன் யோகக் கிரியா சரியையினில் நின்றோர்
ஊனம் இலா முத்தி பதம் பெற்று, உலகம் எல்லாம்
ஒடுங்கும்போது, அரன்முன் நிலாது ஒழியில் உற்பவித்து
ஞானநெறி அடைந்து, அடைவர் சிவனை, அங்கு
நாதனேமுன் நிற்கில் நணுகுவர் நல்தானே. — *சிவஞான சித்தியார்*

ஆகவே பசு புண்ணியங்களைப் போலல்லாமல், பதிபுண்ணியங்கள் எந்தவகையிலும் சரியை முதலியன சாலோகம் முதலிய பதமுத்திகளைத் தந்து முடிவான முத்தியையும் தரும். ''எங்கள் பாண்டிப் பிரான் தன் அடியவருக்கு மூலபண்டாரம் வழங்குகின்றான், வந்து முந்துமினே'' என்பது மணிவாசகப் பெருமான் திருவாக்கு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாழ்த்து

தெய்வமறை யவர்வாழ்க! வானவர்கள் உளமகிழ்ந்து சிறந்து பொங்க
மெய்வகைஐந்து உதவுபசுக் குலம்பெருக! மழைபொழிக! விளைவு மல்க!
பொய்வகையெ லாம்அகல்க! புவிபுரக்கும் அரசர்திருப் பொலிக! நாதன்
சைவநெறி மிகவளர்க! அஞ்செழுத்தும் வெண்ணீறும் தழைக! மாதோ.

— திருப்பெருந்துறைப் புராணம்

மழை வழங்குக; மன்னவன் ஓங்குக;
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக;
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

— கோயிற்புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம்எல்லாம்.

— கச்சியப்ப சிவாசாரியார்

மறைமுடிவிற் பயில்கருத்தும் மன்னியமெய்ப் பொருள்விருப்பும்
கறைமிடற்றோன் திருவடிக்கீழ் மெய்யன்பும் கடுந்துயர்நோய்
பறையவரும் இம்மூன்றும் பரிந்துஇயல்பாக் கிடைத்தமன
நிறைவுடையோர் ஏவர்அவர் நீடுழி வாழியவே.

— சிவதத்துவ விவேகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவநெறிச் செல்வர்களுக்கு ஒரு விண்ணப்பம்

ஸ்ரீ கணநாதநாயனார் நூலகத்தின் தலையாய கடமையாக நம்முடைய ஸ்ரீசிவாகமம், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், புராணங்கள், பிரபந்தங்கள் மற்றுமுள்ள நூல்களை மூலம்+பதவுரை+ விரிவுரை + உரைநடைப் பகுதியாகவோ, தொகுதியாகவோ சேகரித்து வருகின்றோம். சேகரித்த நூல்களில் கிடைத்தற்கரிய சில நூல்களை மறுபதிப்புச் செய்து அன்பர்களுக்குத் தருகின்றோம். ஆகவே அன்பர்கள் தங்களிடமிருக்கும் பழைய அரிய நூல்களை நமது நூலகத்திற்குக் கொடுத்துதவக் கேட்டுக் கொள்கிறோம். அரிய நூல்கள் வெளியிடும் போது தங்கள் பெயரும் இடம் பெறுவதோடு நூலில் ஐந்து பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.

எங்களுடைய வெளியீடுகள் [இதுவரை]

1. சுந்தரர் திருமுறையில் சைவ சித்தாந்தம் (தத்புருஷ தேசிகர்)
2. திருச்சிராப்பள்ளித் தல தேவார உரை (சி.சு. கண்ணாயிரம்)
3. ஏழிளந்தமிழ் (வ.சுப. மாணிக்கம்)
4. ஸகலாகம சார சங்க்ரஹம் - (பதிப்பாசிரியர் சா. கண்ணப்பசிவாசாரியார்)
5. நம: பார்வதீ பதயே - (ஆ.ஈசுரமூர்த்திப்பிள்ளை)
6. ஆனந்ததாண்டவம் - (சைவ.சு. இராமலிங்கம்)
7. அருணாசல வெண்பா - (இரா. மாணிக்கவாசகன்) (அருஞ்சொற்பொருள்-குறிப்புரையுடன்)

விரைவில் வெளிவர இருப்பவை

1. கோளறு திருப்பதிகம் உரை (சி.சு.கண்ணாயிரம்) (மறுபதிப்பு)
2. நீதி வெண்பா (பழைய உரையுடன்)
3. நீதி சாஸ்திரம் - (நாகரம், க்ரந்தம், தமிழ்உரை)
4. சைவ சமயமே சமயம் (சைவ. சு. இராமலிங்கம்)
5. நடேசர் வெண்பா-நடேசர் கலிவெண்பா (இரா.மாணிக்கவாசகன்)
6. சேக்கிழார் காட்டும் வாழ்வியல் நெறி (இரா. மாணிக்கவாசகன்)
7. பெரிய புராணத்தில் தொகையடியார்கள் (இரா.மாணிக்கவாசகன்)
8. ஆளுடைய பிள்ளையார் அற்புதமாலை (தொகுப்பு நூல்)
9. ஆளுடைய அரசு அற்புதமாலை (தொகுப்பு நூல்)
10. ஆளுடையநம்பி அற்புதமாலை (தொகுப்பு நூல்)
11. ஆளுடைய அடிகள் அற்புதமாலை (தொகுப்பு நூல்)

Our website : www.shaivam.org

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Authorised Dealers for :

Godrej - Storewel, Kurl-on - Mattresses, Duroflex - Mattresses, MM Foam - Mattresses, Nilkamal - Fibre Chairs, Classic - Synthetic Carpets, Royal - TV Trolleys, Ralli - Fans, Khaitan - Fans, Lakshmi - Wet Grinders, Amiritha - Table Top Grinders, Zuari - Imported Furniture.

Royal Furniture

22, Madurai Road, TRICHY - 8.

✆ 2702225, 2700620

Center for Shaiva Studies, Pondicherry Collection